# நெஞ்சமுள்ளோர்...!

(சிறுகதைத் தொகுப்பு...!)

சீனங்கோட்டை
இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சமுள்ளோர்...!

## (சிறுகதைத் தொகுப்பு...!)

இர்ஷாத் ஹஸன்...!

ஃபிதா பப்ளிஷர்ஸ்
173/15, நவ்பர் மாவத்தை, பிடவளை,
சீனங்கோட்டை, பேருவலை.
ஸிரி-லங்கா
தொலைபேசி: +94 773 855 478
முகநூல் : facebook.com/
irshadhassan.irshadhassan
ஈமெயில்: kpnirshad@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்...!

தூய இஸ்லாத்தின் வளர்ச்சிக்காய், எளிமையான வாழ்க்கை முறையொன்றைக் கைக்கொண்டு, மக்களோடு மக்களாய் கலந்து, பொன்னுக்கும் பொருளுக்கும் பதவிக்கும் மோகமளிக்காமல், அயராது உழைக்கின்ற, இந்தியாவைச் சேர்ந்த தமிழ் பேசும் மார்க்க அறிஞர் பீஜே என்னும் பீ ஜெய்னுலாப்தீன் அவர்களுக்கு இப்புத்தகத்தினை சமர்ப்பிக்க ஆவல் பூண்டுகின்றேன்...! அல்லாஹ் அவரைத் தொடர்ந்தும் நேர்வழியில் செலுத்தி, இஸ்லாமிய சன்மார்க்கத்துக்கு இன்னும் பாரிய பங்களிப்புக்களை வழங்க துணை நிற்பானாக...! இஸ்லாத்திற்காக அவர் செய்த தியாகங்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக...! ஆமீன்...!

ஆசிரியரின் வெளியீடுகள்...!

- கால் பதிக்கா நிலவு...! - ஜனவரி 2004
- பிழை திருத்தம்...! - ஒக்டோபர் 2013
- நெஞ்சமுள்ளோர்...! - டிசம்பர் 2015

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIBILIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Nenjamullor |
| Author | : | Irshad Hassan (MAAT) |
| Language | : | Tamil |
| First Edition | : | 1st December 2015 |
| Copy Right | : | Author |
| ISBN No | : | 978-955-7958-00-2 |
| No of Pages | : | 116 |
| No of Copies | : | 500 |
| Printer | : | AJ Prints (Pvt) Ltd<br>44, Station Road,<br>Dehiwela, Sri Lanka. Tel: 0112723205 |
| Publisher | : | Fidha Publishers<br>173/15, Nowfer Mawatha,<br>China Fort, Beruwala,<br>Sri Lanka.<br>Telephone +94 773 855 478<br>Email kpnirshad@yahoo.com<br>Facebook.com/irshadhassan.irshadhassan |
| Price | : | Sri Lankan Rupees 250/- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே இருக்கும் இரகசியம்தான் என்ன...?

- குருதிப் பாசம்...!
(பிரதான கதாபாத்திரங்கள்: ஸபூர் நானாவும் ஸப்வானும்)

- தொப்புள்கொடி உறவு...!
(பிரதான கதாபாத்திரங்கள்: ஸனீரா ஹாஜீம்மாவும் இர்பானும்)

- தெய்வீகப் பிணைப்பு...!
(பிரதான கதாபாத்திரங்கள்: நியாஸ் நானாவும் ஹாஜராவும்)

- காத்திருந்தாலே ராஜகுமாரி...!
(பிரதான கதாபாத்திரங்கள்: இம்ரானும் ஸமீராவும்)

- அநாகரிகமான ஆக்கிரமிப்பு...!
(பிரதான கதாபாத்திரங்கள்: அஸ்வரும் ஆஷியாவும்)

- நீயில்லாமல் நானில்லை...!
(பிரதான கதாபாத்திரங்கள்: சுஹைப் ஹாஜியாரும் அல்லாஹ்வும்)

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமம் சொல்லியவனாக ஆரம்பம் செய்கின்றேன்...!

சீனங்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் கொண்ட சகோதரர் இர்ஷாத் துடிப்பும் வேட்கையும் நிறைந்த ஓர் இளைஞன். இலக்கிய ஆர்வமும் ஆற்றலும் மிகையாகப் பெற்றவர். கட்டாரில் உத்தியோகம் பார்க்கும் அவர் தன் பொழுதைப் பிரயோசனமாகக் கழிப்பதற்காக வாசிப்பு, எழுத்து இரு துறைகளிலும் தன்னை முழுமையாகப் பிணைத்துக் கொண்டவர்.

ஏலவே இரு நாவல்களை தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கியுள்ள சகோதரர் "நெஞ்சமுள்ளோர்...!" என்ற நாமம் தாங்கிய சிறுகதை நூலொன்றையும் தனது அடுத்த வெளியீடாகக் கொண்டு வருவதனையிட்டு பேரானந்தம் அடைகின்றேன்.

இது சிறுகதைத் தொகுப்பாக இருந்தாலும் ஒவ்வொரு கதையும் ஒரு குறு நாவல் போல இருக்கின்றது. இந்நூல் ஆறு சிறு கதைகளை உள்ளடக்கமாகக் கொண்டது. ஒவ்வொரு கதையும் விறுவிறுப்பானது. வாசகரின் ஆவலையும் பொறுமையையும் சோதிப்பதாக உள்ளது. வாசிக்கத் தொடங்கினால் அனைத்துச் சோலிகளையும் வாசகர் நிச்சயம் மறந்து விடுவர்; ஏன் புறக்கணித்து விடுவர் எனக் கூறினாலும் பொருத்தமே.

சமூக நாடியோட்டத்தைத் தொட்டுணர்ந்து எழுதப்பட்ட கதைகளாக உள்ளடக்கத்தைப் படிக்கும் போது உணர முடிகின்றது. தந்தை-மகன், தாய்-மகன், கணவன்-மனைவி, காதலன்-காதலி என்கின்ற நான்கு பாத்திரங்களையும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன ஆரம்ப நான்கு கதைகளும். அடுத்த இரு கதைகளும் வித்தியாசமான கருப் பொருளைக் கொண்டவை.

இவற்றை விரிவாகக் குறிப்பிடத் தேவையில்லை. ஆசிரியர் தனது முன்னுரையில் கதைகளின் கருப் பொருளை சுருங்கக் கூறியுள்ளார். நூலாசிரியரின் தமிழ்மொழி அறிவு வியக்கத்தக்கது. உணர்வுகளை வெளிப்படுத்த அவர் கையாண்டுள்ள சொற்பிரயோகங்கள் மிகப் பொருத்தமானவை. மொழிநடை வாசகர்களை சொக்க வைக்கின்றது.

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் உரையாடலில் நூலாசிரியர் அவர் பிறந்து வளர்ந்த மண் வாசனையைத் தெளித்திருக்கின்றார். சீனங்கோட்டைச் செல்வ பூமியை அடையாளப்படுத்தியுள்ளார். சிறந்த கருத்தியல் பின்னணி இந்நூலுக்கு மெருகூட்டுகின்றது. பல் சமயம் சார்ந்த தத்துவங்களை முன்வைத்துள்ளார். குறிப்பாக அல்குர்ஆன், அஸ்ஸீன்னா இரண்டிலும் இருந்து தேவையான இடத்தில் குறிப்புக்களை முன் வைத்துப் பேசியுள்ளார். தத்துவப் பாடல்களும் கருத்து அலங்காரத்துக்காக இரவல் வாங்கப்பட்டுள்ளன.

ஓர் இலக்கியவாதி வாழ்வின் யதார்த்தங்களை கற்பனையூடாக அலங்கரிப்பவர். வாழ்க்கையில் தான் அனுபவிக்காத உணர்வுகளை அனுபவித்த, அனுபவிக்கின்றவர்களை விட யதார்த்தமாக வெளிப்படுத்துபவர். கற்பனைக்கு உயிர் கொடுக்கும் சிந்தனை இலக்கியவாதிகளுக்கு உரியது. "மனித சிந்தனைகளூடாக வரும் எழுத்துக்கள் வற்றாத 'ஸம்ஸம்' ஊற்றுப் போன்றது" என உவமானித்து "இது உலக அதிசயங்களில் முதலாவதாக இருக்க வேண்டியது" எனக் கூறி வாசகரை சிந்திக்க வைக்கின்றார் கதையாசிரியர். இங்கு அவர் ஒரு புதுமையைப் புகுத்த விரும்புகின்றார் என்றே நான் உணர்கின்றேன்.

தான் நேசிக்கும் இஸ்லாமிய சன்மார்க்க ஆய்வாளர், சிந்தனையாளர், சீர்திருத்தவாதி ஒருவருக்கு இந்நூல் சமர்ப்பணமாகின்றது. இங்கேயும் ஒரு புதுமை எம்மைத் திகைக்க வைக்கின்றது. அது மட்டுமா? தனக்குப் பின்னால் நின்று தன்னைச் சுறுசுறுப்பாக இயங்க வைக்கும் தன் துணிவுக்குத் துணையான இல்லாளுக்கும் நூலின் பின்புற அட்டையில் ஓரிடத்தை வழங்கியிருப்பதும் ஒரு புதுமையே.

அனைத்து வகையிலும் பல சிறப்பியல்புகளை உள்ளடக்கிய இந்நூல் வாசகர் நெஞ்சங்களால் போற்றப்படுவது திண்ணம். இம்முயற்சிக்காக சகோதரர் இர்ஷாத் அவர்களை மெச்சிப் பாராட்டி, இம்முயற்சியைத் தொடர வேண்டுமெனக் கேட்டு விடை பெறுகின்றேன்.

வஸ்ஸலாம்.

அஷ்ஷெய்க் எச். ஐ. எம். கைருல் பஷர் (நளீமி) எம். ஏ.
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஜாமிஆ நளீமிய்யா
சீனங்கோட்டை, பேருவலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரையாக முன்னுரை...!

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்...!

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமம் சொல்லியவனாக...!

*"நெஞ்சமுள்ளோர்...!"*

2004ம் ஆண்டு 'கால் பதிக்கா நிலவு...!' என்கின்ற நாவல் மூலம் எழுத்துலகுக்குள் சற்றேனும் காலடி வைத்த நான், 2013ம் ஆண்டு 'பிழை திருத்தம்...!' என்கின்ற எனது இரண்டாவது நாவல் நூலையும் வெளியிட்டேன். அதனைத் தொடர்ந்து எனது மூன்றாம் புத்தகத்தினையும் 2015ம் ஆண்டு வெளியிட அல்லாஹ் பாக்கியத்தினைத் தந்தான். அல்ஹம்துலில்லாஹ்...!

*"நெஞ்சமுள்ளோர்...!"*

எனது முன்னைய இரு நூல்களும் சிறுகதை தொகுப்புக்களாக இருக்கவில்லை. அவையிரண்டும் நீண்ட கதைகளாகவே இருந்தன. ஆனால் இப்புத்தகமோ ஆறு தலைப்புக்கள் கொண்ட ஒரு சிறுகதைத் தொகுப்பாக இருக்கின்றது. இதனை முழுமையாக வாசித்து முடித்த ஜாமிஆ நளீமிய்யாவின் சிரேஷ்ட விரிவுரையாளர், அஷ்-ஷெய்க் எச். ஐ. எம். கைருல் பஷர் (நளீமி) எம். ஏ. அவர்கள் இதனையொரு குறுநாவல் என அடையாளப் படுத்தியதையும் இல்லையென்று சொல்லாமல் மன நிறைவோடு ஏற்றுக் கொண்டேன்.

*"நெஞ்சமுள்ளோர்...!"*

எழுத முனைந்தால் நிறையவே எழுதலாம். சிந்தனைகளுக்கில்லை கட்டுப்பாடுகளும் எல்லைகளும் என்பதால் எழுத எழுத அவை வற்றுவதில்லை. உலக அதிசயங்களில் முதலாவதாக இருக்க வேண்டிய மக்காவில் இருக்கும் வற்றாத 'ஸம்ஸம்' ஊற்று போன்றதுதான் மனிதனது சிந்தனைகளது ஊடாக வரும் எழுத்துக்கள் என்று சொன்னால் யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

*இர்ஷாத் ஹஸன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நெஞ்சமுள்ளோர்...!"*

இரண்டு நாவல்களைப் பிரசவித்த நான், ஒரு வித்தியாசத்திற்கு சிறுகதைத் தொகுப்பொன்றையும் பிரசவித்தால் நன்றாயிருக்குமே என்றும் நினைத்துத்தான் இதனை வெளியிடுகின்றேன். சரியாக, இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்த தம்பதியினர் மூன்றாவதாக பெண் குழந்தையொன்றினைப் பெற்றெடுத்துக் கொண்டால் வித்தியாசமாக இருக்குமே என்று நினைப்பது போல.

*"நெஞ்சமுள்ளோர்...!"*

எனது முன்னைய நூற்களை வாசித்த அனேகமாக அனைவருமே சொன்ன விடயம், அவை மிகவும் விறுவிறுப்பாக இருந்ததென்கின்ற அம்சம்தான். வாசித்து முடித்து விடும் வரை மனதில் நிம்மதியில்லையென்றும் இன்னும் பலர் கூறினர். இவையிரண்டும் எனது எழுத்துக்களுக்குக் கிடைத்த வெற்றியென்றுதான் நான் கொண்டாடுகின்றேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே...! அதே போன்ற சுவாரஷ்யத்தினை இன்ஷா அல்லாஹ் இத்தொகுப்பிலும் ரசிகர்கள் எதிர்பார்க்கலாம் என்று எனக்கு எண்ணத் தோன்றுகின்றது.

*"நெஞ்சமுள்ளோர்...!"*

எனது இரண்டாம் புத்தகமான 'பிழை திருத்தம்...!' நூலுக்கு அணிந்துரை வழங்கிய ஜாமிஆ நளீமிய்யாவின் சிரேஷ்ட விரிவுரையாளர், அஷ்-ஷெய்க் எச். ஐ. எம். கைருல் பஷர் (நளீமி) எம். ஏ. அவர்கள்தான் இதற்கும் அணிந்துரை தந்து என்னை கௌரவிக்கின்றார். அவருக்கு நன்றிகள் சொல்வதும் எனது தலையாய கடமையொன்றுதான். எனது முதல் புத்தகமான 'கால் பதிக்கா நிலவு...!' என்கின்ற நாவலுக்கு அணிந்துரை தந்துதவிய பிரபல எழுத்தாளர் திக்குவல்லை கமால் அவர்களையும் இவ்விடத்தில் நினைவு கூர்ந்து நன்றியை உதிப்பதும் பொருத்தமான விடயமொன்றாகவே கருதுகின்றேன்.

*"நெஞ்சமுள்ளோர்...!"*

இத்தொகுப்பினை ஜாமிஆ நளீமிய்யாவின் சிரேஷ்ட விரிவுரையாளர், அஷ்-ஷெய்க் எச். ஐ. எம். கைருல் பஷர் (நளீமி) எம். ஏ. அவர்களிடம் கொண்டு போய் சமர்ப்பித்த போது அவரது கண்களில் நான் சில சொட்டு ஆனந்தங்களைக் கண்டேன்.

***இர்ஷாத் ஹஸன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குக் காரணம் நான் இன்னும் எழுதுவதை நிறுத்திக் கொள்ளவில்லையென்பதுதான். புத்தகத்தினை வாசிக்க அவர் ஒரு வாரகாலம் அவகாசம் தேவையென என்னோடு மதிப்பிட்டாலும் இரண்டு நாட்களில் அவரோடு தொலைபேசியில் சும்மா உரையாடிப் பார்க்கலாமென்று எண்ணினேன். அப்போதுதான் தெரிந்தது இரண்டு நாட்களுக்குள் அவர் புத்தகத்தினை வாசித்து முடித்து விட்ட சமாச்சாரம். அவரது 'பிஸி ஷெடூல்'களுக்கு மத்தியில் இரண்டு நாட்களில் இப்புத்தகத்தினை வாசித்து முடிந்த நிகழ்வானது, புத்தகத்தோடு வாசகர்களுக்கு காந்த ஈர்ப்புள்ளது என்பதனைப் புரிந்து கொண்டேன். அதனை அவர் தனது அணிந்துரையிலும் கூறியிருப்பது, நான் அல்லாஹ்வுக்கு மீண்டும் நன்றியுரைக்க வேண்டிய விடயம்தான். அல்ஹம்துலில்லாஹ்...!

*"நெஞ்சமுள்ளோர்...!"*

'குருதிப் பாசம்...!' என்கின்ற முதல் கதையினூடாக ஒரு தந்தைக்கும் மகனொருவனுக்கும் இருக்கின்ற பந்தம் பேசப்படுகின்றது. 'தொப்புள்கொடி உறவு...!' என்னும் கதையூடாக ஒரு தாய்க்கும் மகனுக்குமிடையே உள்ள உறவு கூறப்படுகின்றது. 'தெய்வீகப் பிணைப்பு...!' என்கின்ற கதையினூடாக கணவன்-மனைவி இணைப்புப் பற்றி ஆலோசிக்கப்படுகின்றது. 'காத்திருந்தாலே ராஜகுமாரி...!' என்னும் கதையூடாக ஒரு காதல் வரலாறு இயம்பப்படுகின்றது. 'அநாகரிகமான ஆக்கிரமிப்பு...' கதையினூடாக சர்வதேசப் போரின் ஒரு பகுதி அலசப்படுகின்றது. 'நீயில்லாமல் நானில்லை...!' என்கின்ற கதையூடாக ஓரடியானின் அல்லாஹ் மீதான 'ரிலேஷன்ஷிப்' கதைக்கப்படுகின்றது. இப்படியாக ஆறு தலைப்புக்கள் உள்ள பல பாத்திரங்கள் உள்ளடக்கப்பட்ட ஒரு சித்திரமாய் இது ஜொலிக்கின்றது என வாசகர்களுக்கு சுருக்கமாய் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

*"நெஞ்சமுள்ளோர்...!"*

முன்னைய இரு நூல்களையும் போன்றே இப்புத்தகத்தினையும் நானாகவே தட்டச்சு செய்திருக்கின்றேன். ஆங்காங்கே எழுத்துப் பிழைகள், இலக்கியத் தவறுகள், இலக்கணத் தவறுகள் வருவதற்கு நிறையவே சாத்தியங்கள் இருக்கின்றன. அவற்றினைக் கண்டு கொள்ளாமல், தவறுகளைப் பொறுத்துக் கொள்ளுமாறு தயவாய் வேண்டுகின்றேன்.

*இர்ஷாத் ஹஸன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நெஞ்சமுள்ளோர்...!"*

முன்னைய இரு புத்தகங்களைக் காட்டிலும் இது சிறிய நூலொன்றாக இருப்பதையும் மேற்கோள் காட்ட ஆசைப்படுகின்றேன். 'கால் பதிக்கா நிலவு...' நாற்பதினாயிரம் சொற்களையும் தாண்டிச் சென்றது. 'பிழை திருத்தம்...!' நாற்பத்தி மூவாயிரம் சொற்களைத் தாண்டிற்று. ஆனால் இத்தொகுப்போ இருபத்தியாராயிரம் சொற்களை மட்டுமே அடக்கிக் கொண்டது. இன்ஷா அல்லாஹ், எதிர்காலத்தில் பல இலட்சச் சொற்களை எழுதுவோம் அவன் துணை கொண்டு.

*"நெஞ்சமுள்ளோர்...!"*

என்னுடைய கடந்த புத்தகங்கள் வெளிவருவதற்கும் இத்தொகுப்பு வெளிவருவதற்கும் உடலாலும் பொருளாலும் உள்ளத்தாலும் உதவி புரிந்த அனைவரையும் இவ்விடத்தில் ஞாபகப்படுத்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வனைவருக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக...! ஆமீன்...!

*"நெஞ்சமுள்ளோர்...!"*

இப்புத்தகத்தினை வாசித்து, முடியுமாயின் உங்களது கருத்துக்களை எனக்கு எத்தி வைத்தால் மிகவுமே ஆனந்தம் கொள்வேன். அது எனக்குக் கிடைத்த மற்றொரு வெற்றியாகவும் கருதுவேன் இன்ஷா அல்லாஹ்...!

*"நெஞ்சமுள்ளோர்...!"*

இதோ இப்பக்கம் மறு பக்கத்தினைப் புரட்டத் தயாராகின்றது. கதைகளை வாசிக்கத் தயாராகுங்கள் வாசகர்களே...!

என்றும் புன்னகையுடன் உங்கள் சிநேகிதன்,
இர்ஷாத் ஹஸன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிப் பாசம்...!

**வேதனைகளோடு சாதனைகள் புரிந்தவர்...! உளக் கஷ்டப் புன்னகையோடு பொன்-நகை சேர்த்தவர்...! குடும்பத்துக்காய் சுகங்களை மறந்தவர்...! பிள்ளைகளுக்காய் சகலதையும் இழந்தவர்...! தந்தையினால் மட்டும் எப்படி முடியுமாகின்றது இப்படி...!**

மரணமும் நோய் துன்பங்களும் மட்டும் இல்லையென்றால் எவ்வளவு பரவசமாக இருக்கும் அன்பு செலுத்தும் மனிதர்களின் வாழ்க்கை...! மரணத்தினால் எல்லாமே பொசுங்கி விடுகின்றனவே...! 'இன்பத்தினை தகர்த்தெறியும் மரணத்தினை அதிகம் நினைவு கூறுங்கள்' என நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களுக்குச் சொன்ன உபதேசம், ஒவ்வொரு நாளும் மனிதர்களின் கண்களுக்கு முன்னால் நெருங்கி வரவேண்டுமல்லவோ...!

இவ்வுலக வாழ்க்கை அற்பமானது; பொய்யானது; ஏமாற்றக் கூடியது என எவ்வளவுதான் இஸ்லாமிய உபதேசங்களை நாம் பெற்றாலும், தொடர்ந்தும் இவ்வுலக மோகத்தில் ஏமாந்து கொண்டே போகின்றோம்; நஷ்டத்தினை சுவைத்துக் கொண்டே போகின்றோம். எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவரையும் பாதுகாப்பானாக...!

அப்படிப் பார்க்கும் போது மனிதர்கள் யாவருமே பிஞ்சுக் குழந்தைகள்தான். 'தீயைத் தொடாதே...', 'கத்தியைக் கையில் பிடிக்காதே...', 'மின்சாரத்தோடு விளையாடாதே...' இப்படியெல்லாம் எவ்வளவுதான் குழந்தைகளுக்குச் சொன்னாலும், அதில்தான் அவர்களுக்குக் கூடுதல் மோகமிருக்கும். யாரென்ன சொன்னாலும் அதையேதான் நாடியும் செல்வார்கள். அதே பாணியில்தான் மனிதர்களின் இவ்வுலக வாழ்வும் அமைந்து விட்டுள்ளது. சுகமும் இன்பமும் நிறையக் கிடைக்கக் கூடிய வழிவகைகள் அனைத்தும் அல்லாஹ் தடுத்தவற்றிலேயே கண்டு கொண்டு அதனுள் திளைத்தும் விடுகின்றோம்.

'மனிதனாகப் பிறந்து மறுவுலக வாழ்வில் ஈடேற்றமடையாமல் போய்விடுவோமோ...' என்ற எண்ணம் இருந்ததனால்தானே, இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் இரண்டாம் கலீபா ஹஸரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், 'தானொரு புற்பூண்டாக பிறந்திருக்கக் கூடாதா...?' என அங்கலாய்த்தனர். சுவர்க்கத்துக்கு நன்மாராயம் கூறப்பெற்ற அவர்களே இப்படி சிந்தித்தால், நாம் எங்ஙனம் சிந்திக்க வேண்டும்; அங்கலாய்க்க வேண்டும்...!

அல் குர்ஆனின் கூற்றுப்படி, ஒரு வினாடி கூட முந்தவும் செய்யாத பிந்தவும் செய்யாத மரணம் ஸபூர் நானாவையும் தேடி ஒரு நாள் ஓடோடி வந்தது. 'மரணிப்பதற்கு இன்னும் நாட்கள் இருக்கின்றன' என்றுதான்

**இர்ஷாத் ஹஸன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் மற்றவர்கள் போன்று ஒவ்வொரு நாளும் நினைத்திருந்தார். எவ்வளவுதான் நாட்கள் கடந்தாலும் தான் இன்னும் இளமையாக இருப்பதாகத்தான் அவரும் மற்றவர்கள் போன்று எண்ணியுமிருந்தார். தொண்டைக் குழி இறுக்கம் கண்டு, கால்கள் ஒன்றோடொன்று திடீரெனப் பிண்ணிக் கொண்ட போதுதான் உணர்ந்தார், மரணம் வெகு தூரத்தில் இல்லையென்றும் தான் இனிமேலும் இளமையில்லையென்றும்.

ஸபூர் நானாவின் வயதோ நாற்பத்தைந்து மட்டும்தான். வாழ்வில் பெரிதாக சாதித்துவிட்ட விடயங்கள் என்று சொல்வதற்கு ஒன்றும் கிடையாது அவருக்கு. ஒரேயொரு திருமணத்தின் மூலம் நான்கு பிள்ளைகளை இவ்வுலகுக்கு அறிமுகம் செய்தது மட்டுமே அவர் பெரிதாக சாதித்து பெருமை கொண்ட விடயம். மக்களோடு அன்பாகப் பழகி நல்ல மனிதர் என்ற பெயரையும் தன்னகத்தே பதித்துக் கொண்ட ஒருவரும்தான் ஸபூர் நானா.

நாற்பது வயது வரை புகைப்பழக்கத்துக்கு அடிமைப்பட்டுப் போன ஸபூர் நானா, கடந்த ஐந்து வருடங்களாகத்தான் அப்பழக்கத்தினைப் புறந்தள்ளியிருந்தார். தன் தந்தையைப் பார்த்து புகைப்பழக்கத்தினை பத்து வயது முதல் களவாகக் கற்றுக் கொண்டவர், அவரது நெஞ்சுப் பகுதியோரம் வலி ஏற்பட்டதனையடுத்து, மருத்துவர்கள் அவரை எச்சரித்ததன் பின்னர்தான் அப்பழக்கத்தினைக் கைவிட்டார். இஸ்லாம் எவ்வளவுதான் புகைப்பிடித்தலை ஹராமாக்கி, அது மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று கூறினாலும், செவிமடுக்காத மனிதர்கள், மருத்துவர்கள் மட்டும் அப்படிச் சொன்னதும் உடனே தலை சாய்த்து விடுகின்றார்கள். அல்லாஹ்வுக்குத் தொடர்ந்தும் நன்றி கெட்ட மக்களாகவே மனிதர்கள் வாழ்கின்றார்கள் என்றால், அது முற்றிலும் உண்மைதான்.

'புகைப்பழக்கத்தினை விட்டு விடுங்கள்; அது மாரடைப்பை வரவழைக்கும்' என்று ஸபூர் நானாவுக்கு இளமைக் காலத்தில் சொல்லப்பட்டால், 'ஆ அது வரும் போது வரட்டும்; புகை பிடிப்பவர்களை விட புகை பிடிக்காதவர்களுக்குத்தான் அதிகம் மாரடைப்பு வரும்' என்று நியாயம் பேசி விடுவார். அது மட்டுமல்ல. 'எல்லோரும் ஒரு நாள் மரணத்தைக் காண வேண்டியவர்கள்தானே' எனவும் மரணத்தைப் போன்ற இலகுவான விடயம் வேறொன்றில்லை போன்று வாய் கூசாமல் பேசியும் விடுவார்.

சற்று முன்னர் வரை ஸபூர் நானாவின் பெயரைத் தாங்கியிருந்த அவரதுடல், இப்பொழுது 'மையத்' என்கின்ற பெயரைச் சூடியிருந்தது. மையத்துக்கருகில் மனைவியும் பிள்ளைகளும் அழுது புலம்பிக் கொண்டிருந்தனர். 'யா மொஹிதீன், யா மொஹிதீன்' என அறியாமையில் ஸபூர் நானாவின் மனைவி ரபீக்கா முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

ஆயிரம் தடவைகள் அப்துல் காதர் மொஹிதீன் ஜீலானி அவர்களை அழைத்தால், அவர் உடனடியாக பதில் தருவார் என்பதை 'மொஹிதீன் மௌலூதீல் ஆயிரம் தடவைகள் படித்திருப்பவள் ரபீக்கா. ஒரு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மலக்குல் மவ்த்' ஒரு சிறுமியின் உயிரைக் கைப்பற்றிக் கொண்டு செல்லும் போது, அச்சிறுமியின் தாய் அப்துல் காதர் ஜீலானி அவர்களிடம் முறையிடவே, மலக்குல் மவ்த்துடன் சண்டையிட்டு அச்சிறுமியின் உயிரை மீண்டும் பெற்றுக் கொடுத்த சரித்திரத்தையும் ரபீக்கா அம்மௌலூதில் ஆயிரம் தடவைகள் படித்ததுண்டு. அதனை மையமாக வைத்துத்தானோ, அவள் 'யா மொஹிதீன்' என முணுமுணுத்துக் கொண்டிருந்தாளோ தெரியவில்லை. பாவம் ரபீக்கா...! அல்லாஹ்வுக்கே உரிய பண்பை மனிதர்கள் எப்படிப் பெறுவார்கள் என்பதனை அவள் யோசிக்க வேண்டாமா...? ரபீக்கா போன்றவர்களது ஈமானைப் பாதுகாக்க முஸ்லிம் சமூகமும் முயற்சி செய்ய வேண்டாமா...?

அடுத்த வீட்டு எழுபது வயது கொண்ட பீபீ தாத்தாவும் மரண வீட்டுக்கு வந்து சேர்ந்திருந்தாள். தலையில் மொக்காடிட்டு யாஸீன் சூராவினைத் தொடர்ந்தும் ஓதிக் கொண்டிருந்தாள் அவள். மரண வீடாக இருந்தாலும், குழந்தைப் பிறப்பு ஏற்பட்டுப் போன வீடாக இருந்தாலும், கந்தூரி வீடாக இருந்தாலும் பீபீ தாத்தாவை அயலவர்கள் அழைத்துக் கொள்வது வழக்கம். பாரம்பரிய விடயங்களில் அனுபவ ரீதியாக ஊறிப் போன பீபீ தாத்தா அயலவர்களுக்கு ஒரு சொர்ப்பனம்தான்.

இருபத்தைந்து வருடங்களாக தொடர்ந்தும் ஸபூர் நானாவுடன் குடித்தனம் நடத்திய ரபீக்கா அல்லாஹ்வின் ஏற்பாட்டில் விதவையாகி கணவனை இழந்தவளானாள். நான்கு மாதம் பத்து நாட்கள் 'இத்தா'விலே இருப்பதற்கும் ஆயத்தமாகி விட்டாள்.

நித்தமும் இன்பம்; கொஞ்சம் சண்டைகள்; இடைக்கிடையே இறைவனது சோதனைகளால் சில துன்பங்கள்; சில மேடு பள்ளங்கள்; சில காடு மலைகள் என இன்பமாகவும் துன்பமாகவும் கவலையாகவும் மகிழ்ச்சியாகவும் கழிந்தது ஸபூர்-ரபீக்கா தம்பதியினரின் திருமண வாழ்வு. பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்பதாலோ என்னவோ, சந்தோஷமாகவே இருவரும் பரஸ்பரம் உறவினைப் பேணிக் கொண்டனர்.

திருமண வாழ்வின் அடிப்படை எதிர்பார்ப்பான நான்கு குழந்தைச் செல்வங்களையும், திருமணம் நிறைவேறி ஆறு வருடத்துக்குள்ளேயே பெற்றுக் கொண்டு, அடுத்த வீட்டு சாபி நானாவும் உபைதா உம்மாவும் ஏழு வருடத்துக்குள் நிறுவிய சாகசத்தினை தோற்கடித்தவர்கள்தான் ஸபூர்-ரபீக்கா தம்பதியினர்.

ஸப்வானுக்கு ஒரு வருடத்துக்குப் பின்னால், ஸபிய்யாவும், ஸபிய்யாவுக்கு இரண்டு வருடங்களுக்குப் பின்னால், அடுத்த பெண் குழந்தையான ஸீமையாவும், கடைசியாக ஸஹ்ரானும் பிறந்தனர் அவர்களுக்கு. ஸபூர் நானா பெரிய பணக்காரன் என்கின்ற அளவுக்கு சொத்துக்கள் சேர்த்ததில்லை. ஏழையென்கின்ற அளவுக்கு அவரிடம் சொத்துக்கள் இல்லாமலுமில்லை. ஒரு நடுத்தர வர்க்கத்தினை சேர்ந்தவர்கள்தாம் அவரது குடும்பம்.

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளைக் கொஞ்சிக் குலாவி அன்பாக வளர்த்தனர் இருவரும். பிள்ளைகள் நன்றாக வளர வேண்டுமென்கின்ற எல்லாப் பெற்றோர்களதும் சராசரி எதிர்பார்ப்பு அவர்களுக்கும் நிறையவே இருந்தது. பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அவர்களது இறப்பு வரை, அவர்கள் நன்றே வளரும் வரை யோசனையிலேயே தஞ்சம் புகுந்திருப்பார்கள். சில பிள்ளைகள் வளர்கின்ற விதம் பார்த்து, 'பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளாமலேயே இருந்திருக்க வேண்டுமே' என சோகப்படுகின்ற பெற்றோர்களும் நிறையவே இல்லாமலுமில்லை.

காலங்கள் கடந்து செல்லச் செல்ல மாற்றங்கள் நிகழ்ந்தன. நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்து, பணிவிடை செய்வதில் ரபீக்கா உடலின் அழகை மட்டுமல்ல எடையையும் கொஞ்சம் இழந்திருந்தாள். ஆங்காங்கே முடிகளையும் கொஞ்சம் இழந்திருந்தாள். ஸபூர் நானாவோ, முதுமையின் ஆரம்ப கட்டமான நரை முடிகளை ஆங்காங்கே மண்டையில் அறுவடை செய்திருந்தார். அது மட்டுமன்றி முதுமைக்கென்றும் பெயர் போன ஆரம்ப வழுக்கையையும் பெற்றிருந்தார். குழந்தைகளோ பாடசாலைப் பருவத்தில் சங்கமித்திருந்தனர்.

குடும்பத்தின் மூத்த புதல்வனான ஸப்வான் உயர்தரப் பரீட்சையினை நெருங்கியிருந்தான். நன்றாக கல்வி பயிலக் கூடியவன் மட்டுமன்றி, கலைத் துறைகளிலும், விளையாட்டுத் துறைகளிலும் அதிக வேகமும் விவேகமும் கொண்டவன். அதனால்தான் அவனை 'ஓல் உருண்டர்' என எல்லோரும் பகிடியாக அழைப்பர். 'ஓல் உருண்டர்' எனச் சொல்வது ஆங்கிலத்தில் 'ஓல் ரவுண்டரை'த்தான்.

நாடளாவிய ரீதியில் நாடகப் போட்டிகளில் பங்கு பற்றி நிறைய பதக்கங்கள் பெற்றவன்தான் ஸப்வான். தமிழ்தினப் போட்டிகளிலும் ஆங்கிலதினப் போட்டிகளிலும் மாவட்ட ரீதியாகப் பங்கு கொண்டு, கட்டுரை, கவிதை, பாடல்கள் முதலான பல போட்டிகளில் முதலிடங்கள் வகித்தவன்தான் ஸப்வான். மாவட்ட ரீதியான ஓட்டப் போட்டிகள், கிரிக்கட் போட்டிகள் மற்றும் உதைப்பந்தாட்டப் போட்டிகள் என பலதரப்பட்டவைகளில் பாடசாலை ரீதியாகக் கலந்து கொண்டு தன் திறமையை நிலை நாட்டியவன்தான் ஸப்வான். விவாதம் மற்றும் வினா விடைப் போட்டிகள் போன்றவற்றில் கலந்து கொண்டு தன் பாடசாலைக்குப் நற்பெயர் வாங்கிக் கொடுத்தவன்தான் ஸப்வான். இப்படியிருப்பதனால்தான் அவனோர் ஓல் உருண்டர்...!

எவ்வளவுதான் பல சாதனைகளை அவன் சிறு வயதிலிருந்தே செய்து வந்தாலும், அவனுக்கு மனதில்தான் நிம்மதியில்லை என்றும். அவனுக்கு அப்படி என்னதான் சிறுவயதிலும் பிரச்சனைகள்...?

"உம்மா, எனத்தியன்வா ஒங்கட மாப்புளைக்குப் புடிச்சது...? எப்ப பார்த்தாலும் என்னக் காட்டேலா அவருக்கு. நான் எனத்தியன் குத்தம் செஞ்ச அவருக்கு...?" இதுதான் அவனது மனதில் தொக்கி நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனை. ஸபூர் நானா அவனோடு சரியாக நடந்து கொள்வதில்லையெனத்தான் அடிக்கடி அவனது வாதமும் விவாதமும் தன் தாய் ரபீக்காவோடு. ரபீக்கா எவ்வளவுதான் சமாதானம் செய்ய முயற்சித்தாலும், ஸப்வானின் மனதுக்கு அது நிம்மதியளிக்கப் போதுமாயில்லை.

ஸப்வானின் முறைப்பாடு உண்மைதான். உமர் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் ஒரு பாதையால் பயணித்தால், ஷைத்தான் மறு பாதையால் பயணிப்பான் என்பது போல, ஸபூர் நானாவும் ஸப்வானும் இருந்தனர். ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டாலும் உறவற்றவர்கள் போல் எப்போதும் இருப்பார்கள். ஒன்றாக தொலைக்காட்சி பார்த்தாலும் உறவற்றவர்கள் போலிருப்பார்கள். ஒன்றாகப் பயணம் செய்தாலும் உறவற்றவர்கள் போலிருப்பார்கள். ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டாலும் சுவரினைப் பார்த்துத்தான் பேசிக் கொள்வார்கள். ஸபூர் நானாவுக்கு என்ன பிரச்சனையோ...?

"சரி சரி ஸப்வான், அதொன்டயும் கணக்கெடுக்க வேணாம். வாப்பா 'பிஸ்னஸ்'ல போற வாரதால அவருக்கு ஒங்களோட பேசத்துக்கா டைம் ஈச்சியது...? என்னோடே அவரு ஒழுங்காப் பேசியல்லே..." ஒவ்வொரு நாளும் இதுதான் ரபீக்கா சொல்லும் சமாதானம். ஐக்கிய நாடுகள் சபையும் இப்படித்தானே பலஸ்தீன் மக்களுக்கு சமாதானம் சொல்கின்றது...! போதுமாகுமா ஸப்வானுக்கு ரபீக்காவின் ஐக்கிய நாடுகள் சபை சமாதானம்...?

"ஓ நீங்க இப்படிச் செல்லிச் செல்லியே ஒங்கட மாப்புளய காப்பாத்தப் பாருங்கோ... பொம்புளைகளுக்கு மாப்புளமாருக்குப் பங்கடாக்கியதுதானே வேல..." ஸப்வான் சொன்ன விதம் ரபீக்காவைச் சிரிப்பில் ஆழ்த்தினாலும் அவள் காட்டிக் கொள்ளவில்லை. ஒன்றும் கேளாதவள் போன்று மீன் செதில்களை தொடர்ந்தும் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

ஸபூர் நானா ஸப்வானோடு நடந்து கொள்ளும் விதம் பற்றி ரபீக்காவும் அறிந்திருந்தாள். அது பற்றிப் பல முறை ஸபூர் நானாவிடம் எடுத்துச் சொன்னாலும் 'கூலா'க சிரித்து விட்டு கண்டு கொள்ளாமல் இருந்து விடுவார்.

ஸப்வானுக்கு கவலை இருக்காதா பின்னே...? ஒவ்வொரு வருட இறுதியிலும் பாடசாலையின் பரீட்சை பெறுபேற்றை எடுத்துக் கொண்டு வந்து தந்தையிடம் நீட்டி, தான் முதலாம் மாணவன் எனச் சொன்னாலும் ஸபூர் நானாவின் முகத்தில் சந்தோஷம் இல்லை. மாற்றமாக கணிதப் பாடத்தில் தொன்னூறு புள்ளிகள் பெற்றது தனக்கு சந்தோஷமில்லையென்றும், குறைந்தது தொன்னூற்றைந்து புள்ளிகள் பெற்றிருக்க வேண்டுமென்றும் சொல்லி விடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் ஒரு முறை களுத்துறை மாவட்டத்தில், தமிழ்தினப் போட்டியில் கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்ததை சந்தோஷமாகக் கருதாமல், 'ஏன் முதலாம் இடத்தைக் கோட்டை விட்டாய்...?' என்று இறுமாப்பில் தட்டிக் கழித்தார் ஸபூர் நானா.

இது இப்படியிருக்க, ஒரு முறை வானொலியில் ஸப்வானின் விவாத நிகழ்ச்சியொன்று அரங்கேறியது. அதில் அவன் சிறந்த பேச்சாளராகக்கூட தெரிவானான். ஊரில் எல்லோரும் அவனைப் பாராட்ட, ஸபூர் நானாவோ, 'உன்னை விட மற்ற மாணவன்தான் சிறந்த பேச்சாளருக்குரிய விருதைப் பெற்றிருக்க வேண்டுமென'க் கூறி விட்டார்.

இப்படியாக எதுவொன்றைச் செய்தாலும் பாராட்டுவதை தவிர்த்தால், சாதிப்பவர்களின் மனநிலை இப்படித்தானே இருக்கும்...! ஸப்வானின் மனம் ஆட்டம் கண்டது. பதினெட்டு வயதுக்குள் அவன் சாதித்து விட்ட சாதனைகளை அவனது தந்தை கண்டு கொள்ளாமல் இருப்பதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பாராட்டாமல் இருந்தால்கூட பரவாயில்லை. குறைந்தது தாழ்த்திப் பேசாமலாவது இருக்கலாமல்லவா...!

இப்படியாக ஸபூர் நானா எல்லாப் பிள்ளைகளோடும் நடந்து கொண்டால் பரவாயில்லை. அவர் இப்படி நடப்பது ஸப்வானோடு மட்டும் என்பதனால், அவர் நாளுக்கு நாள் ஸப்வானின் எதிரியாக மாறிக் கொண்டே வந்தார். பல பிள்ளைகளது வில்லன்கள் வாப்பாக்கள்தானே...!

ஸப்வானின் சக நண்பர்கள் தங்கள் தந்தைகளோடு பழகும் விதம் பார்த்து அடிக்கடி ஸப்வான் உள் மனதினால் அழுவதுண்டு. 'தன் தந்தை மட்டும் ஏன் இப்படி தன்னோடு முரட்டுத் தனமாய் நடந்து கொள்கின்றார்...?' என உள்ளத்தினால் வெதும்புவதுமுண்டு.

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே...! அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை, (தந்தை) வளர்ப்பினிலே...!' என்கின்ற அர்த்தம் பொதிந்த சினிமாப் பாடல் வரிகள் எவ்வளவு அழகானவை. தன் குழந்தை முறைப்படி வளர தந்தை குழந்தையின் உற்ற நண்பனாக இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியம்...! ஸபூர் நானாவின் மண்டையில் இது ஏன் புகுத்தப்படவில்லை...? திருமணத்தின் தகுதியாக வயதை நிர்ணயம் செய்வதனை விட, பிள்ளைகளது உள்ளங்களைத் தெரிந்து கொள்கின்ற கலையை நிர்ணயம் செய்வது சாலப் பொருத்தமல்லவா...!

பூமியின் சுற்றோட்டத்தில், ஸப்வானின் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பமாக ஒரு மாத காலமே இருந்தது. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளி வந்தன. அசாதாரண முறையில் தேர்ச்சி பெற்ற ஸப்வானுக்கு வாழ்த்துக்கள் பலரிடமும் வந்து குவிந்தன. ஏழு பாடங்களில் 'ஏ' சித்தியும், ஒரேயொரு பாடத்தில் 'சி' சித்தியும் பெற்ற அவன்தான் பாடசாலை ரீதியாக முதல் தரத்தில் நின்றான். இதிலும் ஸபூர் நானாவுக்குத் திருப்தியில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸப்வானுக்கும் தெரியும் தன் தந்தை திருப்தி பெறமாட்டாரென்றும். 'ஏன் ஒரு பாடத்தில் மட்டும் 'ஏ' சித்தி பெறவில்லை...?' என்றே கடிந்து கொண்டு ஸப்வானின் மனதை இன்னும் நோகடித்தார்.

ஸப்வானின் மனம் தொடர்ந்தும் புண்பட்டது. என்றாலும் தனது தந்தையின் மனநிலை எப்போதும் மாறப் போவதில்லையென தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டான். தன் தந்தையின் மனநிலையைப் புரிந்து கொள்ளக் கூடிய மன பக்குவத்தினையும் முதிர்ச்சியையும் குறைந்த வயதில் பெற்றுக் கொண்டு விட்ட மெய்ஞ்ஞானியானான் அவன்.

தானொரு பொறியியளாளராக வர வேண்டுமென்பதுதான் ஸப்வானின் நீண்டகாலக் கனவு. சிறு வயது முதல் அவனது விளையாட்டுப் பொருட்களும்கூட சுத்தியல், ஆணி, அண்டுவை போன்ற அம்சங்கள்தான். சிறு வயதில் அவனைப் பார்த்த பெரியோர்கள்கூட அவன் 'இஞ்சினீயரா'க வருவதாகத்தான் சொல்லியும் வந்தனர். அகத்தினழகு முகத்தில் தெரியுமென்பது போல, ஸப்வான் பொறியியளாளராகும் அழகு சுத்தியலில் தெரிந்தது அயலவர்களுக்கு.

உயர்தரப் படிப்புக்களில் பொறியியல் துறையை ஸப்வான் தேர்ந்தெடுத்ததும் ஸபூர் நானாவுக்குப் பிடிக்கவில்லை. 'ஓ இவருக்கு ஒடஞ்சி புழுந்த அமெரிக்காட 'ட்வின் டவர' கட்டப் போறன்டு நெனப்பு...' எனச் சொல்லிச் சொல்லி 'ஹின்ட்' அடித்துக் கொண்டே இருப்பார். என்றாலும் ஸப்வான் விட்டுக் கொடுத்த பாடில்லை. அவனது இலக்கில் குறியாய் நின்று, கல்வியைத் தொடர்ந்தான்.

கற்றலில் முன்னேறுவதென்பது இலகுவான காரியமில்லை. இரண்டு வருடங்கள் உயர்தரப் பரீட்சையில் அமர்ந்து, நான்கு முதல் ஆறு வருடங்கள் பல்கலைக்கழக கற்றலில் அனுபவங்களைப் பெறுவது எல்லோராலும் முடியாத காரியம்தான். இப்படியான கற்றலில் சித்தி பெறுவோர் ஆயிரத்தில் ஒருவராக அல்ல, ஒரு இலட்சத்தில் ஒருவராக புகழப்பட்டாலும் அது தவறில்லை. ஸப்வானும் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பித்து சரியாக ஏழு வருடங்களுக்குள் பொறியியல் கலையையும் கற்றுத் தேர்ந்து, கை நிறைய சம்பளமும் வாங்கி சமூகத்தில் மிளிர ஆரம்பித்திருந்தான்.

கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் ஸப்வானுக்கு அவசரமாக வேலையொன்றும் கிடைத்து, அதன் பிற்பாடு முதல் மாதச் சம்பளத்தையும் பெற்றுக் கொண்டான்.

வாழ்க்கையில் பலதரப்பட்ட பெருமிதங்களும் உள சந்தோஷங்களும் பல்வேறுபட்ட வடிவங்களில் வந்தாலும், முதல் சம்பாத்தியம் தருகின்ற பெருமிதமும் சந்தோஷமும் அலாதியானதாகவே எப்போதுமிருக்கும். அதற்கொப்ப முதல் சம்பளத்தினைப் பெற்றுக் கொண்ட ஸப்வானின் உடலும், உயிரும் ஆழ்ந்த மகிழ்ச்சியில் சங்கமம் கண்டன. படித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்புக்கு முதல் சம்பளமே ஒரு லட்சம் ரூபாய்க்களா...? இருபத்தைந்து வயது வாலிபனுக்கு ஒரு லட்சம் ரூபாயென்பது இலங்கையைப் பொறுத்த வரையில் பெரிய விடயம்தானே...! அதுவும் முதல் சம்பாத்தியமென்பது வேறு...!

ஸப்வானின் உடம்பெங்கும் ஊடுறுவிய சந்தோஷம் அவனது கால்களை பம்பலப்பிட்டியில் உள்ள 'ஹவுஸ் ஒப் பெஷனு'க்கு அவசரமாக நடையைக் கட்ட வைத்தது. அன்பளிப்புக்கள் வாங்கி வீட்டிலுள்ளோரை சந்தோஷப் படுத்துவதுதான் அவனது 'நிய்யத்'து. புத்தாடைகளை எல்லோருக்கும் வாங்கிக் கொண்டவனாக அவசரமாக வீட்டை நோக்கி ஓடினான் 'இன்டர்சிட்டி' என்னும் குளிரூட்டப்பட்ட சொகுசு பேரூந்திலேறி.

"மகன்ட 'ஜொப்'பெல்லாம் நல்லமாமோ ரபீக்கா...?" ஸபூர் நானா கொஞ்சம் வாய் திறந்தார். அப்படிக் கேட்டது, ரபீக்காவுக்கும் ஆனந்தமாகிப் போய்விட்டது.

"ஓ நல்லமாம்..." அமைதியாகச் சொன்னாள் ரபீக்கா.

"எல்லாருக்கும் உடுப்புக் கொணாந்தாம்... எனக்கு எனத்தியாமன் கொணாந்த...?"

ஸபிய்யாவும் ஸீமையாவும் திருமண பந்தத்தில் இணைந்து இருவரும் தலா ஒரு குழந்தைக்கு தாயாகியிருந்தனர். ஸபிய்யாவின் முழுக் குடும்பத்துக்கும், ஸீமையாவின் முழுக் குடும்பத்துக்கும், தன் தாய்க்கும், தன் சகோதரன் ஸஹ்ரானுக்கும் உடுப்புக்கள் வாங்கி வந்திருந்தான் ஸப்வான்.

"ஓங்களுக்கு... ஓங்களுக்கு ஒன்டும் கொணாந்தில்லவா..." ரபீக்கா சொல்ல முன்னாலேயே ஸபூர் நானாவுக்குத் தெரியும். கொஞ்சம் அமைதியானது அவ்விடம். ஸபூர் நானாவின் மனம் கொஞ்சம் சலனப்பட்டு நொந்தது. ரபீக்காவின் கண்களும் கலங்கினதான்.

"ரபீக்கா, மகனுக்கிட்ட பெயித்து ரெண்டாயிரமொன்டு கேட்டுக் கொண்டு வாங்கோ எனக்கு... அவன்ட மொதல் சம்பளத்தால நானும் சேர்ட்டும் சாரமும் உடுக்கோனுமென்டு ஆசப்படுகிய..." சொல்லிவிட்டு கண்களை கசக்கிக் கொண்டார் ஸபூர் நானா. அப்படிச் சொன்னதும் ரபீக்காவின் கண்களும் கலங்கின சந்தோஷத்தில். ஸபூர் நானாவுக்கு நேர்வழி கிடைத்து விட்டதா...? அப்படிச் 'சான்ஸ்' இல்லையே...!

தாய் தந்தையினரது பாசங்கள் இல்லாமலாகின்ற போது பிள்ளைகள் அதற்காகவே பல வேளைகளில் ஏங்கித் தவிப்பார்கள். தாய் தந்தையினர் கண்டும் காணாதது போலிருக்கும் போது அவ்வேதனை இரு மடங்காகும். தாய் தந்தையர்கூட பல வேளைகளில் பிள்ளைகளைத் தாறுமாறாகப் பேசிவிட்டு, பிள்ளைகள் சாதகமாகத்தான் நடந்து கொண்டார்களெனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிய வரும் போது தங்களையே நொந்து கொள்வார்கள். இனிமேலும் ஸபூர் நானா ஸப்வானோடு நன்றாய் நடந்து கொள்வாரா...? அல்லது ஸப்வான் ஸபூர் நானாவோடு தொடர்ந்தும் குரோதம் கொள்வானா...?

ஐந்து வருடங்களுக்கு முன்னமேயே புகைப் பழக்கத்தினைத் தடுத்துக் கொண்டாலும், சுமார் முப்பது வருடங்களுக்கும் மேலாக அப்பழக்கத்துக்கு அடிமைப்பட்டுப் போனதனால், ஸபூர் நானாவின் இதயமும் நுரையீரலும் கண்டம் துண்டமாகப் பாதிப்புக்குட்பட்டன. அதன் காரணமாக தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார். மூன்று நாட்களாகியும் அவரது உடலில் முன்னேற்றமில்லை. 'சிறு துளி பெரு வெள்ளம்' என்பது போல சிறிது சிறிதாக உள்ளெடுக்கப்பட்ட புகைகள் சமுத்திர அளவினை அவரது இதயத்திலும் நுரையீரலிலும் பதித்திருந்தன.

மூன்று நாட்களுக்கு முன்னால் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்த ஸபூர் நானாவின் பேச்சிலும் வீழ்ச்சி உண்டாயிற்று. நடையிலும் தளர்ச்சி உண்டாயிற்று. மூச்சிலும் அவ்வளவு தேர்ச்சியில்லை. மிகவும் அல்லல்பட்டு அன்றாடத் தொழுகைகளை வைத்தியசாலையின் கட்டிலிலேயே தொழுது கொண்டார். ரபீக்காவோ நோன்பும் கையுமாகவே தொடர்ந்தும் இருந்தாள். கணவனுக்கு ஒன்றென்றால், மனைவியைத் தவிர வேறெவர்தான் துணை மனிதர்களில்...!

பல் வகையான பழக் கூடைகளும் பால்மாக்களும் வைத்தியசாலை அறையிலே நிறைய இருந்தமை, உற்றார்களும் உறவினர்களும் நண்பர்களும் வந்து சென்றதை உணர்த்திற்று. ஸப்வானும் தன் தந்தை அருகிலேயே நின்றிருந்தான் உதவிக்காய் எப்போதும். உயிர் போகின்ற தருணங்களில் பகைமை உணர்வு தந்தை மகனிடம் இருக்குமா என்ன...?

அறையிலே எல்லோரும் சேர்ந்து கதையளந்து கொண்டிருக்க, ஸபூர் நானாவும் மெல்லிய குரலிலே பேசினார்.

"எல்லாரும் கொஞ்சம் வெளில போகேலுமோ...? நான் கொஞ்சம் ஸப்வானோட பேசோனும்..." ஸபூர் நானா சொன்னதைக் கேட்டு நலம் விசாரிக்க வந்த அனைவரும் நகர்ந்தனர். ஸபூர் நானாவின் கூடப் பிறந்த சகோதரர்களும் சகோதரிகளும் அதனுள் அடக்கம். அவரது மற்றைய மூன்று பிள்ளைகளும் அடக்கம். ஸப்வானோ கொஞ்சம் ஸ்தம்பித்து நின்றான். 'இவ்வளவு காலம் பேசாதவர் இப்போது என்ன பேசிக் கிழிக்கப் போகிறார்...?' என்றெண்ணிக் கொண்டான்.

அனைவரும் வெளிச் செல்ல ஆயத்தமாக, "ரபீக்கா நீங்க நில்லுங்கோ..." எனச் சொல்லி தன் மனைவியையும் இருக்குமாறு வேண்டிக் கொண்டார் ஸபூர் நானா.

கட்டிலிலே சய்ந்து கொண்டிருந்த ஸபூர் நானா, எழுந்து உட்கார்ந்து கொண்டார். தன் மகனை அருகில் அமர வைத்துக் கொண்டார். தன் வலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரத்தினால் அவனது தலை முடிகளை அன்போடும் பரிவோடும் தடவிக் கொடுத்தார். அவரது கண்கள் கலங்கி அழுதன. பாசத்தினூடாக பெற்ற தலைத் தடவல் ஸப்வானையும் அழ வைத்தது. தன் தந்தை இவ்வளவு நாளும் தன் வில்லனாக இருந்தாலும், அவரது ஒரு வினாடிப் பாசத்திற்கு முன் ஸப்வான் தோற்றுப் போய் அவர் நண்பனாகி விட்டான் மனத்தில். "மகன்..." வார்த்தைகள் வரவில்லை ஸபூர் நானாவுக்கு. தானறிந்த வயதிலிருந்து பாசத்தோடு 'மகன்' என தன் தந்தை அழைத்தது இதுதான் முதற் தடவை ஸப்வானுக்கு. ஸபூர் நானாவின் கடைசி காலம் நெருங்கி விட்டாதாக உணர்ந்தாரோ...! கடைசி காலத்தினை உணரும் போது மனிதர்களுக்கு ஞானம் பிறப்பது உண்மைதானோ...!

"மகன்... நான் ஒன்னோட கோவமில்ல மகன்... என்னப் போல ஒத்தனும் ஒனக்கு எறக்கம் காட்டோமேலா மகன்... நான் ஒன்ட மனச நோகடிச்சிருந்தா என்ன மன்னிச்சுக்கோ மகன்..." கொஞ்சம் கதறியழுதார் ஸபூர் நானா. அவரது அழுகையில் ரபீக்காவும் பங்கெடுத்துக் கொண்டு மூக்கைச் சிந்தியவளாக அமைதியாக அழுதாள்.

தன் தந்தையின் கவலை நிரம்பிய வசனங்கள் ஸப்வானை ஸ்தம்பிக்கச் செய்தது. "ஒங்கேளோட நான் கோவமில்ல வாப்பா..." ஸப்வானும் காதலியிடம் முதன் முறையாகப் பேச வார்த்தைகள் அற்றவன் போன்று அழுதழுது தழுதழுத்த குரலில் பேசினான்.

"மகன், ஏன்ட புள்ளைகள்ளயே எனக்கு மிச்சம் விருப்பமான புள்ள நீ மட்டும்தான்டா... ஒன்ட மேல நா வெச்சீச்சிய பாசம் எனக்கும் அல்லாஹ்கும்தான் வெளிச்சம்... நான் ஒன்னோட பாசமே இல்லயென்டு நீ நெனச்சீச்சும் மகன்... நானும் அப்புடித்தான் ஒன்னோட நடந்து கொண்ட..." ஸப்வான் பிறந்து முதல் ஐந்து வருடங்களில் அவனோடு மிகப் பாசமாக இருந்த ஸபூர் நானா, அதன் பின்னர்தான் பெரிய இடைவெளியொன்றினைத் தனக்கும் ஸப்வானுக்குமிடையில் ஏற்படுத்திக் கொண்டார்.

சில அரசியல்வாதிகள் மேடைகளில் ஏறினால், வேறு யாருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்காமல், தாம் மட்டுமே உரையாற்றிக் கொண்டு செல்வது போல, ஸபூர் நானா அவ்விடத்தில் தான் மட்டுமே தொடர்ந்தும் பேசிக் கொண்டு போனார்.

"மகன்... நான் ஒன்னோட எறக்கமில்லாதமாதி நடக்கத்துக்கு காரணம் நெறய ஈச்சி மகன்..." காரணங்களை விவரிக்கத் தலைப்பட்டார் ஸபூர் நானா. கண்களில் ஆச்சரியத்தைத் தக்க வைத்துக் கொண்டு, ஸப்வான் அவரது முகத்தினை ஏறெடுத்து நோக்கினான் அதிசயமாகவும் கொஞ்சம் சுவாரஷ்யமாகவும்.

"மகன்... ஒனக்குத் தெரியும் எங்கட ஊர்ல என்னப் பத்தி எனத்தியன் பேசியன்டு... ஏன்ட கண் பட்டாலே எனத்தியாலும் ஆகிடுமென்டு என்னக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாலே ஆள்க அங்கால பாத்துக் கொண்டு பெய்த்துடிய... ஏன்ட கண் சரியில்லயாம்... சரியான கண்ணூறு கலந்த கண்ணாம் ஏன்ட..."

ஊர் மக்கள் ஸபூர் நானாவைப் பற்றி நல்ல மனிதர் எனக் கூறினாலும், அவரது கண்களிலும் வாயிலும் மட்டும் நம்பிக்கை இழந்திருந்தனர். அதற்குக் காரணம், அநேகமாக அவர் வாய் விட்டுச் சொல்லக் கூடியதும் கண்களால் பார்த்து மெச்சக் கூடியதும் சரியாக நடந்தேறிவிடும் அல்லது நன்றாக நடந்தவை கெட்டவையாக மாறிவிடும். ஒரு கிரிக்கட் ஆட்டமாக இருந்தாலும் அவரது ஊகம்தான் மற்றவர்களின் ஊகத்தினை அனேகமாக வென்றுவிடும். அதனால் மக்கள் அவரைக் கொஞ்சம் புறந்தள்ளித்தான் வைத்திருந்தனர். எல்லாமே அல்லாஹ்வின் புறத்தால் நடந்தேறினாலும், மக்களுக்கு அவையெல்லாம் ஸபூர் நானாவின் கண்களால் நிகழ்ந்துவிட்ட நிகழ்வாகவே தென்படும். ஸபூர் நானாவும் என்ன செய்ய...? பார்வையையும் வாய்மொழியையும் யாரையும் வீழ்த்துவதற்குப் பயன்படுத்துபவரல்ல ஸபூர் நானா. ஆனாலும் அவையெல்லாம் தானே இடம்பெற்றால் அவர் என்னதான் செய்வது...?

"மகன் ஸப்வான்... நீ பொறந்து ஒரு கெழம போகல்ல. நல்ல பசுந்தான புள்ளயென்டு ஒங்கட உம்மாக்கிட்ட செல்லி ரெண்டு மணித்தியாளம் போகல்ல... நீ ஒங்கட உம்மாட கைலீந்து புழுந்து நல்லா சீரியஸாகி ஹொஸ்பிட்டல்ல மூனு நாள் நின்ட... ஓன்ட பத்து வயசுல ஸ்கூல் புட்போல் மெட்ச்ல சேம்பியனாகி வந்த நேரம் நான் சந்தோஷத்துல எல்லாருக்கும் செல்லிச் செல்லி இருந்த... அடுத்த நாளே ஓன்ட கால் ஒடஞ்சி போன... இந்தமாதி ஒரு கொட விஷயம் ஒன்னப் பாராட்டப் பெயித்து எல்லாமே பொட்டப் பொக்கமா முடிஞ்ச மகன்... அதுலதான் நான் நல்லாப் பயந்து போன... எனக்கு இந்தக் கண்ணூரொன்டுலயும் நம்பிக்க இல்ல மகன்... அப்பவும் ஊர் ஆள்க அப்படி என்னப் பத்தி நெனச்சி நெனச்சி நானும் ஓன்ட விஷயத்துல பயந்து போன மகன்..."

ஸபூர் நானா சொல்கின்ற விடயங்கள் புதியவையாகவும் புதினம் பொதிந்தவையாகவும் ஸப்வானுக்குத் தென்பட்டாலும் ரபீக்காவுக்கோ அவையொன்றும் புதிதுமில்லை; புதினங்களுமில்லை. ஸபூர் நானா ஸப்வானோடு எதிர் மறையாக நடந்து கொள்ளும் போதெல்லாம், அவளுக்கு இதுதான் காரணங்களாக இருக்கலாம் என்றுதான் எண்ணத் தோன்றும். எல்லோரது எண்ணக் கிடங்குகளையும் இறைவன் ஒருவனேயறிவான். ஆனாலும் கணவன்மார்களது பல எண்ணக் கிடங்குகளை அல்லாஹ் தவிர்ந்து வேறு யாரும் அறிவார்களாயின், அது சொந்த மனைவிகளாக மட்டுமே இருக்க முடியும் அல்லவா...!

ஸப்வானின் கண்களில் இருந்தும் கண்ணீர் வெளிப் பாய்ந்தது. அவன் அழுவதை சிறு வயதில் பார்த்தவர்தான் ஸபூர் நானா. விளையாட்டுப் பொருட்கள் வாங்கித் தருமாறு அழுது புரண்டவன், தற்போது தனக்காக அழுவதை நினைக்கும் போது ஸபூர் நானாவுக்குப் பெருமை மட்டுமல்ல; பெருமிதமும்கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அழாதமகன்... நீ தைரியமா இருச்சோனும் எப்பவும். எனக்குப் பொறகு இந்தக் குடும்பத்த நீதான் வழிநடத்தப் போற... இந்தக் குடும்பத்த ஒரு நாளைக்கு நீ வழிநடத்தப் போறன்டியத்த நெனச்சித்தான் மகன் நான் ஒன்ட மேல வெறுப்புமாதி நடந்து கொண்ட... நான் கண்ணூறுக்காரனா இருச்சட்டும். அது பிரச்சினில்ல... ஆனால் ஏன்ட கண்ணூறு ஒன்னத் தாக்கிடப்படாது மகன்..." மூச்சு விட்டு விட்டு, பேசிக் கொண்டே போனார் ஸபூர் நானா.

"நீ சாதிச்ச சாதனயெல்லாம் பாக்கிய நேரம் ஒரு வாப்பாவாக எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமோ மகன்... நீ ஒவ்வொரு டைமும் ஸ்கூல்ல 'பெஸ்ட்' வார டைமுக்கும், வௌயாட்டுல நீ எடுத்த 'மெடல்'கள பாக்கிய டைமுக்கும், எல்லாரும் ஒன்னப் பாராட்டிய டைமுக்கும் அப்படியே ஒன்னக் கெட்டிப் புடிச்சி இறுக்கி அணச்சோனும் மாதி மகன்... அப்பவும் நா அப்படி செய்யல்ல மகன்... அத எல்லாத்தயும் சேத்து நான் இப்ப ஒன்னக் கட்டிப் புடிச்சியன் மகன்..."

அழுதழுது ஸப்வானைக் கட்டிப் பிடித்துக் கொண்ட ஸபூர் நானா ஸப்வானை விடவேயில்லை. பல வருடங்களாக கட்டியணைக்க முடியாமல் போனதை ஈடு செய்யும் நோக்கில் கட்டிப் பிடித்துக் கொண்டே நின்றார்.

வாப்பாவை கடந்த பல வருடங்களாக வில்லனாக எண்ணிக் கொண்டிருந்த ஸப்வானுக்கு நன்றாக உறைத்தது இப்போது. வாப்பாவின் எண்ணங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் போனதையிட்டு பதைபதைத்தான். உள்ளம் இரண்டு பட்டது. எல்லோருக்கும் உடைகள் வாங்கி வந்து தன் வாப்பாவுக்கு மட்டும் வாங்கி வராமல், பெற்றோரின் மனதை நோவினை செய்தவர்கள் கூட்டத்தில் தானும் ஒரு பிள்ளையாய்ச் சேர்ந்து கொண்டேனே என வெதும்பினான். வார்த்தைகளுக்குப் பதில் விக்கல்கள் வந்தவனாகத் தேம்பினான் தன் தந்தையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு.

"வாப்பா... என்ன மன்னிச்சுக்கொங்கோ வாப்பா..."

'தந்தை சொற்கள் மிக்க மந்திரங்கள் இல்லை...!' என்பதை எல்லாப் பிள்ளைகளும் பாலர் பாடசாலைகளில்தான் அறிந்து கொள்வர். ஆனால், ஸப்வான் போன்று ஒரு சிலர் மட்டும்தான் வாழ்க்கையிலேயும் தெரிந்து கொள்வர்.

"இன்ஷா அல்லாஹ் வாப்பா... நானும் நீங்களும் உம்மாவும் இன்னம் கொஞ்ச நாளைல உம்ராக்குப் பெயித்துட்டு வரோம்... வாஷொன்டு வந்துடட்டும்..." மாதச் சம்பளக்காரன் மாணிக்க வியாபாரி போன்று 'வாஷொன்டு வரட்டும்...' எனச் சொன்னது கொஞ்சம் 'டூமச்'தான்.

உம்ரா, ஹஜ் வார்த்தைகளைக் கேட்டால் எவர் கண்கள்தான் அழாமல் இருக்கும்...! எவரது உள்ளங்கள்தான் சுருங்கி விரியாமல் இருக்கும்...!

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸப்வான் சொன்னதைக் கேட்டு ஸபூர் நானாவின் மனம் குளிர்ந்து போனது. அத்தோடு இத்துனை வருடங்கள் கழிந்தும், இவ்வளவு சம்பாதித்தும் தான் உம்ராச் சென்றுவர சிரத்தையெடுக்கவில்லையே எனவும் கவலைப்பட்டுப் போனார். தன் சம்பாத்தியத்தில் ரபீக்காவையேனும் அதற்காக தயார்படுத்த முடியாமல் போனதை நினைத்தும் வருத்தப்பட்டார்.

மூன்று-நான்கு நாட்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்த ஸபூர் நானா வைத்தியர்களின் ஆலோசனைப்படி வீடு செல்ல ஆயத்தமானார். பூரணமாகக் குணமாகவில்லை அவர். இதய ரத்த சுற்றோட்டத்தில் நான்கு அடைப்புக்கள் இருப்பதாயும், அதனை அவசரமாக ஒரு மாத காலத்துக்குள் நீக்கி விடுவதுதான் உயிருக்கு உத்தரவாதமென்றும் வைத்தியர்கள் கூறிவிட, அதனை சிந்தனையில் வைத்துக் கொண்டு ஸபூர் நானாவை வீட்டுக்கு அழைத்துச் சென்றனர் குடும்பத்தினர். இருதய சத்திர சிகிச்சை இலேசுப்பட்ட வேலையா...? ஆறு லட்சம் ரூபாய்க்களாவது தேவைப்படுமல்லவா...! இப்பேர்ப்பட்ட பாரிய பொருளாதாரமொன்று சாதாரண குடும்பமொன்றுக்குத் தேவைப்படுவதும் அல்லாஹ்வின் ஒரு மாபெரும் சோதனைதான்...!

ஸப்வானும் ஸபூர் நானாவும் இலங்கை கிரிக்கட் வீரர்களான மஹேல ஜயவர்த்தன, குமார் ஸங்கக்கார போன்று நெருங்கிய நண்பர்களாகி விட்டனர். இருவரையும் கிரிக்கட் அணிக்கு சேர்த்து விட்டால் அடுத்த உலகக் கிண்ணம் இலங்கைக்கென்பதில் சந்தேகமேயில்லை.

அவ்வாரத்தில் வியாழக்கிழமை உதயமாகவே, வெள்ளிக்கிழமை தனது அலுவலகத்தின் அலுவல்களுக்கு விடுமுறை எடுத்துக் கொண்டான் ஸப்வான். அன்றைய வெள்ளிக்கிழமையை தன் தந்தையோடு முழுதாகக் கழித்து, புத்தாண்டுக் கொண்டாட்டம் போன்று கொண்டாடுவதுதான் அவனது முதற்கட்ட நடவடிக்கையாக இருந்தது.

முதல் சம்பாத்தியத்தில் தன் தந்தைக்கு வாங்கிக் கொடுக்க முடியாமல் போன புத்தாடைகளை இப்போது வாங்கிக் கொண்டான். தன் தந்தையை மட்டுமே கௌரவப் படுத்த எண்ணிய ஸப்வான் தன் தாய்க்குக்கூட புத்தாடைகள் வாங்கவில்லை. தனக்கும்கூட அவன் வாங்கிக் கொள்ளவில்லை.

கொழும்பிலிருந்து பேருவலை நோக்கிப் பயணிக்கின்ற புகையிரதத்தில் சந்தோஷமாக வந்து கொண்டிருந்த ஸப்வான், பயாகலையை அண்மித்ததும் தொலைபேசி அழைப்பைப் பெற்றான் ஸபிய்யாவிடமிருந்து.

“நானா எங்கியன் நீங்க...? அவசரமா வாங்கோ வாப்பா பேசியல்ல...”

ஸபிய்யாவின் வார்த்தைகள் பேரிடியாக காதுக்குள் நுழைய, ஸப்வானது கால்கள் உயிரின்றிப் போனது.

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸபூர் நானாவின் இவ்வுலகக் கதை முடிந்தது. "ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தைச் சுவைத்தே தீரும்..." என்கின்ற அல்குர்ஆனின் கூற்று ஸபூர் நானாவையும் தேடி வந்து விட்டது. யாரைத்தான் விட்டு வைக்கும் அந்த வசனம்...!

***"ஜனாஸா அறிவித்தல்...! கட்டுக்குருந்தையைச் சேர்ந்த காலம் சென்ற அல்ஹாஜ் ஸாலி அவர்களின் மகனார் ஜனாப் ஸபூர் காலமானார்...! அன்னாரின் ஜனாஸா நாளை மாலை நான்கு மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்...! அறிவிப்பவர் மகனார் ஸப்வான்...!***

பத்தை ஜீம்ஆப் பள்ளிவாயலில் மேற்படி அறிவித்தல் செய்த போதுதான் ஊராட்கள் நிறையப் பேர் அறிந்து கொண்டு அனுதாபம் கொண்டார்கள் ஸபூர் நானாவின் மீது. அடுத்த மாதம் அறுவைச் சிகிச்சையென இருந்தவர் உயிர் நீத்தது எல்லோருக்கும் கவலைதான்.

இதுதான் மனிதனது வாழ்க்கை. ஒன்றுமேயில்லாத வாழ்க்கையாக மாறி விடுகின்றது கடைசியில். உலக மாபெரும் வீரரொருவராக வரலாற்றில் கணிக்கப்பட்ட, அலெக்ஸாண்டர் அதனை மக்களுக்குப் புரியும்படி இலகுவாக விளக்கியது இப்படித்தான்.

அலெக்ஸான்டர் அவரது மரணத் தருவாயில் இருந்தாராம். அவரது ஈமைக் கிரியைகள் எப்படி இடம்பெற வேண்டுமென படைத் தளபதியை அழைத்துச் சொன்னாராம். தலை சிறந்த மருத்துவர்கள் சிலர் தனது தேகத்தினை தூக்கிச் செல்ல வேண்டுமென்று முதலாவதாகச் சொன்னாராம். தான் சம்பாத்தித்து வைத்திருக்கின்ற தங்கம், வைரங்கள் போன்றவைகளை பூமியில் தூவித் தூவி தேகத்தினை சுமந்து செல்ல வேண்டுமென்று இரண்டாவதாகச் சொன்னாராம். தன்னைச் சுமந்து செல்லும் போது தனது கைகளை மக்கள் பார்க்கும் வண்ணம் விரித்து வைக்குமாறு முன்றாவதாகச் சொன்னாராம். தளபதிக்கோ ஒன்றுமே புரியவில்லை. கடைசியில் அவரிடமே அதற்கு விளக்கம் கேட்டாராம்.

தலை சிறந்த மருத்துவர்களால் கூட எனது சாவைத் தடுக்க முடியவில்லையென மக்களுக்கு உணர்த்த வேண்டும். நான் 'சேமித்தும் கைப்பற்றியும் வைத்த பொருட்கள் அனைத்தும் பூமிக்கே சொந்தம் என்பதனை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும். விரிந்த கைகளைப் பார்க்கும் போது எப்படி ஒன்றுமில்லாமல் பிறந்து வந்தோமோ அப்படியே வெறும் கரங்களோடு திரும்பிச் செல்கின்றோமென்பதனை மக்களுக்குச் சொல்ல வேண்டும். இப்படி பதில் கொடுத்தாராம் 'அலெக்ஸான்டர் த கிரேட்' என்று வரலாற்றில் புகழாரம் பெற்றவர். மக்களுக்கு அழகிய உபதேசமொன்றுதானே...!

தந்தையொரு அழகிய புத்தகம் எனச் சொல்வார்கள் பலரும். 'உண்மையில் த்ந்தைமார் புத்தகங்களல்ல; புத்தகச்சாலைகள்...' என்று சொன்னால் முதலில் ஆமோதிப்பவன் ஸப்வானாகத்தான் இருக்க முடியும். தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையோடு எவ்வளவுதான் குரோதமாக அறியாத் தனத்தில் நடந்து கொண்டாலும், அவன் கடந்து வந்த பாதைகளைப் பற்றி சிந்திக்கும் போது தந்தையின் தாத்பரியம் வெகுவாகப் புரிந்தது அவனுக்கு.

இருபத்தைந்து வயதுக்கு மேலாக அவனுக்காக உழைத்து சோறூட்டியது அவனது தந்தையல்லவா...! வாழ்க்கையில் சிறுபராயம் முதல் நோய்வாய்ப்பட்டிருந்த போதெல்லாம் அவனைப் பொறுப்பெடுத்தது தந்தையல்லவா...! 'நர்ஸரி' முதல் 'யுனிவர்சிடி' வரை அவனது படிப்புச் செலவுகளை செய்ததும் தந்தையல்லவா...! இன்றுதான் அவன் சொந்தக் காலில் நிற்கின்றான். சொந்தக் காலைப் பெறும் வரை எல்லா விடயங்களிலும் அவன் சாய்ந்து நின்றது தந்தையின் கால்களையல்லவா...!

தந்தை மூலம் பெற்றுக் கொண்ட படிப்பினைகளை அவனது வாழ்வில் பிரதிபலித்துக் கொள்ள ஆயத்தமானான் ஸப்வான். அவனுக்கும் ஸபூர் நானாவுக்குமிடையில் ஏற்பட்டுப் போன இடைவெளி நிச்சயமாக அவனது பிள்ளைகளோடு ஏற்பட்டு விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்வான். ஸபூர் நானா மரணமெய்திய நாளில் அவனுக்கிருந்தது இரண்டேயிரண்டு வருத்தங்கள்தாம். தான் கொண்டு வந்திருந்த புத்தாடைகளை தன் தந்தைக்கு அணிவித்து அழகு பார்க்க முடியாமல் போனது அதில் முதன்மையானது. மற்றையது ஸபூர் நானாவை உம்ராவுக்கு அழைத்துச் செல்லக் கூடிய பாக்கியம் இல்லாமல் போனது.

என்றாலும் தனக்கும் தன் தந்தைக்குமிடையில் இருந்த இடைவெளியை அல்லாஹ் தன் தந்தையின் மரணத்துக்கு முன்னால் நிவர்த்தி செய்து தந்ததை நினைத்து மட்டும் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

**முடிந்தது**

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொப்புள்கொடி உறவு...!

*கடைசியாகத் துயிலுகின்றாள்...! முதலாக துயிலெழும்புகின்றாள்...! எல்லோருக்கும் சமைக்கின்றாள்...! மிச்சமிருந்தால் மட்டும் உண்கின்றாள்...! இன்பத்தினை மட்டும் மற்றவர்க்குப் பகிர்கின்றாள்...! துன்பத்தினை யாருக்கும் கொடுக்க மறுக்கின்றாள்...! தன் அழகினை காலில் போட்டு மிதிக்கின்றாள்...! உடல் சோர்வினை துச்சமாக மதிக்கின்றாள்...! தாயினால் மட்டும் எப்படி முடியுமாகின்றது இப்படி...!*

சந்தோஷமாக இருக்கின்ற தருணங்கள் மனிதனுக்கு மிகவும் சொற்பம்தான். அந்த சொற்ப இன்பமான தருணங்கள் வாழ்வில் மிக முக்கியமான நிமிடங்களாக இருப்பதுவும் என்றும் உண்மைதான்.

இர்பானும் அன்று மிகவுமே சந்தோஷமாக இருந்தான். தனது இருபத்தெட்டு வருட வயதினுள் சந்தித்த நாட்களில் இப்பேர்ப்பட்ட சந்தோஷகரமான நாளொன்று எதுவுமே இருக்க முடியாது அவனுக்கு.

'முட்டைக் கோபி' குடிக்காமலேயே இர்பானின் உடல் வலுவானதாகத் தெரிந்தது அவனுக்கு. நோன்புகள் நோற்காமலேயே அவனது உள்ளம் சாந்தத்தினை உணர்ந்து நின்றது. தொடர்தேர்ச்சியாக பல மாதங்களாக 'தஹஜ்ஜுத்' தொழுகை தொழாமலேயே அவனது முகம் பிரகாசித்து நின்றது. பற்பசை விளம்பரங்களில் நடிக்கின்ற ஒருவனைப் போல பற்களை வெளிக்காட்டி சிரித்துக் கொண்டேயிருந்தான்.

அன்றுதானாம் அவனது திருமண நாள். வாழ்க்கையில் சந்திக்கின்ற நாட்களில் திருமண நாள் போன்றதொரு இன்பம் பொங்கும் நாள் வேறேதேனும் இருக்கின்றதா...? என்றால், இல்லையென்றுதான் நிறையப் பேர் கூறுவார்கள். என்னமோ தெரியவில்லை; திருமணப் பேச்சென்றாலே மணமகனுக்கும் மணமகளுக்கும் மனத்தில் உதிக்கின்ற வர்ணிக்க முடியா சந்தோச உணர்ச்சிகளை எவராலும் விரிவாக்கம் என்கின்ற பெயரில் விரிவுரை செய்ய முடியவில்லையே இன்றுவரை.

வாழ்க்கையில் பல ஈகைப் பெருநாட்களை சந்தித்திருக்கலாம்; பல கொண்டாட்டங்களை அடைந்திருக்கலாம்; பல களியாட்டங்களை சுவைத்திருக்கலாம். ஆனாலும் திருமண நாளென்பது அவையனைத்தினையும் விஞ்சி நிற்கும் நாளாக ஜொலிக்குமென்பதில் ஐயமேயில்லை.

மனிதன் தனது பிறப்பிலிருந்து அனுபவம் கொள்கின்ற துயரங்களெல்லாம் இறுதியில் இன்னொரு நபரோடு இன்பமாக காலம் கடத்துவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்பாடாகத்தானே அநேகருடைய வாழ்வில் அமைந்து விடுகின்றது. கஷ்டப்பட்டுப் படிக்கின்றோம்; துன்பப்பட்டு சம்பாதிக்கின்றோம்; வேதனைப்பட்டு பொருளாதாரங்களை சேமிக்கின்றோம். எல்லாம் எதற்காக...? தனக்கென துணையொன்றை அடைந்து, அதன் மூலம் தன் வாழ்வை தொடரத்தானே...! அல்லாஹ், ஆண்-பெண் வேறுபாடுகளை சமைத்து, வாழ்க்கையை அழகாக ருசிக்கச் செய்து விட்டானே...!

***இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான் தான் விளையாட...!***
***அவையிரண்டும் சேர்ந்தொரு பொம்மையைச் செய்தன தாம் விளையாட...!***
என்கின்ற வரிகள் சினிமாப் பாடல் வரிகளாக இருந்தாலும் எவ்வளவுண்மை பொருந்தியவை...! விளையாட்டு போன்றுதானே வாழ்க்கையும் இனிமையாகவும் நகர்கின்றது...!

சீனங்கோட்டை, பெரேரா வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இர்பான் குடும்பத்தின் ஒரே ஆண்பிள்ளை. மூத்த பிள்ளையும்கூட. மூன்று இளைய சகோதரிகளுக்கு நானாவான இர்பான், ஒரு மாணிக்க வியாபாரி. உயர்தரம் வரை சராசரியாகப் படித்தவனுக்கு, மேற்கொண்டு படிப்பதற்கான வசதிகள் இருந்தாலும், வாப்பாவோடு சேர்ந்து கொண்டு மாணிக்கத் தொழில் செய்வதில்தான் அலாதி விருப்பம். கிரிக்கட் விளையாட்டில் பாகிஸ்தான் வீரர் சாஹித் அப்ரிதி பதினாறு வயதில் அறிமுகமாகியது போன்று, தனது பதினாறு வயதிலேயே இர்பான் தொழிலுக்கு அறிமுகமாகி விட்டான். பாடசாலை செல்கின்ற காலப் பருவத்திலும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமையென மாணிக்கக் கல் வர்த்தகம் இடம்பெறும் இடமான சீனங்கோட்டையின் 'பத்தை'க்கு ஓடோடி வந்து விடுவான். எல்லாம் வல்ல அல்லாஹ் சீனங்கோட்டைக்கென்றே ஏற்படுத்தி வைத்திருக்கின்ற 'விவசாயம்'தானே மாணிக்கக் கல் வியாபாரம்...!

'மாணிக்கக் கல் விவசாய'த்தில் அல்லாஹ் ஏற்படுத்தியிருக்கின்ற 'பரக்கத்'தினையும் அபிவிருத்தியையும் சொற்களால் வடித்துவிட முடியாது. குறைவானளவு நேரம் உழைப்பார்கள்; நிறைய சம்பாதிப்பார்கள். எளிமையாக மூலதனமிடுவார்கள்; மிக அவசரமாக அதனைப் பெருக்குவார்கள். ஆரம்பிக்கும் போது ஏழையாக இருப்பார்கள்; சொற்ப காலத்தில் பணக்காரர்களாகி விடுவார்கள். வெளிநாட்டு மொழிகளில் அதுவும் குறிப்பாக ஆங்கிலத்தில் மிகக் குறைந்தளவில் அறிவுடையோராய் இருப்பார்கள்; வர்த்தகமெல்லாம் வெளிநாட்டோடு வைத்திருப்பார்கள். கல்வித் தகைமைகளில் அதிகமாக பின் தங்கியிருப்பார்கள்; கல்வித் தகைமையுள்ளவர்களை அவர்களுக்குக் கீழால் வேலைக்கு அமர்த்தியிருப்பார்கள். இப்படியாக மாணிக்கத் தொழிலின் பெருமிதங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பத்து வருடங்களாக மாணிக்கத் தொழிலிலே சங்கமித்திருக்கின்ற இர்பானும் கிட்டத்தட்ட ஒரு கோடீஸ்வரன்தான். அல்லாஹ்வின் ஏற்பாட்டில் அவனது தொழிலிலே நிறைய அனுபவங்கள் மற்றும் தேர்ச்சி பெற்று, சம்பாத்தியங்கள் செய்து, முப்பது லட்சம் ரூபா பெறுமதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியொன்றுக்கும், நாற்பத்தைந்து லட்சம் ரூபா பெறுமதியான காரொன்றுக்கும் சொந்தக்காரனாகியிருந்தான். அது போக இன்னும் முப்பது லட்சம் ரூபா மூலதனமாகவும் பணம் வைத்திருந்தான்.

சீனங்கோட்டை எகொடவத்தையைச் சேர்ந்த லாபிர் ஹாஜியாரின் செல்வப் புதல்வி ஸலாமத்தோடுதான் திருமண பந்தம் மூலம் இர்பான் இணையப் போகின்றான் அன்று. இருபது வயது நிரம்பிய ஸலாமத் உயர்தரம் வரை பயின்றவள். உம்மாவையும் வாப்பாவையும் சேர்க்காமல் மூன்று பேர் கொண்ட குடும்ப அங்கத்தவர்களில் கடைசியானவள். உம்மாவுக்கு வில்லியாக இருந்தாலும், மூத்த நானாமாருக்கு செல்லக் குழந்தையவள். சிறுபராயத்தில் மூவரும் சண்டையிட்டுக் காலங்கள் கடத்தினாலும், வளர வளர மூவருக்கும் சகோதரப் பாசங்கள் அதிகரித்து ஒருவரை விட்டால் மற்றவர் இல்லையென்கின்ற நிலைமைக்கு ஆளாகியிருந்தனர். ஸலாமத்தும் கொஞ்சம் அச்சம் கலந்தவளாக அன்று குதூகலத்தில்தானிருந்தாள்.

சீனங்கோட்டைக் கல்யாண நிகழ்வினைச் சொல்லவா வேண்டும்...! எவ்வளவு அழகான விழாவொன்றாக அதனைக் கொண்டாடுவார்கள். நாட்டின் சுதந்திர தின விழாவினை விடவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்ற நிகழ்வுகளாகவே எப்போதும் அவையிருக்கும். பொருளாதாரம் நிறையத் தேவைப்பட்டாலும், மனதுக்கு நிறைவைத் தரக்கூடிய விதத்தில் அது அமைந்து விடுவது ஏழை எளியோருக்கும் ஆறுதாலாகக்கூட இருக்கும். உறவினர்களும், அயலவர்களும், தெரிந்தவர்களும், நண்பர்களுமென அனைத்துத் தரப்பினரும் ஒன்றாய் வந்தமர்ந்து செவ்வனே அதனை ஆரம்பத்திலிருந்து நிறைவு செய்து வைப்பது குளிர்ச்சியாக இருக்கும் கண்களுக்கும். சீனங்கோட்டைத் திருமண வைபவங்களின் பெருமைகளைக் கண்கூடாகப் பார்த்து மதிப்பிட வேண்டுமெனில், பிற ஊர்களில் இடம்பெறுகின்ற திருமண வைபவங்களுக்கு சமுகம் கொடுத்தால் புரியும். யானையும் பூனையும்தான் இரண்டுமென வெகுவாக விளங்கலாம்.

அன்று மஃறிபுடைய நேரத்தினை அடைந்து கொண்டதும் இர்பானுக்கும் ஸலாமத்துக்கும் மனதுக்குள் ஒரே மத்தாப்பு. இரண்டு மூன்று மாதங்களாக தொலைபேசியில் உரையாடி உரையாடி உறவாடிப் போனவர்கள், மரணம் வரும் வரை எல்லைகளற்ற நாட்கள் ஒன்றாக இருக்கப் போகின்ற தருணங்களின் ஆரம்பமல்லவா அது...! நோன்புப் பெருநாளும் ஹஜ்ஜீப் பெருநாளும் ஒரே நாளில் வந்த சந்தோஷம் அவர்களுக்கென்றால் பாருங்களேன்...!

மஃறிபுத் தொழுகையினை முடித்த கையோடு ஸலாமத் திருமண மேடையில் வந்தமர, இர்பானோ இஷாத் தொழுகையின் பிற்பாடே தன்னை அலங்கரித்துக் கொள்ள ஆயத்தமானான். பழைய ஆடைகளைக் கலைந்துவிட்டு மணமகனாகின்ற உணர்வோடு புது ஆடைகளை அணியும் போது ஏற்படுகின்ற இன்பம் உண்மையில் அலாதியானதுதான். பூரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷங்களோடு தயாராகிக் கொண்டிருந்தான் இர்பான் நண்பர்களின் துணையோடு.

சீனங்கோட்டையின் பாரம்பரியமான 'சாரமும் சேர்ட்'டும் வழமையாக அணிகின்ற இர்பான், 'ட்ரௌவ்ஸர்' அணிந்து 'டை'யெல்லாம் சேர்ட்டுக்கு வெளியால் சொறுகியிருப்பது, அவனுமொரு 'மிஸ்டர் சீனங்கோட்டை' பட்டம் வெல்வதற்குப் போதுமான சான்றுதான். சீனங்கோட்டை மாணிக்க வியாபரிகள் ஆங்கிலேயர்களது உடைகளணிய வெட்கப்படுவார்கள். அணிந்தால், ஆங்கிலேயர்களைவிட வனப்பாய் இருப்பர்கள் என்பதுதான் உண்மை. அது அவர்களுக்குத் தெரிவதில்லையேனோ...!

இதோ மாப்பிள்ளை இர்பான் தயாராகி விட்டார். ஆனால், 'கோட்'டும், துருக்கித் தொப்பியும்தான் இன்னும் மாப்பிள்ளையின் இடுப்புக்கும் எடுப்புக்கும் பாக்கியாக இருந்தன.

'கோட்'டினை அணிவிக்க வாப்பா வேண்டுமாம். துருக்கித் தொப்பியை அணிவிக்க உம்மா வேண்டுமாம். அதுதான் சீனங்கோட்டையின் பழக்க வழக்கமாம். 'ஒன் யுஅர் மார்க்... கெட் ஸெட்... ரெடி... கோ...' என சொல்லும் வரைக்கும் ஓட்டப் பந்தய வீரர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களே, அதே போன்று ஸனீரா ஹாஜீம்மா, ஸவாஹிர் ஹாஜியார் தன் மகனுக்கு 'கோட்'டினை அணிவித்து முடிக்கும் வரை காத்து நின்றாள், துருக்கித் தொப்பியை தன் மகனுக்கு அணிவித்து அழகு பார்த்து விட.

திருமணம் முடிக்கும் வயதில் தனக்கொரு மகனுமிருப்பதை உணரும் போது ஸனீரா ஹாஜீம்மாவுக்குப் புல்லரித்தது; கண்கள்கூட பணித்தன. சின்னப் பிள்ளையாகத் தன் கரங்களுக்குள் பூனையாக வளர்ந்தவனா இப்படி திருமணக் கோலத்தில் இன்று நிற்கின்றான்...? என வியந்து எண்ணினாள். காலங்கள் அவசரமாகக் கழிந்ததை, தன் முடிகள் வெள்ளையானதில் அறியாதவள், தன் தோல்கள் சுருங்கிப் போனதில் உணராதவள், தன் உடம்பில் சோர்வேற்பட்டுப் போனதில் தெரியாதவள், தன் மகனின் திருமண வயதில் சிறப்பாக அனுபவப்பட்டுப் போனாள்.

***இருபத்தியொன்பது ஆண்டுகளுக்கு முன்னுள்ள 'ப்ளேஷ் பெக்...'!***

தானொரு தாயாகப் போகின்ற விடயம், தனது திருமணம் முடிந்து மூன்று மாதங்களில் தெரிய வந்த போது ஸனீரா கொண்ட ஆனந்தத்துக்கு எல்லை அந்த வானமாகத்தான் இருந்தது. தன்னால் ஒருயிர் இவ்வுலகத்தில் சங்கமிக்கப் போகின்றதை நினைத்து மகிழ்ச்சிப்பட்டுப் போனாள். பருவமறிந்த காலத்திலிருந்து தானும் என்றேனும் ஒரு தாயாக வரவேண்டுமென எதிர்பார்த்துக் காத்திருந்த நாளும் அதுவென அவளுக்குத் தெரியும். தாயாவது எப்படியென்று அறியாப் பருவத்திலும்கூட பிற கர்ப்பிணிப் பெண்களின் வயிறுகளின் வளர்ச்சியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து தானும் அப்படி வயிறை வளர்த்துக் கொள்ள ஆசைப்பட்ட சராசரிப் பெண்ணொருத்தியும்தான் அவள்.

தன் வயிற்றுக்குள் உண்டானது இர்பானா...? அல்லது இர்பானாவா...? என்றுகூடத் தெரியாமல், பக்குவமாய் நடந்து கொள்ள தலைப்பட்டுப் போனாள் ஸனீரா. ஸவாஹிர் ஹாஜியார் தந்தையாகப் போகின்றதை அவரிடமே சொல்வதற்கு அவர் பத்தையிலிருந்து வரும்வரை காத்திருந்து சொன்னதும், வாரியணைத்து தனக்கொரு பலமான முத்தத்தினையும், தன் வயிற்றுக்கு மென்மையான முத்தத்தினையும் தந்து குளிர்ந்து போனதையும் அவள் ஒரு போதும் மறப்பதாயில்லை.

நாட்கள் மெல்லமாக நகர்ந்து செல்லச் செல்ல ஸனீராவின் உடலில் பாரியளவில் பல மாற்றங்கள். தாங்கிக் கொள்ளவும் சொல்லிக் கொள்ளவும் முடியாதளவு பலஹீனங்கள் அவளது உடலில் ஏற்பட்டுப் போயின. ஏற்கனவே பலஹீனமுடைய பெண்கள், அவர்களது பலஹீனத்துக்கும் மேல் பலஹீனமாக உயிர்களைச் சுமப்பதனை அல்குர்ஆனும் அழகாகக் கூறுகின்றதல்லவா...!

கர்ப்பத்தின் ஆரம்ப காலத்தில் அவளால் சாப்பிட முடியவில்லை. பானங்கள் குடிக்கவும் முடியவில்லை. கொஞ்சம் சாப்பிட்டாலும் அல்லது பருகினாலும் வாந்தியென்கின்ற பெயரில் அத்துனையையும் வெளிக் கொணர்ந்து விடுவாள்.

வாந்தியெடுப்பது என்ன இலகுவான காரியமா...? அடிவயிற்றிலிருந்து மேலெழுந்து தொண்டைக் குழியால் எவ்வித 'மோட்டார்' துணையுமின்றி வருகின்ற சாப்பிட்டவைகள் மூளையின் உச்சத்தினைத் தொட்டு நாள் முழுக்க அவதியைத் தந்து தள்ளுகின்ற வேதனைகள் உண்மையில் இலேசில்லைதான் இலகுவுமில்லைதான். என்றாலும், பொறுமையாக இருந்து கொண்டு குழந்தையின் வரவுக்காக அனைத்தையும் தாங்கிக் கொள்வாள் ஸனீரா. பெண்களுக்கு நோயெதிர்ப்புச் சக்தி மட்டுமல்ல; வேதனையெதிர்ப்புச் சக்தியும் அதிகம்தான்.

கர்ப்பத்தின் நடுப்பகுதியில் ஸனீராவின் அவஸ்த்தைகள் இன்னுமின்னும் கூடிச் சென்றன. மனிதனுக்கு மிக மிகத் தேவையான தூக்கத்தினை இழந்து தவித்தாள். பக்கம் பக்கமாக சாய்ந்து படுத்துறங்க முடியவில்லை அவளால். ஸவாஹிர் ஹாஜியார் குறட்டை விட்டுக் கொண்டு உலகத்தையே மறந்து தூங்கிக் கொண்டிருக்கும் வேளைகளில் ஸனீரா மட்டும் தூக்கம் தொலைத்து நின்றாள். போதாக் குறைச்சலுக்கு இடுப்பு வலிகள் வேறு. அப்பப்பா...! பத்து மாதங்கள் கொண்ட கர்ப்ப காலத்தினை ஆண்கள் மட்டும் அனுபவிப்பார்களாயின், தற்கொலை செய்து கொள்வது அதனையும்விட மேலெனச் சொல்லி உயிரையே மாய்த்துக் கொள்வார்கள்...!

எவ்வளவுதான் கர்ப்ப காலத்தில் கஷ்டங்களை அனுபவித்தாலும், ஒரு போதும் உள்ளே வளருகின்ற கருவை கடிந்து கொள்ளவேயில்லை ஸனீரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் கடிந்து கொள்ள வேண்டும் போலிருக்கும் தன் கணவன் உட்பட. ஆனாலும் உள்ளே குடிகொண்டுள்ள இர்பானைக் கடிந்து கொள்ள கடுகளவுகூட மனமேற்படவில்லை அவளுக்குள். மாற்றமாக குழந்தையின் வளர்ச்சியில் தன் வளர்ச்சியை மறந்து வாழ்ந்து கொண்டிருந்தாள்.

கர்ப்ப காலத்தில் ஸவாஹிர் ஹாஜியார் அவளோடு அன்பாகப் பழகியதையும், ஆறுதலாய் இருந்ததையும் நினைக்கும் போது அவளுக்குள் வசந்தம் பிறந்தது. ஒவ்வொரு நாளும் தன் வயிற்றினைத் தடவி முத்தமிட்டு 'ஏன்ட செல்லமோ... ஏன்ட ஈரக் கொலயோ... சொகமா நிச்சியா...? அவசரமா வாப்பாவப் பாக்க வாங்கோ...' எனச் சொல்லிக் கொள்ளும் போது அவளுக்குள் கஷ்டம் இறந்தது. கால்களால் தனது வயிற்றினை குழந்தை தட்டி விளையாடும் போது புன்சிரிப்பு வந்தது. மருத்துவரிடம் சென்று "ஸ்கேன்" பண்ணி குழந்தையின் உருவத்தினைக் காணும் போது கவலை போனது. இர்பானைப் பெற்றெடுத்து முத்தங்களை வழங்கிவிட ஸனீராவும் பொறுமையிழந்துதான் நின்றாள்.

ஒன்பதாவது மாதம் கடந்து பத்தாம் மாதம் இரண்டாவது வாரத்தில் தான் அதிவேதனையில் துடித்ததை ஸனீரா இன்னும் மறக்கவில்லை. அவளது துடிப்பில் ஸவாஹிர் ஹாஜியார் பரிதவித்ததையும் அவள் மறக்கவில்லை. உள்ளத்தாலும் கண்களாலும் அவள் வேதனையைத் தாளாமல் அவர் அழுததையும் அவள் மறக்கவில்லை. கொழும்பு தனியார் ஆஸ்பத்திரியில் ஸனீராவை அனுமதித்துவிட்டு, அவள் வெளியே வரும் வரை கண்களில் கண்ணீரோடு திக்ரிலும் துஆவிலும் திளைத்து நின்ற ஸவாஹிர் ஹாஜியாரின் நடவடிக்கைகளையும் அவள் மறக்கவில்லை. அன்றுதான் இர்பான் பிறந்தான் 'இரும்பு சூட்' என்னும் வெற்று மேனியாக.

குழந்தையை ஸவாஹிர் ஹாஜியார் கையில் எடுத்து முத்தம் கொடுத்த அவ்வேளையில் ஸனீராவுக்குள் அழுகை ஊற்றெடுத்தது. அது ஆனந்த அழுகையாம். தான் தன் கணவனுக்காக ஒரு குழந்தையைப் பெற்றுக் கொடுத்த சந்தோஷத்தில் வந்த ஆனந்த அழுகைதானாம் அது...! கஷ்டங்கள் பட்டுவிடடு உடனே ஆனந்தமாக அழுவதற்குப் பெண்ணொருத்தியினால் மட்டுமே முடியும்...! அதுவும் கர்ப்பிணிப் பெண்ணொருத்தியினால் மட்டுமே முடியும்...!

மனித வாழ்வில் எத்துனைதான் கஷ்டங்கள் வந்து போன போதிலும் சந்தோஷகரமான ஒரேயொரு கஷ்டம் பிள்ளை பெறுகின்றதாகத்தான் இருக்க முடியுமே தவிர வேறில்லை. அப்பேர்ப்பட்ட கஷ்டங்களை இப்போது நினைக்கும் போது ஸனீராக்கது இன்பகரமான சொர்க்கமானது.

***ஸவாஹிர் ஹாஜியார் 'கோட்'டினை இர்பானின் தோள்களில் இப்பொழுதுதான் பொருத்திவிட்டு சரி செய்து கொண்டிருந்தார். துருக்கித் தொப்பியை கையில் வைத்துக் கொண்டுதானிருந்தாள் ஸனீரா இன்னும்.***

***இர்ஷாத் ஹஸன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***ஸனீராவின் பார்வையோ இர்பானின் தேகத்தில். ஆனாலும் அவளது மனமோ வேறெங்கோவல்லவா அலைக்கழிகின்றது...!***

இர்பானின் வாழ்க்கைப் பருவங்கள் மிக இனிப்பாக இருந்தன ஸனீராவுக்கும் ஸவாஹிர் ஹாஜியாருக்கும் அவர்களைச் சுற்றியிருந்தோருக்கும். தாங்கள் தூங்க முற்படும் போது இர்பான் விளித்துக் கொண்டு விளையாடுவதும், தாங்களால் தூங்க முடியாத நேரங்களில் இர்பான் இடைவிடாமல் தூங்குவதும் அசௌகரியமாக இருந்தாலும் இன்பமான துன்பமாக இருந்தது. தூங்கும் போதே சிரித்துக் கொள்கின்ற மழலைச் சிரிப்பு எல்லோருக்குமே மகிழ்ச்சியைக் கொடுத்தது. 'மலக்குமார்கள் மலர் காட்டுகின்றதனால்தான் இர்பான் சிரிக்கின்றான்' என ஸனீராவின் உம்மும்மா அடிக்கடி சொல்லிக் கொள்வார். அதை மையமாக வைத்துக் கொண்டு ஸவாஹிர் ஹாஜியார் கனவில் சிரிக்கும் போது, 'நேற்றிரவு கனவில் ஏன் அப்படி பயங்கரமாகச் சிரித்தீர்கள்...?' என ஸனீரா கேட்டால், தனக்கும் மலக்குமார்கள் பூ காட்டினார்கள் என்பார் ஸவாஹிர் ஹாஜி....! என்ன கொடுமடா இது...?

ஸவாஹிர் ஹாஜியாரின் கூத்தோ இன்னும் சிரிக்கும் விதமாய் இருக்கும் ஸனீராவுக்கு. அடிக்கடி, குறைந்தது வாரத்துக்கொரு முறையேனும் இர்பானை 'ஸிரில் ஸ்டுடியோ'வுக்குக் கூட்டிச் சென்று 'போட்டோ'க்கள் பிடிப்பது அவரது பொழுது போக்காய்ப் போய் விட்டது. நல்ல வேளை அந்நேரம் 'வட்ஸப்'பும், 'பேஸ்புக்'கும் இல்லை. இருந்திருந்தால், வரலாற்றில் ஓரேடும் குறிப்பும் ஸலவாத்தும் என்கின்ற வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியின் தினம் தோறும் நடக்கின்ற விடயத்தினைப் போன்று, தினமொரு போட்டோவென்று 'ப்ரொபைலை' மாற்றியிருப்பார். பாவமவர்...! முதல் பிள்ளை என்பதனால் ஆசையாக இருக்கின்றார். மரம் நட்டியவருக்கு காயைப் புசிக்கக் கிடைக்காதென்பது போல, பெண்கள் எவ்வளவுதான் பல சிரமங்கள் மேற்கொண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தாலும், அதிக ஆனந்தம் கொள்வது ஆண்களாகவே இருக்க முடியும்.

இர்பான் கொஞ்சம் கொஞ்சமாக பூனைக் குஞ்சு போன்று வளர்ந்தான். அவனைப் பார்த்தால் ஸவாஹிர் ஹாஜியார் போன்று உயரமாக வருவானா என்பது கேள்விக் குறியாகவே இருந்தது. அவ்வளவுக்குக் குள்ளமாக இருந்தான். அவன் குள்ளமாக இருப்பதுவும் அவ்வளவு அழகாக இருந்தது.

கைகளில் வைத்திருக்கும் போது சிரித்துக் கொண்டே இருப்பதுவும், மெத்தையில் வைத்தவுடன் அழத் தொடங்குவதும் சுவாரசியமாக இருக்கும். அக்குல் பக்கமாகச் சென்று அல்லது உள்ளங்கால்களை வருடிவிடும் போது கூச்சம் காரணமாக 'ஹக ஹக ஹக ஹக...' எனச் சிரிக்கும் போது 'இவ்வளவு நாளாய் இவன் வீட்டில் இல்லாமல் போனானே...!' என எண்ணத் தோன்றும். அவனது குறும்பான புன்னகையைப் பார்க்கும் போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அவன் வளராமல் காலம் பூராவும் மழலையாகவே இருக்க வேண்டுமே...!' என ஆசைப்படத் தோன்றும்.

கொஞ்ச நாட்களில் குப்புற விழப் பழகிப் போனான் இர்பான். குப்புற விழும் போது சரியாக விழுந்துவிட வேண்டுமே என பக்கத்தில் இருப்பவர்களுக்குத்தான் கவலை அதிகமாக இருக்கும். ஆனால் இர்பானோ குப்புற விழுந்து விட்டு சிரிப்பானே ஒரு சிரிப்பு...! ஆஹா என்னதொரு பசுமையான நிகழ்வது...! ஓரிரு தடவைகள் குப்புற விழுந்து உதட்டினைக் காயமாக்கிக் கொண்ட வரலாறுகளும் பிஞ்சு இர்பானைச் சாரும்தான். அதன் பின்னர், "அன்ன காக்கா... அன்ன காக்கா..." என ஸனீரா தன் தோள்களில் சுமந்து கொண்டு அழுகையை அகற்ற முயற்சிப்பாள்.

நிலத்தில் அமர்ந்து தவழும் பருவமும் இர்பானை வந்தடைந்தது. பெற்றோர்களின் வாழ்க்கை வெறுக்கக்கூடிய பருவமும் அங்கிருந்துதான் ஆரம்பிக்கும் என்றால் அது மிகையில்லை. கண்களாலும் உள்ளத்தாலும் அனைத்துப் பொருட்களையும் தன்னகம் கொண்ட மழலைகள், அவற்றின் பக்கம் நேரடியாகச் சென்று அவற்றினைப் பெற்றுக் கொள்ளும் பருவமும்தான் அது. மின்சார 'ஸ்விட்ச்'சுக்குள்ளே கைகளை நுழைவிக்க முயற்சிப்பதும், எவ்வளவுதான் அதட்டினாலும் நிலத்திலிருக்கின்ற 'சில்லு'களையெல்லாம் விரல்களினால் சுரண்டி அழுக்குகளை வாயினுள்ளே போட்டுக் கொள்வதும், தண்ணீரைக் கண்டதும் சுவர்க்கம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சிப் பெருவாகத்தில் ஓடோடிச் சென்று கூத்தடிப்பதும் இர்பான் ஒரு சுறுசுறுப்பான பிள்ளையாக வளர்வானென்பதைச் சொல்லும். எவ்வளவுதான் அவனை உள்ளே இழுத்து வைத்துப் பூட்டினாலும், யாருமில்லா சமயம் பார்த்து எப்படியோ அடைப்புக்களை அகற்றிவிட்டு வெளியே சென்றுவிடுவான். பின்னர் என்ன...? "அன்ன பக்கன் வார..." எனக் கொஞ்சம் பயமுறுத்திவிட்டு மீண்டும் வீட்டுக்குள் இருக்கின்ற தொட்டிலுக்குள் வந்து போட்டு விடுவார்கள் இர்பானை. தொட்டிலுக்குள் அடங்கிக் கொண்டு அழுது கொண்டே தூங்கிவிடும் அவனைப் பார்ப்பதற்குப் பரிதாபமாய் இருக்கும் அனைவருக்கும் பின்னே.

முதல் ஒன்றரை வருடங்களைப் பூர்த்தி செய்திருந்தான் இர்பான். பிறந்த நேரம் இருந்த அவனது வெள்ளை நிறம் கொஞ்சம் மங்கியிருந்தது ஸனீராவுக்கு வருத்தம்தான். பிறக்கும் போது குழந்தைகள் எவ்வளவுதான் அழகாயிருந்தாலும், ஒரு கட்டத்தில் அது மங்கிப் போய், மீண்டும் அழகாக வருவதற்கு கொஞ்ச கால அவகாசம் தேவைப்படும்தான். இந்தக் கால கட்டத்தில்தான் மற்றுமொரு சுவாரஷ்யம் நிகழ்ந்தேறியது. தன்னுடைய மலசலத்தினைத் தன் கைகளினால் பிசைந்து உட்கொண்டு விடுவான் யாரும் காணாத நேரத்தில். அதில் அவனுக்கு என்ன ருசியோ...??? அதன் பின்னர் 'ஒக்காலமிட்டு ஒக்காலமிட்டு' அவனைத் துப்புரவாக்குவதுதான் ஸனீராவின் வேலை.

*இர்ஷாத் ஹஸன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்படித்தான் ஸனீராவும் சின்னத்துல... இர்பான் மாதியேதான் மூத்துரத்தயும் அதையும் ஒரே திண்ணிய..." ஸனீராவின் உம்மும்மா அப்படி அடிக்கடி பல பேருக்கு மத்தியில் சொன்னதும்,

"போங்கவா பொய் செல்லாம..." வெட்கத்தில் ஸனீரா பாத்துமுத்து பீபீயை முறைத்துக் கொள்வாள். நாம் பலரும் செய்து விட்டு மறந்து போன பணியொன்றாகத்தானே அதுவுமிருக்க முடியும்...!

***காலத்துக்கேன் இப்படியோர் அவசரம்...!***

இன்னும் சில வருடங்களில் ஒன்பதாவது வருடத்தினை எய்தினான் இர்பான். அப்போது மூவராக இருந்த அவர்களது குடும்பம் ஐவராக மாறியிருந்தது. இர்பானாவும் இஷ்ராவும் முறையே நான்கு வருடங்களையும் மூன்று வருடங்களையும் பூர்த்தி செய்திருந்தனர். சிறிய பெண் குழந்தைகளாக அவர்கள் இருந்தாலும், இர்பானோடான தொடர்பு அப்படியேதான் இருந்தது. ஸவாஹிர் ஹாஜியாரின் அக்கறை கொஞ்சம் பெண்பிள்ளைகள் பக்கம் சாடினாலும், ஸனீரா ஹாஜீம்மாவின் அக்கறை எப்போதும் இர்பானின் மீதுதான் அதிகம்.

ஒரு சராசரிப் பிள்ளையாக தன் பெற்றோர்களிடம் வளர்ந்து, வயதுக்கெய்திய குமரியாகி, கணவனுக்கும் வாழ்க்கைப்பட்டு, குழந்தைகளுக்குத் தாயாகிய அனுபவங்கள் விசித்திரம் வாய்ந்தவையாகவே ஸனீராவுக்கு அமைந்தன. தன்னை மட்டும் பற்றியே ஆரம்பத்தில் சிந்தித்தவள், திருமணத்துக்குப் பின் தன்னோடு சேர்த்து கணவனைப் பற்றியும் கவலை கொள்ளலானாள். பிள்ளைகளின் பிறப்புக்களுக்குப் பின்னர் தன்னை மறந்து, கணவனையும் பிள்ளைகளையும் கவனிக்கத் தலைப்பட்டுப் போனாள். திருமணத்துக்குப் பின் கணவனையும் பிள்ளைகளையும் கவனித்துக் கொள்வதில் எத்துனைதான் ஆனந்தங்கள் பெண்களுக்கு...!

இர்பானின் ஒரு சில மழலைக் குறும்புகளை இன்று நினைத்தாலும் ஸனீராவுக்கு சிரிப்பினை அடக்க முடியாமல் போகும். அடிக்கடி அவற்றினைச் சொல்லி இர்பானை பகிடிக்காக வெறுப்பேற்றுவதுமுண்டு.

வெயில் நாட்களில் அதிகமாக வியர்க்கும். அதற்கிர்பான், "உம்மா சரியான மாச்சல்..." என்றுதான் அவனது பரிபாஷையில் சொல்வான். வியர்வையை மழலையாக அவன் உடல் சோர்வென்று அழைக்கும் போது சிரிப்பாக இருக்கும்.

ஒவ்வொருநாள் இரவிலும் கடதாசிகளை மென்று வீட்டின் 'சீலிங்'கில் அடித்து ஒட்ட வைத்து விடுவது அவனது மற்றுமொரு பழக்க வழக்கம். மறுநாள் முணுமுணுத்துக் கொண்டு வீட்டார் அதனை கொட்டரை துடைப்பது போன்று தும்புத் தடியால் அகற்றுவது இன்னும் சிரிப்பாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் தேங்காயை உடைத்து விட்டாலே போதும். அதனை இர்பானிடமிருந்து பாதுகாப்பதற்கு விஷேட அதிரடிப் படைகள் தேவைப்பட்டு விடும். தேங்காயின் பாதியை எடுத்து தனது பற்களால் அதனைத் துண்டு துண்டுகளாகக் கடித்து சாப்பிட்டாலும் பரவாயில்லை; மாறாக காலையில் சாப்பிட தான் பள்ளிவாசலுக்கு செல்லும் போது அணியும் தொப்பிக்குள் வைத்து சேமித்து விடுவான். அதிகாலையில் எழுந்தால் அவனுக்கது ஞாபகத்தில்கூட இருக்காது. 'என்னடா இவ்வளவு எறும்புகள் எங்கிருந்துடா வருது...?' என்று பார்த்தால், அவனது தொப்பிக்குள் இருந்து வருவதனை ஸனீரா தெரிந்து கொள்வாள். அதிலிருந்து வீட்டுக்குள் எறும்பூரினால் முதலாவது ஸனீரா பரிசோதிப்பது இர்பானின் தொப்பியைத்தான். 'எறும்பூர தொப்பியும் குழியுமோ...'!

இர்பான் ஒரு முறை தன் நண்பர்களோடு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென "உம்மா... பொடறி பட்ட பொடறி பட்ட..." என்று சொல்லிக் கத்தியழுதான். ஸனீராவும் என்னாச்சோ எனப் பயந்து கொண்டு ஓடி வந்து கேட்க, "பொடறி பட்டும்மா..." எனக் கத்திக் கத்தியழுதான். உடனடியாக பயந்து போய் அவனைக் கட்டிப் பிடித்து தலையின் பின்புறத்தை ஸனீரா தடவிக் கொடுக்க, "அங்கயல்ல உம்மா, பொடறி பொடறி..." என தன் முழங்காலைக் காட்டினான். அப்போதுதான் முழங்காலில் சிறு கீறல்கள் ஏற்பட்டுப் போனதை ஸனீரா பார்த்தாள். வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போலிருந்தாலும், அவனது வேதனையில் கொஞ்சம் சிரித்து விட்டு, மூன்று மணித்தியாளங்கள் கழிந்துதான் பலமாகச் சிரித்தாள்.

நான்கு வயதில் அறைக்குள் சென்று கதவினைத் தாழ்பாள் போட்டு பூட்டிக் கொண்டு அலறிய இர்பானை மீட்டெடுத்த அனுபவமோ ஸனீராவுக்கு மற்றுமொரு அலாதி நிகழ்வொன்றுதான். பயத்தில் கதறியழுதவனிடம், "தாரன் கதவப் பூட்டின...?' எனக் கேட்டதற்கு, அழுது கொண்டே "நான்தான்..." என்று சொன்னது இன்னும் வேடிக்கையாகிப் போய்விட்டது.

றமழான் மாதம் வருகின்ற போது பெரியவர்கள் குறும்பாக இர்பானிடம், "நீங்க நோம்பா...?" எனக் கேட்கும் போது, "நான் நோம்புதான்... தங்கச்சி கஞ்சக் கொட்டிப் போட்டுட்ட... நோம்பு பெயித்த..." என்று பிஞ்சுக் குரலால் பதில் கொடுக்கும் போது யாருமே சிரிக்காமல் இருக்க மாட்டார்கள்.

ஆறு வருடங்கள் எய்தி விட்டிருந்த இர்பானை புனித றமழான் மாதம் நெருங்கியதும் நோன்பு நோற்பதற்குப் பழக்க ஆயத்தமாயினர் தாயும் தந்தையும். முதல் நாள் நோன்பை சிரமப்பட்டு நோற்றுக் கொண்டிருக்கும் போது, 'அஸ்ரு'டைய நேரம் வரவே இர்பானினால் அதற்கு மேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. கள்ளமாக யாரும் கண்டு கொள்ளாமல் மெதுவாக 'குஷினி'யை நோக்கிச் சென்றான். கள்ளமாக ஊர்ந்து செல்வதைக் கண்டு விட்ட ஸனீராவுக்குப் புரிந்து விட்டது. "எங்கியன் அங்க போற...?" என சத்தமாகக் கேட்க, "பசிவா எனக்கு... எனத்தியாலும் தாங்கோ திண்ணத்துக்கு..." என்று அவன் சொன்னது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸனீராவின் வயிற்றில் புளியைக் கரைத்தாலும் நகைச்சுவையாகவே இருந்தது. ஓடோடிச் சென்று கட்டியணைத்து அவனை சாந்தப்படுத்திக் கொண்டாள் ஸனீரா.

இப்படியாக இர்பானின் சிறுபராயத்தினைப் படம் பிடித்தால் பத்துப் படங்களுக்கும் மேலாக திரைப்படமாக்கலாம். அதிலும் நகைச்சுவைப் படங்கள்தான் அதிகமாக வெளிவரும்.

***ஸவாஹிர் ஹாஜியார் இர்பானின் 'கோட்'டினை தோள்களில் மாட்டிவிட்டு, பட்டன்களைப் பூட்டிக் கொண்டிருந்தார். ஸனீரா ஹாஜீம்மா இன்னும் கைகளில் துருக்கித் தொப்பியினை வைத்துக் கொண்டுதானிருந்தாள்.***

இர்பானின் சிறுபராயத்தில் ஸனீரா மிகவுமே கவலை கொண்ட நாள், அவனது ஐந்தாவது வயதில் அவன் 'மொன்டஸூரி' போன முதல் நாள்தான். நான்கைந்து வருடங்களாக தன்னைப் பிரிந்து ஒரு மணித்தியாளம்கூட இருக்காதவன், மூன்று மணித்தியாளங்களுக்கும் மேலாக பிரிந்து நிற்கப் போவதை நினைக்கும் போதே பைத்தியம் பிடித்தது ஸனீராவுக்கு. மழலை ஆடைகளில் பார்த்து விட்டுப் பாடசாலை அங்கிகளில் அவனைப் பார்க்கும் போது புதுவித அழகொன்று அவனிடம் தெரிந்தது. "உம்மா, பெயித்து வாரன்..." என்று சொன்னவனைக் கண்கள் கலக்கத்தோடு முத்தமிட்டு அனுப்பி வைத்தாள் ஸனீரா ஸவாஹிர் ஹாஜியாருடன். ***'நிமிடங்கள் ஒவ்வொன்றும் வருஷங்களாகும் நீ என்னை நீங்கிச் சென்றாலே...'*** என்று காதலர்கள் தத்தங்களுக்குள் தற்காலிகமாகத்தான் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் தாய் மட்டும்தான் அதனை உளப்பூர்வமாய் உணர்வாள் தன் குழந்தையைப் பிரியும் போது, அரை நிமிடமேனும்.

காலத்தின் வேகத்தில் இர்பானின் வயதும் இன்னும் நகர்ந்தது. பாடசாலையென்றும் மார்க்க வகுப்புக்களான 'பள்ளிக்கூடங்களு'க்குமென போய் வந்தான் இர்பான். அந்நாட்களில் எதுவிதக் குறையுமின்றி அவனைப் பராமரித்து வந்தாள் ஸனீரா. காலையுணவுக்கு என்ன வேண்டுமென்பதனை முன்னைய நாளிரவே இர்பானிடம் கேட்டுத் தெரிந்து கொள்வாள். அவனும் 'பனிஸ்', 'பாண்', 'கடலை', 'பயறு', 'நூடுல்ஸ்' என பல வகையானவைகளைச் சொல்லி விடுவான். அவன் சொன்னதெல்லாமே அவனது சிற்றுண்டிப் பெட்டிக்குள் இருக்கும் அதிகாலையிலேயே. வேறு சில பிள்ளைகள் போன்று அடம்பிடிக்காமல் ஸனீரா செய்து தருவதனை அப்படியே எடுத்துச் சென்று விடுவான். ஸனீராவுக்கு ஒரேயொரு மனக் கஷ்டம், கஷ்டப்பட்டு செய்து கொடுத்ததை அப்படியே உண்ணாமல் கொண்டு வந்து விடுவான் வீட்டுக்கு மீண்டும். வீட்டுக்கு வந்தவுடன் அவன் சாப்பிட்டானா இல்லையா என்பதனைத்தான் முதன்முதலில் பார்ப்பாள் ஸனீரா 'பாம்பொட்டி'யைத் திறந்து. 'இனிமேல் ஒன்றும் செய்து தர மாட்டேன்... அத்துனையையும் வீணடித்து விடுகின்றாய்...' என்று அவனை அதட்டினாலும் மறுநாள் அதே போன்று தயாரித்துக் கொடுத்து விடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயொருத்தி எதையும் தாங்குவாள். தன் பிள்ளை சாப்பிடாததை மட்டும் தாங்க மாட்டாள்; அதனை நினைத்துத் தூங்கவும் மாட்டாள்.

இர்பானின் 'சுன்னத்து' என்கின்ற விருத்த சேதன நிகழ்வு மிக அமர்க்கலமாய் இருந்தது. தனது ஒன்பதாவது வயதில் இடம்பெற்ற அந்த நிகழ்வினை இர்பான்கூட மறந்திருக்க மாட்டான். உறவினர்களையழைத்து விருந்து படைத்து அஸருக்குப் பின்னால் அந்நிகழ்வேற்பட்டது. ஒன்றுமறியாமல் சிரித்துக் கொண்டு உம்மாவுக்கு ஸலாம் சொல்லி முத்தமிட்டு தந்தையுடன் புறப்பட்டவன் வந்தது வருத்தத்தோடும் அழுகையோடும். கிட்டத்தட்ட பத்து நாட்களுக்கும் மேலாக அவனோடு மீண்டும் தூக்கம் மறந்த நாட்கள்தான் அவை ஸனீராவுக்கு. தூக்கத்தினை மறந்து போவதுதான் பிள்ளை பெற்ற தாய்மார்களின் அவல நிலையோ...? தன் பிள்ளைகளுக்காக எதனை மறக்கவும் அவர்கள் தயார்; எதனை இழக்கவும் அவர்கள் தயார்...! அதற்குத்தான் அவர்களது பெயர் த(ா)யாரோ...!

ஊர் மக்களது சில பிள்ளைகள் வளரும் முறை பார்த்து, தன் பிள்ளை இர்பானும் கெட்ட பிள்ளையாக வளர்ந்து விடுவானோ என்ற அச்சம் அவன் பிறந்த நாளிலிருந்தே ஸனீராவிடம் தலைத்தோங்கி விட்டது. ஒவ்வொரு நிமிடமும் அதைப் பற்றியே கவலை கொள்வாள் அவள். ஸவாஹிர் ஹாஜியாரிடம்கூட இர்பானோடு நண்பன்போல பழக வேண்டுமென்றே சொல்லிக் கொண்டாள். அதே போன்று தந்தை-மகன் என்கின்ற உறவு கடந்து நண்பர்கள் போன்றுதான் இருவரும் நடந்து கொண்டனர். நண்பர்களாக நடந்து கொண்டதனால்தான், தன் வாழ்வில் நடந்தேறுகின்ற அனைத்தையும் ஒன்று விடாமல் தன் தாயிடமும் தந்தையிடமும் சொல்கின்ற மனப்பக்குவம் இர்பானிடம் திடமாக இருந்து வந்தது.

***"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே...!***
***நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே...!"***
என்கின்ற கவிஞரின் சினிமாப்பட பாடல் வரிகள் எவ்வளவு தத்துவம் மிக்கவை...!

இர்பான் நல்ல பிள்ளையாகவே தொடர்ந்தும் வாழ்ந்து வந்தான். தன் தாயைப் பார்த்தும் தந்தையைப் பார்த்தும் ஒரு தடவைகூட "ச்சீ" எனச் சொன்னது கிடையாது. ஸனீரா ஹாஜீம்மாவும் ஸவாஹிர் ஹாஜியாரும்கூட அவன் "ச்சீ" எனச் சொல்லுமளவுக்கு நடந்து கொண்டதும் கிடையாது. இன்றைய பிள்ளைகள் பலரும் தன் பெற்றோர்களைப் பார்த்து "ச்சீ" எனச் சொல்லிவிட, பல பெற்றோர்கள் அப்படி அவர்களோடு நடந்து கொள்வதும் பிரதான காரணம்தானே...! பெற்றோர்களும் "ச்சீ" என்று சொல்லக்கூடிய விதம் நடந்து கொண்டால் எப்படித்தான் அல்குர்ஆனின் கூற்றைப் பிள்ளைகள் நடைமுறைப் படுத்துவார்கள்...???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"உங்கள் பெற்றோர்களைப் பார்த்து ச்சீ என்ற வார்த்தையேனும் கூறி விடாதீர்கள்..."***

மேற்படி புனித அல்குர்ஆனின் வார்த்தைகளை உண்மைப்படுத்தவும், நடைமுறையில் எடுத்து நடக்கவும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உதவி புரிவார்களா...?

ஊர் மக்கள் இர்பானைப் பற்றி ஸனீராவிடம் பேசும் போது அவளுக்குப் பெருமையாக இருக்கும். வீடு கட்டுவதற்கு இப்படி உதவி செய்தான்; குமரிகளின் திருமண விடயங்களை முன் நின்று செய்வித்தான்; 'ஓபரேஷன்' விடயங்களுக்காக இவ்வளவு தந்தான்; பள்ளிவாயல் கட்டுமானங்களுக்கு இப்படியெல்லாம் செலவு செய்தான் என்றெல்லாம் மக்கள் சொல்லும் போதுதான் தெரியும், இர்பான் இடக் கரத்துக்குத் தெரியாமல் வலக் கரத்தினால் கொடுத்த தர்மங்களை.

இர்பான் பாடசாலையில் ஐந்தாம் ஆண்டு கல்வி பயின்று கொண்டிருந்த வேளை, ஒரு நாள் சக மாணவர்களிடம் வகுப்பாசிரியர் "உங்களது எதிர்கால இலட்சியம் யாராக வருவது...?" எனக் கேட்க, அனைவரும் "டொக்டர், இஞ்சினீயர், எகவுன்டன்ட்..." எனச் சொல்ல, இர்பான் மட்டும், தான் 'நளீம் ஹாஜியாரா'க வர வேண்டுமென்றான். சிறு வயதிலிருந்தே ஸனீரா அவனை அப்படித்தான் பழக்கியிருந்தாள். எப்பேர்ப்பட்ட அழகிய ஆளுமை கொண்டவர் நளீம் ஹாஜியார் என்பவர்...! செல்வத்தை வாரி வழங்க வேண்டுமெனில் செல்வம் மட்டும் இருந்தால் போதுமா...? அதற்குரிய மனமும் வேண்டுமல்லவா...! வாரி வழங்கக் கூடிய செல்வத்தையும், அதற்குரிய மனதையும் அல்லாஹ்வால் ஒன்றாகக் கொடுக்கப்பட்ட நளீம் ஹாஜியார் நிச்சயமாக பாக்கியசாலிதான்...! சினிமா நடிக நடிகைகளை, விளையாட்டு வீரர் வீராங்கனைகளை அடி மனதில் பதிய வைத்து, அவர்களை 'ரோல் மொடலா'க ஆக்கிக் கொள்வதனை விட, நளீம் ஹாஜியார் போன்றவர்களை நேசித்து அதன்படி நடக்க முயற்சிப்பது எவ்வளவு விவேகத் தன்மை வாய்ந்தது...!

குறுந்தூர ஓட்டப் பந்தய வீரர் 'உஸைன் போல்ட்'டின் சாதனைகளை இலகுவாக முறியடித்து விடலாம். இருபது இருபது கிரிக்கட் போட்டிகளில் பன்னிரெண்டு பந்துகளில் ஐம்பது ஓட்டங்களைப் பெற்ற இந்திய அணி வீரர் 'யுவராஜ்சிங்'கின் சாதனையையும் இலகுவாக எட்டி விடலாம். பதினைந்து தடவைகள் உலக 'ரெஸ்லிங்' பட்டம் வென்ற 'ஜோன்ஸீனா'வின் சாதனைகளையும் வென்று விடலாம். ஆனாலும் நளீம் ஹாஜியாரின் அரவணைக்கும் கரங்களையும் வாரி வழங்கும் இதயத்தினையும் அவ்வளவு இலகுவில் வெல்லவே முடியாது. நிறைய ஆன்மீகப் பயிற்சிகள் தேவை அவற்றினை வென்று முடி சூடுவதற்கு.

சிறுபராயத்திலிருந்தே இர்பான் தூங்கும் போது கதைகள் சொல்வதுதான் ஸனீராவின் சோலி. கதைகளென்றால் கற்பனைக் கதைகள் மாத்திரமல்ல. சஹாபாக்களின் உண்மைச் சம்பவங்கள், நாட்டு நடப்புக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் அறிவைக் கூர்மையாக்கும் கண்டுபிடிப்புக் கதைகள், பிள்ளைகளை சிரிக்க வைக்கும் 'காக்கச்சி குருவச்சி'க் கதைகள் என பல கதைகளைக் கேட்டுக் கொண்டேதான் உறங்குவான். அப்பேர்ப்பட்ட கதைகளில்தான் கொடை வள்ளல் நளீம் ஹாஜியார்கூட அவனுக்கு அறிமுகமானான். இர்பானுக்காக சொல்லப்படும் கதைகளில்தான் பல நேரங்களில் ஸவாஹிர் ஹாஜியாரும் தன்னை மறந்த நிலையில் தூங்கிப் போவதுண்டு.

***ஆனந்தக் கண்ணீர் துளிகளை வரவேற்கக் காத்துக் கொண்டிருக்கும் ஸனீராவின் விழிகள், ஸவாஹிர் ஹாஜியார் இர்பானுக்குக் 'கோட்'டினை அணிவிப்பதைப் பார்த்து நின்றன. ஸவாஹிர் ஹாஜியாரும் இர்பானைக் கட்டிப் பிடித்து அழத் தொடங்கி விட்டார். பிறந்தநாள் முதற்கொண்டு தன்னோடு, தன் நெஞ்சோடு உறவு கொண்டிருந்தவன் தற்காலிகமாகப் பிரியப் போவதை நினைத்தால், அவருக்கு மனம் கேட்கவில்லை. இர்பான் தன் நண்பன் ஸவாஹிர் ஹாஜியாரைக் கட்டிப் பிடித்தழுது, கன்னங்களுக்கு முத்தங்களையும் வழங்கினான்.***

"ஸனீரா தொப்பியப் போடுங்கோ மகனுக்கு..." ஸவாஹிர் ஹாஜியார் சொல்ல, ஸனீரா ஹாஜீம்மா கண்களை கசக்கிக் கொண்டே, தலையை சீலையால் மூடியவளாக, 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்...' சொல்லியவளாக, வால் முளைத்த துருக்கித் தொப்பியினை இர்பானின் தலையில் கவிழ்த்தாள். தன்னைவிட உயரமாய் வளர்ந்தவனை கொஞ்சம் தன் பக்கம் வளையச் செய்து முத்தங்களை பறிமாற்றம் செய்து கொண்டாள். தன் நெருங்கிய நண்பியான ஸனீரா ஹாஜீம்மாவைக் கட்டியணைத்து அழுதவனாகச் சிரித்தான் இர்பானும். தொடர்ந்து இர்பானாவும் இஷ்ராவும் அவனைக் கட்டிப் பிடித்து வாழ்த்துச் சொன்னனர். அவர்கள் அழுததற்கு அவர்களது கண்கள் சிவப்பாய் இருந்ததே போதுமான வடுவாக இருந்தது.

பிள்ளை கருவுற்றதிலிருந்து பெற்றவர்களுக்குப் பல கவலைகள் அவர்களைப் பற்றியே. உருவான கரு ஆரோக்கியமாக வளரும் வரை ஒரு கவலை; ஆரோக்கியமாக வளர்ந்த கரு சுகப் பிரசவமாகும் வரை மற்றொரு கவலை; பிரசவமான குழந்தை சுறுசுறுப்பாகும் வரை இன்னொரு கவலை; சுறுசுறுப்பான குழந்தை சிறு வயதினைக் கடந்துவிடும் வரை ஒரு கவலை; சிறுவனாகியவன் வாலிப வயதினைக் கடந்துவிடும் வரை மற்றொரு கவலை; வாலிப வயதினை எட்டியவன் அறிவு ஜீவியாக உலா வரும்வரை இன்னுமொரு கவலை; அறிவு ஜீவியாக உலா வந்தவன் நல்லதொரு திருமண பந்தத்தில் இணைந்துவிடும் வரை கவலை; திருமணத்தில் சங்கமித்தவன் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் வரை கவலை...! இப்படி இறப்பு வரை எண்ணிக்கையில் இல்லாதளவு கவலைகளை பிள்ளைகள் மீது கொள்பவர்கள் பெற்றவர்களன்றி வேறு யாருமிருக்க முடியாது...!

***இர்பான் ஸலாமத்தோடு இணையப் போகும் தருணம்தான் அது...!***

*இர்ஷாத் ஹஸன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாபிர் ஹாஜியார், தன் மகள் ஸலாமத்தின் கைகளோடு இர்பானின் கைகளை ஒன்று சேர்த்த நொடி, ஸனீராவின் உள்ளம் பூரித்தது. தன்னிடமிருந்து தன் மகனை யாரோ பிரித்துவிட்ட உணர்வொன்று அவளுக்குள் ஏற்பட்டுப் போனாலும், தன்னோடு சேர்த்து தன் பிள்ளையைப் பார்த்துக் கொள்ள இன்னொருத்தியும் இருக்கின்றாளே என்ற சந்தோஷ உணர்வும் சம நேரத்தில் ஏற்பட்டுப் போனது. என்றாலும் அவள் மனம் நிறையவே புண்பட்டது.

பல வருடங்களுக்குப் பின்னால் அன்றிரவு நித்திரையின்றி கட்டிலிலே அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தாள் ஸனீரா. இர்பானைப் பெற்ற நாட்களில், அவனுக்குப் பணிவிடை செய்யும் நோக்கில் தூக்கம் துறந்த ஸனீரா, அதே போன்றதொரு தூக்கமற்ற சூழலை உணர்ந்தாள் அப்போது. ஸலாமத்தின் வீட்டில் அவனை தன்னந்தனியாக விட்டுவிட்டு வந்த நொடிகள்தான் அவளை இன்னும் உறங்க விடாமல் தடுத்தன. 'சீனங்கோட்டை வழக்கப்படி பெண் வீட்டில்தான் மாப்பிள்ளைமார் தங்குவார்கள்...!' என்ற மாமியார் ஈர்ப்பு விதியின் படி இர்பானும் ஸலாமத்தின் வீட்டிலேயே தங்கும்படி சூழல் ஏற்பட்டுப் போனது. இவ்விதி எத்துனையோ துணை விதிகளுக்கு மாற்றமாகச் செயல்பட்டாலும், மாமியார் கொடுமைகளிலிருந்து முக்கியமான பாதுகாப்புக் கிடைக்கக்கூடிய ஒரு விதியாகவே எப்போதுமிருக்கும் என்பது உண்மையானது. அந்த வகையில் சீனங்கோட்டைப் பெண்கள் அதிர்ஷ்டசாலிகள்...! 'ப்ரீ ப்றொம் மாமியார் கொடுமை...!' என ஆங்கிலத்திலும் தமிழிலும் கலந்து சொல்லலாம் அதை. ஹ ஹ ஹ ஹ...!

"ஏன்ட மகனப் பத்துரமாப் பாத்துக்கொங்கோ..." என்று ஸனீரா தன் மருமகள் ஸலாமத்திடம் கைகளைப் பற்றிச் சொல்லிவிட்டு வந்த நேரம், ஸலாமத்தும் உணர்ந்திருப்பாள் இர்பானின் முதல் காதலி தானில்லை, ஸனீராதானென்று. கண்கள் கலங்கியவளாக ஸனீரா அப்படிச் சொன்ன விதம், ஸலாமத்தின் கண்களையும் சற்றே குளமாக்கியது.

"பயப்புட வேணாம் மாமி... ஒங்கட மகன நீங்க பாத்துக்கொளிய மாதி நானும் பாத்துக் கொளியன்..." சிரித்துக் கொண்டே சொன்ன ஸலாமத் அழகாகத் தென்பட்டாள் ஸனீராவுக்கு. தன் மகனுக்குப் பொருத்தமானவளாகவும் தென்பட்டாள். "நீங்களும் ஏன்ட மகள்தானே...!" என்று வாரிக் கட்டிப் பிடித்து அவளை முகர்ந்து கொண்டாள் ஸ்னீரா கண்ணீர் துளிகள் சிந்தியவளாக.

ஸலாமத் எவ்வளவுதான் இர்பானைப் பார்த்துக் கொள்வதாக உத்தரவாதம் அளித்தாலும் ஸனீராவுக்கோ இன்னும் திருப்தியில்லை. அது மட்டுமல்லாமல் கொஞ்சம் பொறாமையாகவும் இருந்தது. இருபத்தெட்டு வருடங்களாகத் தன்னால் பராமரிக்கப்பட்ட தன் மகனை விடுக்கென்று ஒருத்தி இரு மணித்தியாளங்களில் அபகரித்துச் சென்றதை அவளால் பிறரிடம் சொல்லவும் முடியவில்லை. போலீஸில் முறைப்பாடு கொடுக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. 'கிணற்றைக் காணவில்லை'யென போலீஸில் முறைப்பாடு கொடுத்தால் ஏற்றுக் கொள்வார்களா என்ன...?

இர்பான் விரும்பும் உணவுகளில் முக்கியமானது பருப்புதான் என்பதை ஸலாமத் அறிவாளா...? தேங்காய் ரொட்டியென்றாலே அவனுக்கது 'வட்டிலாப்பம்' மாதிரி என்பதை ஸலாமத் அறிவாளா...? மீன்களில் அவன் அதிகம் கவனம் செலுத்துவதில்லை என்பதை ஸலாமத் அறிவாளா...? இறைச்சி வறுவலென்றாலே அவனுக்கு வேறொன்றும் தேவையில்லை என்பதை ஸலாமத் அறிவாளா...? காலையில் எழுந்ததும் தேநீரைத் தொட்டுக் கொண்டுதான் இன்னும் பாண் உண்பான் என்பதை ஸலாமத் அறிவாளா...? 'மில்க் மெயிட்' சர்வத்தில் 'கசகசா' போட்டுக் குடிப்பதில்தான் அவனுக்கு மிக விருப்பம் என்பதை ஸலாமத் அறிவாளா...? 'நன்னாரி ப்ளேன்டி' என்றாலே அவனது குட்டி நாக்கு 'ஸலூட்' அடிக்கும் என்பதை ஸலாமத் அறிவாளா...? 'பிலபத்திரிக்கா' குடிக்கவே மாட்டான் என்பதை ஸலாமத் அறிவாளா...? தேங்காய்ப் பாலுடன் சோற்றையும் வாழைப்பழத்தினையும் பிசைந்து சாப்பிடவே மாட்டான் என்பதை ஸலாமத் அறிவாளா...? குடிப்பதிலும் சாப்பிடுவதிலும் இனிப்புக்குத்தான் அவனேங்குவான் என்பதை ஸலாமத் அறிவாளா...?

ஸனீராவின் யோசனை ஸீபஹ் வரைக்கும் நீண்டாலும் அது அதிசயமில்லை. அவளை விட்டால் இர்பானைக் கவனித்துக் கொள்ள உலகில் யாருமில்லையென்றே நினைத்து விட்டாள் போலும். தூக்கமற்ற உணர்வை உணர்ந்த ஸனீரா கொஞ்சம் எட்டிப் பார்த்தாள் தனக்கருகே உறங்கிக் கொண்டிருக்கும் ஸவாஹிர் ஹாஜியாரை. கண்கள் மூடியிருந்தார். ஆனாலும் நிச்சயமாக தூக்கத்திற்குள் சங்கமித்திருக்க மாட்டார். அவர் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்திருந்தால், நிறையக் குறட்டைகளை விட்டு, அதன் மூலம் நுழம்புகளையும் விரட்டியிருப்பார் என்பது ஸனீராவுக்குத் தெரியும். இர்பானின் பிரிவு ஸவாஹிர் ஹாஜியாரின் தூக்கத்தினையும் அகற்றியிருந்தது என்றால்... அது முற்றிலும் கலப்படமற்ற உண்மைதான்.

***முக்கிய அறிவித்தல்...! இதோ மணவாளர்கள் அறைக்குள் வந்து விட்டார்கள்...!***

"இது ஒங்கட உம்மா எனக்கிட்ட ஒரு 'என்விளப்' தந்த ஒங்களுக்கிட்ட குடுக்கச் செல்லி..." ஸலாமத், ஸனீரா கொடுத்ததை நீட்ட, எடுத்துப் பிரித்துப் பார்த்தான் இர்பான் ஆச்சரியமாக.

ஸ்கேன் பண்ணப்பட்ட, கறுப்பு நிறத்தில் உருவமொன்று பொறித்த படமது. உற்று நோக்கினான் கூர்மையாக ஸலாமத்துடன் சேர்ந்து. டிசம்பர் மாதம் ஆறாம் திகதியிடப்பட்டிருந்தது அது. கடைசியில் ஸனீராவின் கையெழுத்துப்பட ஏதோவிருந்தது.

***"நீ உலகத்தில் என்னைப் பார்க்கும் முன்***
***உன் உலகத்தில் உன்னை நான் முழுதாய்ப் பார்த்த நாளிது...!***

***இர்ஷாத் ஹஸன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கால்களால் உதைத்து வெளியே வந்து***
***என்னைப் பார்க்க அவ்வளவு அவசரமாடா உனக்கு...!***
***இன்னும் கொஞ்ச நாட்களில் சொந்தமடா நீ எனக்கு...!"***
*- 06/12/1986*

ஸனீரா எழுதிய சிறு கவிதைக்குக் கீழால் இன்னுமொரு வரியும் இருந்தது.

***"நீ அன்றும், இன்றும், என்றும் எனக்குக் குழந்தைதான்...! மிஸ் யூ மை டியர்...!"***

*- 31/10/2014*

ஒரு பிள்ளைக்கு இதனையும்விட சிறந்த பரிசொன்று தன் தாயிடமிருந்து அதுவும் தன் திருமண நாளன்று கிடைக்குமா...?

ஸனீராவின் காதல் வரிகளை வாசித்த இர்பானின் உதடுகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு நடுங்கின; கண்கள் அழுதன. இர்பானின் சிரிப்பினைப் பார்க்க ஆசை கொண்ட ஸலாமத் முதல் சந்திப்பிலேயே அவனது அழுகையைத்தான் ரசித்தாள். தன் தாய்க்காக அழுகின்ற பிள்ளை நிச்சயமாக மனைவிக்குமாக ஒரு நாள் அழத்தான் செய்வான் என்பதில் நம்பிக்கை உண்டானது அவளிடம். தாயும் சேயும் உறவாடுகின்ற விதத்தினைப் பார்த்தே ஸலாமத்தும் புரிந்து கொண்டாள், அவளைவிட அதிர்ஷ்டசாலி யாரும் உலகத்தில் இருக்க முடியாதென.

உம்மாவின் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தினான் இர்பான் நடுச் சாமம் என்றும் பாராமல்.

***"உம்மா... ஐ லவ் யூ உம்மா..."***

**முடிந்தது**

***இர்ஷாத் ஹஸன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகப் பிணைப்பு...!

ஓராணுக்காய் பிறந்த வீடு துறந்தவள்...! ஓராணுக்காய் தன்னைப் பெற்றவர்களைத் துறந்தவள்...! ஓராணுக்காய் தன்னோடு பிறந்தவர்களைக்கூடத் துறந்தவள்...! ஓராணுக்காய் எதையும் துறக்க முயற்சிப்பவள்...! அவள்தான் உலகில் மிகச் சிறந்த துறவி...! அவளது பெயர்தான் துணைவி...!

வாழ்க்கையின் அர்த்தங்களைப் புரிவது நிறையவே கஷ்டம்தான். ஒவ்வொரு நொடியும் புதுப்புது அர்த்தங்களாக ஜொலிக்கின்ற மனிதனின் வாழ்வு படைத்த இறைவன் ஒருவனுக்கு மட்டுமே புரியும் விந்தையாகி விட்டது. நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்குமென்பது இதற்குத்தானோ...!

அதனால்தான் என்னவோ, உலகில் தோன்றிய அறிஞர்கள், புத்தி ஜீவிகள், ஆன்மீக வர்க்கத்தினர் வாழ்க்கைக்குப் பல விதங்களிலும் வியாக்கியாணங்கள் கூற ஆசைப்பட்டும் சரியாகக் கூறிவிட முடியாமல் திண்டாடினர். இவ்விடயத்தில் நிறையப் பேர் தோற்றே போயினர் எனக் கூறியும் விடலாம்.

'மனிதர்கள் எல்லோரும் ஆசைகளை இல்லாமலாக்கி துறவரத்தினை நாடுவதுதான் வாழ்க்கையின் அர்த்தங்களைப் புரிய ஒரே வழி...!' என்றார் புத்தர்.

'வாழ்க்கையென்பது ஒன்றுமே இல்லாதது. அதனை நன்றாக அனுபவித்து விட்டு மாண்டு விடுவதுதான் சிறந்தது...!' எனச் சொல்லி விட்டார்கள் ஒரு சில கடவுள் நம்பிக்கையற்ற நாஸ்திகர்கள்.

'நல்லறங்களைச் செய்து கொள்ளுங்கள். பாவங்கள் ஏதுமிருப்பின் எம்பக்கம் வாருங்கள். நாங்கள் திருமணம்கூட முடிக்காமல் உங்களது பாவங்களை மீட்சிப்பதற்காக உங்களுக்காகவே வாழ்பவர்கள்...!' எனச் சொல்லி விட்டார்கள் கிறிஸ்துவ உலகில் சிலர்.

'நல்லறங்களைப் புரிந்து கொண்டு தீமையான விடயங்களை விலகி நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு சுவர்க்கமும் நரகமும் தயார் நிலையில் உஷார் படுத்தப் பட்டிருக்கின்றன. எச்சரிக்கை...!' என்கின்றது இஸ்லாமியர்களின் கோட்பாடு.

எவ்வளவுதான் கோட்பாடுகள் வந்தாலும், மனிதனது இயல்போ வித்தியாசம்தான் என்றும். பல்லாசைகளோடு பிறந்து விட்ட மனிதர்களுக்கு துறவறத்தினை மேற்கொள்வது முடியாமலாகி விட்டது. ஏதோவொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மை இயக்கிக் கொண்டிருக்கின்றது என்கின்ற இயல்பான உணர்வு, நாஸ்திகர்களின் வியாக்கியாணத்தினை ஏற்க பின் நிற்கின்றது. தங்களது பாவங்களை மனிதர்களிடமே ஏன் முறைப்பட்டுக் கொள்ள வேண்டுமென்கின்ற மனிதனின் இயற்கை மனநிலை கிறிஸ்தவ உலக வாழ்வின் அர்த்தத்தையும் ஏற்க மறுக்கின்றது.

மறுவுலகமுண்டு. இவ்வுலகில் நீங்கள் செய்த விடயங்களுக்கு ஒப்ப அதில் கூலி கொடுக்கப்படுவீர்கள் என்ற இஸ்லாமியக் கோட்பாடு கூட, அப்பாலுள்ள விடயமொன்றினை, யாரும் இதுவரையில் கண்டிராத வியாக்கியாணமொன்றினை எடுத்துச் சொல்வதால், மனிதர்கள் பலருக்கும் அதிலும் மயக்கம்தான்.

என்றாலும், இஸ்லாமியக் கோட்பாடு மறைவான விடயங்கள் பற்றிக் கூறினாலும் முற்றிலும் உண்மையானது என்பதனை மனிதனது வாழ்வின் இயல்போடு உற்று நோக்குகையில் புரிந்து கொள்ள முடிகின்றது. ஒரு சிலர் இன்பங்களை மட்டுமே அனுபவிக்கின்ற நிலையில் இன்னும் சிலரோ அதற்கு நேரெதிராக துன்பங்களை அனுபவிப்பதானது இறைவன் ஒரு சிலருக்கு அநீதியிழைத்ததாகத் தோன்றும். அப்படி அநீதம் இழைக்கப்பட்டோருக்கு சுபசோபனம் கிடைக்க வேண்டுமானால் நிச்சயமாக அது மறுவுலகில் மட்டுமே சாத்தியம்.

அது மட்டுமல்லவே...! இன்றைய விஞ்ஞான வளர்ச்சிகள்கூட இஸ்லாத்தின் கோட்பாடுகளை உண்மைப்படுத்திக் கொண்டே செல்கின்றன என்பது முஸ்லிமல்லாதவர்களையும் சேர்த்தல்லவா மெய்ச்சிலிர்க்க வைக்கின்றது...! அத்தோடு சேர்த்து இஸ்லாத்தின் கோட்பாடுகளை விஞ்ஞான உலகம் பொய்ப்பிக்க எவ்வளவோ முயற்சிகள் செய்தும் ஒன்றில்கூட வெற்றி பெற முடியாமல் போனதும் முஸ்லிம்களின் புனித மார்க்கம் எப்பேர்ப்பட்ட உச்சத்தில் இருக்கின்றது என்பதனையும் சுட்டிக் காட்டி நிற்கின்றதல்லவா...! உண்மைதான். வாழ்வின் அர்த்தங்களை சுமாராகவாவது புரியாமல் போனால் என்றும் துன்பம்தான். மனித வாழ்வில் துன்ப துயரங்கள் ஏற்படும் போது ஒரு வித விரக்திகள் ஏற்படுவதும் அதன் மூலம் தலை குழம்பிப் போய், மந்த புத்தியேற்பட்டு, ஒன்றுமே செய்வதறியாமல், மனம் வெறிச்சோடிப் போகின்ற உணர்வுகள் ஏற்படுவதும் மனிதர்களின் இயல்புகள்தான்.

'என்னடா இது வாழ்க்கை...?' என்று எண்ணத் தோன்றும். 'இதற்காகவா இறைவன் எம்மைப் படைத்தான்...?' என எண்ணத் தோன்றும். 'பேசாமல் தற்கொலை செய்து கொள்வோமா...?' எனவும் எண்ணத் தோன்றும். 'ஏன் எனக்கு மட்டும் இந்த துன்பத்தை இறைவன் தந்தான்...?' எனவும் எண்ணத் தோன்றும்.

எல்லாவற்றுக்கும் சரியான, ஒரேயொரு தீர்வு இஸ்லாமியப் போதனைகளாக மட்டுமே இருக்க முடியும். ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் அருளப்பட்ட அல்குர்ஆன் வேதங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனங்களை வெல்ல, அன்றிருந்த கவிஞர்களை விடுங்கள்; இன்றிருக்கக் கூடிய கவிஞர்களால்கூட வென்று விட முடியவில்லை. கண்ணதாசன் எங்கே...? வாலி எங்கே...? வைரமுத்துதான் எங்கே...?

***'மனிதர்களையும் ஜின்களையும் என்னை வணங்கு வதற்காகவேயன்றி படைக்கவில்லை...'*** என அல்லாஹ் தனது படைப்பின் நோக்கத்தினை விளக்குகின்றான்.

***'உங்களில் உள்ளச்சம் கொண்டோரே அவனிடத்தில் சிறந்தவர்கள்..."*** என மனிதர்களில் புனிதர்களைப் பற்றிச் சொல்கின்றான்.

***'தொழுகையைக் கொண்டும் பொறுமையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்...'*** என துன்பத்துக்குள்ளானோர் அவனிடம் உதவி தேடுவது பற்றியும் அழகாகச் சொல்கின்றான்.

***'எவர் அணுவளவு நன்மை செய்தாரோ அதனையும் அவர் அங்கு கண்டு கொள்வார். எவர் அணுவளவு தீமை செய்தாரோ அதனையும் அவர் அங்கு கண்டு கொள்வார்...'*** என மனிதன் எதைச் செய்தாலும் தப்பிக்க முடியாதென்பதனையும் விளக்கிக் காட்டுகின்றான்.

மனம் நிம்மதியின்றி அலைந்து திரிபவர்களுக்கு, பிறந்தது முதல் துன்பமே என்கின்றவர்களுக்கு, விரக்தியால் சின்னா பின்னமானவர்களுக்கு இஸ்லாத்தினைப் போன்றதொரு தீர்விருக்குமா என்பது சந்தேகம்தான். மக்களே வாருங்கள்...! இஸ்லாத்தினைப் படிக்க மட்டும் வாருங்கள்...! இழந்த வாழ்வைக்கூட மீண்டும் பெறுவீர்கள்...!

இவ்வுலகம் நிரந்தரமற்றது. அதிலிருப்பவையெல்லாம் மாயைகள். உங்களைப் பெற்றவர்களாக இருந்தாலும், நீங்கள் பெற்றவையாக இருந்தாலும் கடைசி வரைக்கும் துணைக்கு நிற்பவைகளல்ல அவை. துன்பங்கள் நிறைந்த இவ்வுலகம் சோதனைக் களமாகும். இன்பங்கள் மட்டும் நிறைந்திருக்கும் உலகம் மறுவுலகில் நல்லவர்களுக்காகக் காத்து நிற்கின்றது. ஆதலால் இவ்வுலகைத் துச்சமென மதித்து மறுவுலகை இலக்காக வைத்து இயங்குங்கள் என்பதுதான் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடு. இந்த அழகிய கோட்பாட்டினை உலகமே அறிந்து பின்பற்றினால் எல்லோருக்கும் மோட்சம்தான்; சுபீட்சம்தான்

சோதனைகள் இல்லாத மனிதர்கள் எவருமில்லை உலகில். காலில் முள் தைப்பது கூட ஒரு விதத்தில் சோதனையொன்றுதான். நகம் வெட்டும் போது தவறுதலாக விரலினோரம் வெட்டுப்படுவதும் ஒரு சோதனைதான். நடந்து செல்லும் போது கால் தடுக்கி விழுவதும்கூட மற்றொரு சோதனைதான். இலங்கையின் வட கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் அனைத்து சோதனைச் சாவடிகளும் ஒரு வகையில் சோதனைதான். இப்படி சின்னஞ் சிறிதாய் உருவெடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைகள் மரணம் என்கின்ற பெரிய சோதனை வரைக்கும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். சோதனைகள் முடிந்து விட்டால் உலகம்கூட நிலைத்திருக்காமல் மடிந்து விடும் அல்லவா...!

நியாஸ் நானாவின் சோதனையோ பலருக்கும் ஏற்படாத ஒரு சிலருக்கு ஏற்படுகின்ற ஒரு சோதனைதான். தனக்கென வந்து விட்டாலல்லவா புரியும் மற்றவரின் வலிகள்...! அன்று அவரது இதயம் கொண்ட பலஹீனங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இதற்கு முன்னர் தன் வாழ்நாளில் அவர் இப்படியாக கவலை கொண்டது கிடையாது. அவரது கண்கள் தாடி நனையும் வரை அழுததும் கிடையாது. அந்த நாள் முதன் முறையாக அவர் தூக்கமிழந்த நாள். உணவினைக்கூட நினைத்துப் பார்க்காத நாள். தன்னைச் சுற்றியிருந்தவர்கள் பற்றிக் கவலைப்படாத நாள். தானின்னும் உலகில் வாழத்தான் வேண்டுமா என மனதினால் உணர்ந்து போன நாளும் அதுதான். தன் மனைவி ஹாஜராவை மரணம் கவ்விச் சென்ற துக்ககரமான நாள்தான் அது அவருக்கு.

ஐந்து வருடங்கள் கழிந்தும் ஹாஜராவின் இறப்பினை நம்ப முடியாதவராகவே நியாஸ் நானா இருந்தார். அவரொரு போதும் நினைத்திருந்ததில்லை, அவருக்கு முன்னால் அவளிறப்பாளென்று. அதுவும் இவ்வளவு சீக்கிரத்தில் தன்னை விட்டும் போய் விடுவாளென்றும் நினைத்திருக்கவில்லை. உலகத்தில் நினைக்காமல் நிகழும் ஒரேயொரு சம்பவம் மரணமாகத்தான் இருக்க முடியுமே தவிர வேறில்லை. உலகத்தில் மறுத்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரேயொரு நிகழ்வும் மரணமாகத்தான் இருக்க முடியுமே தவிர வேறில்லை.

ஹாஜரா அல்லாஹ்விடம் போய்ச் சேர்ந்த நாள், வேரோடு ஆலமரம் நிலத்தில் சாய்ந்த உணர்வொன்றைக் கொடுத்தது நியாஸ் நானாவுக்கு. நியாஸ் என்னும் ஆலமரத்துக்கு ஆணிவேராய் எப்போதுமிருந்தது ஹாஜராதான். ஆலமரம் வெளியில் எவ்வளவுதான் பெரிதாய்க் காட்சியளித்தாலும் அதற்கு உந்து சக்தி ஆணிவேராகத்தானே இருக்க முடியும். குடும்பத்தில் மனைவியின் பலம் எப்போதும் ஆணிவேர்தான்.

தன் மூன்று பிள்ளைகளுக்கும் சோறூட்டி, பண்ட பாத்திரங்களை கழுவி விட்டு, தூங்கச் செல்லும் முன் வுழூச் செய்து விட்டு நியாஸ் நானாவோடு கதைத்துக் கொண்டிருந்தவள், திடீரென மயங்கிக் கீழே விழ, ஹாஜரா 'மையத்'தாகத்தான் விழுந்தாள் என்பது நியாஸ் நானாவுக்குத் தெரியாது. பதறியடித்துக் கொண்டு வைத்தியரிடம் ஹாஜராவைத் தாங்கிச் செல்ல, வைத்தியர் மணிக்கட்டினைப் பிடித்துப் பார்த்து விட்டு இதயத் துடிப்புக்கள் அடங்கி இருபது நிமிடங்கள் கடந்து விட்டன என்றதும்தான் நியாஸ் நானாவின் சந்தேகம் விலகியது. அவளது வியர்வைச் சுரப்பிகள் முகத்தில் பெய்வித்த வியர்வை நீர்களைக் கண்டதும் ஏற்கனவே நியாஸ் நானா அவள் உலகை விட்டும் பிரிந்து விட்டாளென்றுதான் சந்தேகம் கொண்டார். வைத்தியரின் சொற்கள் கேட்டு, துக்கம் தாளாமல் அவர் 'கோ'வென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறியழுதது வைத்தியரின் கண்களையும் தாதிமார்களின் கண்களையும் கலங்க வைத்து விட்டது.

தாயை இழந்து விட்ட சோகத்தில் பிள்ளைகள் கதறியழுதாலும், அது நியாஸ் நானாவின் உள வேதனைகளுக்குச் சமமாக இருக்கவில்லை. பிள்ளைகளுக்கு அவர்களது உம்மும்மாவும் சாச்சிமார்களும் கவனிப்பிற்கு இருக்கின்றார்கள். நியாஸ் நானாவைக் கவனிப்பதற்கு யார்தான் துணையாக இருப்பார்கள் இப்போதிலிருந்து...?

ஹாஜராவுக்கு வயது நாற்பத்து மூன்று இறக்கும் போது. இரண்டு பெண் பிள்ளைகளையும் ஓர் ஆண் பிள்ளையையும் நியாஸ் நானாவின் பொறுப்பில் விட்டுச் சென்றாள். அவளுக்கென்று வியாதிகளொன்றும் இருக்கவில்லை. அவளுக்கிருந்த ஒரேயொரு வியாதி தன் கணவனையும் பிள்ளைகளையும் உரிய முறையில் கவனித்துக் கொள்வது மட்டும்தான். வயதுக்கு வந்த, திருமணம் முடிக்கும் வயதிலிருக்கும் இரண்டு பெண் பிள்ளைகளும் பதினெட்டு வயது நிரம்பிய ஓரிளைஞனும் தாயில்லாமல் வாழ்வைக் கொண்டு செல்வதென்பது ஒன்றும் இலேசில்லை.

"மகள் ரெண்டுக்கும் அவசரமாக கல்யாணத்தப் பேசி வெச்சிடோனுமோய்..." இதுதான் ஹாஜரா நியாஸ் நானாவிடம் பேசிய கடைசி வார்த்தைகள். இந்தப் பேச்சுத்தான் கடந்த ஒரு மாத காலமாக அவளது கலந்தாலோசனையாகக் கூட இருந்தது. மூத்த மகளான நிஷ்பாவுக்கு இருபது வயது பூர்த்தியாகியிருந்தது. இளைய மகள் ஹஷ்மத்துக்கு அப்போதுதான் இருபது வயது ஆரம்பமாகியிருந்தது. இருவரும் இரட்டைக் குழந்தைகள் போன்றுதான் காட்சியும் தருவார்கள். உயர்தரப் பரீட்சையை முடித்திருந்த இருவருக்கும் வரண் பார்க்கும் காலத்தில்தான் ஹாஜரா இறைவனடி சேர்ந்து போனாள்.

தனது திருமண நாளும் அதில் என்னென்ன விடயங்களும் இடம்பெற்றன என்பவைகூட நியாஸ் நானாவுக்கு அவ்வளவாக நினைவில்லை. ஆனாலும், ஹாஜராவை அவரிழந்த நாளையும் அதில் இடம்பெற்றுப் போன நிகழ்வுகளையும் ஒன்று விடாமல் ஞாபகத்தில் வைத்திருந்தார்.

நாடிக்கட்டு கட்டப்பட்ட நிலையில், 'கபன்' எனப்படும் வெள்ளைத் துணியால் சுற்றப்பட்டு, கட்டிலொன்றின் மேல் கிடத்தப்பட்டு இருந்த ஹாஜராவின் தேகம் இன்னும் நியாஸ் நானாவின் கண்களுக்கு முன்னால் அப்படியே இருந்தது. ஹாஜரா அயர்ந்த தூக்கத்திலிருக்கும் போதுகூட, சிறு அரவம் கேட்டாலே உடனடியாக விளித்துக் கொள்பவள். ஆனால் அப்போது பலரது அழுகுரல்கள் கேட்டும் விளிக்காமல் கண்கள் மூடியிருந்தாள். உலகத்தில் கடைசியாக அவளைப் பார்த்து ரசிக்கும் சந்தர்ப்பமது குறிப்பாக நியாஸ் நானாவுக்கு. எங்கும் நகர்ந்து சென்று விடாமல் நிறைய நேரங்கள் ஹாஜராவின் தேகத்தினருகே இருந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாஜராவின் தேகத்திற்கு தண்ணீர் ஊற்றும் போது நிறையவே அழ நேரிட்டு விட்டது நியாஸ் நானாவுக்கு. கொஞ்சம் மயக்கம் போட்டு கீழே விழவும் செய்தார். நியாஸ் நானா குளிக்கும் போது குளியலறைக்குள் வந்து முதுகு தேய்த்து தலைக்கு 'சோப்'பும் போட்டு, சிறு குழந்தையொன்றைத் துப்புறவு செய்வது போல் செய்து விடுவாள் ஹாஜரா. ஆனால் அன்றோ நியாஸ் நானா அவளை வீட்டறையொன்றில் படுக்க வைத்து குளிப்பாட்டி அழுது போனார். தங்கம் கையிலிருக்கும் வரை பெறுமதி தெரியாது. காணாமல் போனதன் பின்னால்தான் அதன் பெறுமதி பற்றியே பேசுவோம் அல்லவா...!

நேரம் செல்லச் செல்ல ஹாஜராவை காடு வா வா என்றது; வீடு போ போ என்றது. வீட்டாரினருக்கோ அவளை அனுப்புவதற்கு மனமில்லை. இருபத்தி நான்கு வருடங்களாக ஒன்றாயிருந்த நியாஸ் நானாவுக்கும் அவளைப் பிரிய நெஞ்சமில்லை. மன பாரத்தோடு ஹாஜராவின் உடலை 'சந்தூ'க்கில் வைத்து, சந்தூக்கை தன் தோளில் வைத்து சீனங்கோடை பத்தை ஜீம்ஆப் பள்ளிவாயல் மையவாடிக்கு எடுத்துச் செல்வதனைத் தவிர வேறேதும் வழிகள் புரியவில்லை நியாஸ் நானாவுக்கு. நான்காயிரம் வருடங்களுக்கு முன்னால் எகிப்திய நாட்டில் வாழ்ந்த மன்னர் பரம்பரையில் மட்டும் நியாஸ் நானா இருந்திருந்தால், ஹாஜராவின் உடலை அடக்கம் செய்யாமல் 'மம்மி'யாக செதுக்கித் தன்னோடே வைத்திருந்திருப்பார்.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்கள் கலந்து கொண்டு தொழுகையில் ஈடுபட்டு ஹாஜராவின் மறுமை வாழ்வுக்குத் துஆ செய்தனர். நியாஸ் நானா தனது மனைவியின் கப்ர் என்னும் புதைகுழிக்குள் இறங்கி ஹாஜராவின் உடலை வைத்த நிமிடத்தினை இன்று வரை கவலையோடு நினைவு கூர்வார். அப்போது அவர் பட்ட வேதனைகளைச் சொல்ல வேண்டுமானால், நாம் அவராகத்தான் மாற வேண்டும். மென்பஞ்சு உள்ளத்தை கல் நெஞ்சமாக்கி தனது கைகளினால் ஹாஜராவை அடக்கம் செய்த அந்த நிகழ்வுதான் நியாஸ் நானாவின் வாழ்வில் பிரதிபலித்த 'என்றுமே மறக்க முடியாத சம்பவமும் சந்தர்ப்பமும்...'

***"யா அல்லாஹ்...! இது எனது அன்புள்ள மனைவி... அவளது கப்ரினை விசாலமாக்கி சுவர்க்கத்துப் பூஞ்சோலையாக மாற்றி வைத்து விடு... என்னோடு விசுவாசமுள்ளவளாக எப்போதும் நடந்து கொண்டாள் இவள்... எனது மனம் நொந்து விடக் கூடாது என்பதற்காக நான் சொல்வதற்கெல்லாம் தலையாட்டி, என்னை மகிழ்ச்சிப் படுத்தியவள்... என்னோடு ஒரு போதும் முரண்பட்டதில்லை... என்னைக் கடிந்து கொண்டதுமில்லை... என்னோடு வீணாக வாக்குவாதம் செய்ததுமில்லை... ஹாஜராவின் கணவனாகச் சொல்கின்றேன் யா அல்லாஹ்... நான் அவளைப் பொருந்திக் கொண்டேன்... எனது பொருத்தத்தின் அடிப்படையில்தான் அவளுக்கு சுவர்க்கம் என்று நீ சொல்லியிருக்கின்றாய்... ஆதலால் உனது பொருத்தத்தையும் அவள் மீது***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***காட்டுவாயாக...! அவளிருக்கத் தகுந்த இடம் சுவர்க்கம் மட்டும்தான் யா அல்லாஹ்...!"***

கப்ருக்குள் மண்ணைப் போட்டு மூடி விட்டு, மேற்படி அல்லாஹ்விடம் கையேந்தினார் நியாஸ் நானா. ஹாஜரா புண்ணியம் புரிந்தவள். ஒரு கணவனது பொருத்தத்தினைப் பெற்றுக் கொள்ள முடியுமான எந்தப் பெண்ணும் புண்ணியவாதிதானே...!

நபிகளார் மிஃராஜ் விண்ணுலகப் பயணம் மேற்கொண்ட போது நிறையப் பெண்கள் நரகத்தில் இருப்பதைக் கண்டார்களாம். அதற்குக் காரணம் கணவனைக் கடிந்து கொண்ட காரணமும் அடங்குமாம். எவ்வளவுதான் கணவன்மார் தங்கள் மனைவிமார்க்கு பணிவிடைகள் செய்தாலும், கடைசியில் மனைவி சொல்வாளாம், ***'இது வரைக்கும் எனக்கு நீங்கள் என்னதான் செய்து கிழித்திருக்கின்றீர்கள்..?'.*** இதுவும் ஒரு காரணம்தான் பெண்கள் அதிகளவில் நரகத்தில் வீற்றிருப்பதற்கு என்றார்கள் நபிகளார். இப்பேர்ப்பட்ட 'குரூப்'பில் சத்தியமாக ஹாஜரா இருந்திருக்க முடியாது.

சீனங்கோட்டைப் பிரதேசத்துப் பெண்கள் பதினாறு வயதில் திருமணம் முடிக்கின்ற காலப் பிரிவில்தான் ஹாஜரா அவளது பத்தொன்பதாவது வயதில் திருமணம் முடித்தாள். சராசரியாக மூன்று வருடங்கள் காலமெடுத்ததற்கான காரணம் முறையான வரனொன்று முறையாக அமையாததே. ஆயிரம் காலத்துப் பயிரான திருமணத்தினை விதைக்கும் போது சரியாக அனைத்தையும் சரி பார்க்க வேண்டுமல்லவா...!

கடைசியில் நியாஸ் நானாதான் ஹாஜராவின் கணவனாக வேலை பார்க்க அல்லாஹ்வால் நியமிக்கப்பட்டார். அவருக்கு அந்நேரம் வயது இருபத்தியாறுதான். இருவருக்கும் ஏழு வருடங்கள்தான் வித்தியாசமென்பது அக்காலத்தில் விமர்சனத்துக்குள்ளாகும் விடயம்தான் சீனங்கோட்டைப் பிரதேசத்தில். ஏனெனில், குறைந்தது இருவருக்கும் பத்து வருடங்கள் இருக்க வேண்டுமென்பதுதான் சமூகத்தின் மரபு. அதற்குக் காரணமும் சொல்வார்கள்... கணவன் தள்ளாத வயதுக்கு வந்து விட்டால், கணவனை விட இளமையாய் இருக்கின்ற மனைவிதானாம் முன் நின்று பணிவிடைகள் செய்விக்க வேண்டும். நல்ல மரபுதான். பொய்யாகிப் போனது நியாஸ் நானாவின் வாழ்வில்.

மாணிக்க வர்த்தகத்தில் சீனங்கோட்டை உச்சத்தில் கொடி கட்டிப் பறக்கும் காலம்தான், நியாஸ் நானாவின் இளமைக் காலமாய் இருந்தது. ஆனாலும் மாணிக்க விவசாயத்தில் அவருக்கு நாட்டமிருக்கவில்லை. சிறு வயது முதல் படிப்பில் நன்றாகத் திகழ்ந்த நியாஸ் நானா தொடர்ந்தும் அதிலேயே ஆர்வம் காட்டினார். கணினித் துறையைத் தேர்ந்தெடுத்து அதில் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டு கொண்டார். தனியார்துறைசார் படிப்புக்களை மேற்கொண்டு தனது இருபத்து நான்காவது வயதிலேயே 'கம்பியூட்டர் சொப்ட்வெயார் இன்ஜினீயரா'க மாறினார். 'மாணிக்க வர்த்தகத்தினை விட்டால் சீனங்கோட்டையினருக்கு ஒன்றும் தெரியாது'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற வசனங்களை பொறாமை காரணமாக அடிக்கடி உச்சரிக்கின்ற ஒரு சில ஊர்காரர்களது வாய்களை மூடியவர்களில் ஒருவர் என்றும் நியாஸ் நானாவை அடையாளப் படுத்த முடியும்.

முற்களைச் சுற்றியிருக்கும் ரோஜா மலர் எவ்வாறு எல்லோரது கண்களையும் வசீகரிக்குமோ... சேற்றுக்குள் பூத்து வளரும் தாமரை எப்படி எல்லோரது உள்ளங்களையும் கொள்ளை கொள்ளுமோ... அப்படித்தான் நியாஸ் நானா அந்நேரம் சமூகத்தில் படிப்பின் மூலம் மாணிக்க வர்த்தகர்களை வித்தியாசப்படுத்தி மிளிர்ந்தார். நிரம்பல் குறைவாக இருந்தால்தானே கேள்வி அதிகரிக்கும்...! சமூகத்தில் எல்லோரும் அவரை மாப்பிள்ளையாகப் பார்க்க ஹாஜராவின் தந்தைக்கு மட்டும்தான் அவரை மாப்பிள்ளையாக்கிக் கொள்ளும் அந்த அந்தஸ்த்துக் கிட்டியது.

நியாஸ் நானாவுக்கோ அவர் நினைத்ததையும்விட அழகிய வாழ்க்கை கிடைத்தது. ஓராணாக இருந்தாலும் ஒரு பெண்ணாக இருந்தாலும் திருமணத்திற்கு அவசரப்படுபவர்களாகவே நித்தமும் இருப்பார்கள். திருமணத்திற்குப் பின் என்னவெல்லாம் இருக்கின்றது என்பதனைக்கூட கவலைப்பட மாட்டார்கள். திருமணத்திற்குப் பின்னர் வாழ்க்கையுண்டா என்பதனைக்கூட அறியாமல் இருப்பார்கள். திருமணத்தின் பின்னர் மூன்று மாதங்களில்தான் தெரியும் அதன் வினைகள். 'முடித்து முடிந்தோம்' என்பார்கள் சிலர் விரக்தியில். 'முடித்ததனால்தான் எழுந்தோம்' என்பார்கள் இன்னும் சிலர் மகிழ்ச்சியில். நியாஸ் நானாவோ முடித்ததனால் எழுந்தோர் கூட்டத்தில் சேர்ந்தவர்.

ஒருவர் இருவராவது திருமணத்தில். ஒரு குடும்பம் இரு குடும்பமாவதும் திருமணத்தில். இருவரான தம்பதியினர் பலராவதும் திருமணத்தில். இருவரது பிரச்சினைகள் அல்லது பலரது பிரச்சினைகள் ஒன்றாவதும் திருமணத்தில். இப்படி வாழ்வு நீண்டு செல்வது திருமணத்தின் பின்னால் என்பது தெரியாத காரணத்தினால்தான் பலரதும் வாழ்க்கை இனிப்பதில்லை. ஆசையும் மோகமும் என்று மட்டும் வந்தால் இனிக்காது அண்ணாசிப் பழம்கூட.

திருமணத்தின் பின்னாலான நியாஸ் நானாவின் வாழ்வு என்றும் பசுமையான பச்சை நிறக் காடாகியது. திருமணத்திற்கு முன்னான அவரது வாழ்வும் என்றும் பசுமைதான். என்றாலும் ஹாஜராவைக் கைப்பிடித்த வாழ்வு இன்னும் சிறந்து விளங்கியது. 'ஏன்டா முடித்தோம்...'; 'முடித்து மாட்டிக் கொண்டோம்...'; 'என்ன கொடுமடா இது...' என்றெல்லாம் ஏன்தான் திருமணத்தின் பின்னர் பலரும் ஏக்கமும் ஏப்பமும் விடுகின்றார்கள் என்பது புரியவில்லை நியாஸ் நானாவுக்கு. அவ்வளவு மிதமாகவும் அழகாகவும் அவரது வாழ்க்கை ஓடிற்று.

தனக்காகவென்றே வாழக் கூடிய துணையொன்று கிடைத்து விட்டால் எப்படித்தான் வாழ்க்கை இன்பமின்றிப் போகும்...! அதனால்தானே இன்று வரை ஹாஜராவின் அன்பை 'மிஸ்' பண்ணுகின்றார் நியாஸ் நானா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நல்ல மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரமெ'ன்பது அன்றைய பழமொழி. 'நல்ல மனைவியும் 'டைனோசரு'ம் ஒன்றுதான். ஏனென்றால், இரண்டுமே இப்பொழுது உலகில் இல்லை' என்பது திருமண வாழ்வில் விரக்தி பெற்ற கூட்டம் சொல்கின்ற புது மொழி. ஹாஜராவின் இணைவு அப்புது மொழியில் நம்பிக்கையை இழக்கச் செய்தது நியாஸ் நானாவுக்கு.

திருமணம் முடித்து ஒன்றரை வருட காலமாகி விட்டது நியாஸ் நானாவுக்கும் ஹாஜராவுக்கும். முதலெட்டு ஒன்பது மாதகாலமாக குழந்தைப் பாக்கியம் கிட்டாதவர்களாக இருந்த அவர்கள், அல்லாஹ்விடம் மட்டுமே அதற்காய் துஆ இறைஞ்சினார்கள். தாயத்துக் கட்டும்படியும், உவைஸ் லப்பையிடம் போய் 'இஸ்ம்' குடிக்கும்படியும் நூற்றுக் கணக்கானவர்கள் அவர்களிடம் வேண்டிக் கொண்டாலும், அல்லாஹ்வை மட்டுமே 'தவக்குல்' கொண்டிருந்தனர் இருவரும். குழந்தைப் பாக்கியம் பெறுவதானால், யாரந்த ஆதம் அலைஹிஸ்ஸலாத்தைப் படைதானோ... யாரந்த ஈஸா நபியை ஆண் துணையின்றிப் பிரசவிக்கச் செய்தானோ... யாரிந்த உலகத்திலுள்ள சனத் தொகைக்கு அடிப்படையில் வித்திட்டானோ... அந்த அல்லாஹ் மூலமே பெற்றுக் கொள்ள வேண்டுமென்கின்ற உளத் துடிப்பு நியாஸ் நானாவுக்கும் ஹாஜராவுக்கும் நிறையவே இருந்தது. அவர்களின் ஈமானுக்கேற்றாற் போல், அல்லாஹ் அவர்களைக் கைவிடவில்லை. 'அல்லாஹ்வை நம்பியவன் ஒரு போதும் கைவிடப்படான்' என்பதை சொல்லித்தர 'பாஷா ரஜினிகாந்த்' தேவையில்லை இஸ்லாமியர்களுக்கு.

மொத்தமாக ஹாஜரா மூலம் நான்கு குழந்தைகள் நியாஸ் நானாவுக்கு. மூத்த மகன் நிபால் ஏழு மாதக் குழந்தையாக ஹாஜராவின் வயிற்றுக்குள் இருக்கும் போதே இறந்து போனது அல்லாஹ்வின் மிகப் பெரிய சோதனையாக இருந்தது இருவருக்கும். எட்டு மாதங்களாக குழந்தைப் பாக்கியமில்லாமல் சமூகத்தில் தலை தூக்கி நிமிர்ந்து நடக்க முடியாமல் போன ஹாஜரா, ஒன்பதாவது மாதத்தில் கருத்தரித்ததன் பிற்பாடுதான் ஆனந்தம் கொண்டாள். அந்த ஆனந்தம் இன்னுமேழு மாதங்களில் தவிடு பொடியாகிவிட மனதளவில் பாரிய வீழ்ச்சி கண்டாள் ஹாஜரா. குழந்தையென்றாலே உயிராயிருந்த நியாஸ் நானாவும் மகனது நிலை கண்டு வெளவெளத்து போய் சோர்ந்து போனார். இன்னுமிரு மாதங்களில் தந்தையாகவிருந்த அவரது மனப் பூரிப்பு உடைந்ததை சரி பண்ணிக் கொள்ள இன்னுமிரு மாதங்கள் சென்றன.

"ஹைறா ஈச்சும்... அல்லாஹ் எங்களுக்கு அவசரமாக இன்னொரு புள்ளயத் தாரொன்டும்... நீங்க கவலப்பட வேணாம்..." குழந்தையை இழந்த தாய் ஹாஜரா தன் சோகத்தினை மறைத்து, தனது கணவனை இப்படித்தான் உஷார் படுத்துவாள் அந்நாட்களில். எப்பேர்ப்பட்ட தைரியமான பெண்ணவள்...!

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாஜரா எவ்வளவுதான் சோகங்களை மறைக்க முற்பட்டாலும், நியாஸ் நானாவுக்கு அவளது கவலைகள் புரியாமலில்லை. கருத்தரித்த செய்தி கிடைத்த முதல் நாளிலிருந்து அவள் அக்குழந்தைக்காக எடுத்துக் கொண்ட சிரத்தைகள் கொஞ்சமா...? வைத்தியர் பரிசோதனையின் பின்னர் அவள் தாயாகப் போகின்றதைச் சொன்ன போது அவளது முகத்தில் தோன்றிய பளபளப்பான நட்சத்திரங்கள் இன்றும் நியாஸ் நானாவின் நினைவில் உள்ளன. ஒவ்வொரு நாளும் தூங்கும் போதும் நியாஸ் நானாவின் கைகளை அவளது வயிற்றில் வைத்து அவள் சொல்கின்ற வார்த்தைகள் நியாஸ் நானாவின் கண்கள் ஓரத்தில் இன்றும் நீரைக் கக்கின.

***"பேபி... மை டியர் பேபி... இதுதான் ஒங்கட வாப்பா... ஒங்கள புடிச்சிக் கொண்டு நிச்சிய இப்ப... அவருக்கு 'ஹைபைவ்' ஒன்டு குடுங்கோ... நீங்க வரங்காட்டும் ஒங்கட வாப்பா பாத்துக் கொண்டு நிச்சிய... ஒங்களுக்கு காரு வேங்கித் தாராம்... போல் வேங்கித் தாராம்... ஒங்கள 'பைக்'ல வச்சி கொண்டு சுத்தியாம்... ஒங்கள பள்ளிக்கி கூட்டிக் கொண்டு போராம்... அவசரமா வாங்கோ ஏன்ட செல்லம்..."***

இப்படியாக அவள் மகிழ்ச்சி பொங்கக் கூறிய வார்த்தைகள் குழந்தை இறப்பின் பின்னால் மாபெரும் சோகத்தை நிகழ்த்தி விட்டன நியாஸ் நானாவின் வாழ்வில். அது மட்டுமல்ல. ஹாஜரா தனது கைகளினாலேயே பல வேலைப்பாடுகளுடன் பல சட்டைகளையும் தைத்து குழந்தைக்காகக் காத்திருந்தாள். குழந்தையைத் தூங்க வைத்து அழகு பார்க்க தொட்டில் வேறு. குழந்தை ஆணாக பிறக்கப் போகின்றதை அறிந்து கொண்டதன் பிற்பாடு அறையின் அலங்காரங்கள் வேறு. இப்படியெல்லாம் தயார் நிலையில் வைத்திருந்தவள், குழந்தையின் இறப்பைச் செவியுற்றதும் அழுதாளே ஓரழுகை... அதை நினைத்து இன்றும் வேதனைப் படுபவர்தான் தந்தை நியாஸ் நானா. குழந்தையொன்றை இப்படியெல்லாம் இழந்து விடுவது தாய் தந்தையரை சுவர்க்கத்துக்கு இட்டுச் செல்லும் செயலென நபிகளார் கூறியது அவர்களது உள வேதனைகளை மையப் படுத்தியதாகத்தானே இருக்கவும் முடியும்...!

குழந்தையைப் பறிகொடுத்த நாளிலிருந்து அது நினைவுக்கு வரும்போதெல்லாம் வருடக் கணக்கில் ஹாஜரா அழுததை நியாஸ் நானா இன்னும் மறக்கவில்லை. அவர்கள் பொறுமையாக இருந்ததன் விளைவு... அல்லாஹ் அவர்களுக்கு ஆரோக்கியமானதும், அழகானதுமான மூன்று குழந்தைகளை அடுத்தடுத்து வழங்கி வைத்து மகிழ்ச்சிப் படுத்தினான்.

சிறு மழைத் தூறல்கள்... கொஞ்ச தட்ப வெப்பங்கள்... சிறு காலநிலை மாற்றங்கள்... கொஞ்சம் பாலைவனம்... பல போது சோலைவனம்... என நியாஸ் தம்பதியினரது வாழ்வு ஓடிக் கொண்டிருந்தது. தன் கணவனோடு மிக நெருக்கமாக ஒட்டிக் கொண்டாள் ஹாஜரா. தன் தாயை விடவும், தந்தையை விடவும் கணவனை நேசிக்கத் தலைப் பட்டுப் போனாள் அவள். அவளுக்கென இருக்கும் உலகம் அவன் மட்டும்தானென்றும் நினைத்து விட்டாள். அவளது பேச்சுக்கள் நியாஸ் நானாவின் 'ஸ்டைலு'க்கு மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது கையெழுத்துக்கள் நியாஸ் நானாவின் எழுத்துக்களோடு ஒத்துப் போவதாக மாறியது. அவளது செய்கைகள்கூட நியாஸ் நானாவின் அங்க அடையாளங்களோடு சங்கமித்தன. அவளது இத்தகைய விடயங்கள் நியாஸ் நானாவையும் அவள் மீது ஈர்த்தது. அவரும் அவளை அளவு கடந்து நேசிக்கலானார்.

"புள்ளயொன்டு வந்துட்டால் எங்களக் கணக்குமில்லாம பெய்த்துடும்... இப்ப சும்மா கொஞ்சிக் கொஞ்சி வாரதான்..." நியாஸ் நானா அப்படிச் சொல்ல,

"நான் ஆயிரம் புள்ள பெத்தாலும் நீங்கதான் ஏன்ட மூத்த புள்ள... மூத்த புள்ளய கவனிச்சாத்தான் நன்றி மறக்காம ஈச்சேலும்..." என ஹாஜரா சிரித்துக் கொண்டே பதிலளிப்பாள்.

அவளுக்குத் தெரியும் அவளது சுவர்க்கமிருப்பது நியாஸ் நானாவின் காலடியிலென்று. நியாஸ் நானாவின் மனதினை வென்றால் சுவர்க்கத்துக்குச் செல்ல மிகவும் இலகுவாகி விடும் என்பது அவளுக்குத் தெரியும்.

"நான் மவ்த்தாகினால் என்ன நீங்க பொருந்திக் கொண்டென்டு அல்லாஹ்கிட்ட செல்லியா..." மாதத்துக்கு ஒரு முறையாவது இதைக் கேட்டு விடுவாள் ஹாஜரா நியாஸ் நானாவிடம்.

"சத்தியமாக, இப்பவே நான் எழுதித் தாரன் ரத்தத்தால... நீ சுவராக சொர்க்கம்தான்டி... ஆனால் ஒரு கென்டிஷன், இன்னம் அஞ்சு நிமிஷத்துல தேத்தன்னிக் கோப்பயொன்டு ஏன்ட கைக்கு வந்துடோனும்... இல்லாட்டி 'செடிபிகேட்' கென்ஸல் ஆகிடும்..." காஷியமாகச் கடைசி வசனங்களை நியாஸ் நானா அப்படிப் பேசினாலும், அவரது வசனங்களின் முதல் வார்த்தைகள் முற்றிலும் உண்மையானதுதான். ஹாஜராவினால் அதிகமதிகம் சந்தோஷமடைந்தாரே தவிர வேறில்லை நியாஸ் நானாவிடம்.

அதிகமான பெண்கள் கணவர்மார்களின் பொருத்தத்தினை அடைந்து கொள்ளத் தவறி விடுகின்றனர். நான் யாரோ நீ யாரோ என்பவர்களாக இருந்து விடுகின்றனர். இன்னொருவரோடு தன் கணவன்மார்களை ஒப்பிட்டு முகத்துக்கு முகம் இழிவு படுத்தி விடுகின்றனர். அடுத்த வீட்டுக் கலீல் நானா கோபி கேட்டால் உடனடியாக ஏற்பாடு செய்து கொடுக்கும் பல பெண்கள், அவர்களது கணவன்மார்கள் கேட்டால் மட்டும் ***'இப்பதானேவா குடிச்சது... இந்த மனிஷன் எங்கட உசுர எடுக்கிய...'*** என்று சொல்லி விடுகின்றார்கள். அதனால்தான் சீனங்கோட்டை கணவன்மார்கள் ஒன்று கூடிப் பேசும் போது இப்படிப் பேசுகின்றார்கள்.

***"இவளுகளுக்கு எவளோ செஞ்சாலும் வேவில்லடா... கல்யாணம் முடிச்ச காலத்துலீந்து நாங்கதான் திண்ணப் போடியதும் உடுக்கக் குடுக்கியதும்... ஆனால் ஒரு ஹாஜியார் நோன்புல நோம்புச் சல்லி நூத்தம்போருவா குடுத்துட்டால் ஏன்ட வாப்போவ்... அவரப் பத்தி புகழிய அந்த மாதிக்கி.."***

**இர்ஷாத் ஹஸன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பெண்களது நிலைமைகள் இப்படித்தான். அவர்களை அல்லாஹ் பாதுகாப்பானாக...! நபிகளார் காலத்தில் வாழ்ந்த ஒரு சஹாபிப் பெண்மணியின் சம்பவம் இன்றைய சமகாலத்துப் பெண்களுக்கு மிகவும் பொருந்தக் கூடியதொன்று.

***கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அண்ணாரது அருமை மகளார், சுவர்க்கத்துப் பெண்களது தலைவி, பாத்திமா நாயகி அவர்கள், "சுவர்ககத்துக்கு முதன் முதலில் செல்லும் பெண் யார்...?" என்று வினவினார்களாம். அதற்கு நபியவர்கள், "ஒரு கூலித் தொழிலாளியான விறகு வெட்டியின் மனைவி..." என ஒரு பெண்ணைக் குறிப்பிட்டுக் கூறினார்களாம். "அப்படி அப்பெண்ணிடம் என்னதான் இருக்கின்றது...?" எனக் கேட்டதற்கு, நபிகளார், "சென்று பார்த்து விட்டு வாரும்" என்றார்களாம். பாத்திமா நாயகியவர்கள் மறுநாளே அப்பெண்ணைப் பார்க்கச் சென்றார்களாம். போய்க் கதவினைத் தட்ட, "யாரது...?" என அப்பெண் கேட்க, "நான்தான் நபிகளாரின் மகள் பாத்திமா வந்திருக்கின்றேன்... உங்களைப் பார்த்து பேசிவிட்டுப் போகலாமென வந்திருக்கின்றேன்..." என்றார்களாம் பாத்திமா நாயகியவர்கள். அதற்கு அப்பெண், "மன்னிக்கவும்... எனது கணவனது அனுமதி இல்லாமல் நான் யாரையும் பார்ப்பதில்லை... நீங்கள் வேண்டுமானால் நாளை வாருங்கள், எனது கணவனிடம் அனுமதி பெற்று வைக்கின்றேன்..." என்றார்களாம் அந்தப் பெண். மறுநாள் பாத்திமா நாயகியவர்கள் தனது பிள்ளையான ஹஸன் அல்லது ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களோடு வருகை தந்து கதவினைத் தட்ட அப்பெண், "மன்னிக்கவும்... உங்களுக்கு மட்டும்தான் அனுமதி வாங்கியிருக்கின்றேன்... உங்களது மகனுக்கு நான் அனுமதி பெறவில்லை... தயவு செய்து நாளை வாருங்கள்..." எனக் கூறி விட்டார்களாம். மறுநாள் பாத்திமா நாயகியவர்கள் மூன்றாவது முறையாக வரவும், கதவினைத் திறந்தார்களாம் அந்தப் பெண்மணி. சொன்னார்களாம், "எனது கணவர் நபிகளாரது குடும்பத்தில் எவர் வந்தாலும் உள்ளே அழைத்து உபசரிக்கச் சொன்னார்..." பாத்திமா நாயகிக்குப் புரிந்து போனது, ஏன் அந்தப் பெண்மணி முதலில் சுவர்க்கம் செல்வாரென்பது. அத்தோடு தொழுகை நேரம் வந்து விடவே, இருவரும் தொழுகையை முடித்தனர். பாத்திமா நாயகியவர்கள் தொழுது முடிந்து கொஞ்சம் வீற்றிருக்க, அப்பெண்மணியோ இருகரம் ஏந்தி அல்லாஹ்விடம் தன் கணவனுக்காய் பிரார்த்தித்தாராம் கண்ணீர் மல்க. தன் கணவனின் உலக விடயங்களுக்காகவும் மறுமை ஈடேற்றத்துக்காகவும் அல்லாஹ்விடம் நிறைய நேரம் செலவிட்ட அந்தப் பெண்தான் சுவர்க்கத்துக்குச் செல்லும் முதற் பெண்மணி. நபிகளார் தொடர்ந்தும் கூறினார்களாம். "பாத்திமாவே நீங்கள் ஒட்டகத்தில் சுவர்கத்தினுள் நுழைய, உங்களது ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்தவராக அப்பெண்தான் முதலில் அதற்குள் காலடி வைப்பார்..."***

கணவன்மார்களது முக்கியத்துவம் எவ்வளவு சக்தி வாய்ந்ததென்பதனை அனைவரும் புரிந்து கொள்வது அத்தியவசியம். கணவன்மார்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்கள் புண்படும்படி நடந்து கொண்ட பெண்கள் மரணங்கள் வரும் முன் மன்னிப்புக் கேட்டுக் கொள்வது அதிலும் முக்கியமானது. சிந்தியுங்கள் பெண்களே...! நேரம் போதவில்லை...!

'எவ்வளவுதான் பிள்ளைகள் பெற்றாலும் நீதானடா என் முதல் குழந்தை...' என்கின்ற ஹாஜராவின் வார்த்தைகள் பொய்யாகி விடவில்லை ஒரு போதும். நியாஸ் நானாவின் ஆரோக்கியத்தில் குறியாய் இருந்து செயற்பட்டாள் அவள். திருமணம் முடிக்கும் போது ஐம்பத்தியாறு கிலோவுக்கும் குறைவான எடை கொண்டவர் திருமணம் முடித்த ஒன்றரை வருடத்துள் எழுபத்தைந்து கிலோ எடையுள்ளவராகவும் பெரிய இடையுள்ளவராகவும் மாறினார். எல்லாவற்றுக்கும் காரணமாயிருந்தது அல்லாஹ்வின் எற்பாட்டுக்கு அப்பால் ஹாஜராவின் பணிவிடை செய்யும் பாணியே. ஏதோ உடம்பு கொஞ்சம் கனத்து விட்டதால் 'கொலஸ்ட்ரோல்' கொஞ்சம் கூடி விட்டது. அதற்கும் தக்க மருத்துவங்கள் செய்துதான் வந்தாள் அவள்.

திருமணம் பல மாற்றங்களுக்கு வித்திடும் என்பது எவ்வளவு பேருண்மை...! பெண்ணுக்குள் மட்டுமா மாற்றம்...! இல்லையே ஆணுக்குள்ளும் பல மாற்றங்கள்தானே...! என்னவெல்லாம் சாப்பிட வேண்டுமெனத் தெரியாதவர் நியாஸ் நானா... எப்படியெல்லாம் உடுக்க வேண்டுமெனத் தெரியாதவர் நியாஸ் நானா... அழகானவற்றை ரசிக்கத் தெரியாதவர் நியாஸ் நானா... இதுவெல்லாம் திருமணத்திற்கு முன்பு. ஹாஜராவைக் கைப்பிடித்ததன் பின்னால் அப்படியில்லை அவர்.

ஓராணுக்கு எவ்வகையான உடைகள் எடுப்பைக் கூட்டுமோ, அவ்வகையான ஆடைகளைத் தேர்வு செய்வதில் எப்போதும் முன்னோடியாக இருப்பாள் ஹாஜரா. குறைந்தது மூன்று மாதத்துக்கு ஒரு முறையாவது இரண்டு 'சேர்ட்'களை வாங்கிப் பரிசளித்து விடுவாள். நியாஸ் நானா அவளுக்கென மாதாந்தம் வழங்குகின்ற பணத்தினை சேமித்து அவருக்கே உடைகள் வாங்கி விடுவது அவளது வாடிக்கை.

நியாஸ் நானா அலுவலகம் செல்லும் போது அவள் காட்டும் கரிசனையோ தனி ரகம். முன்னைய நாளிரவு உடைகளை 'அயன்' பண்ணி, உள்ளாடைகளை வேறாக வைத்து, கழுத்துப் பட்டியை ஆடைகளோடு 'மெட்ச்' செய்து, காலணிகளை 'பொலிஷ்' பண்ணி, முத்தங்கள் வழங்கி, ஸலாம் சொல்லி, ஆயத்துல் குர்ஸி ஓதி அலுவலகத்துக்கு அனுப்பி வைப்பாள். சில வேளைகளில் அவள் செய்கின்ற வேலைகளால் சிறு தாமதம் ஏற்படும் போது நியாஸ் நானாவுக்கு எரிச்சலும் வரும். எவ்வளவுதான் அவர் எரிச்சலைக் கக்கினாலும் அவள் பொருட்படுத்துவதில்லை. "இனிபொறகு ஒங்களுக்கு ஒன்டும் செஞ்சி தாரல்ல..." எனச் சொல்லி விட்டு மீண்டும் அதையே மறுநாள் செய்வாள்.

"எங்கியன் ஒங்கட மாப்புள...?" என்று எவராவது கேட்டாலும்கூட, "கொழும்புக்குப் பெயித்து வரப் போன..." என்றே சொல்வாள் ஹாஜரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக எல்லோரும் "கொழும்புக்குப் போன..." என்றுதான் அதற்கு பதிலளிப்பார்கள். ஆனால் ஹாஜராவோ "பெயித்து வர..." என்ற சொற்களையும் இடையில் சேர்த்துச் சொல்வாள். அவ்வளவுக்கு அவன் திரும்பி பத்திரமாய் வந்துவிட வேண்டுமென்கின்ற அவாதான்.

நியாஸ் நானா தன் உடைகளை அயன் பண்ணி நாட்களல்ல... வருடக் கணக்கில் ஆனது. அதுவும் ஓரிரு வருடங்களல்ல. இருபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளானது. திருமணத்தின் பின்னர் ஹாஜரா எவ்வளவுதான் உடல் பலஹீனங்களுக்கு ஆட்பட்டாலும், நியாஸ் நானாவின் அப்பேர்ப்பட்ட தேவைகளை நிறைவு செய்து கொடுத்து விடுவாள். "நாங்க ஓங்கள பசுந்தா அனுப்பிய மாதியல்ல... தாராலும் குட்டிகளப் பாக்கட்டுமே ஒபீஸ்ல..." என்று எச்சரிக்கையாகச் சொல்லிச் சொல்லியே நியாஸ் நானாவை அலங்காரங்கள் பண்ணுவாள் அவள். கணவன் மற்றவர்களுக்கு அழகாக தென்படுவதுவும், மற்றவர்களால் கணவன் அபகரிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதுவும்தானே மனைவிமார்களின் உயரிய பண்புகள்.

ஹாஜரா நியாஸ் நானாவுக்கு உணவு பரிமாறுவது இன்னும் வேடிக்கையாக இருக்கும். சிறு பிள்ளைகளைப் பயமுறுத்தி சாப்பிடக் கொடுப்பது போலவிருக்கும். நியாஸ் நானா விரும்பிச் சாப்பிடுகின்ற உணவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சமைத்து வைப்பாள். அவர் விரும்பாத உணவாக இருப்பவைகளையும் வேண்டுமென்றே சமைத்து வைத்து அவற்றினைச் சாப்பிடப் பழக்கியும் வைப்பாள். நியாஸா நானா வாழ் நாளில் சாப்பிட விரும்பாத உணவுகள் நிறையவே ஹாஜராவின் சமையல் ருசியில் உண்டு மகிழ்ந்தார். தன்னை அதன்பால் பழக்கப் படுத்தியும் கொண்டார். அவள் சமைக்கும் உணவுகள்கூட, எதை எப்படி சமைத்தாலும் அளவு கடந்த ருசியாக இருக்கும் நியாஸ் நானாவுக்கும். அதற்குக் காரணம் மசாலாக்களுக்குப் பதில் அவள் அன்பைக் கலப்பதாக இருக்குமோ...! 'எனக்கு இதுவென்றால் நன்றாகப் பிடிக்கும்' என்று நியாஸ் நானா ஒரு நாள் சொல்லுவார். மறுநாளே அவருக்கு அது தயாராகி விடும்.

*நியாஸ் நானா ஹாஜராவின் பேரன்பை மிஸ் பண்ணி அழுது கொண்டிருந்தார்.*

ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் எப்போதும் ஒரு பெண் இருப்பாளாம். நிறையப் பேர் அது பொய்யென்று சொன்னாலும், நியாஸ் நானாவோ மிகுதியான சிலரோடு சேர்ந்து அது முற்றிலும் உண்மை என்பார். 'தாய் வேறு... தாரம் வேறு...' என்று பலரும் சொல்வார்கள். அது முற்றிலும் தவறான கூற்றென்பதனை நியாஸ் நானா அடிக்கடி சொல்வார் 'தாயும் தாரமும் உடல் ரீதியாக வேறாக இருக்க முடியும். ஆனால் உணர்வு ரீதியாக ஒன்றாகவே இருக்க முடியும்' என்பதுதான் நியாஸ் நானாவின் 'மனைவி-ஈர்ப்பு விதி'.

உணர்வு ரீதியில் நியாஸ் நானாவின் தாயையும் மனைவியையும் பிரித்துப் பார்க்க முடியவில்லை. தன்னை ஈன்றதனால்தான் தாய். தன்னை மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை சுமப்பதனால்தான் தாரம். சில தாய்கள் தாய்களாக இருப்பதில்லை. சில தாரங்களும் தாரங்களாய் இருப்பதில்லை. கெட்ட தாய்கள் பயங்கரவாதிகளாகி விடுகின்றார்கள். கெட்ட தாரங்கள் தரமற்றவர்களாகி விடுகின்றார்கள். பிள்ளைகளைப் பெற்று இழிவாக நடாத்துபவர்கள் எல்லோரும் நல்ல தாய்களாகிவிட முடியுமா...? மணம் கொள்ளப்பட்ட மனைவிமார்கள் கணவன்மார்களை இழிவு படுத்திடும் போது நல்ல தாரங்களாகிவிட முடியுமா...?

'நற்குணம் கொண்டவர்களே உங்களில் சிறந்தவர்கள்...!' என்பதுதான் இஸ்லாம் போதிக்கும் போதனை. நற்குணமற்ற தாயை நற்குணமுள்ள தாரம் வென்று விடுவது தாயொருத்திக்குக் கிடைக்கும் தோல்விதான். அதே போன்று நற்குணமற்ற தாரத்தினை நற்குணத்தினால் தாயொருத்தி வென்றுவிட்டால், நிச்சயமாக தாய்க்குக் கிடைத்த வெற்றிதான் அது.

ஹாஜராவின் நோட்டமிடும் அழகோ தனிக் கலைதான் எப்போதும். நியாஸ் நானாவின் முகத்தின் மாறுதல்களைப் பார்த்து அவருக்கென்ன தேவையென்பதை சரியாக ஊகித்து விடுவாள். தாகமாக இருப்பதை... பசியாக இருப்பதை... கோபமாக இருப்பதை... மகிழ்ச்சியாக இருப்பதை... கடுப்பாக இருப்பதை... 'ரொமென்டிக்'காக இருப்பதை... இப்படியாக ஒவ்வொரு அசைவையும் சிலாகித்துக் கூறி விடுவாள் சரியாக. மனைவியிடம் எதுவொன்றையும் மறைக்க முடியாததனால்தானே, நபிகளார் அவர்கள், ***'மனைவியரிடம் யார் சிறந்தவரோ அவரே அல்லாஹ்விடத்திலும் சிறந்தவர்...'*** என நவின்றார்கள்.

ஹாஜராவின் இழப்பினை உலகின் பொருளாதார நஷ்டங்களை ஈடு செய்து கொள்வது போன்று ஈடு செய்து கொள்ள முடியவில்லை நியாஸ் நானாவினால். வளர்ந்து விட்ட பிள்ளைகள் இருந்தாலும் அவள் போலில்லை அவர்கள். ஹாஜரா நூறு பேருக்குச் சமனானவள் அல்லவா...!

'கொலஸ்ட்ரோல்'க்கு மருந்துகளை இரு மகள்களும் தந்து பணிவிடை செய்தாலும், சில நாட்களில் அவர்களது குடும்பத்தினைக் கவனிப்பதில் அவர்களுக்கு மறந்து விடுவதுமுண்டு. ஆனால் ஹாஜரா அப்படியில்லை. ஏச்சும் பேச்சும் கேட்டுக் கொண்டு, முன்னாலும் பின்னாலும் 'கொலஸ்ட்ரோல்' மற்றும் நீரிழிவு மாத்திரைகளை கையில் பிடித்தபடி நியாஸ் நானா அவற்றினை எடுத்துக் கொள்ளும் வரை அவரது உயிரையே பிடுங்கி விடுவாள்.

நியாஸ் நானாவுக்கு ஒரு காய்ச்சல் ஏற்பட்டால்கூட முழு இரவும் தூங்காமல் கழுத்துக்குள் பல தடவைகள் கைகளை விட்டு, சரியாகி விட்டதா எனப் பார்ப்பாள். அதே நேரம் அவளுக்கென்று ஏதேனும் நோய்கள் வந்து விட்டால் நியாஸ் நானாவோ குறட்டை விட்டுத் தூங்குவார் உமிழ் நீரையும் தலையணையில் வடித்தவராக. அதனை அவரிடம் ஹாஜரா சொன்னால் வெட்கப்பட்டுக் கொள்வார் பெண்களை விடவும். அது மட்டுமல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழுரைப்பார் இனிமேலும் அப்படி நடக்காதென்றும். மீண்டும் என்ன...? அதே விடயம்தான்.
ஒரு நாள் நடுச்சாமம் ஹாஜராவுக்கு கடும் காய்ச்சலாக இருந்தது. அவளால் எழுந்து சென்று தண்ணீர் குவளையொன்றுகூட எடுக்க முடியாமல் இருந்தது. வலது புறம் நியாஸ் நானாவைப் பார்க்க, 'ஹூருல் ஈன்' பெண்களைக் கனவில் கண்டு கொண்டிருந்த சந்தோஷத்தில் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். ஹாஜராவுக்கு வேறு வழி தெரியாமல் அவரையெழுப்ப, திடீரென எழுந்து உட்கார்ந்து கொண்டார். ஆனால் இன்னும் கண்கள் மூடித்தானிருந்தார். "இது... எனக்கு ரெண்டு பனடோல் தாங்கே, அந்த லாச்சில ஈச்சும்..." என்றதும், அநியாயம் சொல்லக் கூடாது கண்களை மூடிக் கொண்டே எழுந்து சென்றார் அதன் பக்கம். 'லாச்சி'னை திறந்து துளாவித் துளாவி, "பனடோல் இல்லவா..." என்று அழகாகச் சொல்ல, ஹாஜராவுக்கு சிரிப்புதான் பொத்துக் கொண்டு வந்தது. ஏனென்றால் இது வரையில் அவர் கண்களைத் திறக்கவில்லை. "சரி வந்து படுங்கோ... நானே எடுத்துக் கொளியன்..." என ஹாஜரா சொல்ல, "ம்..." என்றவராக வந்து கட்டிலில் புரண்ட மறு கனமே மீண்டும் குறட்டை விட்டுத் தூங்கிப் போனார். மறுநாள் சம்பவத்தைச் சொல்ல, நியாஸ் நானா அதனை வன்மையாக மறுத்தார். அது மட்டுமின்றி, ஹாஜரா கனவொன்றைக் கண்டு விட்டு தன்மேல் பழி போடுவதாயும் முறைப்பட்டுக் கொண்டார். 'என்ன கொடும யா அல்லாஹ் இது...?'

நியாஸ் நானாவுக்கு ஹாஜராவின் நினைவுகள் என்றுமே அழியாத சுவடுகள். தித்திப்பான நிகழ்வுகள். நிஜமான கனவுகள். இதமான மழைத் தூரல்கள். இன்பகரமான மனத் துள்ளல்கள். ஆரோக்கியமான அரு மருந்துகள். இன்னுமின்னும் மிஸ் பண்ணுவார் ஹாஜராவை நியாஸ் நானா அவரது மரணம் வரும் வரைக்கும்.

ஹாஜராவிடம் கற்றுக் கொண்ட விடயங்கள் நியாஸ் நானாவுக்கு நிறையவே இருந்தன. சம்பாதித்த பணத்தினை எப்படி முறையாகத் திட்டமிட்டுக் கையாள்வது...? எவ்வாறு அல்லாஹ்வின் பாதையில் அதைக் கொஞ்சமேனும் செலவிடுவது...? சிக்கனமான வாழ்க்கையை எப்படி அடைவது...? இப்படியான சமாச்சாரங்களையெல்லாம் ஹாஜராவிடம்தான் கற்றுக் கொண்டார் நியாஸ் நானா.

சம்பாதிக்கின்ற பணத்தினை சேமிக்கின்ற நிலையில் திருமணத்திற்கு முன்பு நியாஸ் நானா இருக்கவில்லை. திருமணத்திற்குப் பின்னர் ஹாஜராவின் அறிவுரைகள்தான் நியாஸ் நானாவை பணம் சேமிக்கும் நல்ல பண்புக்குள் கொண்டு சென்றன. அதன் மூலம்தான் நிலமொன்று வாங்கி வீடொன்றும் கட்ட முடியுமானது அவர்களுக்கு.

இப்படித்தான் அல்லாஹ்வுடனான சில தொடர்புகளும் ஹாஜராவின் மூலமே ஏற்படுத்தப் பட்டன. நியாஸ் நானா ஐவேளையும் தொழுது றமழான் மாதம் முழுதும் நோன்பு நோற்பவர்தான் தவறாமல். ஆனாலும் 'ஸக்காத்'தென்னும் இஸ்லாமிய வரி செலுத்துவதில் அவரது கவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்திற்கு முன் இருந்ததில்லை. ஹாஜராவின் அன்பு வார்த்தைகளுக்குப் பின்னர்தான் அவரது புத்திக்குப் பட்டது இவ்வளவு நாளும் ஸக்காத்துக் கொடுக்காமல் இருந்து விட்டோமேயென்று. அதே போன்றுதான் ஹஜ்ஜீப் பெருநாளில் கொடுக்கும் 'உழ்ஹிய்யா' விவகாரமும். திருமணத்திற்கு முன்னர் இவைகள் பற்றி நியாஸ் நானாவின் தாயோ அல்லது சகோதரர்களோ அல்லது சகோதரிகளோ இவைகள் பற்றி ஒரு நாளும் அவருக்கு சொல்லிக் கொடுத்ததில்லை. இவையெல்லாம் வந்தது தாரத்தினால்தான். இப்பேர்ப்பட்ட நியாஸ் நானாவின் நற்கருமங்களுக்கு அல்லாஹ்விடம் கூலி கிடைக்குமோ இல்லையோ தெரியாது. அவருக்கு நற்கூலிகள் கிடைக்க அல்லாஹ் ரஹ்மத் செய்வானாக...! ஆனாலும் இதற்கு உந்து சக்தியாய் திகழ்ந்த ஹாஜராவுக்கு நிச்சயமாகக் கூலிகள் உண்டு அல்லாஹ்விடத்தில்.

ஹாஜராவின் சிக்கன வாழ்க்கை மற்றுமொரு முன்மாதிரி பலருக்கும். திருமணம் முடித்த நாளிலிருந்து அவள் அணியக் கூடிய உடைகள் சாதாரணமாகவே எப்போதுமிருக்கும். ஐந்தாயிரம் முதல் பத்தாயிரம் வரை அனேகமாக எல்லாப் பெண்களும் அபாயா அல்லது சல்வார் அணிகின்ற நிலையில், ஹாஜராவின் நினைப்போ அதுவெல்லாம் தேவையற்ற கடப்பென்பதுதான். கணவருக்கு பல லட்சங்கள் செலவானாலும் நல்ல உடைகளை உடுத்தி அழகு பார்த்து விடுவாள். ஆனால் அவளது ஆடைகளில் மிகக் குறைவான பெறுமதிகளை மட்டுமே பார்க்க முடியும்.

நிறைய ஆண்கள் தங்கள் மனைவிகளோடு 'ஷொப்பிங்' செல்ல பயப்படுவார்கள். ஆனால் நியாஸ் நானா ஹாஜராவோடு அப்படிப் பயப்பட்டதில்லை ஒரு போதும். அழகான ஆடைகள் பக்கம் அவளது கண்கள் பதியும். விலைகளைப் பார்த்து விட்டு அவளுக்கது பிடிக்காதென்று சொல்லி விடுவாள். நியாஸ் நானாவோ ஆடைகள் தேர்வு செய்வதில் மிக மிகக் குறைவான அறிவுள்ளவர் என்பதால் அவரால் நல்லாடைகளை வாங்கி ஹாஜராவுக்குக் கொடுக்கவும் தைரியமில்லை.

சுவாரஷ்யமான விடயமொன்றும் ஆடைகள் வாங்கும் விடயத்தில் நியாஸ் நானாவுக்கு நடந்தது. ஹாஜரா கடையில் சென்று அவளுக்கு ஆடையொன்றை ஆசையாகப் பார்த்தது போல் தெரிந்தது அவருக்கு. விலையைப் பார்த்து விட்டு அப்புறம் சென்று விட்டாளவள். களவாக நோட்டமிட்ட நியாஸ் நானா அதனது விலையைப் போய்ப் பார்க்க, எட்டாயிரம் ரூபாய் பொறிக்கப்பட்டிருந்தது. சரி, மனைவிக்கு 'ஸர்ப்ரைஸ்' கொடுக்கலாமென்று எண்ணி, மறு நாள் மனைவிக்குத் தெரியாமல் அதனை வாங்கி வந்து கொடுக்க, ஹாஜராவின் முகமோ சிவந்து போனது. ஆடைகளுக்கு ஆடம்பரமாக எட்டாயிரம் கொடுப்பது எட்டு இலட்சங்கள் கொடுப்பதற்குச் சமனாக அவளுணர்ந்தாள். அவளது சிக்கன வாழ்க்கை நிறையப் பேருக்கு நல்லுதாரணமாகக்கூட இருக்கலாம்.

ஹாஜராவின் மக்களோடு பழகும் விதமும் அற்புதமானதாய் இருக்கும். மற்றவர்களது மனம் நோகாதவாறு நடந்து கொள்ளவே எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிப்பாள். யரேனும் அப்பாவியாகக் காட்சி தந்தாலோ அல்லது யாசிப்போராகக் காட்சியளித்தாலோ அவளது மனம் இளகி விடும். அவர்களுக்காக நிறையவே பரிதாபம் கொள்வாள். சில வேளைகளில் நியாஸ் நானாவுக்குத் தெரியாமல்கூட அன்பளிப்புக்களை வழங்கி விடுவதுமுண்டு. 'இடக்கரம்கூட அறியாமல் வலக்கரத்தினால் செய்கின்ற தர்மங்கள்தானே சிறந்தவை...!'

ஹாஜராவுக்கும் நியாஸ் நானாவுக்கும் இடையில் இடம்பெறுகின்ற சின்னச் சின்ன சச்சரவுகள் பற்றி அவை நடந்து ஒரு சில நாட்களின் பின்னர் எண்ணிப் பார்க்கும் போது சினிமா நடிகர் வடிவேலுவின் நகைச்சுவைகளைவிட காஷியமாக இருக்கும். சின்னச் சின்ன சண்டைகள்தானே திருமண வாழ்வுக்கு சுவை சேர்க்கும் மசாலாக்கள்...!

நியாஸ் நானாவினால் பொதுவாக சண்டைகள் ஏற்பட்டதில்லை அவர்களது திருமண வாழ்வில். எல்லாச் சண்டைகளும் ஏற்பட்டுப் போவது அனேகமாக ஹாஜராவினால்தான். அவ்வப்போது எதையாவது தூக்கிப் பிடித்துக் கொள்வாள். அவளது முகம் கறுத்து கொஞ்சம் விகாரமடைந்து விடும். நியாஸ் நானாவும் கொஞ்சம் பயந்து வாக்குவாதங்களில் இருந்து நீங்கி விடுவார். ஏனெனில், இருவரும் குரல்களை உயர்த்தப் போனால் விபரீதத்தில் வந்து விழுந்து விடுமென்கின்ற ஒரு சின்ன அச்சம்தான். அது மட்டுமல்லாமல் இருவருக்குமிடையில் சண்டைகள் வரும் போது அவரவர்க்கென மன நிலைகள் மாறுகின்றதையும் நியாஸ் நானா அடிக்கடி கருத்தில் கொள்வார். அதனால்தான் சில வேளைகளில் நியாஸ் நானாவின் குரல் பலமாக ஒலிக்கும் போது ஹாஜராவும் அமைதியாக இருந்து விடுவாள். வாக்குவாதங்கள் முடிவடைந்து இரண்டு அல்லது மூன்று மணித்தியாளங்களின் பின்னர்தான் ஹாஜரா தெளிவாக இருப்பாள். அப்போது பேசாமல் இருக்கின்ற நியாஸ் நானாவின் பக்கம் எப்படியோ சாய்ந்து சமாதானமும் ஆகி விடுவாள். ஆண்கள் அவரவர்களது சோழிகளில் எப்படி 'மூட் அப்ஸட்' ஆகுவார்களோ, அப்படித்தான் பெண்களும் சில வேளைகளில் அவர்களது 'ஹோர்மன்கள்' மாற்றத்தால் எரிச்சல் நிலைகளுக்கு உள்ளாகி விடுகின்றார்கள். இதனை நினைவில் வைத்துக் கொண்டால், பயங்கரமான சண்டைகளை எளிதாகத் தவிர்க்கலாம்.

***இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் இரண்டாம் கலீபா, உமர் ரழியல்லாஹீ அன்ஹீ அவர்களது காலத்தின் ஒரு சம்பவம். ஒரு நபித்தோழர், அவசர அவசரமாக கலீபா அவர்களை சந்திக்கச் சென்றாராம் ஒரு மனுத் தாக்கல் செய்வதற்கு. அவரது 'கம்ப்ளைன்' அவரது மனைவி சில வேளைகளில் அவர் மீது எரிந்து விழுகின்ற நிலைமைதானாம். உமர் ரழியல்லாஹீ அன்ஹீ அவர்களது இல்லமடைந்ததும்தான் அந்த தோழருக்குப் புரிந்தது... உமர் ரழியல்லாஹீ அன்ஹீ அவர்களின் மனைவி அவர் மீதே எரிந்து வீழ்ந்து கொண்டிருந்ததை. தோழரை வரவேற்ற கலீபா அவர்கள் எதற்காக வந்தவரென விசாரிக்க அவர் சொன்னாராம். 'கலீபா அவர்களே, எனது மனைவி அவளது குரலை உயர்த்தி என் மீது எரிந்து விழுகிறாள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இதைப் பற்றி முறைப்பாடு செய்யத்தான் நான் இங்கு வந்தேன். ஆனால் உங்களது மனைவியும் உங்கள் மீது எரிந்து வீழ்வதைப் பார்த்து ஆச்சரியப்படுகின்றேன்' என்றாராம். கலீபா அவர்கள் புன்முறுவலித்து விட்டுச் சொன்னார்களாம். 'அதுக்கென்ன இப்போ...? அன்றாடம் எங்களது தேவைகளை நிறைவு செய்து தருவது அவர்கள்தான். நமது குழந்தைகளைப் பராமரிப்பதுவும் அவர்கள்தான். வீட்டு வேலைகள் அனைத்தையும் கவனித்துக் கொள்பவர்களும் அவர்கள்தான். கொஞ்சம் கத்தி விட்டுப் போகட்டும். அவர்களாகவே அடங்கி விடுவார்கள்' என்றார்களாம் அமைதியாக.*

உண்மைதானே...! ஆண்களுக்கு நாளொன்றுக்கு வேலை அதிக பட்சமாக பத்து மணித்தியாளங்கள்தான். ஆனால், அதுவே பெண்களுக்கோ இருபத்தி நான்கு மணித்தியாளங்களும் வீட்டில் சோழியல்லவா...! அவர்களை கண்ணியப்படுத்த அவர்கள் எரிந்து விழும் போதாவது ஆண் வர்க்கம் அமைதியைப் பேணலாமல்லவா...!

'அழகான மனைவி, அன்பான துணைவி அமைந்தாலே பேரின்பமே' என்கின்ற சினிமாப் பாடல் வரிகள் நியாஸ் நானாவின் வாழ்வில் உண்மையாகிப் போயின. ஹாஜரா நியாஸ் நானாவுக்கு மனைவியாக மட்டுமல்ல... உபசரிப்பில் தாயாக... கருணையில் தந்தையாக... பாசத்தில் சகோதரனாக... உடன் பிறந்த சகோதரியாக... பெற்றெடுக்கப்பட்ட குழந்தையாக... எல்லா வடிவத்திலும் இருந்தாள். அவளுக்குற்ற துணையாக தானிருந்தேனா என்பதுதான் நியாஸ் நானாவுக்குள் ஏற்பட்டுப் போன சந்தேகம்.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலில் சம்பந்தப்பட்டவரென சந்தேகிக்கப்பட்ட ஒஸாமா பின் லாதினின் குரல் பதியப்பட்ட 'ரெகோடிங்' ஒன்றை அமெரிக்கா சமீபத்தில் கண்டு பிடித்தது. 'சுவர்க்கத்திலும் நீ எனக்குத் துணையாக வர வேண்டும் செல்லமே...' என தன் மனைவியைப் பார்த்துக் காதல் வார்த்தைகளை அதில் பதிய வைத்திருந்தாராம். ஒஸாமாவுக்குள்ளும் காதல் நெஞ்சமொன்று இருந்ததை உலகே அன்றுதானாம் கண்டு கொண்டது. பின் லாதினின் 'ஸ்டைலி'ல் நியாஸ் நானாவும் அதையேதான் சொன்னார் ஹாஜராவிடம் பல வருடங்களாக அவள் இறக்கும் முன்.

எஞ்சிய நாட்களைக் கடந்து செல்வது எவ்வாறென துக்கித்து நின்றார் நியாஸ் நானா. பிள்ளைகள் வளர்ந்து பேரப் பிள்ளைகளை அவருக்குப் பரிசாக கொடுத்தாலும், ஹாஜராவின் வாழ்க்கைப் பங்களிப்புக்களை எவராலும் கொடுக்க முடியாதிருந்தது.

*'திருமணம் முடிக்காதீர்கள்...! அப்படித் திருமணம் முடிப்பதானால், ஜோடியாக இருவரும் ஒரே நேரத்தில் மரணிப்போமென்கின்ற உத்தரவாதம் இருந்தால் மட்டும் திருமணம் முடியுங்கள்...! நிச்சயமாக ஒருவரின் பிரிவை இன்னொருவர் தாங்க முடியாமல் போகும்...!'*

*இர்ஷாத் ஹஸன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு எதிர்கால சந்ததியினருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் போலிருந்தது நியாஸ் நானாவுக்கு.

உண்மைதான். ஒரு மனிதனின் சராசரி வயதினை எடுத்துக் கொண்டால், அம்மனிதன் தாயோடும், தந்தையோடும், சகோதரர்களோடும் சகோதரிகளோடும் ஏனையோரோடும் ஒன்றாகவே நிறைய நேரங்கள் செலவிடுவதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை; சொந்தமாக்கிக் கொண்ட கணவன் அல்லது மனைவியைத் தவிர. அப்படி ஒன்றாய் காலங்கள் கடத்தி விட்டு, இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டதன் பிற்பாடு திடீரெனப் பிரிந்து விடுவது சொற்களில் அடங்கா வேதனைதான் உண்மை அன்பு புரிந்த அனைவருக்கும்.

'ஒவ்வொரு நாளும் துயிலெழுந்ததும் ஒருவரைப் பற்றியே எண்ணங்கள் உங்களது உள்ளத்தில் தோன்றினால்... அவர் பற்றிய எண்ணங்கள் ஒவ்வொரு நாளும் தொடர்ச்சியாக அடிக்கடி ஏற்பட்டு வந்தால்... அவர் மூலம் நீங்கள் நிறையவே பாதிப்படைந்து விட்டீர்கள்...' என ஒரு கூற்றுக்குச் சொல்வார்கள். அது நடந்தேறியது நியாஸ் நானாவுக்கு அன்றாடம் ஹாஜராவின் விடயத்தில்.

அல்லாஹ்விடம் நிறையவே துஆச் செய்தார் நியாஸ் நானா, தன் சுவர்க்கத்துக் கன்னிகைகளில் ஒருத்தியாக ஹாஜராவையும் அமைத்து வைக்கும்படி. என்றாவதொரு நாள் ஹாஜராவோடு மீண்டும் சேர்ந்து கொள்ளும் பாக்கியம் தனக்கு நிச்சயம் கிட்டுமென்பதில் அல்லாஹ்விடம் நம்பிக்கை வைத்து, தனது மரணத்துக்காகவும் காத்து நின்றார் ஹாஜராவின் அன்புக் காதலன் நியாஸ் நானா.

**முடிந்தது**

*இர்ஷாத் ஹஸன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருந்தாலே ராஜகுமாரி...!

*மனித வாழ்வு நம்பிக்கையால் சூழ்ந்தது...! ஒருவரை நம்பி நடக்கும் போது, நம்பிக்கையில் துரோகம் சூழ்ந்தால் வாழ்க்கையே இருள்மயம்தான்...! 'நம்ப நட நம்பி நடவாதே' என ஆயிரம் தடவைகள்தான் சொன்னாலும் நம்பி விடுகின்றோம் பசுந் தோல் போர்த்திய துரோகிகளை...!*

ஒரு வயதுக் குழந்தைக்கு துள்ளிப் பாய்ந்தோடி விளையாட ஆசையாம்...! மூன்று வயதுச் சிறுவனுக்கோ விளையாடி குதூகலிக்க ஆசையாம்...! பாடசாலை மாணவனுக்கு வாழ்வில் முன்னேறிவிட ஆசையாம்...! தொழில் புரிந்து முன்னேறிச் சென்றவனுக்கோ திருமணம் செய்திட ஆசையாம்...! திருமணம் கண்டவனுக்கு தந்தையாகிவிட ஆசையாம்...! தந்தையாகிவிட்டவனுக்கோ பேரக் குழந்தையினைப் பார்த்துவிட ஆசையாம்...! எல்லாவற்றையும் கண்டு கொண்டவனுக்கோ மரணிக்காமல் இருக்கவும் ஆசையாம்...!

ஆசைகள் பல விதமாக மனிதனைக் கடந்து சென்று கொண்டே இருக்கின்றன. ஐம்பதிலும் ஆசை வரும் என்பது ஒரு புறம் இருக்கட்டும்; நூறிலும் ஆசை அழியாமல் இருப்பதுதான் வான வேடிக்கை. 'ஆசைகளை அகற்றினால்தான் வாழ்வில் மோட்சம் பிறக்கும்' என்று சொன்ன புத்தர்கூட, மனிதர்கள் ஆசைகளைக் கலைய வேண்டுமென ஆசை கொண்டதும் அவருக்கிருந்த ஆசைதான் என்பார்கள் விமர்சகர்கள். கடைசியில் பார்க்கும் போது ஆசைகளை அகற்றிக் கொண்ட மனிதனாக யாரையும் உலகில் காண முடியவில்லை; காணவும் முடியாது சிநேகிதர்களே...!

அதனால்தான் இன்றைய தலைமுறையினர், ஆசைகளோடு மரணித்தவர்கள்தான் பேயாய், ஆவியாய் உலாவுகின்றனர் என கிழவிகள் சொல்லும் போது பரிகஷிக்கின்றனர். 'ஆச்சி, அப்படியென்டால் கிட்டத்துல நீங்களும் பேயாத்தான் வாரொன்டும்' என பேரப் பிள்ளைகளும் கிழவிகளைப் பார்த்து வேடிக்கையாகச் சொல்லி விடுகின்றார்கள். உண்மைதான், ஆசைகளோடு மரணித்தவர்கள்தான் அமானுஷ்யமாகவும் பேயாகவும் வருவார்களாயின், உலகில் தோன்றிய எல்லோருமே ஆவிகளென்னும் பேயாகத்தான் உலா வருவார்கள். சிறுநீரை அடக்க முடியாது போன்று ஆசைகளையும் அடக்க முடியாது ஒரு போதும்...!

அல்லாஹ் மனிதர்களுள் ஏற்படுத்தி வைத்த ஆசைகளுள் பெரிய ஆசையாக காதலும் உள்ளதென்றால் அதனை மனதில் ஆதரித்து வெளியால் எதிர்ப்பவர்களும் தலையாட்டி ஆமோதிப்பார்கள். காதலென்கின்ற ஆசை அல்லாஹ்வின் புறத்தினாலான இயற்கையான ஒரு பேராசை. அதுவொரு அழகிய நிராசையும்தான். அதுவொரு

**இர்ஷாத் ஹஸன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியவசியமான பகுத்தறிவாசையும்தான். அதனைக் கையால்வதில் பலரும் தவறிப் போவதுதான் நிஜம். அப்படித் தவறிப் போவது அவரவர்களது குற்றமே; இயற்கையினதும் இறைவனதும் அல்ல...!

ஸமீரா சீனங்கோட்டைப் பிரதேசத்து அழகான பெண்ணொருத்தி என்றாலும் அவளது அழகினை இதுவரை ஊரின் பத்து வீத ஆண்கள்கூட கண்டதில்லை. முகங்களையும் உட்படுத்தி அவளது தேகங்களை முற்று முழுதாய் மறைத்து வைக்கின்ற அவளைப் பார்க்கின்றவர்கள் தப்லீக் ஜமாத்தவரொருவரின் மகளென்றே தப்பாய்க் கணக்குப் போட்டுக் கொள்வர். அவள் யாருக்காகவும் அவளது உடலை மறைக்கவில்லை. அல்லாஹ் சொன்ன பிரகாரம் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு அவனைப் பயந்து நடக்க முற்பட்டுப் போனதன் விளைவுதான் அது. குடும்பத்தில் அவர்கள் நான்கு பேர் மட்டும்தான். வாப்பா, உம்மா, தங்கச்சியோடு சேர்த்து ஸமீரா.

பத்தொன்பது வயது பிறக்கும் போது கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்தாள் ஸமீரா. பல்கலைக்கழகம் செல்லக்கூடிய அளவுக்கு படிப்பறிவில் அவளிடம் விருத்தியில்லைதான். ஆனாலும், எதிர்காலத்தினை நடாத்திச் செல்லக் கூடியளவுக்கு அறிவுத் தகைமை அவளிடம் போதியளவில் இருந்தது. இதுவரையில் அவளை யாரும் 'மக்கு' என்றதும் கிடையாது; புத்திஜீவி என்றதும் கிடையாது. என்றும் சராசரிதான் அவள். இகழ்வினைவிட புகழ்வினைத்தான் அதிகமதிகம் அவள் தன்னோடு பழகுபவர்களோடு கொண்டிருந்தாள். சிறு பாராயம் முதல் நன்னடத்தைகளை உள்ளடக்கியவளாக ஸமீரா வாழ்ந்து வந்தாலும், காதல் வலையில் மீனாக சிக்கத் தவறவில்லை.

தண்ணீரில் நனையாத மீன்களைப் பார்க்க முடியுமா...? நீரற்ற கடல்களைப் பார்க்க முடியுமா...? மரங்களற்ற காடுகளைப் பார்க்க முடியுமா...? உணவுண்ணாத ஜீவன்களைப் பார்க்க முடியுமா...? அதே போன்று காதலற்ற மனிதர்களைத்தான் பார்க்க முடியுமா...?

தனக்குக் காதலே வருவதில்லையென்று ஒரு மனிதன் சிறுபிராயத்தில் கூறிவிட்டால் அதனை ஒப்புக் கொள்ளலாம். வாலிப வயதுக்குப் பின்னால் கூறினால் ஒப்புக் கொள்ள முடியுமோ...? ஜோடி ஜோடியாக மனிதர்களை அல்லாஹ் படைத்திருப்பது காதல் எண்ணங்களோடுதான் என்றால் அது மிகச் சரியாக இருக்கும். ஜோடி என்பதே காதல் உறவினைத்தானே இயம்பியும் நிற்கின்றது.

சினிமாக்களில் காதலை அசிங்கப்படுத்தி திரையிட்டு விட்டதனால், இன்றைய சமுதாயம் அதுவும் முக்கியமாக இளைய சமுதாயம் காதலுக்குத் தவறாக வியாக்கியாணம் சொல்வதற்குத் தலைப்பட்டு விட்டது. அழகான பெண்ணொருத்தியை ஒரு வாலிபன் நாடுவதும், அழகான வாலிபனொருவனை பெண்ணொருத்தி நாடுவதும் அல்ல காதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலென்பது ஓராணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இயல்பிலேயே அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கின்ற ஈர்ப்பு என்பதுதான் சரியாக இருக்க முடியும். காதலைக் கையால்வதில்தான் நிறையப் பேர் தோற்று விட்டார்கள். கையாலத் தெரியவில்லை பலருக்கும்.

ஸமீராவுக்குள் காதல் எப்படி உதயமானதென்பது புரியவில்லை. ஒருக்காலும் திருமணத்துக்கு முன் பிறிதொரு வாலிபனோடு காதல் கொள்வதில்லையென்றுதான் அவளும் முடிவு செய்திருந்தாள். ஆனாலும், ஏதோ நேர்ந்து விட்டது அவளுக்கும்.

***"பதினாறு வயதான பருவத்தில் எல்லோர்க்கும் உண்டாகும் காதல் அதிசயம்...!"*** என உலகத்தின் ஏழு அதிசயங்களோடு ஒப்பிட்டுப் பாடுகின்ற பாடல் வரிகள் உண்மையாகத்தான் இருக்கின்றன. அனுபவங்கள்தானே பல நேரங்களில் எழுத்துக்களாக வெளிவருகின்றன...!

'பொது விதிக்கும் விதி விலக்குண்டு' என்பார்கள். அதே விதி விலக்குதான் ஸமீராவின் வாழ்விலும் உண்டாயிற்று. அனைத்திலும் ஒழுக்கமாயிருந்தவள், காதலில் தடம் புரண்டு போனது அவளைப் பொறுத்தவரையில் அவளது வாழ்வியல் விதிகளுக்கு விலக்கானது. அவளது காதல் ஒழுக்கங்கள் தாண்டியதும் கிடையாது; விழுமியங்கள் அற்றதும் கிடையாது; பல சினிமாக்களில் தோன்றுகின்ற அசிங்கமான காதலும் கிடையாது; 'டீவீ சீரியல்'களில் தோன்றும் அநாகரிகமான காதலும் கிடையாது. அது எங்ஙனம் இருப்பினும் காதல் என்பது காதல்தானே எப்போதும்...!

சீனங்கோட்டை, குட்டிமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஸமீரா, ஷாஜஹான் மும்தாஜீக்காக தாஜ்மகாலைக் கட்டிப் பரிசளித்தது போன்று, அவளது தந்தை ஸீப்யான் நானா, தன் மனைவி ஸீரையா உம்மாவுக்குக் கட்டிப் பரிசளித்த வீட்டில் வாழ்ந்து வந்தாள். ஷாஜஹானுக்கும் ஸீப்யான் நானாவுக்கும் மிக முக்கிய வேறுபாடு ஒன்றே ஒன்றுதான். ஷாஜஹான் தாஜ்மகாலை மக்களது வரிப் பணத்தில் கட்டிப் பரிசளித்தார்; ஸீப்யான் நானாவோ தன் சொந்த உழைப்பினால் வீட்டைக் கட்டிப் பரிசளித்தார்.

சீனங்கோட்டை, பிடவளை பிரதேசத்தை ஒட்டியதாகத்தான் குட்டிமலைப் பிரதேசம். சவூதி அரேபிய நாட்டைப் போன்று நூறு வீத முஸ்லிம்களை அடக்கிக் கொண்ட பகுதி. பின்பகுதியில் சொற்பமாக முஸ்லிமற்றவர்களும் வாழ்ந்து வந்தார்கள். இன்னும் கொஞ்ச நாட்களில் அதுவும் முஸ்லிம்கள் வசமாகுமென்கின்ற நியதியில்தான் உள்ளது. குட்டிமலைப் பள்ளிவாசலை ஒட்டியதாகத்தான் இம்ரானின் வீடும் இருந்தது. ஸமீராவின் வீடு ஈரான் நாடென்றால், இம்ரானின் வீடு ஈராக்காக இருந்தது. இரண்டையும் பிரித்தது ஒரேயொரு மதில்(சுவர்)தான்.

சிறு பிள்ளைகளாக இருக்கும் போதே இம்ரானும் ஸமீராவும் ஒன்றாகவே இருந்தவர்கள். 'குஞ்சூடு' முதற் கொண்டு 'ஆறாம்கோடு', 'டிக்போல்',



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உஞ்சில்' போன்ற இன்னோரன்ன விளையாட்டுக்களில் ஒன்றாய் இணைந்து இருந்தவர்கள். வயது வித்தியாசம் இருவருக்கும் ஒரேயொரு ஆண்டுதான். ஸமீரா பதிமூன்றாம் வயதில் வயதுக்கு வந்து வீட்டுக்குள் முடங்கிவிட, இருவரது நட்பும் கொஞ்சம் விலகல் கண்டது. பின்னரென்ன...? 'வாடா-போடி' என்றெல்லாம் சண்டையிட்டுப் பழகியவர்கள் மரியாதையாக 'வாங்கோ-போங்கோ' எனப் பழக பழக்கப்பட்டனர்.

இம்ரான்-ஸமீரா காதல் விவகாரம் கொஞ்சம் சுவாரஷ்யமானது. சிறு பிள்ளைகளாக இருந்த போது விளையாடித் திரிந்து நட்புக் கொண்டவர்கள், பெரியவர்களாகியும் நட்புறவினை மேம்படுத்திக் கொண்டே வந்தனர். ஸமீரா வீட்டின் குடும்ப நண்பனாக இம்ரான் மாற, இம்ரான் வீட்டின் குடும்ப நண்பியாக ஸமீரா மாறியிருந்தாள். இரு குடும்பத்தாருக்கும் இருவருமே நல்ல பிள்ளைகள்தான்.

***'ஓராணும் ஒரு பெண்ணும் தனித்து நிற்க வேண்டாம்; மூன்றாமவனாக ஷைத்தான் ஊடுறுவுவான்'; 'ஆண்களோடு பெண்கள் குழைந்து பேச வேண்டாம்'*** என்கின்ற நபிகளாரின் பொன் மொழிகள் தங்கத்தினால் செதுக்கப்பட வேண்டியவைகள் அல்லவா...! ஓராணுக்கும் பெண்ணொருத்திக்கும் இடையில் அநாகரிகமான ஆசைகள் உண்டாகி கீழ்த்தரமான பிணைப்புக்கள் இடம்பெற இவைகள்தானே ஆணி வேறாய் உறுத்துணையாய் அமைந்து விடுகின்றன.

அன்றொரு நாள்...! ஸமீராவுக்கு கொஞ்சம் அதிர்ச்சி காத்திருந்தது. பக்கத்து வீட்டு திருமணத்திற்கு ஆஜராகியிருந்த ஸமீராவினை இம்ரானின் கண்கள் அளவுக்குமதிகம் நோட்டமிட்டன; சுற்றி வளையமுமிட்டன. ஏதோ பேச வேண்டும் போலிருந்தது ஸமீராவிடம் அவனுக்கு. அதே நேரம் இவ்வளவு காலமும் இல்லாத தயக்கங்கள் அவனைத் தடுத்துக் கொண்டும் இருந்தன. அவனது வழமைக்கு மாறான, தடுமாற்றமான நடவடிக்கைகளை ஓரக் கண்களால் ஸமீராவும் நோட்டம் விட்டுக் கொண்டே வந்தாள். 'எனத்தியன் இது...? இம்ரான் குட்டி போட்ட பூன மாதி தடமாறிய...?' எனவும் அவள் எண்ணினாள்.

"ஸமீரா... எனத்தியன் செய்தி...?" நன்மையான காரியங்களை செய்ய நினைக்கும் போது ஷைத்தான் வந்து தடுக்க முயற்சிப்பது போல், அவன் சொல்ல வருகின்ற வார்த்தைகளை அவனது எண்ணங்கள் தடுத்தன.

"எல்லம் நல்ல செய்தி... எனத்தியன் ஓங்கட செய்தி...?" ஸமீரா திருப்பிக் கேட்க,

"எங்கடயும் எல்லம் நல்ல செய்திதான்..." என்றான் சிரித்துக் கொண்டே இம்ரான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டு, இம்ரான் ஆரம்பித்தான் திருவிளையாடலை.

"ஸமீரா... சின்னொரு விஷயம் ஒங்களுக்கிட்ட செல்லோனும்... கொஞ்சம் பயமா வேற ஈச்சி... மிஸ்டேக்கில்லே..."

ஸமீரா சிலையாகி சில வினாடிகள் போனாலும், முகத்தில் காட்டிக் கொள்ளவில்லை. என்ன சொல்லப் போகின்றான் இம்ரான் என்பதைக் சரியாக கற்பனை செய்து பார்க்கக்கூட முடியவில்லை. ஏதோ அவனது கூனிக் குறுகலில் கொஞ்சம் ஊகித்தாள் காதல் விடயமாகவும் இருக்கலாமென்று.

ஸமீரா இம்ரானின் கண்களை உற்று நோக்கினாள். அவை கொஞ்சம் கலங்கியிருந்தன. அப்படியே உதடுகளையும் நோட்டமிட்டாள். அவையும் படபடத்தன. அவனது கைவிரல்களையும் 'மைக்ரோ' வினாடிகளில் பார்த்தாள். அவையும் கொஞ்சம் நடுங்கின. புன் சிரிப்போடு அவனது அடுத்த வார்த்தைகளையும் எதிர்பார்த்து நின்றாள்.

"ஸமீரா, இதக் கொஞ்சம் புடீங்கோ..." வார்த்தைகள் எழுதப்பட்ட காகிதமொன்றினை நான்காய் மடித்து, கவருறையொன்றுக்குள் 'சீலி'ட்டு நீட்டினான் இம்ரான். நாலாப் புறங்களையும் ஒரு முறை பார்த்துவிட்டு விடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள் ஸமீராவும். இப்பொழுது ஸமீராவின் கண்கள் கலங்கின. உதடுகள் படபடத்தன. கைவிரல்களும் நடுங்கின.

"வாசிச்சிப் பாருங்கோ... விருப்பமில்லாட்டி அப்புடியே உட்டுடுங்கோ... ப்ளீஸ் பண்ணி பிரச்சன படுத்திக்கொள்ள வேணாம்..." காகிதம் ஸமீராவின் விரல்களுக்கிடையில் தவழ்ந்து அபாயாவினுள் மறைந்து கொண்டது. எடுத்த காகிதத்தினை மறைத்துக் கொண்டு ஓடி விட்டாள் ஸமீரா பதில் ஏதுமே சொல்லாமல்.

இம்ரான் வசதியான குடும்பத்தில் பிறக்காவிட்டாலும் ஒரு நடுத்தர வர்க்கத்தினைச் சேர்ந்தவன். குடும்பத்தில் அவனுக்கொரு தங்கச்சியென்று ஓருறவு மட்டுமே உண்டு. வாப்பா, ஸனூன் நானா மிகவும் சாதாரண மாணிக்க வியாபாரி. உம்மா, நிஹாரா எப்போதுமே வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்பவள். உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற தகுதியற்றவனாக மாறிய இம்ரான், கனடா அல்லது அவுஸ்திரேலியா செல்வதற்கு முயற்சிகள் செய்து கொண்டிருந்தான். தங்கச்சி இமாரா சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்ற இன்னும் நான்கு மாதங்கள் மட்டுமே இருந்தன.

சீனங்கோட்டை வாலிபர்கள் பலருக்கும் வெளிநாடு சென்றுவிடத்தான் ஆசை. ஓரிரு வாலிபர்கள் அவ்வாறு வெளிநாடு சென்று சமூகத்தில் உயர்ந்து விட்டதைக் கண்டு கொண்ட வாலிபர்களுக்கு அவ்வாறே தாங்களும் வர வேண்டுமென்கின்ற அவா. அதனால்தான் உள்ளூர் படிப்புக்களைக் கூட கவனித்தில் கொள்ளாமல், சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியதும் வெளிநாடு சென்றுவிட நிய்யத்து வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றனர். இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்பது போல, வெளிநாடு சென்றதன் பின்னர்தான் புலப்படும் வெளிநாட்டுக் கரை எப்படிப் பட்டதென்று. படிப்புக்களை உதாஷீனம் செய்து விட்டு வெளிநாடு சென்றவர்களில் பத்து வீதமானோர் அல்லாஹ்வின் ஏற்பாட்டில் நல்ல நிலைக்கு மாறினாலும், தொன்னூறு வீதமானோர் கஷ்டப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றனர் வெளிநாடுகளில்.

இம்ரானுக்கு அவ்வளவாக படிப்பு மட்டும் மண்டையில் ஏறுவதில்லை. ஆதலால், அவனுக்கிருந்த ஒரேயொரு வாய்ப்பு வெளிநாடு சென்று சம்பாத்தியத்தினை மேம்படுத்துவதுதான். அதற்காக எத்துனையோ விடயங்களை ஏற்கனவே தயார்படுத்தியும் விட்டிருந்தான்.

ஸமீராவின் மனம் மறுபுறத்தில் கனத்துப் படபடத்தது. ஓரொதுக்குப் புறம் சென்று காகிதத்தினைப் பிரிக்க பல மணி நேரங்களாக முயற்சி செய்து கொண்டிருந்தாள். அதனைப் பார்த்துவிடும் மட்டும் அவளது தலையே வெடித்துவிடும் போலிருந்தது. கடைசியில் இரவு பத்து மணிக்கு அவளது அறைக்குள் சென்றுதான் நேரம் கிடைத்தது காகிதத்தினைப் பிரிப்பதற்கும் அதற்குள் என்ன இருக்கின்றதென்பதனைப் பார்த்துப் படிப்பதற்கும்.

மனதில் பல எண்ணங்கள் தோன்றியவளாக, பாதி சிரித்தவளாக காகிதத்தினைப் பிரித்தாள் இறுதியாக.

***அன்பின் ஸமீராவுக்கு அஸ்ஸலாமு அலைக்கும்...!***
***நேரடியாக விடயத்துக்கு வருகின்றேன். நான் உங்களை விரும்புகின்றேன். எதிர்காலத்தில் திருமணம் முடிக்கவும் ஆசைப் படுகின்றேன். உங்களுக்கும் என் மீது விருப்பமிருந்தால் தயவு செய்து சொல்லவும். விருப்பமில்லா விட்டாலும் தயவு செய்து என்னிடம் சொல்லி விடவும். நீங்கள் விருப்பமில்லா விட்டால் உங்களை ஒரு போதும் தொந்தரவு செய்ய மாட்டேன். பழையபடி நண்பர்களாகவே இருப்போம். பதிலை எதிர்பார்த்து முடிக்கின்றேன். இப்படிக்கு இம்ரான்.***

இவ்வளவுதான் நாகரிகமாக எழுதப் பட்டிருந்தது அக்கடிதத்தில். அதனைப் பார்த்ததும் அவளுக்குத் தலை சுற்றவில்லை. இம்ரான் மீது கோபமும் வெறுப்பும் உண்டாகவில்லை. அசாதாரண உணர்வுகளும் பிறக்கவில்லை. மாறாக, ஓரானந்தம் பிறந்தது. அவளது மனதுக்குள்ளும் இம்ரான் ஒரு ஹீரோவாகவே கடந்த பல மாதங்களாக இருந்தான். பேச்சுக்களில் சங்கமித்து சங்கமித்து, அடிக்கடி சந்தித்து சந்தித்து அவளது மனதும் இம்ரானின் மீது கொஞ்சம் சாய்ந்திருந்தது. 'கும்புடப் போன தெய்வம் குறுக்கே வந்த' உணர்வொன்றைப் பெற்றாள் ஸமீரா அப்போது.

தன்னையும் ஒருவன் ஏறெடுத்துப் பார்த்து காதலைச் சொன்னதில் ஸமீராவுக்குள் சிறு பெருமிதமும்தான். என்றாலும் அதன் மூலம் பலதரப்பட்ட விபரீதங்கள் ஏற்பட்டுப் போவதையும் அவள் உணரத் தவறவில்லை. இம்ரானின் முன்மொழிவை வழி மொழிவதா அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறந்தள்ளி விடுவதா எனக் குழப்பமாய் இருந்தது அவளுக்கு. அதே நேரம், அவன் தன் விருப்பத்தினை அவளிடம் முன் வைத்த விதமும் அவளை வெகுவாக ஈர்த்து விட்டிருந்தது. 'விருப்பமானால் இணங்குங்கள் அல்லது இத்தோடு விட்டு விடுங்கள்' என்கின்ற அவனது வாசகங்கள் காதலில் பிரச்சனைகளை ஏற்படுத்த முடியாத வாசகங்களாகவே அவளுக்குத் தென்பட்டன.

ஸமீராவின் வீட்டிலும் அடிக்கடி இம்ரானைப் பற்றி பேசிக் கொள்வதுண்டு. அவன் நல்லவனென்றும், பண்பானவனென்றும், குணமுள்ளவனென்றும், தாய் தந்தையர்களை மதிக்கத் தெரிந்தவனென்றும் ஒவ்வொரு தடவையும் அவர்களால் பேசப்படும் போது ஸமீராவிடமும் அவனைப் பற்றி நல்லெண்ணங்கள் அடிக்கடி தோன்றி மறையும். ஒரு பொய்யை பல தடவைகள் சொல்லும் போது அது உண்மையாகி விடுவது போன்று ஒருவன் அடிக்கடி புகழப்பட்டால் அவன் நல்லவன்தானே...!

இரண்டு நாட்கள் கடந்தும் ஸமீராவைக் காண முடியவில்லை இம்ரானினால். அடிக்கடி அவளது வீடு செல்கின்றவன் ஒருவித அச்சம் காரணமாக செல்லவில்லை. இதற்கு மேலும் செல்லாமலிருந்தால் பலரும் பல விதத்தில் நினைப்பார்களென நினைத்து மூன்றாவது நாள் அங்கு சென்றான் அவன்.

தொண்டை வரட்சி காண்பது; அடிக்கடி சிறுநீர் கழிக்கும் உணர்வு ஏற்படுவது; கைகால்களில் சீவனற்ற உணர்வேற்பட்டு உடல் முழுக்க சிறு நடுக்கம் ஏற்படுவது போன்ற நீரிழிவு நோயாளிகளுக்குள்ள அத்துனை 'ஸிம்ப்டம்ஸ்'களையும் தனக்குள் ஏற்படுத்திக் கொண்டவனாக சென்றான் ஸமீராவின் வீடு நோக்கி இம்ரான்.

"ஆ இம்ரான், மிச்ச நாளைக்கிப் பொறகு...?" ஸமீராவின் உம்மா ஸீரையா உம்மா சொல்ல, 'எனது மகன் காய்ச்சல் காரணமாக பாடசாலைக்கு நேற்று வரவில்லை. ஆதலால் அவரை மன்னித்து இன்று வகுப்பில் சேர்த்து கொள்ளவும். இப்படிக்குத் தந்தை' என்கின்ற வாசகங்களையா அவனால் சொல்ல முடியும்?

"இல்ல ஸீரயா தாத்தா... ரெண்டு நாளா கொழும்புக்குப் போன அதுல வந்து படல்ல..."

"ஆ கொழும்புக்குப் போனா...? இரீங்கோ தேத்தன்னி குடிச்சத்துக்கு... ஸமீரா தேத்தன்னியொன்டு ஊத்துங்கோ இம்ரான் வந்தீச்சி..."

ஏற்கனவே இம்ரானின் குரலைக் கேட்டு விட்டவள் ஸமீரா. ஒன்றும் தெரியாதவள் போல அவசர அவசரமாக தேநீர் தயாரிக்க ஆயத்தமானாள். தன் கணவனாக அவனை நினைத்துத் தயாரித்த முதல் தேநீரை அவள் நிச்சயமாக மறக்க மாட்டாள் என்றும். முதல் காதலை மறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதென்பார்கள் பலரும். ஸமீராவோ, முதல் தேநீரையும் காதலோடு சேர்த்து மறக்க மாட்டாள்.

ஸமீராவின் பெயரை ஸீரையா உம்மா உச்சரித்ததும் இம்ரானுக்கு வியர்த்து விட்டது. அவளைக் கண்ணுற்றதும் எப்படி, எதைப் பேசுவதென அவன் சிந்தித்தான். உலகில் பல வகையான ஜந்துக்கள் இருந்தாலும் பெண்கள் பயப்படுவதோ கரப்பான் பூச்சிக்கு மட்டும்தான். அதே போல, எவ்வளவுதான் பலசாலிகளாக ஆண்கள் இருந்தாலும், காதலை வெளியிடும் போது அவர்கள் கோழைகள்தான்.

தேநீர் கோப்பை ஸமீராவின் கைகளில் ஆடியசைந்தாடி வந்தது. வரண்டாவிலே நாற்காலியில் அமர்ந்திருந்த இம்ரானைப் பார்த்து கள்ளமாக அவள் புன்னகை சிந்த இம்ரானின் வியர்வைகள் அவசரமாகக் காய்ந்து, குளிர்ச்சியை அவனுக்குள் ஏற்படுத்தின.

“அஸ்ஸலாமு அலைக்கும்...” தடுமாற்றத்தில் நிலை தடுமாறி நின்ற இம்ரானுக்கு ஸமீராவின் ஸலாம் சிறு ஆறுதலைக் கொடுத்தது மட்டுமன்றி அவனது காதலுக்கு அது பச்சைக் கொடியாகவும் பறந்தது.

“வஅலைக்கும் ஸலாம்...” சிரித்துக் கொண்டே, இதுவரையில் அவளைப் பார்த்திராத பார்வைகளோடு மொழிந்தான் அழகான பதிலை இம்ரான்.

ஸமீரா ஸலாத்துடன் தேநீர் கோப்பையை இம்ரானிடம் நீட்டும் போது, ஸீரையா உம்மா அவ்விடத்தில் நின்றும் நகர்ந்திருந்தாள். இம்ரான் தன் வீட்டுப் பிள்ளை போலென்பதால், பெரிய வரம்புகளோ பொருளாதாரத் தடைகளோ அவர்களுக்கிடையில் இல்லை.

“எனத்தியன் செய்தி...? ஒரு பதிலையும் காணம்...?” கிண்டலாக இம்ரான் சொல்ல, ‘என் புன்னகைதான் உனக்குப் பதில்டா மடயா...’ என்றது ஸமீராவின் உள்ளம்.

“எல்லாம் ஓகேதான் எனக்கும்... அப்பவும் கொஞ்சம் ஒங்களோட இது சம்பந்தமாப் பேசோணும்...” ஸமீரா திருப்பிச் சொல்ல, இம்ரான் அதனை ‘ஓகே’ சொல்லி ஆமோதித்தான். இருவரும் அப்படியே ஐந்து நிமிடங்கள் பேசிக் கொண்டனர். இரவு பதினொரு மணிக்கு இம்ரான் தொலைபேசி அழைப்பினை அவளுக்குக் கொடுப்பதுதான் அவர்களது அடுத்த கட்டத் திட்டம்.

இரு காதல் உள்ளங்களும் இரவு பதினொரு மணி வரும் வரை காத்து நின்றன. ஒவ்வொரு நிமிடமும் மிக மெதுவாய் நகர்ந்தது அவர்களுக்கு. ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணித்தியாளங்களும் போதாதென்று சொன்ன ஜப்பான்காரன் காதலித்திருக்க வேண்டாமா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***'காலை 6.30 மணிக்கு துயிலெழுந்து, இன்னும் ஐந்து நிமிடங்கள் கண்களை மூடி உறங்குவோம் என்று சொல்லி, விழித்துப் பார்த்தால் 7.30 மணியாகியிருக்கும். அதே நேரம் காதலிக்காக 5.30 மணிக்கு ஐந்து நிமிடங்கள் கண்களை மூடி காத்திருந்தால், கண் விழித்துப் பார்க்கும் போது 5.31 மட்டுமே காட்டி நிற்கும்'*** என்பதனை முகநூலில் பார்த்த ஞாபகம் ஸமீராவுக்கும் இர்பானுக்கும் ஒரே சமயத்தில் நினைவிற்கு வந்து சென்றது.

அவர்கள் எதிர்பார்த்த பதினொரு மணியும் வந்தது. இம்ரானுக்கு 'மிஸ்கோல்' வைப்பதற்கு உம்மாவும் வாப்பாவும் தங்கச்சியும் தூங்கி விட்டார்களா என்பதனை ஊர்ஜிதம் செய்து கொண்டாள் ஸமீரா. வாப்பாவின் 'மொபைலை' எடுத்து இம்ரானின் இலக்கங்களைத் தட்டினாள். ஸமீராவின் 'மிஸ்கோலினை'ப் பார்த்துவிட்ட பூரிப்பில் இம்ரானது உள்ளம் தடுமாற்றம் கலந்த ஆனந்தம் கொண்டது. ஏற்கனவே தனிமையை ஏற்படுத்திக் கொண்ட இம்ரான் உடனடியாக அழைப்பினை மேற்கொண்டான் ஸமீராவுக்கு.

"ஹெல்லோ அஸ்ஸலாமு அலைக்கும்...!" ஸமீரா அழகாகச் சொன்னாள். எவ்வளவுதான் இஸ்லாமியர்களாக இருந்தாலும், ஸலாத்துக்குச் சொந்தக்காரரர்களாக இருந்தாலும், தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தும் போது ஆங்கிலேயர்கள் ஏற்படுத்தித் தந்த 'ஹெல்லோ'தான் ஸலாத்துக்கும் முதலில் வரும்.

'ஹெல்லோ அஸ்ஸலாமு அலைக்கும்...!' என்கின்றதை ஒரு முறை ஒரு சகோதரர் மொழிபெயர்த்திருந்தார். ஆங்கிலத்தில் 'ஹெல்' என்றால் நரகம். 'ஹெல்லோ' என்றால் நரகவாசிகள். ஆகவே, 'நரகவாசிகளே, உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக' என்பதுதானாம் அந்த மொழிபெயர்ப்பு. சிரிப்பாக இருந்தாலும், சிந்திக்கவும் கடமையுண்டல்லவா நமக்கு...!

"வஅலைக்கும் ஸலாம்... என்ன செய்தி சொகமா...?" இம்ரான் சொல்ல,

"மாஷா அல்லாஹ், ஒருமாதி ஈச்சியோம் தல கொழம்பிக் கொண்டு..." ஸமீரா ரகசியமாகப் பேசினாலும், இம்ரானின் தொலைபேசியில் தெளிவாய்க் கேட்டது.

"அதெனத்தியன் தல கொழம்பீச்சீ...?"

"நீங்க செஞ்ச வேலைக்கி தல கொழம்பாமப் போகுமா...?" ஸமீரா சொல்ல இம்ரான் சிரித்துக் கொண்டான்.

"இனி வேற எனத்தியன் செய்தி...? ஒங்களுக்கு ஓகேதானே...?" ஸமீராவின் விருப்பத்தில், இம்ரானுக்கு இன்னும் சந்தேகமா...? ஸமீரா கொஞ்சம் மௌனித்தாள்; வெட்கப்பட்டும் போனாள். ஆசையும்தான் எல்லோருக்குமிருப்பது போல். தயக்கமும்தான் எல்லோருக்குமிருப்பது போல்.

***இர்ஷாத் ஹஸன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கும் ஓகேதான்... அப்பவும் வாப்பாங்க என்ன செல்லுமோ தெரியா... அதுதான் பயமா ஈச்சி..." எவ்வளவுதான் காதல் அந்நியனோடு அந்நியமாக வந்தாலும், பெற்றோர்களது நினைவும் அதனூடாக வந்து விடுவது இயற்கைதானே...!

இருவரிடமும் மீண்டும் மௌனம். காதல் என்பது திருமணத்துக்காக என்பதாலும், திருமணம் என்பது வாழ்நாள் பூராவும் இருப்பதற்காக என்பதாலும் திட்டமிடல் அவசியமென்பதனை அனுபவங்கள் இல்லாவிட்டாலும் ஸமீரா நிறையவே அறிந்திருந்தாள்.
"இன்ஷா அல்லாஹ், ஒங்கட வாப்பா ஓகே செல்லிடியொன்டும்... பயப்புட வேணாம்... கொஞ்ச நாளைல எங்கட உம்மா வாப்பாங்கள்ட விஷயத்தச் செல்லோம்... அவங்க ஒன்டும் செல்லாது..." இம்ரான் ஸமீராவை ஆறுதல் படுத்தினான். ஆசை வார்த்தைகளையும் வழங்கினான். இம்ரானின் வார்த்தைகளில் ஸமீராவின் காதல், பசளையிடப்பட்ட வித்து விருட்சமாக மாறியது போல, பாரிய முன்னேற்றம் கண்டது.

தொலைபேசி உரையாடல் முப்பது நிமிடங்கள் வரை நீண்டது. ஸமீராவின் முழு நினைப்பும் தாய் தந்தையர்களின் விருப்பங்களோடு சங்கமித்திருந்ததை இம்ரான் கண்ணுற்றான். அதே நேரம், இம்ரானின் முழு நினைப்பும் எப்படியேனும் வாழ்க்கைத் துணையாக தன்னை அடைந்து கொள்வது மட்டுமே என்பதாக ஸமீரா கண்ணுற்றாள். காதல் இருவருக்கும் முக்கியமாகிப் போனது. சற்று முன்னர் வரை தனிமையாய் வாழ்ந்து தனிமையை உணர்ந்தவர்கள், தங்கள் வாழ்க்கையில் இன்னொருவர் புகுந்து போன சமாச்சாரத்தினை முதன்முதலாய் உணர்ந்தனர்.

******

காலங்களது நகர்வில் இம்ரான்-ஸமீரா காதல் நான்கு மாதங்கள் வயோதிகமடைந்தது. கெச்சிமலைக் கந்தூரி முடிவடைந்து புகாரிக் கந்தூரியும் முடிவடைந்து விட்டதென்றால் பாருங்களேன். ஆங்கிலத்தில் 'ஓல்ட் இஸ் கோல்ட்' என்று சொல்வார்கள். அதே போல, அவர்களது காதல் பழமையடைய அடைய தங்கத்தின் பெறுமதி போன்று கூடிக் கொண்டே சென்றது. பெரிதாக ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை. வழமை போன்று ஸமீரா வீட்டுக்கு வந்து செல்வான் இம்ரான். இருவரும் வழமை போன்று பேசிக் கொள்வார்கள். மீண்டும் பிரிவார்கள். பிரியும் போது கொஞ்சம் வலியிருக்கும். அடுத்த நாள் உதயமாகும் வரை இருவருக்கும் பொறுமையிருக்காது. சொன்ன நேரத்தில் மறுநாள் இம்ரான் மீண்டும் ஸமீராவின் வீடு வருவான். அவன் வரும்வரை வீட்டு வாசற்படியோரம் ஸமீராவும் காத்து நிற்பாள். காதல் உரையாடல் மீண்டும் ஆரம்பமாகும்.

'மாட்டிக் கொள்ள முன்னால், வீட்டிற்கு சொல்லிவிட வேண்டுமே...' என்கின்ற ஸமீராவின் பரிதவிப்பு மட்டும் இன்னும் அவளதுள்ளத்தில் நிரந்தரமாய் நின்றது. இம்ரானிடம் எவ்வளவோ சொல்லியும் அவன் 'அவசரப்பட வேண்டாமே...' எனச் சொல்லி விட்டான். ஸமீரா ஒழுக்கமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்த காரணத்தினால், அநாகரிகமாக அவளது காதலை வளர்க்க விரும்பவில்லை போலும்.

இன்னொரு மாதம் விடுக்கென்று சென்றது. ஸமீரா தன் காதலன் இர்பானை வற்புறுத்தினாள். தாமிருவரும் செய்வது தவறான காதலென்றும், தொடர்ந்து இவ்வாறிருக்க முடியாதென்றும் வாதாடினாள். 'கொஞ்சம் பொறுங்கே... உலகம் அழியப் போறல்லே...' ஐந்து மாதங்களுக்கு முன்னால் சொன்னதையே இன்னும் இம்ரான் சொல்லிக் கொண்டிருந்தான். என்றாலும், ஸமீரா விட்டுக் கொடுப்பதாயில்லை. தன் தாயிடம் தன் காதலைச் சொல்லப் போவதாய் உறுதி மொழிந்தாள்.

அன்று சூரியன் மறைந்து இருட்டானதால் இரவானது. தருணம் காத்து நின்றாள் ஸமீரா தன் உம்மாவுடன் தனது காதலைப் பற்றிப் பேசுவதற்கு. தங்கச்சி தூங்குகின்றாள். வாப்பாவும் குறட்டை விடுகின்றார். வழமை போன்று ஸீரையா உம்மாவும் ஸமீராவும் பண்ட பாத்திரங்களை சுத்தம் செய்துவிட்டு கொஞ்சம் இளைப்பாறுகின்றனர் 'டீவி'க்கு முன்னால்.

"உம்மா..."

"ம்... எனத்தியன்...?" சீனங்கோட்டை முஸ்லிம் பெண்களின் பாரம்பரியமான 'குடாக்கினை' வாயின் வலது புறமாக உள்ளிழுத்துக் கொண்டு, 'குத்து விளக்கு' இந்திய தொடர் நாடகத்தின் மறு ஒளிபரப்பினைப் டீவியில் பார்த்துக் கொண்டு, கேட்டாள் ஸீரையா உம்மா.

ஸமீராவின் இதயம் வேகமாக அடித்தது. தன் தாயிடம் தன் காதல் பற்றி சொல்வதால் விபரீதங்கள் ஏற்பட்டு விடுமோ எனவும் அஞ்சினாள். தன் கேள்விக்குப் பதில் வராததால், சில வினாடிகள் கழித்து திரும்பிப் பார்த்தாள் ஸமீராவை ஸீரையா உம்மா. அவள் ஏதோவொன்றை மென்று விழுங்குவது போல தெரிந்தது.

"எனத்தியன் ஸமீரா, பேய் அறஞ்சமாதி நிச்சிய...?" பிள்ளைகளின் மாற்றங்கள் பற்றி தாயொருத்திக்குச் சொல்லவா வேண்டும்...!

"உம்மா... சின்னொரு விஷயமொன்டு செல்லோனும்..." ஸமீரா இன்னும் பதுங்கிக் கொண்டுதானிருந்தாள். தன் பிள்ளைக்குள் ஏதோ வித்தியாசம் நேர்ந்து விட்டதை உணர்ந்த ஸீரையா உம்மா சற்றே பதற்றத்தோடு ஸமீராவின் அருகாமையில் வந்தாள்.
"எனத்தியன் ஸமீரா...? செல்லே... எனத்தியாலும் சொகமில்லயா...?"

எப்படியோ ஆரம்பித்த விடயத்தினை மெல்லமாகச் சொல்ல ஆயத்தமானாள் ஸமீரா. கிட்டத்தட்ட ஆறு மாதங்களாக இம்ரானைத் தான் காதலிப்பதாயும், இம்ரானும் தன்னை மனதாரக் காதலிப்பதாயும், காதல் உருவான வரலாற்றையும் ஒன்று விடாமல் அமைதியாக அவளது முகம் நோக்காமல் சொன்னாள் ஸமீரா. அவை கேட்டு ஸீரையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மாவின் முகத்தின் மாறுதல்கள் எப்படி அமைந்தனவென்பதனைக் கூட ஸமீரா பார்க்கத் தவறினாள்.

ஸமீராவின் வார்த்தைகள் ஸீரையா உம்மாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தன. அவளது முகம் சிறிது மாற்றம் கண்டது. 'பெற்றவர்களாகிய தாங்கள் கண்டுபிடிக்கும் முன்பு காதலைச் சொல்லி விட்டதனால் சந்தோஷப்படுவதா அல்லது தன் பிள்ளை காதலில் விழுந்து விட்டாளே எனக் கவலைப்படுவதா...?' எனப் புரியவில்லை அவளுக்கு.

சத்தமாகக் கத்தி தன் புருஷனை எழுப்பி விடவும் முடியாது ஸீரையா உம்மாவுக்கு. என்ன சொல்வதெனத் தெரியவில்லை அவளது உதடுகளுக்கும்.

"எனத்தியன்டி இப்படிச் செஞ்சி போட்ட...?"

"இல்லும்மா... நான் இம்ரான் நானாட்ட சென்ன உம்மாடயும் வாப்பாடயும் விருப்பத்தோடதான் இதச் செய்யோனுமென்டு... அவருதான் சென்ன ஒங்களுக்கிட்ட மொதல்ல செல்லச் செல்லி..."

ஸீரையா உம்மாவுக்கும் இம்ரான் மீது ஒரு பிடிப்பு ஆரம்பம் முதலே இருந்துதான் வந்தது. என்றாலும், வயது மிகக் குறைவாக இருக்கின்றவன், அதுவும் சம்பாத்தியத்தில் இன்னும் நுழையாதவன் எப்படிக் காதல் கொள்வான், எப்படி திருமண பந்தத்தினைப் பற்றி சிந்திப்பான் என்றே யோசித்தாள் அவள். இந்தக் காதல் கதையை வெளியில் சொன்னால் யார்தான் ஏற்றுக் கொள்வார்கள் எனவும் சிந்தித்தாள். குறிப்பாக தன் கணவனிடம் எப்படிக் கூறுவதென்றும் குழம்பினாள். 'வேண்டாம், விட்டுவிடு...' எனச் சொன்னாலும் ஆறு மாதங்கள் முற்றிப் போன காதலை அவ்வளவு இலேசாக கிள்ளி விடவும் முடியாது. ஸீரையா உம்மாவுக்கும் தலை வலித்தது. பக்கத்திலிருந்த 'டைகர் பாமை'யெடுத்து நெற்றியில் தேய்த்துக் கொண்டாள்.

குழந்தைகள் கெட்டுப் போவதை பெற்றோர்கள்தானாம் கடைசியில் அறிந்து கொள்வார்கள் எனப் பொதுவாகச் சொல்வார்கள். ஆனாலும் ஸமீரா அப்படி நடந்து கொள்ளவில்லை. பிறருக்கு எட்டிவிட முன்னர் தாயிடம் சொல்லி விட்டாள்.

"எப்புடியன் ஸமீரா இது...? அவன் சம்பாரிச்சியோமில்ல... இனோம் சின்னப் பொடியனும்தான்..." ஸீரையாவின் கேள்விகளுக்குப் பதில்கள் இருப்பிலில்லை ஸமீராவிடம். ஸீரையா உம்மாவும் நீண்ட நேரமாக கற்பனைகளில் ஆழ்ந்துவிட்டு,

"ஸமீரா, நான் செல்லங்காட்டும் இதப் பத்தி ஒத்தர்டயும் செல்ல வேணாம்... வாப்பாட்டயும் செல்லீடாத... நான் எப்படிச் சரி வாப்பாட்ட மெதுவாகச் செல்லிப் பாக்கியன்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமிரு வாரங்களோடு இம்ரான்-ஸமீரா காதல் விவகாரமும் முன்னேறிச் சென்றது. குறைந்தபட்சம் தன் தாயிடமாவது தன் காதலைச் சொல்லிவிட்ட சந்தோஷத்தில் ஸமீரா இருந்தாள். அது இம்ரானுக்கும் ஓராறுதலைக் கொடுத்தது. இவ்விரு வாரங்களுக்குள்ளும் ஸீரையா உம்மா இம்ரானின் உம்மா ஜன்னாவிடம் மட்டும் விடயத்தினை மெதுவாகக் கசித்திருந்தாள். ஜன்னாவுக்கும் அதிர்ச்சியாக இருந்தாலும், ஏற்கனவே ஸமீராவிடம் கொஞ்சம் பிடிப்பாக இருந்ததனால் எதிர்ப்பாக ஒன்றும் சொல்லி விடவில்லை. ஆதரவாகவும் ஒன்றும் சொல்லி விடவில்லை.

ஸீரையா உம்மாவுக்கும், ஜன்னாவுக்கும் என்ன செய்வதென்றும் புரியவில்லை. பருவமெய்திய பெண்கள் இருக்கின்ற வீட்டில் மிகவும் அறிந்தவர்களாகிய வாலிபர்களை நுழைய விட்டது அவர்கள் செய்த தவறா...? அல்லது தங்கள் பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்க்க முடியாமல் போய் விட்டது அவர்களது தவறா...? அந்நியர்களை அந்நியர்களாக பார்க்கா விட்டால் பிள்ளைகள் அந்நியோன்யமாக மாறி விடுவார்கள் என்பதனைப் பல பெற்றோர்கள் தெரிந்தும் தெரியாமல் இருக்கின்றார்களே அதுதான் அவர்களது தவறா...?

ஜன்னா எப்படிப் போனாலும் ஸீரையா உம்மாவோ ஸமீராவின் எதிர்காலத்தினைப் பற்றி பயந்து போனாள் கொஞ்சம். தற்போது சம்பாத்தியத்தில் இம்ரான் இல்லா விட்டாலும் இன்னுமிரு வருடங்களில் எப்படியும் உழைப்பில் முன்னேறி விடுவான் என்கின்ற ஒரு குறுட்டு நம்பிக்கையும் ஸீரையா உம்மாவிடம் குடியிருந்தது.

வீட்டுக்கு வருவோரிலும் போவோரிலும் எவ்வளவு கவனமாக நடந்து கொள்தல் வேண்டுமென்பதில் அசிரத்தையாக இருக்கின்றோம். 'சின்ன வயதிலிருந்து தெரிந்தவன்தானே' என நம்புகின்றோம். 'தன் பிள்ளையின் நண்பன்தானே' என நம்புகின்றோம். 'தன் கணவனுக்கு வேண்டப்பட்டவர்தானே' என நம்புகின்றோம். 'எல்லாவற்றுக்கும் உதவிக்கு வருபவன்தானே' என நம்புகின்றோம். இப்படி நம்பி நம்பித்தான் இஸ்லாமிய சமுதாயமும் சீரழிவுக்குச் சென்று கொண்டிருக்கின்றது. முஹம்மது நபிகளாரின் அந்நியர்கள் சம்பந்தமான அறிவுரைகளை ஏன் நாம் கவனத்தில் கொள்ளாமல் இருக்கின்றோம்...?

'ஒரு கண்ணை இழந்தவனாக முறைப்பாடு செய்ய எவனேனும் வந்தாலும், அதனை நம்பி தீர்ப்பு வழங்கி விடாதே... ஏனெனில் முறைப்பாடு செய்யப்பட்டவன் இரண்டு கண்களும் பிடுங்கப்பட்டவனாக இருக்கலாம்...' என இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் இரண்டாம் கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அவதானம் பற்றி அழகாகக் கூறினார்களே, அந்த அவதானம் எல்லோரோடும் இருப்பது அவசியமல்லவா...!

கயிறு அவிழ்த்து விடப்பட்ட மாடாக பிள்ளைகளைச் சுதந்திரமாக விட்டால் காதல் விவகாரம் தானாய் தொற்றிக் கொள்ளும் என்பதனை ஸீரையாவும் ஜன்னாவும் இப்போதாவது உணர்ந்து கொண்டார்களா...? இதன் மூலம் குறைந்தது தன் பேரப் பிள்ளைகள் விஷயத்திலாவது கவனமாய் நடந்து கொள்வார்களா...?

******

*இர்ஷாத் ஹஸன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸமீரா உயர்தரப் பாரீட்சையை நெருங்கியதில் காலம் இன்னும் அவசரமாகச் சென்றதைப் பலரும் உணர்ந்தனர். இம்ரானோ, கனடா செல்லும் நோக்கில் உயரப் பறக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தான் அவ்வேளை. கனடா செல்ல நினைக்கும் இம்ரானுக்கோ பல முட்டுக் கட்டைகள்.

சீனங்கோட்டை மக்கள் பழமொழியொன்று சொல்லிக் கொள்வார்கள். '*பின் புறத்தைச் சொறிய நகமில்லை; ஆனால் பேசுவதெல்லாம் பெரிய பேச்சு...*' அப்படியாகி விட்டது இம்ரானின் கனடாப் பயணமும். படிப்பும் பொருளாதாரமும் குறைவாக இருப்பவனுக்கு வெளிநாட்டுக் கனவு இலகுவில் நிஜமாகுவது எப்படி...?

கனடா செல்ல யாருக்குத்தான் ஆசையில்லை...! நபிகளார் பிறந்து மறைந்த நகரங்களான, புனித பூமிகளாகப் பிரகடனம் செய்யப்பட்ட மக்கா, மதீனா நகரங்களைப் பார்வையிட பலருக்கும் ஆசையில்லை. ஆனால் கனடா, அமெரிக்க நாடுகளென்றால் நிறையப் பேருக்கு ஆசைதான். என்னதான் இருக்குதோ அங்கே...?

கனடா தூதரகத்துக்குச் சென்று, கல்வித் தகைமைகளைக் காட்டி, கனடா செல்ல உத்தியோகபூர்வமாக அனுமதிப் பத்திரம் எடுப்பது ஒன்றும் இலகுவான காரியமல்ல இம்ரானுக்கு. அவனுக்கிருந்ததோ 'என் வழி குறுக்கு வழி' மட்டுமே. ரூபா ஐந்து லட்சம் செலுத்தினால் கனடாவுக்கு அழைத்துச் செல்வதாக யாரோ அவனிடம் சொல்ல, அதற்குத்தான் தயாராகினான் அவன். ஐந்து லட்சங்கள் செலுத்தி கனடா பூமியினை அடைந்து கொள்ளலாம் இலேசாக. ஆனாலும் அந்த ஐந்து லட்சங்களும் கிடைத்திடுமா இலேசாக வறியவனுக்கு...?

"இப்ப எனத்தியன்வா செய்தது..." ஆழ்ந்த சிந்தனையில் குளித்துக் கொண்டிருந்த இம்ரானைப் பார்த்து ஸமீரா கேட்டாள்.

"எனக்கும் ஒன்டும் வெலங்கல்லவா... வாப்பாட்டச் செல்லிப் பார்த்த... அவருக்கிட்டயும் சல்லியில்லயாம்... பைத்தியம் புடிச்சியமாதி ஈச்சிவா..."

பல நிமிடங்கள் மௌனம் இருவரிடமும். இம்ரானைப் பார்க்கப் பாவமாய் இருந்தது ஸமீராவுக்கு. அவனைப் பார்த்தால் எப்படியாவது வாழ்வில் முன்னேறிவிட துடிப்போடு இருப்பதாகத்தான் தெரிந்தது அவளுக்கு. தன் வருங்காலக் கணவனுக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டுமெனத் துடித்தாள். இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதற்கும் அவள் இப்போதே தயாரானாள். குடும்பத்து எதிர்காலம் சிறந்து விளங்க கணவனது பொருளாதாரம் மிக முக்கியமென்பதனைச் சொல்லிக் கொடுக்க அவள் சின்னப் பிள்ளையில்லையே இப்போது...!

இர்பானுக்குப் பைத்தியம் பிடித்தது போல, ஸமீராவுக்கும் பைத்தியம் பிடித்தது. ஒருவரது பைத்தியம் இன்னொருவருக்குத் தாவ வேண்டுமானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முக்கிய கூறாக பிடிப்பென்னும் காதல் மட்டுமே இருக்க முடியும். ஸமீராவுக்கும் யோசனை ஆழ்ந்து விட்டது.

"பயப்புட வேணாம்... அல்லாஹ் நிச்சியான் எல்லாத்துக்கும்... எனக்கிட்ட கொஞ்சம் சல்லி ஈச்சி... அத நான் தாரன் ஒங்களுக்கு..." ஸமீரா அப்படிச் சொன்னதும் புருவங்களை உயர்த்தி ஆச்சரியத்தில் பார்த்தான் இர்பான். 'ஸமீராவிடம் பணமா...? அதுவெப்படி...? வங்கிகளைக் கொள்ளையடிப்பவள் அல்லவே அவள்...?'

"எனக்கிட்ட கொஞ்சம் நக ஈச்சி... இருவது பவ்ன் மட்டீச்சி... அத வித்து நீங்க சல்லியெடுங்கோ..."

எதுவொன்றையும் அலட்டிக் கொள்ளாத உணர்வோடு சொல்லி முடித்தாள் ஸமீரா. இம்ரானுக்கோ தான் கனவு காண்பது போன்ற ஒரு பிரம்மை. ஸமீராவின் வார்த்தைகளை அவனால் ஜீரணித்துவிடக் கூட முடியவில்லை. அவளுக்குள் தன் மீது இப்படியொரு காதல் முற்றி விட்டதா...? இதயம் இலகி அழுகை கண்களருகே வந்து சேர்ந்தது இம்ரானுக்கு.

ஸமீராவின் வார்த்தைகளை இம்ரான் எவ்வளவுதான் மறுத்து வேண்டாமென்றாலும் ஸமீரா விடுவதாயில்லை. 'சொத்துக்களை மூலதனமாக வைத்து முன்னேறி விட்டால் மீண்டும் அவைகளை இலகுவாக சம்பாதித்துக் கொள்ளலாம்' என்றாள் ஸமீரா. அது மட்டுமில்லாமல் தன்னை அவனது மனைவியாகப் பார்க்குமாறும் அவள் சொல்லிக் கொண்டாள். என்ன நடந்தாலும், அவனது பக்கத்தில் தான் தொடர்ந்தும் இருப்பதாகவும் சொல்லிக் கொண்டாள்.

ஸமீராவைக் கட்டியணைக்க வேண்டும் போலிருந்தது இம்ரானுக்கு. தன்னைப் பற்றி யாருமே கண்டு கொள்ளாத போது, தன்னைப் பற்றிக் கவலைப்பட ஒரு மனிதமிருப்பதைக் கண்டு அவனது கண்கள் மீண்டும் கலங்கின.

******

கிட்டத்தட்ட இரண்டு நாள் பயணத்தில், அதிக களைப்பினை உள்வாங்கி, இலங்கையைப் பிரிந்து வந்த கவலையோடு, பக்கத்தில் யாருமேயற்ற நிலைமையினை உணர்ந்து கனடா தலைநகர் 'டொரொன்டோ'வினை வந்தடைந்திருந்தான் இம்ரான். கனடா மண்ணை மிதிக்க வேண்டுமென்கின்ற அவனது கனவு நனவான நாளை ஒரு போதும் மறக்கவே மாட்டான்.

***'கனடா நாடு என்னவோ கொடி கட்டிப் பறக்கின்ற அழகான நாடுதான். ஆனாலும் இலங்கையிலிருந்து அங்கு பயணிக்கின்ற நேர அளவினைப் பற்றி சிந்தித்தால்தான் கனடா நாட்டையே வெறுக்க நினைப்பு வரும்...'***

***இர்ஷாத் ஹஸன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நண்பர்கள் அப்படிக் கூறியதை சரியென்று ஒப்புக் கொண்டு விட்டான் இம்ரான் தற்போது.

இம்ரானை வரவேற்க அவனது சில நண்பர்கள் வந்தாலும், மானசீக முறையில் தனிமையை உணர்ந்து தவித்தான். ஸமீராவைப் பிரிந்து வந்த வேதனையும் அவனைத் தொடர்ந்தும் வாட்டியது.

அவன் எப்படி கனடாவினை வந்தடைந்தான் என்பது அவனுக்கே புரியவில்லை. ரூபா ஐந்து லட்சத்தினை செலுத்தி எங்கோவொரு நாட்டுக்கு விமானத்தில் பயணித்து வந்தான். அங்கிருந்து படகொன்றின் மூலம் கனடா நாட்டின் கரையோரப் பகுதியொன்றை அடைந்தான். அங்கிருந்து பல மணித்தியாளங்கள் வேனொன்றில் பயணம் செய்து தலைநகரினை அடைந்திருந்தான். சுருக்கமாகச் சொல்லப் போனால் சட்ட ரீதியற்ற முறையில் கனடாவுக்குள் பிரவேசித்திருந்தான்.

இம்ரானின் கனடா பயணத்திற்கான அஸ்த்திவாரப் பங்களிப்பே ஸமீராதான். தன் தாய்க்கும் தந்தைக்கும் தெரியாமல் தன்னிடமிருந்த இருபதுக்கும் மேற்பட்ட சவரன் தங்க நகைகளை விற்று பணத்தினைப் பெற்றுக் கொள்ள வழிவகைகள் செய்திருந்தாள். இம்ரானின் தந்தை ஸனூன் நானா, 'இவற்றுக்கெல்லாம் உனக்குப் பணம் எப்படி...?' என்று கேட்ட போது, 'பணத்தினை இப்போது செலுத்த வேண்டியதில்லை; கனடா சென்று சம்பாதித்து செலுத்திக் கொள்ளலாம்' என்று மழுப்பி விட்டான் இம்ரான்.

ஒரு பாடு கனடாவுக்கு வந்தாயிற்று. இம்ரான் எப்படித் தொழில் புரியப் போகின்றான்...? என்ன தொழில் புரியப் போகின்றான்...? என்பவைதான் 'நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி' கேள்விகள்.

கனடா மண்ணைத் தொட்டதும் தனது கடவுச்சீட்டினை எரித்து இல்லாமலாக்கி விடுவது அவனது முதல் சோலி. அப்படிச் செய்து விட்டு தன்னையோர் இலங்கை அகதியாகக் காட்டிக் கொள்வது இரண்டாவது வேலை. தன்னை அகதிகளில் ஒருவனாகக் காட்டிக் கொள்ள இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கெதிராக இடம்பெற்ற போர் அவனுக்குதவியாகவும் இருந்தது. அகதி என்கின்ற அடையாளத்தினைப் பயன்படுத்தி கனடா அரசாங்கத்தின் அகதிகளுக்குள்ள பயன்பாடுகளை அடைந்து கொண்டு, ஒரு தொழிலைப் பெற்றுக் கொள்வது அவனது கடைசித் திட்டம்.

அகதிகளாக இருப்பவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கி, தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி, தொடர்ந்தும் அவர்கள் சில வருடங்கள் நாட்டில் தரித்து நின்றால், குடியுரிமையையும் வழங்கி கௌரவிக்கின்ற அழகான நாடுகளுள் ஒன்றுதானாம் கனடா நாடு. சில பொழுதுகளில் அகதிகளாக வாழும் மக்கள், கனடா நாட்டின் குடிமகன்களைவிட அரசாங்கத்தின் சலுகைகளைப் பெற்றுக் கொள்வது பொறாமை கொள்ளச் செய்கின்ற விடயமாகக் கூட கனடா நாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமக்களைத் தள்ளி விடுமாம். நல்ல சலுகைகள் பெற்று கனடாவில் கை நிறைய சம்பாதிக்கலாம் என்பது உண்மைதான். ஆனாலும் எங்கு சென்றாலும் கஷ்டப்படாமல் காசு பணம் சம்பாதிக்க முடியாதென்பது அதனையும் விட பல மடங்கு உண்மைதான்.

அதனால்தான் மக்கள் பலரும் சொல்வார்கள்... ***'கனடாவில் பிச்சையெடுத்தால் கொழும்பில் காணி வாங்கி வீடு கட்டலாம்; ஆனால் இலங்கையில் பிச்சையெடுத்தால் கனடாவுக்குச் செல்ல விமான டிக்கட்கூட வாங்க முடியாது...'*** உண்மைதானே...!

இரண்டு மாதங்கள் பல கஷ்டங்களை அனுபவித்தான் இம்ரான் டொரன்டோ நகரில். கொடுத்த ரூபா ஐந்து லட்சங்களுக்கும் கனடா மண்ணை மிதிப்பதற்கு பாக்கியம் கிடைத்தாலும், பலரும் சொன்ன விதமாக அந்நாடு இம்ரானுக்கு சுவர்க்கமாக மாறியிருக்கவில்லை இன்னும். எப்படியோ நல்ல நண்பர்கள் அவனுக்குக் கிடைத்தது கொஞ்சம் ஆறுதலாகவும், வழி காட்டுதலாகவும் அமைந்தது.

இலங்கையில் ஸமீராவும் அவனது நிலைமைகள் கண்டு நொந்து போனாள். வாரமொரு முறை அவனுக்காக நோன்பு பிடித்து துஆச் செய்தாள். ஒவ்வொரு தொழுகையிலும் தன் தாய் தந்தைக்காக வேண்டிக் கொண்டிருந்தவள், தன் கணவனுக்கு(???) முன்னுரிமை கொடுக்கலானாள். ஒவ்வொரு நாளும் இலங்கையில் பேசிக் கொண்டிருந்தவர்கள், வாரத்துக்கு இருமுறை மட்டுமே இப்போது பேசிக் கொண்டார்கள். தொலைபேசி அழைப்புக்கான கட்டணங்களைக்கூட தொழில் கிடைக்கும் வரை சேமித்துக் கொள்வதில்தான் இம்ரான் அக்கறை காட்டினான். பல சந்தர்ப்பங்களில் ஸமீராதான் தன் தந்தையின் தொலைபேசியிலிருந்து களவில் அவனோடு பேசுவாள்.

சரியாக இரண்டு மாதங்களின் பின்னர்தான் இம்ரானுக்கு வேலை கிடைத்தது. வேலை கிடைத்தது என்பதனைவிட வேலைகள் கிடைத்தன என பன்மையாகக் கூறலாம். காலை ஆறு மணி முதல் பத்து மணி வரை சில்லரை வியாபாரத் தளமொன்றில் நான்கு மணி நேரம் வேலை பார்ப்பது. அதன் பின்னர் பதினொரு மணி முதல் மாலை ஐந்து மணி வரை சிற்றுண்டிச்சாலையொன்றில் ஆறு மணி நேரம் வேலை பார்ப்பது. அதன் பின்னர், ஆறு மணி முதல் இரவு பத்து மணி வரை இரவு விடுதியொன்றில் நான்கு மணி நேரம் வேலை பார்ப்பது. இப்படி ஒரு நாளைக்கு பதினான்கு மணி நேரம் உழைப்பது அவனது விதியாக அமைந்தது. இப்படி உழைத்தால்தான் ஏதாவதொன்றை சேமித்து வைக்கலாம் என்பதனை அவனது பெரும்பாலான நண்பர்கள் மூலம் கண்டு தெரிந்து கொண்டான் அவன்.

பகல் சாப்பாட்டுக்குப் பிறகு 'சுக்குக் கோபி' குடித்து விட்டு 'அஸ்ர்' தொழுகை நேரம் வரைக் குட்டித் தூக்கம் போட்டுப் பழகிப் போன இம்ரானுக்கு, இயந்திர வாழ்க்கை கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் இலட்சியங்கள் அக்கஷ்டங்களை மறைத்து விட்டன. எப்படியாவது வாழ்வில் முன்னேறுவதுதான் அவனது ஒரேயொரு குறிக்கோள்.

நாட்களது சுழற்சியில் கடுமையான வேலைப்பளுவுக்குள் சிக்கியிருந்தான் இம்ரான். கனடா கலாச்சாரங்கள் ஒரு வகையிலும் இலங்கையுடன் ஒத்துப் போகவில்லை. தினமும் ஐந்து நேரம் ஒலிக்கின்ற 'அதான்' ஓசை கேட்டுப் பல நாட்களாகி விட்டன. வெள்ளிக்கிழமை ஜூம்ஆக் கடமையினைக்கூட நிறைவேற்ற பல மைல் தொலைவிலுள்ள பள்ளிவாயலைத் தேடிச் செல்ல வேண்டியிருந்தது. மதுவும் மாதும் நிறைந்த சூழல் அவனுக்குத் தலையிடியாகவும் மாறி விட்டது.

கனடா வாழ்க்கையில் முதல் வருடத்தினைச் செலவிட்டான் இம்ரான். ஸமீராவின் காதலோடும் கனடா நாட்டுச் சூழலோடும் கழிந்த நாட்கள் மிக மிக அவசரமாகச் சென்றன. கனடா வந்த புதிதில் அவன் பட்ட கஷ்டங்கள் எல்லாம் ஓரளவு தீர்ந்திருந்தன. ஸமீராவின் ஐந்து லட்சங்களையும் திருப்பிக் கொடுக்க முடியுமாகி விட்டது அவனுக்கு. ஒரு வருடத்துக்கு முன்னர் தானெடுத்த தங்கத்தின் பெறுமதியை ஒரு வருடத்தின் பின்னரான பெறுமதியோடு ஒப்பிட்டுக் கடனைத் தீர்த்தான் நாகரிகமாக.

இம்ரான், ஐந்து லட்சத்துக்குப் பதிலாக ஆறு லட்சத்தினை அனுப்பியிருந்தது ஸீரையா உம்மாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அப்பொழுதுதான் ஸமீரா தன் நகைகளை அவனுக்குக் கொடுத்து உதவியதைச் சொன்னாள். தங்களிடம் சொல்லாமல் கொடுத்ததற்காக ஸமீராவை நீண்ட நேரமாகக் கடிந்து கொண்ட ஸீரையா உம்மா, நகைகள் அனைத்தும் ஒரு வருடத்துக்குள் பத்திரமாகக் கிடைத்து விட்டதை நினைத்து கொஞ்சமாக ஆறுதல் பெற்றாள். நடந்த விடயத்தினை வாப்பாவிடம் மறைத்து விடுமாறும் ஸமீராவைக் கேட்டுக் கொண்டாள் ஸீரையா உம்மா.

இந்த ஒரு வருட காலத்துக்குள் ஸமீராவும் உயர்தரப் பரீட்சையினை முடித்து பெறுபேறுகளையும் பெற்றிருந்தாள். பல்கலைக்கழகம் நுழைவதற்குத் தகுதிகள் இல்லாவிட்டாலும், நல்ல பெறுபேற்றினைப் பெற்றாள் அவள். இதனையும்விட நல்ல பெறுபேற்றினைப் பெற்றிருக்கலாம் காதல் மட்டும் அவளுள்ளத்தில் இல்லாமல் இருந்திருந்தால்.

நாட்களாகக் கடந்து சென்ற காலம், வருடக் கணக்கில் கழிய ஆயத்தமானது. ஸமீராவின் இருபத்தியொறாவது வயதில் வரண் பார்க்கும் படலத்தினை துவக்கி விட்டார் ஸமீராவின் தந்தை ஸீப்யான் நானா. இம்ரான் மீதான அவளது காதல் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை. ஸீரையா உம்மா ஸீப்யான் நானாவிடம் பக்குவமாக எடுத்துச் சொல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா மாப்பிள்ளை என்பதனால் அவரும் ஒத்துக் கொண்டார். மாப்பிள்ளை தேடும் பணி அவருக்கு இல்லாமல் போய் விட்டதோ...!

தினம் தோறும் தொலைபேசியில் பேசிக் கொள்வார்கள் இம்ரானும் ஸமீராவும். 'ஸ்கைப்' வசதிகளெல்லாம் தற்போது வந்திருப்பதனால் முகங்களைப் பார்த்தே பேசிக் கொள்வார்கள். சாப்பாட்டுக்கு முன்னால் இரண்டு மாத்திரைகள் பின்னால் இரண்டு மாத்திரைகள் நாளொன்றுக்கு மூன்று தடவைகள் எடுக்க வேண்டுமென்று மருத்துவர்கள் குறிப்புக் கொடுப்பது போல, 'வாட்ஸ்அப்'பில் காலை, பகல், இரவு என குறைந்தது தத்தமது பத்து போட்டோக்களையும் ஏனைய விடயங்களையும் வேறு பகிர்ந்து கொள்வர்.

என்றாலும் காதலிக்கின்ற நேரங்கள் இம்ரானிடம் குறைந்து கொண்டே வந்தன. அதற்குக் காரணமாக தன் வேலைப்பளுவினை மேற்கோள் காட்டிக் கொள்வான் ஸமீராவிடம். உண்மைக் காதல் எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டுதான் செல்லும். பாசாங்குக் காதலும் எப்பொழுதும் அதிகரித்துச் செல்வது போன்றிருந்தாலும், குறித்த நேரத்தில் குறைந்து விடும். இம்ரான் பாசாங்கு செய்கின்றானா...? அல்லது ஸமீரா மட்டும்தான் உண்மையாகக் காதலிக்கின்றாளா...?

இம்ரானின் இலட்சியம் என்னவென்று நன்றாய்த் தெரியும் ஸமீராவுக்கு. ஐந்து வருடங்கள் தொடர்ந்து கனடாவில் வசித்து பிரஜாவுரிமை பெற்றதன் பின்னால் நாடு வந்து செல்வதுதான் அது. அதற்கிடையில் அவனாக இலங்கை வந்து செல்ல நினைத்தாலும் அது ஒரு போதுமே நடக்காது. அகதி அந்தஸ்த்தில் இருப்பதனால் இலங்கை வந்து மீண்டும் செல்லக் கூடிய வழிவகைகள் அவனிடம் இல்லை. இலங்கையில் அகதியாய் இருந்தால் யாரும் பொருட்படுத்துவதில்லை; சமூக அங்கீகாரம் கொடுப்பதுமில்லை. வெளிநாடுகளில் அகதியாய் இருந்து விட்டால், அவர்களுக்கு வீட்டு மாப்பிள்ளைப் பட்டமும் 'போனஸா'கக் கொடுத்து கௌரவிப்பார்கள். இதுதானடா உலகம்...!

******

ஸமீராவுக்கும் இருபத்து நான்கு வயதாகியது. இம்ரான் கனடா சென்று ஐந்து வருடங்களை எட்டுவதற்கு இன்னும் ஓரிரு மாதங்களே இருந்தன. இம்ரானை இன்னும் எதிர்பார்த்தவளாக வீட்டுக்குள் அழகிய கனவுகளோடு முடங்கிக் கிடந்தாள் ஸமீரா. திருமணம் முடிக்கும் வயதில் அவளது தங்கச்சி ஸாதியாவும் இருந்தாள். அக்காவை வைத்துக் கொண்டு தங்கைக்கு திருமணம் முடித்துக் கொடுப்பது நல்ல விடயமாகக் கூடப் படவில்லை ஸீப்யான் நானாவுக்கு. குறைந்தது ஸமீராவின் திருமணப் பேச்சினை இம்ரான் வீட்டாரோடு பேசி முடித்து விட்டாலாவது ஸாதியாவின் திருமணத்தினைப் பற்றி சிந்திக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸொரயா... நான் மகள்ட விஷயத்தப் பத்தி ஸனூனோட பேசிப் பாக்கவா...? இதுக்கங்காலயும் பேசாட்டியும் வேலில்லயேன்..." ஸீப்யான் நானா தன் மனைவியோடு அன்றிரவு சம்பாஷனை மேற்கொண்டார். ஸீரையா உம்மாவுக்கும் இனிமேலும் இதனைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லதாகப் படவில்லை. இம்ரானின் உம்மா ஜன்னாவுக்கும் இருவரது காதல் பற்றியும் தெரியும் எனவும் கூறினாள் தன் கணவனிடம்.

மறுநாளே பொழுது விடிந்ததும் ஸனூன் நானாவை ஸீப்யான் நானா சந்தித்துப் பேசி விவகாரத்தினைச் சொல்ல, அப்போதுதான் ஸனூன் நானாவுக்கும் விடயம் தெரிய வந்தது முதன் முதலாய்.

"ஓ அப்புடியா செய்தி...? ரெண்டும் அமுக்கு மூட்ட மாதி இருந்து கொண்டு லவ்வா பண்ணீச்சியது...?" அதிர்ச்சி கலந்த சிரிப்போடு கூறிய ஸனூன் நானா, தன் மனைவியுடன் கலந்து பேசிவிட்டுச் சொல்வதாகச் சொல்லிக் கொண்டார்.

'இனிமேலும் கலந்தாலோசித்து என்னதான் சொல்வது...? வேண்டாமென்றா சொல்லிவிட முடியும்...?' யோசனையாகி விட்டது பெண்ணைப் பெற்ற ஸீப்யான் நானாவுக்கு.

எப்படியோ அன்றைய நாளிரவு ஜன்னாவிடம் ஸனூன் நானா விஷயத்தைக் கேட்க, மாப்பிள்ளையைப் பெற்ற தாய் கொஞ்சம் வீம்பாகத்தான் இருந்தாள். ஐந்து வருடங்களில் தன் பிள்ளை நிறையப் பணம் சம்பாதித்து விட்டதானது ஜன்னாவை சிறிதளவு தலைக் கணத்துக்கு உள்ளாக்கியது. ஸமீரா மீது விருப்பமற்றவளாகப் பேசினாள் அவள்.

"ஸமீரா நல்ல குட்டிதான்... அப்பவும் அவங்க ஒருஜாதி எலக்க மனிசரு... அவங்கட குடும்பமும் அவ்வளோ நல்லமில்ல... லவ்வும் கத்திரிக்காவும்... எங்கட இம்ரானுக்கு இன்னும் வயசீச்சென்டு செல்லீடுங்கோ..." ஜன்னா வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டே சென்றாள்.

"இங்க பாருங்கோ ஜன்னா... எங்கட மகனும் அவளும் சேர்ந்து லவ் பண்ணி இப்ப அஞ்சு வருஷத்துக்கும் மேலாகிய... லவ் பண்ணத்துக்கு ஸ்டார்ட் பண்ணின நாளிருந்து ஓங்களுக்கும் அது தெரியும்... அத அப்பவே கிள்ளிப் போடாம இப்ப அவிசப் பேச்சிப் பேச வர வேணாம்..." ஸனூன் நானா நியாயமாகப் பேசினார். நிறைய பெண்கள் நியாயமாக சிந்திப்பவர்களாக இல்லாமல் இருப்பதனால்தானே நரகத்துக்குச் செல்கின்றார்கள்...!

"ஓங்களுக்கொன்டும் தெரியா இதப் பத்தி... நான் பாத்துக் கொளியனே எல்லாத்தயும்..."

"ஜன்னா... இங்க வாங்க செல்ல... தேவில்லாத பிரச்சனயப் போட்டுக் கொள்ள வேணாம் அன்ன செல்லீட்ட... அடுத்தூட்டு மனிஷருக..."

*இர்ஷாத் ஹஸன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் பிள்ளைகளைப் பெற்றெடுத்த நிறையத் தாய்மார்களுக்குப் பெருமை அதிகம்தான். ஏதோ வானத்திலிருந்து நேரடியாக விழுந்த குழந்தைகளைப் போலவும் தங்கத்தினால் செதுக்கப்பட்ட குழந்தைகளைப் போலவும் எண்ணி விடுகின்றார்கள் அவர்களை. என்ன கொடுமடா இது...?

ஸீப்யான் நானாவோ மறு புறத்தில் கொஞ்ச ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார். ஸீரையா உம்மாவிடம் விடயத்தினைக் கக்கினார்.

"இது சரிவார கல்யாணம் மாதி வெளங்கல்ல ஸொரயா..." பெண்ணின் தந்தைக்கென்று பொறுப்பான அலாதிப் பெருமூச்சொன்று இருக்குமே... அதனை இழுத்து விட்டார் ஸீப்யான் நானா. விடயங்களைக் கேட்ட ஸீரையா உம்மா, ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லையெனவும், யாருக்கு விருப்பமில்லா விட்டாலும் இம்ரான் ஒரு நாளும் தங்கள் மகளைக் கைவிடப் போவதில்லையெனவும் கொஞ்சம் நீண்ட நேரமாக சமாதானம் செய்தாள். அமைதியாகக் கேட்டு விட்டு 'சாரப் புட்டுவத்'தில் சட்டையை அகற்றி, கால்களை நீட்டி சாய்ந்து கொண்டார் ஸீப்யான் நானா.

ஸமீராவும் மறுபுறத்தில் கவலையாக இருந்தாள். தன்னால் தன் தங்கையின் திருமணம் பிற்போடப்பட்டு விடுமோ எனப் பயந்தாள் அவள் மிகுதியாக. அவளது வயதில் அவளது நண்பிகள் அனைவருக்கும் திருமணமாகி குழந்தைகளை வேறு பெற்றுக் கொண்ட நிகழ்வுகளானது அவளது அடுத்த கவலையாக இருந்தது. சீனங்கோட்டையில் இருபத்தைந்து வயதுப் பெண்கள் குறைந்தது இரு பிள்ளைகளின் தாய்களல்லவா...! எல்லாவற்றையும்விட இம்ரான் இலங்கைக்கு வருகின்ற உத்தேசங்கள் பற்றி கொஞ்சமேனும் கணக்கில் எடுக்காமல் இருப்பது பெருத்த கவலையாக மாறியிருந்தது அவளுக்கு இன்னும்.

"எப்போக்கன்வா வார...?" இப்படி ஆயிரம் தடவைகள் கேட்டிருப்பாள் ஆறு மாத காலத்துக்குள்.

"அஞ்சு வருஷம் பிந்தினொடனே 'ஸிடிஸன்ஷிப்' கெடச்சியாம்... அதுக்கு இன்னும் கொஞ்ச நாள்தானே ஈச்சி... அதுக்குப் பொறகு கவலப் படத் தேவில்ல... கொஞ்சம் பொறுங்கே..." இம்ரானின் பதில் எப்போதும் இப்படித்தான்.

இம்ரான் நான்கு வருடங்களில் அவனால் நினைத்தும் பார்க்க முடியாதளவுக்கு பணக்காரனாகியிருந்தான். கோடீஸ்வர கோட்டுக்குள் வராவிட்டாலும் குறைந்தது லட்சாதிபதி 'போர்டரை'த் தாண்டியிருந்தான். பணமும் கிட்டத்தட்ட நாற்பது லட்சங்கள் வரை சேமித்திருந்தான். எல்லோரும் பொழுது போக்கிற்காக கிரிக்கட் விளையாடுவார்கள். அல்லது உதைப்பந்தாட்டம் விளையாடுவார்கள். அல்லது 'டிக்போல்' சரி விளையாடுவார்கள். ஆனால், அவனது பொழுது போக்குகளோ பணம் சேமிப்பதாக மட்டும்தான் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸமீரா ஒவ்வொரு நொடிப் பொழுதும் இம்ரானது ஞாபகமாகவேயிருக்க இம்ரானோ கொஞ்சம் மாற்றம் பெற்றிருந்தான். சிகரெட் பழக்கம் கூட இல்லாதிருந்தவன், மதுப் பக்கம் கொஞ்சம் சென்று வரலானான். அடுத்த வீட்டு பீபி தாத்தாவைக் கூட ஏறிட்டுப் பார்க்க வெட்கப் படுகின்றவன், கனடா மங்கையர்களோடு ஒட்டி உறவாடப் பழகிப் போனான். கனடா நாட்டுச் சூழல் அவனை வெகுவாக மாற்றியிருந்தது. ஆனால் அவனது மாறுதல்கள் பற்றி யாருக்கும் தெரியவில்லை இலங்கையில் குறிப்பாக ஸமீராவுக்கு. எல்லாத் தாக்கங்களும் சூழல்களால்தான் ஏற்படுகின்றன என்பது எவ்வளவு பாரிய உண்மை...! அதற்குத்தானே இஸ்லாம்கூட சூழலை அழகுபடுத்தி விட்டு தண்டனைகளை அமுல்படுத்துகின்றது...!

***'பன்றியுடன் கன்று சேர்ந்தால் அதுவும் அசுத்தங்களைத் திண்ணும்'*** என்பது போல, இம்ரானின் கதையும் கொஞ்சம் மாறி விட்டது எனலாம். எட்டுப் புறத்திலும் ஒலிக்கின்ற ஐந்து நேர பாங்கோசை... உண்மை இஸ்லாத்தினைப் படிக்கக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்கள்... வெட்கப்படுகின்ற பெண்கள்... கண்ணியமிக்க ஆண்கள்... நற்குணம் கொண்ட அயலவர்கள்... இன்பத்திலும் துன்பத்திலும் தோள் கொடுக்கின்ற நண்பர்கள்... சீனங்கோட்டையில் கிடைக்கின்ற இப்புதயல்கள் கனடாவில் கிடைக்குமா, என்ன...? அல்லாஹ்வுடனான தொடர்புகளை இயன்றளவு தக்க வைத்துக் கொண்டு, மனிதனாக வாழ முடியுமான சிறந்த தளங்களில் சீனங்கோட்டையும் ஒன்றுதான் என்பதனை வெளிநாட்டில் வசிப்பவர்கள் உணராமல் இருப்பதில்லை என்றும். அதற்காக வெளிநாட்டில் வசிக்கின்ற அனைவருமே பன்றியுடன் சேரும் கன்றுகளாக மாறிவிடுவதில்லை. ஒரு சிலர் என்றும் நல்ல கன்றுகள்தான் எங்கு சென்றாலும்...!

******

இன்னுமிரு வருடங்கள் நிமிட வேகத்தில் சென்றுவிட வாழ்க்கையில் இன்னும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன எல்லோருக்கும். இருபத்தியேழு வயதுக் கன்னியானாள் ஸமீரா. ஸமீராவின் தங்கை ஸாதியாவோ, இரு குழந்தைகளின் தாயானாள். ஸீரையா உம்மா நாற்பத்தியாறு வயது இளக் கிழவியானாள். ஸீப்யான் நானாவோ அவ்வருடம் தனது ஐம்பதாவது வயதில் மரணித்திருந்தார்.

இம்ரானின் வரவை எதிர்பார்த்து ஏமாந்து போன ஸீப்யான் நானாவும், வேறு வழியில்லாமல் ஸமீராவை வைத்து விட்டு ஸாதியாவுக்கு திருமணம் முடித்து வைத்தார். திருமணப் பேச்சுவார்த்தை இம்ரான் - ஸமீரா விவகாரத்தில் முடிவடையாமல் அப்படியே இருந்த படியால், ஊர் மக்கள்கூட ஏளனமாக பேசிக் கொண்டார்கள். ஊர் மக்களது வாயை சீமெந்து போட்டாலும் அடைக்க முடியுமோ...?

நான்கு வருடங்களுக்கு முன்னால் எதை இம்ரான் சொன்னானோ அதையேதான் இன்னும் சொல்லிக் கொண்டிருந்தான். பல 'எப்பீல்'கள் செய்தும் பிரஜாவுரிமை கிடைக்கவில்லையாம் அவனுக்கு. 'இப்பொழுது கிடைத்து விடும்; அப்பொழுது கிடைத்துவிடும்' எனச் சொல்லிச் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் ஏமாற்றத்தை ஸமீராவுக்கு விதைத்துக் கொண்டேயிருந்தான் அவன். தன் தந்தை இறந்த நேரம்கூட ஏதோ 'கோல்' பண்ணிப் பேச வேண்டுமென்பதற்காக சில நிமிடங்கள் பேசிவிட்டு வைத்து விட்டான் தொலைபேசியை. இலங்கையிலிருந்து ஸமீராவைப் பிரிந்து சென்ற இம்ரானைப் போலில்லை அவன் இப்போது.

"போதும் இப்ப வந்துடுங்கோ... இதுக்கு மேலயும் என்னால தாங்கேலவா... இங்க வந்து எனத்தியாலும் செய்யப் பாருங்கோ... 'ஸிடிஸன்ஷிப்' ஒன்டும் தேவில்லவா..." காலில் விழாத குறை ஸமீரா. 'எவ்வளவு காலமானாலும் உனக்காகக் காத்திருப்பேன்...' என ஏழு வருடங்களுக்கு முன்னர் இம்ரானுக்கு எழுதிய காதல் கடிதமொன்றில் ஸமீரா எழுதியிருந்தாலும், அது ஏட்டுக்குத்தான் பொருத்தமாயிருந்ததே தவிர நிஜ வாழ்வுக்கு சற்றும் பொருத்தமற்றதாகவே இருந்தது. 'கணவன் காணாமல் போனால், மனைவி மறுமணம் முடிக்க வேண்டுமானால் எழுபது வருடங்கள் காத்திருக்க வேண்டுமென' சில 'மத்ஹபு' புத்தகங்களில் சில விஷமிகள் எழுதி வைத்திருப்பது போன்று ஸமீராவினால் காத்திருக்க முடியாது அன்பர்களே...!

'ஸமீரா... என்ன எதிர்பாத்துக் கொண்டு நிச்ச வேணாம்... வேற தாரு சரியப் பாத்து கல்யாணம் முடிச்சுக் கொங்கோ...' இம்ரானுக்கு வாயில் வந்த வார்த்தைகள்தான் அவை. ஆனாலும் அவைகளை ஸமீராவின் முன்னால் மொழியப் பயப்பட்டான். அப்படி அவனால் இலகுவாக மொழிய முடியுமா என்ன...?

கனடாவில் இம்ரானின் வாழ்வு சிறக்கத் தொடங்கியிருந்தது. மாம்பழ 'ஸீஸனி'ல் மாம்பழங்கள் பூத்துக் குழுங்குவது போல, அவனது வாழ்வு அறுவடைக் காலத்தினை பொருளாதாரத்தில் சந்தித்திருந்தது. இலங்கையிலிருக்கும் தன் பழைய வீட்டினைத் தரை மட்டமாக்கி, புது வீடொன்றினை இரண்டு மாடிகளாக எழுப்பியிருந்தான். அவனது 'ஸ்டைல்' மட்டுமன்றி அவனது வீட்டார் 'ஸ்டைலு'ம் நன்றாகவே மாறியிருந்தது. பசி வந்தால் மட்டுமா பத்தும் பறக்கும்...? இல்லை பணம் வந்தாலும் அவை நூறாகிப் பறக்கும்தான் பலருக்கும்...!

ஆனாலும் அவனது காதலுக்குத்தான் இன்னும் பச்சைக் கொடியில்லை ஜன்னாவிடம். ஜன்னாவின் பச்சைக் கொடி எப்படிப் போனாலும், இம்ரானின் நிலைமை ஸமீராவைக் கைப்பிடிக்கும் வகையில் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். தன் தாயிடம் அனுமதியில்லாத படியால், அதனை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் நினைத்தான் இம்ரான்.

'மில்லி மில்லி செக்கன்'களில் மின்னல்கள் வந்து மறைவது போல, இன்னும் இரண்டு வருடங்கள் கழிய, பத்து வருடங்களாகிப் போனது ஸமீராவின் காதலுக்கு. இம்ரான் - ஸமீரா காதலில் முறுகல் நிலை ஏற்படவில்லை. ஆனால், முறுகல் நிலையை இம்ரான் தோற்றுவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***'நன்றி கெட்ட நாய்...'*** என்று பரவலாக மனிதர்களைப் பார்த்து ஏசிப் பேசுவதுண்டு. அந்த வார்த்தைகள் இம்ரானுக்கென்றே ஏற்படுத்தப்பட்ட வார்த்தைகளோ...! நாய்கள் எப்போதும் நன்றி மறப்பதில்லை. மனிதர்கள்தான் நாய்கள் போன்று குறைக்கா விட்டாலும், நன்றி மறக்கின்றார்கள். நன்றி கெட்டவர்களுக்கு நாயென்று சொல்வதே நாய்களுக்கு நாங்கள் செய்கின்ற அகௌரவம் அல்லவா...!

***'வாழ்வே மாயம்...!'*** சினிமாத் திரைப்பட கதாநாயகன் கமல்ஹாஸனாக மாறியிருந்தாலாவது பரவாயில்லை இம்ரான். ஒரு பெண்ணை அவள் விருப்பமில்லையென்று தெரிந்தும், தீவிரமாகக் காதலித்து, அவள் அவனை விரும்பும் போது, தனது புற்று நோய் காரணமாக, அதனை அவளிடம் காட்டிக் கொள்ளாமல், அவளை வெறுத்து விடுவதுதான் அக்கதாநாயகனின் வேடம். புற்று நோய்க்குள்ளானவனை மறந்து அவள் வாழ்வில் வேறு ஒருவனை மணந்து சுபீட்சமாய் வாழ வேண்டுமென்பதனால் அவளை வெறுத்து நடிக்கின்றான் அக்கதாநாயகன். ஆனால், இம்ரானோ ஸமீராவை நடுத் தெருவில் விட்டு விட்ட பொறுக்கியாக அல்லவா மாறி விட்டான்...!

'எமது காதலில் உம்மாவுக்கு இஷ்டம் போதவில்லை... வாப்பா எனக்கு வேறு கல்யாணம் பேசிக் கொண்டிருக்கின்றார்... உங்களைத் திருமணம் செய்து கொண்டால் எனது தாய் செத்து விட்டதாக நினைத்துக் கொள்ளவும் சொல்கின்றார்...' தொலைபேசியில் இவ்வார்த்தைகளைச் சொல்ல தைரியம் இல்லாதவன் 'வட்ஸ் அப்'பில் தூது விட்டான்.

இவற்றைக் கேட்டதும் ஸமீராவின் உள்ளம், இந்திய அரசாங்கம் விண்வெளி ஆராய்ச்சிக்காக அனுப்பிய விண்கலம் புறப்பட்டு ஐம்பது வினாடிக்குள், ஆகாயத்தில் எல்லோரும் பார்க்கும் விதமாக வெடித்துச் சிதறியது போல, பல பாகங்களாகியது. அதிர்ச்சியில் வார்த்தைகள் வரவேயில்லை. ஈரம் கொண்ட அவளது நெஞ்சம் ஒரே வினாடியில் காய்ந்து போனது. ***வாழ்வதா இல்லை சாவதா...? போவதா இல்லை வீழ்வதா...?*** புரியவில்லை ஸமீராவுக்கு. சும்மா இருந்தவளது உள்ளத்தில் காதல் விதையை நட்டு, ஆசை வார்த்தைகளைக் கூறி, 'நீ காற்று நான் மரம் என்ன சொன்னாலும் தலையாட்டுவேன்' எனச் சொல்லி, பத்து வருடங்கள் காக்க வைத்து, பத்து வினாடிகளில் வாழ்க்கையை துவம்ஷம் செய்து விட்டானே படு பாவி இம்ரான்...!

'ஸ்கைப்'பில் உறவாடிய நாளிகைகள்... தொலைபேசியில் நடைபோட்ட உரையாடல்கள்... 'எஸ்எம்எஸ்'ஸில் போட்ட நகைச்சுவைகள்... 'வட்ஸ்அப்பில்' தொடர்ந்த கவிதைகள்... இவையனைத்தும் சில வினாடிகளில் பொய்யானாலும், இம்ரானின் பல வருடங்களது திட்டமிடல்கள்தானோ...! நல்ல வேளை ஸீப்யான் நானா இயற்கையாக என்றோ மரணித்துப் போனார். இல்லா விட்டால் இந்நேரம் மாரடைப்பு வந்தே மோசம் போயிருப்பார். ஸீரையா உம்மாவும் சுருண்டு விழுந்தாள். ஸர்தியாவும் அழுது புலம்பினாள்.

***இர்ஷாத் ஹஸன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாக இம்ரான் ஸமீராவோடு பேசிய வார்த்தைகளை ஸமீராவால் இன்னும் மறக்க முடியவில்லை.

"எங்கட உம்மா எனக்கு கல்யாணமொன்டு பேசிக் கொண்டு நிச்சிய..."

"அதுக்கு நீங்க எனத்தியன் சென்ன...?"

"எனக்கொன்டுமே செல்லேலாப் பெயித்த..." ஆயிரம் கோடி ரூபாய்க்கள் மோசடி செய்த அரசியல்வாதிகள் போன்று குற்றமற்றவனாக இலகுவாக சொல்லி முடித்தான்.

காதலில் எப்போதுமே பாதிக்கப்படுபவர்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் உண்மையாகக் காதலித்தவர்கள் மட்டும்தான். ஸமீரா மட்டுமே பாதிக்கப்பட்டாள். கெஞ்சிக் கூத்தாடினாள். இம்ரானின் காதுகளில் விழவேயில்லை. அவள் மீது என்ன தவறென்றும் கேட்டாள். இம்ரானின் வாய் பதில் சொல்லவும் இல்லை. ஏன் இவ்வளவு காலமும் ஆசை காட்டி மோசம் செய்தாய் என்று கேட்டதும், அவனது மூளைக்கு ஏறவுமில்லை. அறுபது வருட காலங்களுக்குப் போதியளவில் உடம்பில் இருக்கின்ற கண்ணீரெல்லாம் அந்நாளில் அருவியாய்க் கொட்டித் தீர்ந்தது ஸமீராவிடத்தில். எதிர்காலத்தில் அவள் அழ நினைத்தாலும் கண்ணீர் வருமா என்பது சந்தேகம்தான்.

ஸமீரா காதல் போராட்டத்தினை விடவில்லை. என்ன செய்தாலும் இம்ரானை அடைந்து கொள்வதே அவளது உயிர் மூச்சாகி விட்டது. நண்பர்களை அணுகினாள். இம்ரானோடு பேசுமாறு அவர்களை வேண்டிக் கொண்டாள். ஜன்னாவிடம்கூடச் சென்று விம்மி விம்மி அழுதாள். அதற்கு அவள் சொன்ன பதில் இம்ரான் இதற்கு இஷ்டமில்லை என்பது மட்டும்தான். இம்ரானிடம் கேட்டால் தன் தாய்தான் இஷ்டமில்லையென்பான். அவனது தாயிடம் கேட்டால், இம்ரான் இதற்கு இஷ்டமில்லையென்பாள். ஆங்கிலத்தில் சொல்வது போல 'போல் பாஸ்ஸிங்' நடந்தேறியது அங்கே.

நோன்பு பிடித்து பிராத்தனைகளும் செய்தாள் ஸமீரா. ஒன்றிலும் பலனில்லை. அவளது வாழ்வுதான் கடைசியில் வீண் போனது. இருபது வயதிலிருந்து முப்பது வயது வரை தன் காதலனுக்காக என்பதனைவிட தன் கணவனுக்காக காத்திருந்த தருணங்களை சினிமாவில் மட்டுமல்ல இப்படி நிஜத்திலும் பார்க்கலாம்.

மற்றொரு வருடம் கழியவே நகையும் சதையுமாக இருந்த அயலவர்கள் கோபித்துக் கொண்டார்கள். முஸ்லிம்களின் பெருநாட்களைப் பார்த்து மின்சாரமும் நீரும் இலங்கையின் பல பாகங்களிலும் துண்டிக்கப்படுவது போல, தொலைபேசித் தொடர்புகளும் அறுந்து போயின இம்ரானின் புறத்தினால். பல போராட்டங்கள் செய்து களைத்துப் போய், சோர்வில் உட்கார்ந்து கொண்டாள் ஸமீரா. உண்டு பல நாட்களாயிற்று அவளுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்தியும் பல நாட்களாயிற்று. உறங்கியும் பல நாட்களாயிற்று. இறுதியில் இம்ரானுக்குத் திருமணமும் நிச்சயிக்கப்பட்டு விட்டது.

உலகத்தில் பெரிய தண்டனையொன்று இருக்குமானால், மனதில் சுமந்தவர்களை மறக்கடிக்க வைக்கச் செய்வதாகத்தான் இருக்க முடியும். இதயத்தில் குடியமர்ந்தவர்களை நீக்குவதும் நீக்க முயற்சிப்பதும்தான் உலகத்தில் இருக்கின்ற பாரமான தொழில்; கற்கள் உடைப்பதுமல்ல; மலைகளைச் சுரண்டுவதுமல்ல.

ஸமீராவின் வாழ்க்கை கால் பந்தானது. ஜன்னா என்கின்ற அணிக்கும் இம்ரான் என்கின்ற அணிக்குமிடையில் சிக்குண்ட உருண்டைப் பந்தாக ஸமீரா பந்தாடப் பட்டாள். ஆட்டம் சம 'கோல்' கணக்கில் முடிவடைந்ததால் இரு அணியினரும் கோப்பையைக் கைப்பற்றினர். ஆட்ட முடிவில் பந்து மட்டும் சின்னாபின்னமாகி யாருமே கேட்பாரற்றுக் கிடந்தது.

இம்ரானுக்கு ஒவ்வொரு நாளும் தொலைபேசி அழைப்பினை விடுப்பாள் ஸமீரா இன்னும். ஆனாலும் அவன் பதிலளிக்கவே மாட்டான். வேறு நம்பர்களிலிருந்து அழைப்பினைத் தொடுத்தாலும், 'உனக்கு சொன்னது புரியவில்லையா...? மீண்டும் என்னைத் தொல்லை பண்ணாதே...!' என எரிந்து விழுவான். ***'யார்தான் குயிலின் குரல் இனிமையென்று சொன்னார்களோ...? உன் குரலின் இனிமை எனக்கில்லையே என துக்கிக்கும் குயில்கள் உன் குரலைக் கேட்டால்...'*** என ஸமீராவினைப் பார்த்துக் கவிதை பாடிய இம்ரான் இப்படிக் கேட்டது எப்படித் தாக்கியிருக்கும் ஸமீராவின் மனதை...?

கல்லால் அடித்துண்டான காயங்கள் ஆறிவிடும்; சொல்லால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என்றும் அழியாதென்று முன்னவர்கள் சொன்னது முற்றிலும் உண்மையாகத் தெரிந்தது ஸமீராவுக்கு.

ஸமீரா இப்போது இம்ரானின் 'பேஸ்புக்' கணக்கில் கொஞ்சம் விளையாடிப் பார்க்கலானாள். வேறொரு பெயரில் புதிய கணக்கினை உருவாக்கி, இம்ரானின் நண்பியாகி, அவனைக் காதலிக்க முயற்சித்துப் பார்த்தாள். ஆண்களைச் சிக்க வைக்கும் பெண்களின் கைதேர்தலில் இம்ரான் விழுந்து அவளை ஸமீராவென்று தெரியாமலேயே காதலித்தான் இம்ரான். அதுவும் அவனுக்கு திருமணம் வேறொரு பெண்ணுடன் நிச்சயமாகியிருந்தும். அப்போதுதான் தெரிந்தது இம்ரானுக்கு ஐந்து முகங்களில்லை... அவனுக்கு எத்தனையோ முகங்களென்று.

முகநூலில் காதலித்து ஒரு மாத காலத்தில் ஸமீரா தன்னை அடையாளப்படுத்திக் கொண்டதும், இம்ரானின் அசடு வழிந்தது. கடைசியாக அவனது 'பேஸ்புக்கில்' எழுதி விட்டு இம்ரானை மறக்க சித்தமானாள் ஸமீரா.

***இர்ஷாத் ஹஸன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***'என்னைக் காதலித்துக் கைவிட்ட உனக்கு நன்றிகள்...! உன்னைப் பார்த்து எல்லா ஆண்களையும் தவறாக எடை போட உதவியதற்கும் நன்றிகள்...! என் பாவம் உன்னை சும்மா விடாது...! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்...! உன் வாழ்க்கையைப் பார்த்து நான் எள்ளிநகையாட நாட்களை அவசரமாக ஏற்படுத்தித் தருவான் எனது அல்லாஹ்...!***

சீனங்கோட்டைப் பெண்களது திருமண வயது சராசரியாக இருபது என்பது உலகமறிந்த விடயம். 'கூகுல்' பண்ணிப் பார்த்தாலும் அது இலகுவில் புரிந்து விடும். கொஞ்சம் கூடினால் இருபத்தி மூன்று வரை நீடிக்கலாம். ஆண்களது வயதோ சராசரியாக இருபத்தியெட்டு. கூடினால் முப்பது ஆகலாம். சரியாக பதினொரு வருடங்களின் பின்னர், இம்ரான் புதுப் பொழிவுத் தோற்றத்தோடு இலங்கையில் அவனது முப்பத்தியொறாவது வயதில் காலடி வைத்தான். பதினொரு வருட காலமாக திருமணமில்லாமல் காலாவதிப் பொருளானாள் ஸமீரா.

இம்ரானின் வீட்டில் திருமண ஏற்பாடுகள் தடல் புடலாக இருந்தது. அடுத்த வீட்டு ஸமீராவின் வீடோ சடலமற்ற மரண வீடாகக் காட்சி தந்தது. பதினொரு வருடங்களின் பின்னர் காட்சி தந்த இம்ரானை, வாசற்படியோரம் வந்து ஒழிந்து பார்ப்பதுதான் ஸமீராவின் நாளொன்றுக்குப் பத்துத் தடவை வேலை. எத்துனை மணிக்கு வீட்டிலிருந்து செல்வான்...? பகல் சாப்பாட்டுக்கு எத்துனை மணிக்கு வீட்டுக்கு வருவான்...? மீண்டும் எத்துனை மணிக்கு விளையாடச் செல்வான்...? இரவில் எத்துனை மணிக்கு வீடு வந்து சேர்வான்...? என்கின்ற கால அட்டவணையை ஸமீரா நன்கு அறிந்திருந்தாள். ஒரு தடவையாவது தன்னை ஏறிட்டுப் பார்க்க மாட்டானா...? என ஏங்குவாள். அவளை ஏறிட்டுப் பார்ப்பது ஒரு புறமிருக்கட்டும். அவளது வீட்டைக்கூட ஏறிட்டுப் பார்ப்பதில்லை. தன் முதல் இருபது வருடங்களைக் கழித்த வீட்டினை அவன் மறந்திருந்தான் இப்போது.

அவனைப் பார்க்கும் போது பொறாமையாக இருந்தது ஸமீராவுக்கு. 'கலரெ'ல்லாம் மாறிப் புதுப் பொழிவுடன் வந்திருந்தான். கனடா சென்ற போது மெலிந்திருந்தவன், கொஞ்சம் தடித்திருந்தான். அழகான மெல்லிய தாடியை கன்னங்களில் பொருத்தி அழகைக் கூட்டியிருந்தான். அவனையடையப் போகும் ருஷானாவைப் பற்றியும் பொறாமையாக சிந்தித்தாள் ஸமீரா.

ஸமீராவின் உள்ளத்தில் இன்னும் இம்ரான் மட்டுமே இருந்தான். அவள் இம்ரானுக்கு நிச்சயிக்கப்பட்ட ருஷானாவுடனும் கதைத்துப் பார்த்தாள் இரு முறைகள். ஒன்றும் பலனளிக்கவில்லை. ருஷானா என்னதான் செய்வாள்...! அவளால் பிரிதொன்றும் செய்ய முடியாது...!

திருமண நாளும் வந்தது இம்ரானுக்கு. ருஷானாவைக் கைப் பிடித்தான் அவன். அன்றிரவு ஸமீரா அழுத அழுகைகளை வானவர்கள்கூட அநியாயம் செய்யப்பட்டோர் கூட்டத்தாரது கண்ணீரோடு சேர்த்து எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருப்பார்கள். ***'அநியாயம் செய்யப் பட்டோரது துஆவுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்...'*** என்கின்ற இஸ்லாமியப் போதனையை அநேகரும் கண்டு கொள்வதேயில்லை. இம்ரானும் அதனை மறந்து விடவில்லை; ஆனால் புறக்கணித்து விட்டான்.

உண்மைதான். ஸமீரா அநியாயம் செய்யப்பட்டாள். நம்பிக்கைத் துரோகம் செய்யப் பட்டாள். வாழ்க்கையில் துவம்ஷம் செய்யப்பட்டாள். வைத்தியமற்ற பைத்தியமாக்கப்பட்டாள்.

இம்ரானுக்கு என்ன நடந்ததென்பதனை இன்று வரையிலும் யாராலும் ஊகிக்க முடியவில்லை. இலங்கையில் உள்ள போது நல்ல காதலனாகத்தான் இருந்தான். கனடா சென்றும்கூட பல மாதங்கள் நன்றாகத்தான் இருந்தான். அவனது திடீர் மாறுதலுக்கு அவனுடைய கனடா சூழல் ஒரு காரணமாக இருந்தாலும், அவனது தாயும் மறு காரணமாக இருக்கலாம். ஸமீராவை இம்ரானோடு சங்கமம் செய்ய விருப்பமில்லாமல் இருந்த அவனது தாய் அவளைப் பற்றி அவதூறாக ஏதாவது சொல்லியிருப்பாளோ...? ஒரு பெண்ணை அசிங்கப்படுத்த இன்னொரு பெண்ணால் மட்டும்தான் முடியும். எது எப்படியோ... அவனேன் ஸமீராவை வெறுத்தான் என்பது இன்று வரையில், இரண்டாயிரத்துப் பதினான்காம் ஆண்டு மார்ச் மாதம் 'ராடாரி'ல் இருந்து மறைந்து போய் இன்று வரை முகவரியற்றுப் போன மலேஷிய விமானத்தின் விடை காணாப் புதிராய் இருக்கின்றது.

பத்து வருடங்களுக்கும் மேலாக தன் காதலனுக்காகவே காத்திருந்த ஸமீரா என்னும் ராஜகுமாரி ஒரு ரோஜா மாதிரி. அவளைக் கைப்பிடிக்க அதிர்ஷ்டமற்றுப் போனான் இம்ரான். கஷ்டத்தில் இருந்த போது ஸமீரா உதவிய விடயங்கள் அனைத்தும் மறந்து போய் அவளை வெறுக்கின்ற மனநிலை எப்படித்தான் இம்ரானிடம் உதயமானதோ...! மனிதனின் மனம் கிளைக்குக் கிளை தாவும் குரங்கினை ஒத்ததென்று இதற்குத்தான் பழங்காலத்துக் குடியினர் எழுதி விட்டுச் சென்றார்களோ...! ஸமீராவின் மானத்தில் கோடு போட்டு, வாழ்க்கையில் விளையாடிய இம்ரானின் நடவடிக்கை மன்னிக்க முடியாத குற்றமாக ஏடுகளில் பதியப்பட்டுப் போனது. ஒரு வகையில் ஸமீரா அதிர்ஷ்டசாலி...! ஏன் தெரியுமா...? அல்லாஹ்வின் சந்நிதானத்தில் இம்ரானுக்கெதிராக அவள் வழக்குத் தொடர்ந்து வெற்றி பெறப் போகின்றாள். அதற்காக அவளுக்குக் கிடைக்கின்ற சுவர்க்கமென்னும் பரிசு இவ்வுலகம் மற்றும் இவ்வுலகிலுள்ள அனைத்து வஸ்துக்களையும் விஞ்சி நிற்கும் என்பதில் அச்சொட்டும் சந்தேகமில்லை.

ஸமீராவின் கையளவு இதயத்தில் கடலளவு காயங்கள்... பத்து வருடங்களாக காதல் புரிந்த அனுபவங்களைப் பெறுவதென்பது சிகரங்களை எட்டுகின்ற சாதனையொன்றுதான். முப்பத்தியொரு வயதினைக் கடந்து விட்டும் திருமணம் முடிக்காத அவளை யாரேனும் மணம் முடிக்க விரும்பினாலும், ஆண்களை நம்பக் கூடிய பக்குவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளில்லை இப்போது. திருமணம் முடிப்பதில்லையென்ற முடிவும் அவளால் எடுக்கப்பட்டு விட்டது இப்போது. 'இறப்பும் பிறப்பும் போல ஒரு முறைதான் காதல் தோன்றும்...!' என்பது அநேகருடைய வாழ்வில் கற்பனையாகிப் போனாலும், ஸமீராவின் வாழ்வில் நிஜமானது.

**'காதல் புரிய வேண்டாம்...!**
**காதலில் இன்பத்தினைவிட துன்பம்தான் அதிகம்...!**
**காதலில் உண்மையினைவிட பொய்கள்தான் நிறப்பம்...!**
**காதலில் நியாயங்களைவிட அநியாயங்கள்தான் தேக்கம்...!**
**காதலில் அமைதியைவிட அமைதியற்ற வாழ்வுதான் நிச்சயம்...!**
**காதலில் மொத்தத்தில் மாற்றத்தைவிட எமாற்றம்தான் மிஞ்சும்...!'**

ஸமீரா வருங்கால சந்ததியினருக்காக அவளது அனுபவங்களை இப்படித்தான் பகிரப் போகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாகரிகமான ஆக்கிரமிப்பு...!

*பிறந்த மனிதன் சாகப் போகின்றான் என்பது எல்லோருக்கும் தெரியும்...! அப்படித் தெரிந்தும் எத்துனைத் துள்ளல்கள் உலகத்தில் அவனுக்கு...! ஒன்றுமற்று வந்தவன் ஏதுமற்றுச் செல்கின்ற நிலைமையில் ஏனெதற்கு மற்றவனின் சொத்துக்களும் நிலங்களும்...!*

மெல்லிய பூங்காற்றினையும் தன்னகம் கொண்டு அசைந்தாடி முத்தமிட்டுக் கொள்கின்ற வேப்பிலைமர இலைகள்... யானையின் காதுகளையொற்ற பச்சையான பாரிய பலாமர இலைகள்... அன்று பிறந்த குழந்தைகளாக மாமரங்களில் தவழும் இளம் கொழுந்திலைகள்... தன் பச்சையை இரத்தமாக்கி மனிதர்களுக்கு வேளாவேளை புத்துணர்வு கொடுக்கின்ற தேயிலைக் கொழுந்துகள்... இவைகளெல்லாம் அங்கில்லை...!

சூரிய உதயத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் 'குந்துகாலி'யின் பாய்ந்து வரும் அழகிய ஓசைகள்... அதிகாலை வேளையிலேயே வேறு யாரும் அபகரித்துவிட முன்னர், மாம்பழத்தினையும் கொய்யாப்பழத்தினையும் குறிவைத்து வருகின்ற அணில்களின் குறும்பு கொஞ்சும் ஒலிகள்... பொழுது விடிந்து விட்ட சந்தோஷத்தில், ஆச்சி சுட்ட வடையினை களவாடிச் செல்வதற்கு சந்தர்ப்பம் காத்திருக்கும் காகங்களின் கரையல்கள்... இவைகளெல்லாம் அங்கில்லை...!

மஞ்சள் நிறத்தில் கொஞ்சம் பச்சை கலந்து நீளமாக வளர்கின்ற மூங்கில் காம்புகள்... வீட்டினைச் சுற்றி வேலிகள் அமைக்க உதவுகின்ற "லாடாப்புக் கட்டைகள்"... மூஸா நபி காலத்தில் வாழ்ந்த, இறைவனை மறுத்த பிர்அவ்னை விடவும் உயரமாக வளர்கின்ற தென்னை மரங்கள்... இவைகளெல்லாம் அங்கில்லை...!

ஆங்காங்கே மெல்லமாக தவழ்கின்ற சிற்றோடைகள்... மலைவாழ் பிரதேசங்களில் சீறிப் பாய்கின்ற நீரூற்றுக்கள்... பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை சொந்தமாக்கிக் கொண்ட பென்னம் பெரிய ஆறுகள்... எந்நாடு செல்ல வேண்டுமானாலும் தாண்டிச் செல்ல வேண்டிய பாரிய சமுத்திரம்... இவைகளெல்லாம் அங்கில்லை...!

எப்போதும் புழுதிகள் படிந்த சூழல்... பெரிய பரப்பளவுகளில் பாலைவனங்கள்... வெப்பகாலத்தில் பூத்துக் குலுங்கும் பேரீச்ச மரங்கள்... வெப்பமில்லாவிட்டால் வாழமாட்டேனெனச் சொல்கின்ற ஒட்டகங்கள்... தண்ணீர் கிணற்றுக்குப் பதிலாக பெற்றோல் கிடங்குகள்... இவைகள்தான் அங்கே...!

முஸ்லிம்களின் வரலாற்றுக்களோடு மிகவுமே தொடர்புபட்ட பூமிதான் அந்த ஈராக் நகரம். நூறுவீத இஸ்லாம் இல்லையென்றாலும் நூறுவீத

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களை உள்ளடக்கிக் கொண்ட பூமிதானது. பல மத்திய கிழக்கு நாடுகளை அண்டை அயலவர்களாகக் கொண்ட பாரிய நிலப்பரப்பும்தான் அந்த ஈராக் நாடு. பக்தாத், பஸரா, கர்பலா என்கின்ற பல இஸ்லாமிய நாகரிகங்கள் கொண்ட நகரங்களைக் கொண்டதும்தான் அந்த ஈராக் நாடு.

பக்தாத் நகரமென்றாலே கல்வியின் மறுபெயர்தானே அக்காலம். சீர் கல்வியினைப் பெற்றுக் கொள்ளவும் கற்றுக் கொள்ளவும் பல மைல் தொலைவுகளைத் தாண்டி முஸ்லிம் அறிஞர்கள் சிரத்தையெடுத்துக் கொண்ட வரலாற்றுக்கள் இன்னும் ஏடுகளில் அழியவில்லை; யாராலும் அழிக்கவும் முடியவில்லை; அழிக்க யாரும் முயற்சிக்கவுமில்லை.

அதே போன்றுதான் கர்பலா நகரமும். அருமை நபிகளாரது பேரப் பிள்ளை கொல்லப்பட்ட வரலாற்றை அது ஒவ்வொரு வருடமும் ஞாபகமூட்டும். ஷீஆக்கள் தவறான முறையில் அதனை அணுகிக் கொண்டாடினாலும், நபிகளாரின் பேரப் பிள்ளையின் கொலை முஸ்லிம்கள் அனைவருக்குமே கவலைக்குரிய விடயமல்லவா...!

இப்படியாக ஈராக்கின் ஒவ்வொரு காலடி மண்ணும், ஒவ்வொரு இஸ்லாமிய கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் விம்பமாக இருக்கின்றது. அதனால்தான் அதுவுமொரு பரக்கத்துப் பொருந்திய மண்ணாக என்றும் இருந்து வருகின்றது.

அல்லாஹ்வின் அத்தாட்சிகள் என்றும் மகத்தானவை. ஒரு மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை பருவங்கள் மாறி மாறி வருவதனைப் போல, கலைகளும், கலாச்சாரங்களும், விழுமியங்களும், நடையுடை பாவனைகளும் தானியங்கியாகவே உருமாற்றம் பெற்று விடுவதானது நிச்சயமாக அல்லாஹ்வின் அத்தாட்சியிலேயே தங்கியிருக்க முடியும்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது காலத்தில் இருந்த கலாச்சாரம் நூஹ் நபியின் காலத்தில் இருந்திருக்காது. மூஸா நபியின் காலத்தில் இருந்த கலைகள் இப்ராஹீம் நபியின் காலத்தில் இருந்திருக்காது. யூஸீப் நபியின் காலத்தில் இருந்த விழுமியங்கள் ஈஸா நபியின் காலத்தில் இருந்திருக்காது. முஹம்மது நபிகளாரின் காலத்தில் இருந்த நடையுடை பாவனைகள், ஒப்பீட்டளவில் பல இருந்தாலும், தற்காலத்தில் மிகவும் சொற்பமாகக் குறைந்து விட்டன எனலாம்.

இஸ்லாத்தின் கலாச்சாரங்களையும் ஒழுக்கங்களையும் பின்பற்றுவதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல எப்போதும். தொழில்சார் பரீட்சைகளில் சித்தியுறுவது எப்படிப்பட்டதொரு கஷ்டமோ அதே நிலைமைதான் அவற்றுக்கும். ஹராத்தில் இன்பத்தினையும் ஹலாலில் துன்பத்தினையும் மனதளவில் இருத்திக் கொள்கின்ற நிலைமை முஸ்லிம்களிடத்தில் இருக்கின்ற படியால்தான் இஸ்லாத்தினை நடைமுறைப்படுத்த அவ்வளவு சிரமம்.

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத்தான் அல்லாஹ்வின் இறுதித் தூதர் நமக்கு மண்டையில் உறையும் விதத்தில் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள்.

"ஒரு காலம் வரும். அப்போது முஸ்லிம்கள் ஆற்றில் அடித்துச் செல்லப்படுகின்ற சறுகுகளாக (பிற இனத்தவர்களால்) அடித்துச் செல்லப்படுவார்கள். அதற்குக் காரணங்கள்... மரணத்தைப் பயந்ததும் இவ்வுலக ஆடம்பரங்களில் ஆசை கொண்டதும்"

நபிகளார் சொன்ன வார்த்தைகள் எதுவொன்றும் என்றும் தவறிப் போனது கிடையாது. ஆதிக்கங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும்; பொருளாதாரங்கள் நிறைந்தாலும் நிறையாவிட்டாலும்; தராதரங்கள் குறைந்தாலும் குறையாவிட்டாலும் முஸ்லிம்களது அல்லாஹ்வின் அச்சம் நாளுக்கு நாள் நலிவடைய, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகின்ற சமூகமாக முஸ்லிம்கள் தற்காலத்தில் உருமாறி விட்டனர்.

அரேபிய நாடுகளில் ஒன்றான கத்தாரிலே அஸ்வர் வேலை செய்து கொண்டிருந்த காலப் பிரிவது. அமெரிக்கர்கள் பிரித்தானியர்களோடு சேர்ந்து கொண்டு, தன்னையும்விட வளம் பொருந்திய நாடுகளை முன்னேற்றம் கண்டு விடாமல் அவர்கள் மீது படையெடுத்து அடாவடித்தனங்களில் ஈடுபட ஆயத்தமான காலப் பிரிவும் அதுதான்.

பேருவலை, சீனங்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட அஸ்வர் பல வருட அனுபவங்கள் கொண்ட ஓர் இஞ்சினீயர். இலங்கையிலேயே பல லட்சங்கள் சம்பாதித்து சாதனைகள் புரிந்தாலும், அதனையும் விட கோடிகள் சம்பாதித்து சாதனைகள் புரிந்திட கத்தாரினை நோக்கி வந்திருந்தான். ஆதமின் மகனுக்கு மலையளவு தங்கக் குவியலொன்று கொடுத்தாலும், அது போதாமல் இன்னுமொன்றுக்காய் ஏங்குவானென்பது தித்திப்பான உண்மைதான். கத்தாரின் அமெரிக்க இராணுவ முகாமில் அஸ்வருக்குக் கிடைத்த வேலை வாய்ப்பு, பணம் சம்பாதிப்பதில் அவனுக்குக் கிடைத்த பெரிய அதிர்ஷ்டமாக இருந்தாலும், முஸ்லிம்களின் எதிரியாகவே தொடர்ந்தும் இருக்கின்ற அமெரிக்கர்களுக்கு சேவைகள் புரிவது ஏனோ துரதிர்ஷ்டம்தான்.

தன் மனைவி, இரண்டு பிள்ளைகள் சகிதம் கத்தாரில் வசிக்கின்றவனுக்கு திடீரென தன் வேலையில் இடமாற்றம் ஏற்படவே, கிடைக்கின்ற சம்பளத்தினைவிட கூடுதலான கொடுப்பனவு கிடைக்கின்ற வாய்ப்பினால் தலையாட்டி சம்மதித்துக் கொண்டான் அஸ்வர். அமெரிக்க வெறியர்களின் படையெடுப்பினால் ஆட்டம் கண்டிருக்கும் ஈராக் நாடுதான் அவன் இடம் மாறிச் செல்கின்ற பூமி.

வீட்டாரும் உறவினர்களும் தன் மனைவி மக்களும் எவ்வளவுதான் அஸ்வரைத் தடுத்தாலும் இரு மனங்கள் உள்ளவனாக, சஞ்சலப்பட்டவனாக ஈராக் செல்லும் வாய்ப்பினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான் அஸ்வர். கத்தார் அமெரிக்க இராணுவ முகாமில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக் அமெரிக்க இராணுவ முகாமுக்கு தன் குடும்பம் சகிதம் இடம் மாற்றப்பட்டான் அஸ்வர் இறுதியில்.

நன்றாய் இருப்பவர்களைப் பிரித்து இன்பம் காண்பது... நிம்மதியாய் இருப்பவர்களை நிம்மதியற்றவர்களாக்குவது... மனநிறைவோடு உறங்குகின்றவர்களை தூங்கவிடாமல் தடுப்பது... தன்னைவிட பொருளாதாரத்தில் தலை தூக்கி வருபவர்களை, தலை குனிய வைப்பது... தானும் தன் நாட்டு மக்களும் மட்டும்தான் மனிதர்களென்றும் மற்றையவர்கள் மிருகங்களென்றும் சொல்லாமல் சொல்லிக் கொள்வது... தன்னைவிட நல்லெண்ணம் கொண்டோர் யாருமே கிடயாது என மக்களை உணர வைக்க முயற்சிப்பது... இவைதான் ஒவ்வொரு அமெரிக்க ஆட்சியாளர்களதும் முக்கியமான பண்புகள் என்பதனை கடந்த சில வருடங்கள் பறைசாட்டி இருக்கின்றன. மற்றவர்களின் மூக்கில் கை வைப்பதற்கென்றே வருடா வருடம் பல பில்லியன் டொலர்களை தங்களது 'பட்ஜட்'டில் ஒதுக்குகின்றார்கள் என்றால், பாருங்களேன்...!

அமெரிக்க யூதக் கைக்கூலிகளுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் இருக்கின்ற பிரதான வித்தியாசம்தான் நினைப்பதை சாதிப்பது. முஸ்லிம்கள் நினைத்தவுடன் சாதிக்க நினைப்பார்கள். யூதர்களோ தாம் நினைப்பதைப் பல வருடங்கள் நூற்றாண்டுகளாகக் கழிந்தாலும் காத்திருந்து சாதிப்பார்கள். இப்பேர்ப்பட்ட ஒரு சாதனையைத்தான் அமெரிக்கர்கள் ஈராக்கினை மையமாக வைத்து சாதித்துக் கொண்டார்கள். நினைப்பதை சாதிக்க பொறுமையைக் கைக்கொள்வது எப்படியென்று யூதர்களிடம் முஸ்லிம்கள் பாடங்கள் கற்றுக் கொள்ள வேண்டுமே...!

எண்ணெய் வளம் பொருந்திய அவ்வீராக் நாட்டினை எப்படிப் படையெடுத்து தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதென்பதனைப் பல வருடங்களாகத் திட்டம் தீட்டி அழகுற வடிவமைத்தவர்களான அந்த அமெரிக்க ஆட்சியாளர்கள் உண்மையில் கலைஞர்கள்தாம்; சில வேளைகளில் கலைஞர்களிலும் உயர்ந்தவர்கள்தான். அப்படிப்பட்ட நிகழ்வொன்றாகத்தானே முஸ்லிம்களின் புனித பூமியாம் பலஸ்தீனும் யூதர்களால் அநாகரிகமாக ஆக்கிரமிக்கப்பட்டது.

யாருக்கும் அடிபணியாத் தன்மை கொண்ட... தங்களைத் தாங்களே சர்வதேச பொலிஸாராக நியமித்துக் கொண்ட... தங்களைத் தாங்களே வல்லரசாக நியமித்துக் கொண்ட அமெரிக்க ஆட்சியர்கள் ஈராக்கினை ஆக்கிரமிக்க சொல்லிக் கொண்ட பொய், உலகை அழிக்கும் அல்லது உலகை அச்சுறுத்தும் நாசகார ஆயுதங்களை ஈராக் அதிபர் தன் நாட்டுக்குள் வைத்திருப்பதுதான். ஆதிக்கமுள்ளவர்கள் பொய் சொன்னால் எல்லோரும் நம்பித்தான் ஆகுவார்கள் என்பதனையும் ஒரு பொய்யைப் பலமுறைகள் உச்சரித்தால் அது உண்மைத் தோற்றம் பெறுமென்பதனையும் அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க அவசியமேயில்லை...!

இர்ஷாத் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கர்களுக்கும் யூத இஸ்ரேலியர்களுக்கும் செவிசாய்க்காமல், தனக்கென்றேயுரிய ஒரு 'ஸ்டைலி'ல் நடை பயின்றவர்தான் ஈராக் ஜனாதிபதி ஸதாம் ஹுஸைன். முழு உலகையும் தன் கட்டுக் கோப்பில் வைத்துக் கொள்ள வேண்டுமென கங்கனம் கட்டிக் கொண்டு அலைந்து திரிந்த அமெரிக்கர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த முதல் வீரனென்றுகூட அவரை அழைத்தாலும் அது சரியென்றே வரலாறும் சொல்லிக் கொள்ளும். பல தடவைகள் பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா ஈராக் மீது திணித்தும், சோர்ந்து விடாமல் அதனையும் உள்வாங்கிக் கொண்டு தன் மக்களை பசி பட்டினியிலிருந்து காத்தவர் அவர். ஸுன்னி, ஷீஆ, குர்து, பஸ்ரு எனப் பல்வேறு பிரிவினர்களாக இருந்தவர்களை ஒன்று சேர்த்து எல்லோரையும் ஈராக்வாசிகளாக்கிய பெருமையும் அவரைச் சார்ந்ததே. கல்வியைக் கட்டாயமாக்கி "யுனெஸ்கோ'விலிருந்து பதக்கங்களையும் வென்று கொண்டவர்தான் அவர். சுற்றியிருந்த அரபு நாடுகள் தத்தமது வளங்களை தாங்களது குடும்பங்களுக்கென பகிர்ந்து கொள்ளும் வேளையில், ஈராக் வளங்களை தேசியமயமாக்கி மக்களுக்கு நல்லது புரிந்த உத்தமரும் அவரே. நகரங்களை பல பாரிய பாதைகளமைத்து விசாலமாக்கவும் செய்தார். புதுப்புது தொழில்நுட்பங்களை நாட்டுக்குள் புகுத்தவும் செய்தார். பெண்களின் சமூகநல முன்னேற்றத்துக்கு விதை விதைக்கவும் செய்தார். ஒரு பெண் நள்ளிரவிலும் தனியாக நடமாட முடியுமான விதத்தில் சட்ட ஒழுங்குகளை கைகளுக்குள் அடக்கியும் வைத்திருந்தார். காலப் போக்கில் தன் நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தி உலகுக்கே தன் மீது அச்சமேற்படக் கூடிய விதத்தில் ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தார் அவர். உலகத்துக்கு அஞ்சாத ஒரு நகரத்துச் சிங்கமாக விளங்கிய ஸதாம் ஹுஸைனைத் தாக்கியழித்து எண்ணெய் வயல்களையும் கிணறுகளையும் கைப்பற்றுவதுதான் அமெரிக்காவின் குறிக்கோளாய் இருந்ததை உலக மக்கள் பின்னர் கற்றுக் கொண்டனர்.

ஒரு கவிஞர் இப்படி எழுதிப் படித்தார்.

***மனிதர்களைக் கொன்று ஜனநாயகம் பேசுவோர் விசாரித்தார்கள் உன்னை...!***<br>
***ஆக்கிரமித்தார்கள் உன் மண்ணை...!***<br>
***எல்லாவற்றுக்கும் காரணம் உன் எண்ணெய்...!***

பல நாடுகள் ஒன்று திரண்டு தாக்கியதில் இரண்டு மாதங்களுக்குள் தனியாய் கர்ஜித்த சிங்கமாம் ஸதாம் ஹுஸைன் வீழத்தான் செய்தார். எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு யூத நஸாராக்களுக்கு அடிபணியாமல் கடைசி நேரம்வரை இருந்தவர், இறுதியில் வீர மரணம் எய்தினார்.

ஈராக்கினுள் நுழைந்த அஸ்வருக்கு அப்போதுதான் புரிந்தது, தன் கால்கள் தனக்கே துரோகம் செய்து கொண்டதை. ஒரு தடவை தஹஜ்ஜுத் தொழுதுவிட்டும் அழுதான் அல்லாஹ்விடத்தில். 'தன் வேலையை கத்தாரில் இருக்கும் போதே இராஜினாமா செய்துவிட்டு இலங்கைக்குப் பயணித்திருக்க வேண்டாமா...?' என ஏங்கித் தவித்தான். பணத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகத்தில் வந்து, யாருக்கோ துரோகமிழைத்துவிட்ட உணர்வொன்றையும் அவன் பெற்று சின்னாபின்னமாகிப் போனான் மனதளவில். அங்கே நடப்பவைகளை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. போதாக் குறைக்கு அவனது குடும்பமும் அவனது பக்கத்தில் இருப்பதானது கூடுதலான சஞ்சலத்தை இன்னுமின்னும் ஏற்படுத்திற்று. வேலையை இராஜினாமா செய்வோமென்றால் அதுவும் முடியவில்லை தற்போது. இரண்டு வருட ஒப்பந்தத்தில் ஒரு சில வாரங்கள்கூட முடியவில்லையே...! சொந்தக் காசிலே சூனியம் வைத்துக் கொண்டோர் சங்கத்திலே அங்கத்தவனானான் அஸ்வர்...!

ஒரு தனி மனிதனுக்காக அல்லது ஓர் அரசாங்கத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போரிலே எத்துனை அநியாயங்களைச் சந்தித்தன அந்த ஈராக் நகரங்கள்...! ஒரு குழுவினரைப் பிடிப்பதற்காக பல லட்சம் பேர்களின் வாழ்க்கையில் விளையாடியது அந்த அட்டூழிய அமெரிக்காவும் அதன் சக தோழ நாடுகளும். பால்குடி மணம் மாறாத குழந்தைகள் மலையளவு கொல்லப்பட்ட பெருமை வரலாறு அமெரிக்காவையே சாரும். நாட்டின் வரலாற்றைப் பறைசாற்ற முடியுமான அனுபவமுள்ள முதியோர்கள் மண் குவியலளவு கொல்லப்பட்ட பெருமை வரலாறும் அமெரிக்காவுக்கே சொந்தம். நாட்டின் முதுகெலும்புகளான இளைஞர்களை கடல் நுரையளவு கொன்று குவித்த வரலாற்றிலும் அமெரிக்காவுக்கே தங்கப் பதக்கம். மைதானளவு ஆண்களைக் கொன்று பெண்களை விதவைகளாக்கிய வரலாற்றுச் சிறப்பும் அமெரிக்காவுக்கே உரித்து. பல கற்பனைகளோடு வாழ்வினை ஆரம்பிக்கத் துடித்துக் கொண்டிருந்த இளம் பெண்களை குன்றுகளளவு மானபங்கப்படுத்தி இஸ்லாத்தின் நாகரிகங்களை சல்லடையாக்கிய அயோக்கியத்தனமும் அமெரிக்காவுக்கேயுரிய விருதுதான். பாலைவனங்களை சோலைவனங்களாக மாற்றிக் கொண்டிருந்த அத்தகைய காலகட்டத்தில் சோலைவனங்களை பாலைவனங்களாக்கிய திருப்தி அமெரிக்கர்களுக்குத் தவிர வேறு யாருக்குமில்லை.

ஈராக்கில் அரங்கேறுகின்ற அமெரிக்கர்களின் கொடுமைகளைக் காதுகளினால் கேட்டறிந்த அஸ்வர், முதன் முதலாக அனுபவ ரீதியாக கண்டுணர்ந்தான். மீடியாக்களில் ஐந்து வீதத்துக்கும் குறைவான அமெரிக்காவின் அடாவடித்தனங்களே காண்பிக்கப்படுவதனையும் அறிந்தான். வீதியோரமெங்கும் மாட்டுத் தொழுவங்களிலே மாடுகள் அறுக்கப்பட்டு இரத்தங்கள் ஓட்டப்படுவதனைப் போல, மனிதர்களின் குறுதிகள் ஓட்டப்பட்டுக் கொண்டிருந்த நிகழ்வுகளைப் பார்த்து நெகிழ்ந்தான். ஐநூறு மீட்டர் பாதைகளில் பத்து மின் கம்பிகள் போடப்பட்டிருப்பது போன்று, பத்து கவச வாகனங்களும் பீரங்கிகளும் நிறுத்தப்பட்டிருக்கும் நிகழ்வுகளையும் அன்றாடம் பார்த்தான். மக்களின் நடமாட்டங்கள் வீட்டுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு இராணுவங்களின் நடமாட்டங்களை மாத்திரம் பாதைகளில் கண்ணுற்றான். திறந்திருந்த வியாபாரத் தளங்கள் மூடப்பட்டிருந்தன. கல்வி கற்றுக் கொள்ளக் கூடிய பள்ளிக்கூடங்கள் குண்டுகளினால் பாதி இடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்தும் மறுபாதி இடிந்து விழப் போகும் தறுவாயிலும் இருந்தன. அல்லாஹ்வை வணங்கக்கூடிய பல பள்ளிவாயல்கள்கூட தரைமட்டமாகப் போகும் நிலைகளிலேயே இருந்தன. ஸதாம் ஹூஸைனின் காலத்தில் சிட்டுக் குருவிகளாய் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்த மக்கள் அமெரிக்காவின் ஜனநாயகத்திலே??? சுதந்திரமிழந்த கூண்டுப் பறவைகளாயினர்.

மனிதர்கள் ஷீஆக்களாக இருக்கட்டும்; சுன்னிகளாக இருக்கட்டும்; பௌத்தர்களாக இருக்கட்டும்; கிறிஸ்தவர்களாக இருக்கட்டும்; இந்துக்களாகவும் இருக்கட்டும்; எந்த மதத்தினைச் சார்ந்தவர்களாகவும் இருக்கட்டும்...! எல்லோரும் நிம்மதியைத்தான் விரும்புவார்கள்; வாழ வந்த எவரும் இயற்கை மரணத்தினைத்தான் விரும்புவார்கள். இவை இப்படியிருக்க, செயற்கையாக மக்களைக் கொல்வது எத்துனைப் பெரிய பாவம்...! ஒரு மனிதனை வாழ வைப்பது முழு மனித சமூகத்தினையும் வாழ வைப்பதற்கு ஒப்பாகும் அதேவேளை, ஒரு மனிதனை அநியாயமாக சாக வைப்பது முழு மனித சமூகத்தினையும் சாக வைப்பதற்கு ஒப்பாகும் என்கின்ற இஸ்லாமியப் போதனையை அமெரிக்கக் காடையர்கள் அறிய நியாயமில்லைதான். அப்படி அறிந்து வைத்திருந்தாலும், உலக சுக போகங்கள் அனைத்தும் அதனை அவர்களது கண்களில் இருந்தும் மறைத்து விடுகின்றதுதான் நிதர்சனம்...!

சம்பந்தப்பட்டவர்களோடு மட்டுமே யுத்தம் புரிய வேண்டுமென்கின்ற நியதி... பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் எல்லோரும் பாதுகாக்கப்படல் வேண்டுமென்கின்ற நியதி... வணக்கஸ்தளங்களை தாக்குதல்களுக்கு உட்படுத்தக் கூடாதென்கின்ற நியதி... மரங்களைக்கூட அநியாயமாக சாய்த்துவிடக் கூடாதென்கின்ற நியதி... போன்ற இஸ்லாத்தின் யுத்தங்கள் தொடர்பான விதி முறைகள் அர்த்தம் பொதிந்தவை மட்டுமா...? இல்லவே அழகானதும் பண்பாடானதும் கூடவே...!

“ஈராக்குப் போக வேணாம்பா...” எவ்வளவுதான் ஆஷியா மறுத்த போதிலும், மனைவியின் கூற்றைப் புறந்தள்ளிவிட்டு யுத்த வலயமொன்றினுள் வந்து புகுந்தவன்தான் அஸ்வர். இனியென்ன, கணவன் உடும்புப் பொந்தில் புகுந்தாலும் மனைவியும் கூடவே புகுந்து விடுவதுதானே சீனங்கோட்டைக் கலாச்சாரம். ஆயிரம் பேர்களது கூற்றுக்களையும் மறுத்துவிட்டு தன் பிஞ்சுக் குழந்தைகளான ஷஸ்னியையும் பர்வீனையும் கூட்டி வந்து மாட்டிக் கொண்டிருந்தான் அஸ்வர்.

“இங்கீந்து பெயித்துடோம்வா...” ஆஷியாவின் ஒவ்வொரு நாளைய புலம்பலிலும் அஸ்வருக்குக் எரிச்சல்கள் வந்தாலும், எதிர்த்துப் பேசவே மாட்டான். அவனால் எதிர்த்துப் பேசவும் முடியவில்லை.

“ஓகே... கொஞ்சம் பொறுத்துக்கொங்கே... வந்தத்துக்காக ரெண்டு மூனு மாசம் ஈந்துட்டு ஓடீடோமே...” அஸ்வரின் அன்றாடப் பாட்டு வரிகள்தான் அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஷியாவும் பிள்ளைகளும் அமெரிக்க இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் வசித்து வந்தாலும், உயிருக்குத் தகுந்த உத்தரவாதம் இல்லை. சிறையில் நான்கு சுவருக்குள் முடங்கிப் போன கைதிகள் போன்று இராணுவ சிப்பாய்கள் வசிக்கும் வளாகங்களுக்குள் மாத்திரமே அவர்கள் நேரங்களைச் செலவிட்டுக் கொண்டிருந்தனர். அந்த வளாகங்கள்கூட இலேசிப்பட்டவைகளல்ல. அதற்குள் இல்லாதவைகளில்லை என்றே சுருக்கமாகச் சொல்லி விடலாம். மனிதனின் பொழுதுகளை சுறுசுறுப்பாகச் செலவிட என்னென்ன சொகுசுகள் தேவையோ அவ்வாறான சொகுசுகள் அனைத்தினையும் செயற்கையில் உருவாக்கி வைத்திருந்தனர். சீனங்கோட்டைப் பரிபாஷையில் சொல்வதானால், 'எல்லம் ஈச்சி... ஓங்கட உம்மா வாப்பாவத் தவிர...' என்று சொல்லலாம்.

இலங்கையாக இருக்கட்டும் அல்லது கத்தாராக இருக்கட்டும்... சாந்தமான சூழலில் வாழ்ந்து பழகிப்போன ஆஷியாவுக்கு ஈராக்கின் "கலபல" சூழல் ஒத்து வரவில்லை. பத்து நிமிடங்களுக்கொரு தடவை ஏறியிறங்கும் போர் விமானங்களின் காதைக் கிழிக்கின்ற ஓசைகள்; பட்டாசு வெடிகள் போன்று ஒலிக்கின்ற துப்பாக்கியின் தோட்டாக்கள்; பீரங்கி குண்டுகளின் சரமாரியான சப்தங்கள் ஆஷியாவையும் அவளது குழந்தைகளையும் கதி கலங்கச் செய்யும். பிள்ளைகள்கூட பயந்து நடுங்குகின்ற சுபாவத்தினை எப்போதோ பெற்றுவிட்டனர். பாதுகாப்பு வலயத்திலேயே இப்படி அச்சமுள்ள நிலைமைகளை இவர்கள் அடைவார்களெனில், வெளியே உள்ளவர்கள் எப்பேர்ப்பட்ட அச்சமுள்ள வாழ்க்கையை வாழ்ந்து தவிக்கின்றார்களோ...! எண்ணினாள் ஆஷியா; எண்ணி அழுதும் விட்டாள் அடிக்கடி.

நாட்கள் ஒரு சிலதான் கடந்தன. ஒரு ஸதாம் ஹுஸைனை அழித்து விட்டு பல ஸதாம் ஹுஸைன்களை உருவாக்கி விட்டான் ஜோர்ஜ் புஷ் என்கின்ற மனித மாமிசம் உட்கொள்கின்ற அமெரிக்க ஜனாதிபதி. உலகை உலுக்கும் நாசகார ஆயுதங்களைத் தேடி வந்த புஷ்ஷுக்கு ஒரு மயிர்கூட கிடைக்கவில்லை. அவனுக்குக் கிடைத்ததெல்லாம் மன நிம்மதியற்ற வாழ்க்கைதான். அநியாயமாக மக்களைக் கொன்று குவித்ததில் சர்வதேச மட்டத்தில் எழுந்த எதிர்ப்பு... பில்லியன் ட்ரில்லியன் கணக்கான டொலர்களை யுத்தத்திற்காகப் பயன்படுத்தி அமெரிக்காவின் நிதியமைப்பில் சிக்கல்கள் ஏற்படுத்தியமை... பல அமெரிக்க சிப்பாய்களை யுத்தத்தில் ஈடுபடுத்தி அவர்களது உயிர்களை இழக்கச் செய்தமை... பல இராணுவ வீரர்களை மன நோயாளிகளாக்கியமை... எல்லாவற்றுக்கும் மேலாக உலகத்தையே அச்சுறுத்தக்கூடிய போராளிகளை உருவாக்கியமை... இப்பேர்ப்பட்ட எதிர் விளைவுகளை எதிர்பாரா விதத்தில் சந்தித்துக் கொண்ட ஜோர்ஜ் புஷ் மனதளவில் நிம்மதியற்றவனாக மாறினாலும், வெளியில் தானொன்றும் தோற்கவில்லையென மமதையில் திரிந்தான். கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லையாம் அவனுக்கு...!

ஈராக்கில் தெருவெங்கும் நகரெங்கும் போராட்டங்கள் அரங்கேறின. ஸதாம் ஹுஸைனைச் சார்ந்தவர்கள் ஒரு புறம் போராட, ஷீஆப் பிரிவினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறம் போராட அமெரிக்க இராணுவம் நாளுக்கு நாள் பின்னடைவைச் சந்தித்து செய்வதறியாது திகைக்க வேண்டியாகிற்று. ஈராக்கில் மனித வெடிகுண்டுகள் உருவாக்கம் பெற்றன. நாளொன்றுக்கு சில வேளைகளில் நூற்றுக்குமதிகமான மக்கள் வயது பால் வித்தியாசங்களின்றிக் கொல்லப்பட்டனர். உணவுத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டு மக்கள் பரிதவித்தனர். அத்தியவசியத் தேவைகளான குடிநீர் வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் இண்டர்நெட் போன்றவைகள் அனைத்தும் இல்லாமல் மக்கள் திண்டாடினர். இளவயதுப் பெண்களின் நிலைமைகளை அமெரிக்க இராணுவ ஓநாய்கள் துவம்சம் செய்தன. வானத்திலிருந்து பார்த்தால் அழகாகக் காட்சி தரக் கூடிய ஈராக்கிய நகரங்கள், தரைமட்டமாக்கப்பட்டன. நிம்மதியாய் இருந்த மக்களை ஜனநாயகம் பேசி நிர்க்கதிக்குள்ளாக்கினான் கொலைகாரன் ஜோர்ஜ்புஷ். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, அபகரிப்பு அனைத்துக்கும் ஈராக்கிலே துணை போன ஜோர்ஜ்புஷ் உலகத்தின் மிகச் சிறந்த 'ஓல் ரவுண்டரா'னான். ஒரு நாளைக்குக் குறைந்தது முப்பது முதல் ஐம்பது வரை மனிதர்கள் ஈராக்கில் கொல்லப்படவில்லையானால், அது உலகின் எட்டாவது அதிசயமாக அல்லவா மாறி விடும்...!

ஈராக்கியப் பெண்மணியொருத்தி உலக மக்களுக்கு எழுதிய கடித வரிகள் எல்லோரது கண்களிலும் கண்ணீரை வரவழைக்கப் போதுமானது; உள்ளங்களை நெகிழ வைக்கவும் போதுமானது.

***பணத்தாலும் பலத்தாலும் உங்களால் உதவி புரிய முடியாவிட்டாலும் பரவாயில்லை... குறைந்தது கருத்தடை மாத்திரைகளையாவது எங்களுக்குத் தந்துதவுங்கள்...***

நாசகார ஆயுதங்கள் தேடிவந்த ஜோர்ஜ்புஷ் கடைசியில் ஸதாம் ஹுஸைனைப் பழியெடுக்க எடுத்துக் கொண்ட அத்தியாயம்தான், அவரை ஒரு கொலைகாரனாகக் காட்ட எடுத்துக் கொண்ட முயற்சி. தன்னைத் தாக்க வந்தவர்களைத் திருப்பித் தாக்கி கொன்று விட்டாராம் ஸதாம் ஹுஸைன். இதுதான் ஸதாம் ஹுஸைன் தூக்கிலிடப்பட்டதற்குக் காரணமாம். 'தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எவரும் எவரையும் கொலை செய்யலாம்' என சர்வதேச சட்டத்திலும் இருக்கும் போது இப்படிப்பட்ட விடயமொன்றில் எப்படி அவரை தூக்கிலிடலாம்...? மக்கள் மடையர்களாகவில்லை. அமெரிக்கர்களது ஆதிக்கம் மக்களைப் பேச விடாமல் தடுத்துக் கொண்டே வருகின்றது தொடர்ந்தும். ஏமாற்றம் அளிக்கின்றது மக்களே...!

**"நீங்கள் மேய்ப்பாளர்கள். உங்கள் மேய்ப்புக்கள் பற்றி நாளை விசாரிக்கப்படுவீர்கள்...!"** என்கின்ற நபிகளாரின் கூற்றுப்படி அதிகாரமுள்ளவர்கள் அவற்றினைத் தவறாகப் பயன்படுத்திவிட்டு எங்ஙனம் அல்லாஹ்விடமிருந்து தப்பிக்கப் போகின்றார்களோ...!

***இர்ஷாத் ஹஸன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானால், நாசகார ஆயுதங்களைக் கண்டுபிடிக்க வந்த ஜோர்ஜ்புஷ் அநியாயமாக இலட்சக் கணக்கான மக்களைக் கொன்றதையெல்லாம் எவற்றுக்குள் அடக்குவது...? அவன் அப்பாவி மக்களைக் கொன்றதற்காக பல இலட்சக் கணக்கான தடவைகள் தூக்கிலிடப்பட வேண்டுமல்லவா...! தூக்கிலிடப்படுவான் அவன் நிச்சயமாக நாளை மறுமையில் எல்லோருக்கும் முன்பாக...! அவனது மானம் காற்றில் வீசப்பட்டுவிடும் அல்லாஹ்வின் சந்நிதானத்தில், அவன் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரி 'ஹிதாயத்'தோடு மட்டும் மரணிக்கவில்லையானால்...!

ஸதாம் ஹீஸைனின் மறைவோடு ஈராக் இன்னுமின்னும் பிளவுகள் கண்டது. அவரது மரணம், ஸதாம் ஹீஸைனைத் தவிர ஈராக் மக்களை ஆள்வதற்கு யாராலும் முடியாது என்பதை ஓங்கிச் சொல்லிற்று. உயிரோடிருக்கும் போதே அரை நூற்றாண்டுகள் பேசப்பட்டவர், இன்னும் பல நூ(ற்)றாண்டுகள் பேசப்படப் போகின்றார்.

சில வாரங்கள் நகர்ந்தன. ஜோர்ஜ்புஷ்ஷின் ஜனநாயகத்தில் முன்னேற்றம் நடந்த பாடில்லை. புலி வாலைப் பிடித்துவிட்டு, விட்டுவிட முடியாதவனானான் புஷ். போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவர எத்துனையோ முயற்சிகள் எடுத்தும் ஒன்றும் கைகூடவில்லை; மாறாக எல்லாமே காலை வாரிவிட்டது. இன்னும் பல துருப்புக்களை இறக்குமதி செய்யும் நோக்கில், இராணுவ முகாம் விரிவுபடுத்தப்படவே, அஸ்வர், ஆஷியா குடும்பமாக வேறு இடத்துக்கு மாற்றம் செய்யப்பட வேண்டியிருந்தனர்.

அஸ்வரின் குடும்பம் போன்று இன்னும் நூறு குடும்பங்கள் வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டனர். முக்கியமான அரசியல் பிரமுகர்களை இராணுவப் பாதுகாப்போடு, வீதிகளூடாகக் கொண்டு செல்வது போன்று, பெண்களையும் பிள்ளைகளையும் பக்தாத் நகரத்திலிருந்து பஸரா நகரத்துக்கு இடம் மாற்றிக் கொண்டிருந்தனர். குடும்பத்து ஆண்கள் மாலையிலும், பெண்களும் குழந்தைகளும் அதே தினத்தில் காலையிலுமென இடம் மாற்றம் செய்வதே இராணுவத்தினர்களின் திட்டம்.

“இது, அவசரமா வந்துடுங்கோ...” ஆஷியா அஸ்வரிடம் கூறிக் கொண்டே அமெரிக்க இராணுவ பேரூந்தொன்றில் வந்தமர்ந்து கொண்டாள் இரு பிள்ளைகள் சகிதம்.

“அப்சட் ஆகாம போங்கே நீங்க மூனு பேரும்... பயப்புடத்துக்கு ஒன்டுமில்ல... நாங்க அந்தீக்கி வந்து சேர்ந்துடுயன் இன்ஷா அல்லாஹ்...” அஸ்வரும் ஏனையோரோடு சேர்ந்து கொண்டு தனது குடும்பத்தினையும் வழியனுப்பி வைத்தான். ஆஷியாவின் கண்கள் குளமாகி அஸ்வரின் வலக்கையினைப் பிரிந்தன. அஸ்வரும் அவர்களைப் பிரிந்து இரு நிமிடங்களின் பின்னர் கண்ணீரை உதிர்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரூந்து ஈராக் நாட்டின் பாதை நெடுகிலுமாக கிட்டத்தட்ட இருபது குடும்பங்களை ஏற்றிக் கொண்டு நகர்ந்தது. முன்னால் இரண்டுமாக பின்னால் இரண்டுமாக இராணுவ கவச வாகனங்கள் அவர்களது பாதுகாப்புக்காக சென்று கொண்டிருந்தன. பல வாரங்களுக்குப் பின்னால் ஈராக் நாட்டின் சுற்றுப்புறச் சூழலைப் பார்த்து ரசிக்காமல், மனம் வெதும்பிக் கொண்டே குடும்பத்து உறுப்பினர்கள் பயணித்தனர். ஈராக் நகர பாதைகளை ரசிக்கக் கூடிய விதத்திலா அமெரிக்கர்கள் உருமாற்றம் செய்து வைத்திருந்தனர் அவற்றினை...? சில தாய்மார்கள் அவர்களது குழந்தைகளது முகங்களை தங்கள் கைகளைக் கொண்டு மூடி பாதைகளைப் பார்த்து விடாமல் செய்திருந்தனர். அவ்வளவுக்குக் குழந்தைகள் பார்க்க முடியாதளவு பயங்கரமாக இருந்தது.

அணைப்பதற்கு யாருமில்லாமல் பல வாகனங்கள் பாதைகளோரம் புகைந்து கொண்டிருந்தன. கேட்பாரற்று சில மனித உடல்கள் தீயிலே கருகி சாம்பலாகின்ற படிமுறையில் இருந்தன. செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இரண்டு மூன்று இடங்களில் 'அம்பியூலன்ஸ்' வண்டிகளில், சுற்றியிருந்து வேடிக்கை பார்க்கும் மக்களை அப்புறப்படுத்தி விட்டு சிதறிய மனிதவுடல்களை, ஏற்றிக் கொண்டிருந்ததானது அப்போதுதான் ஒரு சில தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பதனை உணர்த்திற்று. இவற்றையெல்லாம் பெரியவர்களுக்கே ஜீரணிக்க முடியாமல் இருக்கும் போது, சிறுவர்கள் எப்படித்தான் உட்கொள்வார்கள்; உள்வாங்குவார்கள்...!

பாதையோர வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு சென்றவர்களுக்கு அப்போதுதான் பேரதிர்ச்சி காத்திருந்தது. சரமாரியான சத்தங்கள்... குண்டுகள் துப்பாக்கிகளிலிருந்து வெளிவரும் கடும் ஓசைகள்... அவர்கள் சென்று கொண்டிருந்த வாகனங்கள் ஐந்தும் போராளிகளின் தாக்குதல்களுக்கு ஒரு சில வினாடிப் பொழுதுகளில் உள்ளாகின. திடீரென ஏற்பட்டுப் போன 'கெரில்லாத் தாக்குதலி'ல் இராணுவ வீரர்கள்கூட நிலை குலைந்து போயினர். சந்தர்ப்பத்தினை எப்படிக் கையாள்வதென்கின்ற அறிவுகளுமின்றி தட்டுத் தடுமாறினர் அனைவரும்.

துப்பாக்கிகளின் பல தோட்டாக்கள் அவர்கள் பயணித்துக் கொண்டிருந்த வாகனங்களில் ஏற்கனவே துளைகளை ஏற்படுத்தி விட்டிருந்தன. மறைந்திருந்து தாக்குகின்றதனாலும் மலைக் குன்றுகளுக்கிடையில் இருந்து கொண்டு தாக்குகின்றதனாலும், இராணுவ வீரர்களுக்கு தாக்குதல்களை எப்படிச் சமாளிப்பதென்றுகூடத் தெரியவில்லை. போதாக் குறைக்கு தங்களோடு செல்கின்ற குடும்பத்தினர்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு தலையிடியைக் கொடுத்தது.

பேரூந்திலே பயணிக்கின்ற குடும்பங்களது நிலைமைகளோ இன்னும் கவலைக்கிடமாய் இருந்தது. ஆசனங்களில் அமர்ந்திருந்தவர்கள் தரையிலே உருண்டு படுத்துக் கொண்டனர். அவர்களது கூச்சல்கள் விண்ணைத் தொட்டு, மேகங்களை ஒன்றாய் ஒழுங்குபடுத்தி, மழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகில்களையும் உருவாக்கி விட்டன. வாழ்வின் கடைசி நேரத்தினை நெருங்கிவிட்ட அல்லோல கல்லோல நிலைமையில் இருந்தனர் அவர்கள். மரணத்திற்குப் பொறுப்பான வானவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர் என்றால், அது உண்மையே...!

மிகவும் பாதுகாப்பாக ஊர்ந்து சென்ற வாகனங்கள் தாக்குதல்களைத் தொடர்ந்தும் சமாளிக்க முடியாமல், அரை மணித்தியாளப் போராட்டத்தின் பின்னர் அப்படியே செயலிழந்து நின்றன. அமெரிக்க இராணுவத்தினர்கள்கூட கடுமையாகத் தாக்கப்பட்டதில் மரண கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். சிலர் இறந்தும் விட்டிருந்தனர். போராட்டக்காரர்களது கைகள் ஓங்கவே வாகனங்கள் அனைத்தும் அவர்கள் வசமாகின. அமெரிக்க இராணுவத்தினர்கள் யாரும் உயிரோடு மீட்கப்படவில்லை. அதிர்ஷ்டவசமாக பேருந்தில் சென்றவர்கள் மட்டும் உயிரோடு பயணக் கைதிகளாய் மீட்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

முகமூடிகளைக் கவசங்களாக அணிந்து வந்திருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட போராளிகள் 'ஏகே47' ரக துப்பாக்கிகளைக் கையில் பிடித்த வண்ணம் பணயக் கைதிகளை சுற்றிச் சுற்றி வந்தனர். பிடிபட்ட பணயக் கைதிகள் பலரும் மயக்க நிலையில் இருந்தனர். குழந்தைகள் எல்லோரும் முகமூடிகளைப் பார்த்து விட்டு 'சூப்பர்மேனை' நேரில் கண்டு பயந்தவர்களாயினர். 'சூப்பர்மேனை'ப் பார்த்தால் குஷி வருகின்ற பிள்ளைகள் பயப்படுவதற்குக் காரணம், போராளிகளின் துப்பாக்கிகளும் தோட்டாக்களுமாகத்தான் இருக்க வேண்டும்.

ஆஷியாவின் நாடித் துடிப்புக்கள் மிக மிக வேகமாய் அடித்தன. தன் குழந்தைகளைக் கட்டிப் பிடித்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். 'கலிமா'வினை மொழிந்தவளாக கைகால்களில் உயிரோட்டமில்லாதவளானாள். போராளிகள் அருகில் இருப்பதனால் அஸ்வருக்குத் தொலைபேசி அழைப்பினைக்கூட செய்ய முடியாதவளானாள். மரணத்தினைச் சந்தித்து அல்லாஹ்வை சந்திக்கின்ற நேரம் வெகு தொலைவிலில்லை அவர்களுக்கு.

ஏதோவொரு மொழியில் பேசிக் கொண்ட போராளிகள் பெண்களையும் குழந்தைகளையும் பத்து நிமிடங்களுக்குள் நேராக எங்கோ அழைத்துச் சென்று ஓரறையில் தள்ளிப் பூட்டி விட்டனர். அவர்களது மொழிகள் புரியாவிட்டாலும், அவர்களது சைகைகள் மூலம் இன்னும் சொற்ப நேரத்தில் அவர்கள் கொல்லப்படப் போவது திண்ணமாகி விட்டது.

பிரபல 'டைட்டானிக்' திரைப்படத்தில் கப்பல் மூழ்கும் போது உயிரைத் தற்காத்துக் கொள்ள அனைவரும் போராடியது போன்று, அந்த சிறு அறைக்குள்ளே அனைவரும் போராடிக் கொண்டிருந்தனர். ஆஷியாவும் தன் கையடக்கத் தொலைபேசியை எடுத்து அவசர அவசரமாக தொடர்பு கொண்டாள் அஸ்வரோடு. பல தடவைகள் தொடர்புகள் ஏற்படுத்தினாலும், ஒரு முறையேனும் அவன் பதிலலளிக்கவில்லை. தொலைபேசியினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கோ மறந்து விட்டு வேலைப் பளுவில் எங்கோ சங்கமித்து விட்டானோ அஸ்வர்...!

அஸ்வரிடம் பதிலில்லாமல் போகவே, ஆஷியா அவசர அவசரமாக இலங்கையிலுள்ள தன் சகோதரிக்கு தொடர்பினை ஏற்படுத்தினாள். யாரிடமாவது தன்னுடைய நிலைமையினைச் சொல்லிவிட வேண்டுமெனத் துடித்தாள். அவளது தொலைபேசி அழைப்பாவது வரலாற்றில் ஓரேடாக அமைந்து விடட்டும் என்று சிந்தித்து விட்டாள் போலும்.

"ஹலோ... ஹலோ... தாத்தா... தாத்தா...!" பதற்றத்தோடு தன் சகோதரியுடன் பேசினாள் ஆஷியா.

"எனத்தியன்... எனத்தியன் ஆஷியா அழுகிய..." ஆஷியாவின் பதற்றம் அவளது சகோதரியையும் குழப்பத்தில் ஆழ்த்தி விட்டது. இனி கேட்கவா வேண்டும் இருதரப்பு உரையாடல்களையும்...!

ஆஷியா இரண்டு நிமிடங்களுக்குள் நடந்தவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் கக்கிவிடவே அவளது சகோதரியும் அழுது விட்டது மாத்திரமன்றி பயத்தில் மயக்க நிலைக்கும் உள்ளானாள்.

"மிச்ச நேரமா அஸ்வர் மச்சானுக்கு நான் கோல் பண்ணிய, அவரு ஆன்ஸர் பண்ணியல்ல... நீங்க கொஞ்சம் பொறகு கோல் பண்ணி நான் ஸலாம் சென்னன்டு செல்லீடுங்கோ..." இதுதான் ஆஷியாவின் கடைசி வார்த்தைகளாயின. அவற்றினைச் சொல்லி முடிக்கவும், போராளிகள் நான்கைந்து பேர்கள் மீண்டும் அவர்களிருக்கும் அறைக்குள் பிரவேசிக்கவும் தொலைபேசித் தொடர்பினைக் கள்ளத்தனமாக துண்டித்து விட்டாள் ஆஷியா.

"ஹலோ... ஹலோ... ஹலோ..." அழுகுரலில் மறுமுனையில் அழைத்துக் கொண்டிருந்த ஆஷியாவின் சகோதரிக்கு எவ்விதப் பதிலுமில்லை. மீண்டும் தொடர்பினை ஏற்படுத்தினாலும் "ஸ்விட்ச்ட் ஓப் ரெகோர்டிங்கை" மட்டுமே கேட்க முடிந்தது அவளால்.

சும்மா பயணம் செய்து கொண்டிருந்த, நிராயுதபாணியான பணயக் கைதிகள் அனைவரும் அறையிலிருந்து இழுத்து வரப்பட்டார்கள்... மைதானமொன்றுக்குக் கொண்டு வரப்பட்டவர்கள் கண்கள் கட்டப்பட்டார்கள்... பின்னால் கைகளும் கயிற்றின் உதவியோடு கட்டப்பட்டன.... பெரியவர்கள் சிறுவர்களென பாகுபாடின்றி வரிசையில் நிறுத்தப்பட்டார்கள்.... ஏதோ ஈராக்கிய மொழியில் முணுமுணுத்துக் கொண்ட போராளிகள் கடைசியாக, சப்தமாக 'அல்லாஹு அக்பர்' என்கின்ற வாசகத்தினை பலமாக உச்சரித்தனர்.... அதன் பின்னர் தோட்டாக்களின் சப்தங்கள் தொடர்ந்தும் இரண்டு நிமிடங்களாக ஒலித்தன. ஆஷியாவும் பிள்ளைகளும் ஏனைய பணயக் கைதிகளும் இரத்த வெள்ளத்தில் மிதந்து உயிர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டுக் கொண்டிருந்தனர்.

*இர்ஷாத் ஹஸன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுச்சாமம் மூன்று மணியிருக்கும். ஆஷியா திடீரென கண்கள் விழித்துப் பார்த்தாள். அவளது உடல் வியர்த்திக் கொட்டிற்று. இதயம் படபடவென அடித்திற்று. இலேசாக தலையும் வலித்தது. 'இவ்வளவு நேரமாக கனவுதான் கண்டோமா...?' பெருமூச்சினை விட்டுக் கொண்டவள், கெட்ட கனவொன்றினைக் கண்டதற்காக, இடது புறம் பார்த்து மூன்று தடவைகள் எச்சிலினைத் துப்பிக் கொண்டாள். லுங்கியின் மேல் பகுதி இடுப்பு வரைக்கும் கீழிறங்கி, லுங்கியின் கீழ் பகுதி முழங்கால்களுக்கும் மேலேறி தன் கணவன் அஸ்வர் ஆழ்ந்த உறக்கத்தில் தன் வலப் புறம் குறட்டைகள் விட்டவனாக உறங்கிக் கொண்டிருந்தான். தன் குழந்தை செல்வங்களான ஷஸ்னியும் பர்வீனும் தரையிலே அங்குமிங்கும் 'பெம்பர்ஸ்' கட்டியவர்களாக உறங்கிக் கொண்டிருந்தனர்.

தன் கணவனைக் கட்டியணைத்து ஒரு முத்தத்தினை ஆஷியா வழங்கியதுகூட அஸ்வருக்கு தூக்கத்தில் புரியவில்லை. அமெரிக்கர்கள் மட்டுமல்ல உலகத்திலுள்ள அனைத்து இராணுவங்களும் ஒன்றாய் இணைந்து அஸ்வரின் காதுகளுக்கருகில் குண்டுகளைப் பொழிந்தாலும் அவனை எழுப்பி விட முடியாது உறக்கத்திலிருந்து அவ்வளவு சீக்கிரத்தில். கன்னத்தில் வடிந்திருக்கும் உமிழ்நீரினை அவனுக்கல்லாது போன்று துடைத்து விட்டு மீண்டும் உறங்கி விட்டானவன். நோன்பில் அவனை ஸஹருக்கு எழுப்பப்படும் பாடே ஒரு யுத்தம் செய்வதற்கு ஈடாகிவிடும் ஆஷியாவுக்கு. கட்டிலிருந்து போர்வையை விலக்கி எழுந்து கொண்டவள் ஷஸ்னிக்கும் பர்வீனுக்கும் முத்தங்களை வழங்கிவிட்டு மீண்டும் போர்வைக்குள் சங்கமித்தாள் உறங்குவதற்கு.

ஆஷியாவுக்கு உறக்கம் வரவேயில்லை அதன் பின்னால். இன்னும் ஒரு மணித்தியாலத்தில் ஸீபஹீக்கு எழுந்து கொள்ளவும் வேண்டும். நேரத்தினை வீணடிக்காமல் தஹஜ்ஜீத்து தொழ ஆயத்தமானாள் ஆஷியா. கண்ட கனவினை நனவாக்கி விடாமல் அல்லாஹ்விடம் துஆ இறைஞ்சினாள் அவள். முறையான 'வுழு'வுடன் இரண்டு ரக்கத்துக்களது தொழுகையின் பின்னர்தான் அவளது மனம் சாந்தம் கண்டது.

பொழுது புலர்ந்து விடும் வரை ஆஷியாவுக்குப் பொறுமையில்லை. கண்ட கனவினை அஸ்வரிடம் சொல்லிவிட்டுத்தான் மறு வேலையென்றவளாக இருந்தாள். மறுநாள் அஸ்வருக்கு அலுவலகத்திற்கு விடுமுறை என்கிறதனால் காலையுணவினை ஒன்றாக எடுக்கும் போதே சொல்லலாம் என நினைத்துக் கொண்டாள்.

ஆஷியா அவளது கனவினை ஒவ்வொரு வரியாகச் சொல்லும் போதும் அஸ்வரின் கண்கள் பணித்தன. அனைத்து சொகுசுகளையும் புறம் தள்ளிவிட்டு தன் பிள்ளைக்காகவும் குறிப்பாக தனக்காகவுமே கத்தாரில் வந்து வசித்துக் கொண்டிருக்கும் ஆஷியாவை நினைத்து அவனது உள்ளம் அழுது இளகியது. இறக்கும் போதுகூட தனக்கு ஸலாத்தினைச் சொல்லிவிட்டு இறந்துவிட நினைத்த ஆஷியாவின் எண்ணத்தினை நினைக்கும் போது அஸ்வர் அழுதே விட்டான். உடனடியாக 'ஷவர்மா'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டுக் கொண்டிருந்தவன், அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான். பல முத்தங்களையும் வழங்கி அவனது அன்பினையும் பகிர்ந்து கொண்டான். தனக்காகவே வாழக் கூடிய ஒரு மனிதம் உலகத்தில் இருக்குமானால், அது நிச்சயமாக ஆஷியா போன்ற மனைவிகளாக மட்டுமே இருக்க முடியுமென விசுவாசமும் கொண்டான். ஆஷியா ஒரு முறை அவனைப் பார்த்தெழுதிய கவிதையொன்று அப்போது ஞாபகத்திற்கு வந்தது.

*வலப் பக்கத்தில் நீயாம்...!*
*இடப் பக்கத்திலும் நீயாம்...!*
*முன்னால் நீயாம்...!*
*பின்னாலும் நீயாம்...!*
*நடுவில் மட்டும் நானாம்...!*
*நாலாப் புறத்திலும் என்னோடு நீ மட்டுமே இருக்க வேண்டும் என்பதனால்...!*

மனைவியின் அன்புக்குமுண்டோ 'ரீப்ளேஸ்மன்ட்'...!

ஆஷியா கண்டது கனவாக இருக்கலாம். ஆனாலும் அதிலே அவள் கண்ட அவல நிகழ்வுகள் ஈராக்கிலும் ஏனைய ஒடுக்கப்பட்ட நாடுகளிலும் கண்கூடாகக் காட்சியளிக்கின்ற நிகழ்வுகள்தாம். அன்றாடம் 'அல்ஜஸீரா', 'பீபீஸீ' மற்றும் ஏனைய தொலைக்காட்சி செய்திகளைப் பார்த்து, முஸ்லிம்களுக்கு நடக்கின்ற அநியாயங்களைப் பார்த்து உள்ளம் நொறுங்கிப் போகின்றவள்தான் ஆஷியா. முஸ்லிம்களை மிருகங்களாகச் சித்தரித்து மிருகங்களை விடவும் கொடிய வகையில் கொலை செய்கின்றவர்கள் உண்மையிம் மனிதர்களா...??? ஆஷியா அடிக்கடி நொந்து போவாள். இப்பேர்ப்பட்ட செய்திகள் அவளது எண்ணங்களைத் தூண்டித்தான் அப்பேர்ப்பட்ட கனவொன்று அவளிடம் உருவாகியிருக்க முடியும்.

மாடுகளைக் கொல்ல வேண்டாமென்கின்ற மக்கள் மனிதர்களைக் கொல்வதற்குத் தயங்குவதில்லை...! விலங்குகளுக்கு உணவுகள் வழங்குகின்ற மக்கள், மனிதர்களை பட்டினி வைத்து அழகு பார்க்கின்றார்கள்...! மிருகங்கள் அருகி வருகின்றதனைப் பெரிதாகப் பேசுகின்ற சங்கங்கள், மனித நேயம் அருகி வருவதனைப் பற்றி அக்கறை கொள்வதேயில்லை...! எல்லா மதத்தவர்களும் பயங்கரவாதத்தில் ஈடுபடுகின்ற போதும், முஸ்லிம்களை மட்டுமே பயங்கரவாதிகளாக சித்தரிக்கின்றனர்...! இஸ்லாத்தில் பயங்கரவாதமேயில்லை என்றால் அதனையும் மறுக்கின்றனர். ஒரு முஸ்லிம் பயங்கரவாதியக இருக்கவே முடியாதென்பதனை வேண்டுமென்றே மறக்கின்றனர். தாம் மட்டும்தான் உலகில் வாழ வேண்டுமெனவும், மற்றவர்கள் குறிப்பாக முஸ்லிம்கள் அனைவரும் சாக வேண்டுமெனவும் இன்னும் சிலர் நினைக்கின்றனர்...!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டிறைச்சியை உண்டதற்காக அல்லது வைத்திருந்ததற்காக ஒரு முஸ்லிம் இந்தியாவில் கொல்லப்பட்டாரே, இதுதான் மனிதனாக மனிதனொருவனுக்குச் செய்கின்ற கடமையா...? மாடுகளை விட மனிதர்கள் எப்படி கீழ்த்தரமானவர்களாக ஆக முடியும் என்பதனை கொன்றவர்கள் சிந்தித்திருக்க வேண்டாமா...? மாட்டிறைச்சி உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற உலக நாடுகளில் இரண்டாம் இடத்தில் இருக்கின்ற இந்திய அரசாங்கத்தினை ஏன் அவர்கள் கொல்லாமல் இன்னும் விட்டு வைத்திருக்கின்றார்களோ...! மனிதன் பல நேரங்களிலும் மடையனாகலாம்; ஆனாலும் இன்னொருவரைக் கொல்லுமளவிற்கு மடையனாகி விடக் கூடாதல்லவா...!

மனித நேயம் பற்றி முழுக் கோட்பாட்டோடு பேசுகின்ற மார்க்கமொன்று இருக்குமானால் அது இஸ்லாம் மட்டுமே என்பதனை பிற மதத்தவர்களிடம் சொல்லும் காலமிது...! 'ஜிஹாத்' என்பது கண்டவர்களையெல்லாம் கொல்வதல்ல; மாறாக மனிதர்களை வாழ வைப்பதற்காகச் செய்கின்ற தியாகம் என்பதனை மற்றவரிடம் சொல்லும் காலமிது...! நபிகளாரைப் பின்பற்றுகின்ற எந்தவொரு (முஸ்லிம்) மனிதனும் அத்தியவசியத் தேவையின்றி ஆயுதங்கள் தூக்க முடியாதென்பதனை பிறரிடம் சொல்லும் காலமிது...! மனித நேயம் அற்றவன் முஸ்லிமாக இருக்க முடியாதென்பதனைச் சொல்லும் காலம் இது...! வாருங்கள் மக்களே, உரத்துச் சொல்வோம், ***'இஸ்லாம் வாழ வைக்க வந்த மார்க்கம்; சாக வைக்க வந்த மார்க்கமல்ல...!'***

**முடிந்தது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயில்லாமல் நானில்லை...!

***எதனையும் புகழ்ந்து எழுதலாம்...! எதற்கும் வரைவிலக்கணமும் வழங்கலாம்...! விளக்கவுரைகள் அனைத்துக்கும் சொல்லலாம்...! படைத்த இறைவனைப் பற்றி அதுவெல்லாம் செய்ய முடியாது...! கண்களுக்கும், காதுகளுக்கும், உள்ளங்களுக்கும் அப்பாலல்லவா அவனது புகழ்ச்சி தழைத்தோங்கி நிற்கின்றது...!***

*'இந்தத் தூதரிடம் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது...'* மனித குலத்தின் இறுதித் தூதர் முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து அல்லாஹ், அல்குர்ஆனில் எடுத்தியம்பிய வாசகம் எத்துனை முக்கியத்துவம் வாய்ந்தது...! மட்டுமல்லாமல் என்றும் பொய்ப்பிக்க முடியா வசனமாகவே இருக்கின்றது...!

சொல்லில் ஒன்றும் நடத்தையிலொன்றும் காட்டும் தலைவர்களுக்கு மத்தியில், உள்ளொன்று புறமொன்று வெளிப்படுத்தும் ஆன்மீக குருக்களுக்கு மத்தியில், சொல்லைச் செயலாகவும், செயலைச் சொல்லாகவும் நடைமுறைப் படுத்திக் காட்டிய ஒரேயொரு தலைவர் முஹம்மது நபிகளாரார் மட்டுமென்றே வரலாறு என்றும் சொல்லும். 'நான் சொல்வதைத்தான் செய்கிறேன்... செய்வதைத்தான் சொல்கிறேன்...' என சினிமா நடிகர் ரஜினிகாந்த் 'பன்ச் டயலோக்' சொன்னாலும், அந்த 'பன்ச் டயலோக்' சரியாக பொருந்துகின்ற ஒரேயொரு மனிதர் முஹம்மது நபிகளாராக மட்டுமே இருக்க முடியும். அதனால்தானே, கிறிஸ்துவ எழுத்தாளர் - 'மைக்கேல் ஹார்ட்', உலக வரலாற்றில் தடம் பதித்து, உலகத்தின் வரலாற்றினையே மாற்றியமைத்த உலகத் தலைவர்கள் நூறு பேர் கொண்ட தனது புத்தகத்தில் முஹம்மது நபியவர்களை முதன்மையானவராகப் பட்டியலிட்டு முஸ்லிம்களுக்கே பெருமை சேர்த்தார். அல்லாஹ் இப்படித்தான் மாற்றுமதத்தவர்களைக் கொண்டும் தனது மார்க்கத்தினைப் பெருமைப்படுத்திக் கொள்கின்றான்.

நடக்கும் போது பெருமிதமற்ற நடையில் ஒரு முன்மாதிரி...! அணியும் உடையில் சுத்தத்தில் ஒரு முன்மாதிரி...! உட்காரும் போது அமர்வில் ஒரு முன்மாதிரி...! பேசும் போது கனிவில் ஒரு முன்மாதிரி...! சாப்பிடும் போது அமைதியில் ஒரு முன்மாதிரி...! தூங்கும் போது அதனழகில் ஒரு முன்மாதிரி...! கொடுக்கல் வாங்கல்களில் யாரிடமுமே இல்லாத முன்மாதிரி...! மக்களோடு மக்களாக இருப்பதில் எல்லோரையும் வென்ற ஒரு முன்மாதிரி...! இப்படியாக தூங்கியெழுந்தது முதல், மீண்டும் உறங்கச் செல்லும் வரை நபிகளாரின் முன்மாதிரிகளை எடுத்துச் சொல்லவும் உறக்கச் சொல்லவும் வார்த்தைகள் மட்டுமல்ல மேடைகளும் பாஷைகளும்கூட போதவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிலும் முன்மாதிரியாகத் திகழ்ந்த நபிகளாரின் வாழ்வின் வயதெல்லையையும் முன்மாதிரியாகவே இறைவன் ஆக்கி வைத்தான். 'எட்டு எட்டா மனித வாழ்வைப் பிரித்துக் கோ' என்று சொல்கின்ற மனித வாழ்வின் விதி, 'நீ எட்டாம் எட்டுக்கு மேலேயிருந்தால் நிம்மதியில்லை' என்றும் சொல்கின்றது. நபிகளாரின் வாழ்க்கையை அப்படியே பிரதியெடுத்து சொன்ன தத்துவம் போலல்லவா இது இருக்கின்றது...! எட்டின் எட்டுக்கள் அறுபத்து நான்கு. அப்படியானால், நபிகளார் அவர்கள் அறுபத்து மூன்றில் கண்களை மூடி உலகத்துக்கு விடை கொடுத்ததும் முன்மாதிரியாகத்தானே இருக்க முடியும்...! உலகத்தின் நடப்புக்களை அல்லாஹ் இஸ்லாத்துக்கு ஏற்ற விதத்தில் நடத்தி வைக்கின்றானா...? அல்லது இஸ்லாத்திற்கு ஏற்றாற்போல் உலக நடப்புக்களை அரங்கேற்றம் செய்கின்றானா...? அவனது 'ஸ்டைலோ' தனி ரகம்...! யாருமே புரியமுடியா ரகம்...!

சுஹைப் ஹாஜியார் தனது எழுபத்தைந்து வயதையடைந்து தள்ளாடிக் கொண்டிருந்த நாட்கள்தான் அவை. 'எட்டாம் எட்டுக்கு மேலேயிருந்தால் நிம்மதியில்லை...' என்கின்ற எல்லையைக் கடந்து பத்து வருடங்களும் ஆகி விட்டது. உண்மையைச் சொல்லப் போனால், மரணத்தைப் பதினைந்து வருடங்களாக எதிர்பார்த்து நிற்பவர்தான் அவர்.

மனிதனுக்கு எந்நேரம் மரணம் வருமென்பதை சொல்ல முடியாதுதான். எவ்வினாடியும் சுவாசிக்கும் காற்றைப் போன்று வரலாம். என்றாலும், அறுபது வயதைத் தாண்டி விட்டால், அதனை எதிர்பார்த்திருப்பதுவும் மனிதனின் இயல்புதானே...! எல்லா மனிதர்களும் அப்படி எதிர்பார்ப்பதில்லைதான். எண்பத்தைந்து வயதைத் தாண்டி விட்டவர்கள்கூட மரணத்துக்கு இன்னும் நேரமுண்டெனத்தான் நினைத்துக் கொண்டேயிருப்பார்கள். ஆனாலும், அல்லாஹ்வைப் பயந்த அடியார்கள் மரண சிந்தனையற்று இருக்க முடியுமோ, என்ன...?

எழுபத்தைந்து வருடங்கள் தற்காலத்தில் வாழ்வதென்பது இலேசிப் பட்டதில்லை. ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளில் இரட்டைச் சதம் அடிப்பது போன்ற சாதனைதான் அதுவும். சுஹைப் நானா இன்னும் எத்துனை வருடங்கள் தாக்குப் பிடித்து சாதனை புரிவாரோ...!

எட்டுக் குழந்தைகளுக்குத் தந்தையானவர் சுஹைப் ஹாஜியார். இருபத்தி ஆறு பேரப் பிள்ளைகளைப் பார்த்தவர். இருபது வயதிலேயே திருமணமானதால், எட்டுக் கொள்ளுப் பேரப் பிள்ளைகளையும் கண்டு கொண்டவர். இதனையும் விட என்னதான் சாதனையொன்று இருக்க முடியும் ஒரு மனிதனின் வாழ்வில்...! பழம்பெரும் கிரிக்கட் வீரர் 'டொன் ப்ரெட்மனி'ன் சாதனைகளையல்லவா முறியடித்து விட்டார் அவர்...!

கதீஜா ஹாஜீம்மாவை சுஹைப் ஹாஜியார் மணம் முடிக்கும் போது கதீஜா ஹாஜீம்மாவின் வயது பதினாறு. 'எனக்கிருபது உனக்குப் பதினாறு...' என்று திரைப்படமொன்றுக்கு பெயரையும் சூட்டி விடலாம் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதினைப் பார்த்து. இன்றைய இளைய தலை முறையினர், குறிப்பாக ஆண்கள் இதற்குத்தான் கடந்த தலை முறைகளாரோடு அதிகம் பொறாமை கொள்கின்றனர்.

***'அவங்க மட்டும் இருவது வயசுல கல்யாணம் முடிச்சுக் கொளிய... எங்களுக்கு மட்டும் முப்பது வயசென்டாலும் கல்யாணம் பேசியோமில்ல... சின்னப் பொடியனாம்...'*** பெண் பாவம் மட்டுமல்ல பொல்லாதது; இன்றைய இளைஞர்களின் இப்பேர்ப்பட்ட உளக் குமுறல்களும் பொல்லாதவைதான்...! சுஹைப் ஹாஜியாருக்கு இன்றைய இளைஞர்களின் 'பதுவா' நிச்சயம் உண்டு. ஹா ஹா ஹா...! விஞ்ஞான வளர்ச்சியில் உலகம் பல கோணங்களில் இன்று முன்னேறிச் சென்றாலும், ஆண்கள் அவர்களது திருமண வயதில் தொடர்ந்தும் பின்னோக்கிச் செல்வதுதான் காலம் இன்றைய வாலிபர்களுக்குச் செய்த துரோகம்...!

கதீஜா ஹாஜீம்மா தனது இருபத்தெட்டு வயதிலேயே எட்டுக் குழந்தைகளையும் பெற்றெடுத்து சாதனை புரிந்தது, அவளுக்கென்னவோ உலகத்தில் முதன் முதலில் குறைந்த வயதில் அதிக குழந்தைகளைப் பெற்றெடுத்தெது அவள்தான் என எண்ணத் தோன்றியது. ஆனால் அவளது உம்மும்மா அந்தச் சாதனையை இரண்டு குழந்தைகள் வித்தியாசத்தில் ஏற்கனவே சாதித்திருந்தது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. 'டச் போன்', 'லப்டொப்', 'டெப்' போன்றவற்றில் இன்றைய தலை முறையினர் படு பயங்கரமாக இயங்கினாலும், கதீஜா ஹாஜீம்மா சுஹைப் ஹாஜியார் அன்று இயங்கியது போன்று இயங்க முடியாது போங்கோ...!

சுஹைப் ஹாஜியார் நல்ல மனிதர். படிப்பறிவற்றவர் என்று சொல்ல முடியாது. படிப்பில்லா விட்டாலும் அறிவு 'ஜாஸ்'தியாக இருக்கும் அவரிடம். அனுபவங்கள் மூலம் மூதாதையர்கள் கொண்ட அன்றைய அறிவு இன்றைய படிப்புக்களைவிட ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்த வஸ்துவென்பதை வரலாற்றுக்கள் மூலம் எளிதில் புரிந்து கொள்ளலாம். அன்றைய நாட்களில் படிப்பதற்குரிய வசதிகள் அரிதாக இருந்தமையும் படிப்புக்கள் பிரபல்யமாகாமல் இருப்பதற்குக் காரணமொன்றுதான்.

தனது தாய்-தந்தையின் நேரடிக் கண்கானிப்பில் ஒழுக்கமாக சிறு பராயத்தினைக் கடந்து வந்தார் சுஹைப் ஹாஜியார். அவரது இளமைக் காலம்கூட இயன்றளவு ஒழுக்கங்களை நிரப்பிக் கொண்ட பருவமாகத்தான் இருந்தது. மனிதனென்கின்ற வகையில் பல பாவங்கள் புரிந்தாலும் அல்லாஹ்வுடனான அவரது தொடர்பு எவ்விதத்திலும் அறுந்து விடாமல் பாதுகாப்பாய் இருந்தது எப்போதும்.

சுஹைப் ஹாஜியாரின் தந்தை நிஸாம் ஹாஜியார் ஒரு தனவந்தர். மாணிக்க வர்த்தகம் மூலம் பெருந் தொகையான பொருளாதாரத்தினை திரட்டிக் கொண்டவர். மாணிக்கக் கற்களுக்கு பட்டை பூசும் தொழில்தான் அவரது பிரதான மாணிக்கத் தொழிலின் பகுதி. நிஸாம் ஹாஜியாரின் வழித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றலில் சுஹைப் ஹாஜியாரும் மாணிக்கக் கற்களுக்குப் பட்டை தீட்டும் தொழிலையே தொடர்ந்தார். 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா...?' என்பதற்கொப்ப தொழிலிலே புலியானார் சுஹைப் ஹாஜியாரும்.

பிள்ளைகள் யாரும் யாரிடமும் கையேந்திவிடக் கூடாதென்றும் தானும் பிறரிடம் கையேந்திவிடக் கூடாதென்றும் நல்ல 'நிய்யத்'தோடு செயல்பட்ட அவர், பிள்ளைகளுக்கு உரிய சொத்துக்களை வாரிசாக வழங்கினார். ஒவ்வொரு பிள்ளைகளுக்குமென தனி வீடு அமைத்துக் கொடுத்து இல்லறத்துக்கு உறையுள் வழங்கியும் வைத்தார். சுஹைப் ஹாஜியார் தந்தையாக அப்பிள்ளைகளுக்குக் கிடைத்தது பெரும் பொக்கிஷமென்றே ஊராட்களும் பேசிக் கொள்வர்.

"கதீஜா... நாங்க நல்லா வயசுக்கு வந்துட்ட... எப்ப மவ்த்தாகுமோ தெரியா எனா...?" எழுபது வயது நிரம்பிய தனது அருமை மனைவி கதீஜாவைப் பார்த்து அடிக்கடி இரவில் உறங்கும் வேளைகளில் கேட்கின்ற கேள்விதான் அது.

சுஹைப் ஹாஜியார் அப்படிக் கேட்கும் போதுதான் கதீஜா ஹாஜீம்மாவுக்கும் மரணத்தினை ஞாபகத்துக்கு வரும். பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டவளாக சுஹைப் ஹாஜியாரைத் தேற்றுவாள் 'மொட்டைத் தலையை' வருடி விட்டு. அத்தோடு அவருக்கு முன்னால் தனக்கு மரணம் வந்துவிட வேண்டுமென்றும் உள்மனதினால் பிரார்த்தித்தும் கொள்வாள்.

இவ்வுலகில் சிறு துன்பமொன்று நேர்ந்து விட்டாலே அனேகர் நினைப்பது, மரணித்து விட்டால் நிம்மதியாய் இருக்குமேயென்றுதான். நிம்மதியெல்லாம் தொலைகின்ற தருணங்கள் மரணத்துக்குப் பின்னர்தான் உதயமாகுமென்பதை அவ்வனேகரும் உணர்வதில்லை. மரணத்துக்குத் தயாரானவர்கள் மரணத்துக்குப் பின் வாழ்வதற்குத் தயாரா...?

கொஞ்ச நாட்களாக சுஹைப் ஹாஜியாரின் நடவடிக்கைகளில்கூட கதீஜா ஹாஜீம்மா மாற்றங்களை உணர்ந்தாள். ஏதோ பேனாவொன்றையெடுத்து வெற்றுக் காகிதமொன்றில் எழுதுவதும், கதீஜா ஹாஜீம்மா அதனைப் பார்க்க முனையும் போது கைகளால் மறைத்துக் கொள்வதும் வேடிக்கையாக இருந்தன.

'அப்படி என்னதான் எழுதுகின்றீர்கள்...?' எனக் கேட்டால், 'அது உனக்குத் தேவையில்லாதது... நீ உன் வேலையைப் பார்...' என சுஹைப் ஹாஜியார் சொல்லி விடுவார். இனி கதீஜா ஹாஜீம்மாவும் செய்வதறியாது, 'எழுதும்... எழுதித் தொலையும்...' என்று சொல்லியும் சொல்லாதவளாகச் சென்று விடுவாள்.

சுஹைப் ஹாஜியார் சுவாரஷ்யமான கடிதமொன்று எழுதுகின்றார். உலகத்தில் இதுவரை யாரும் எழுதாத ஒரு கடிதமது என்பதால் 'கின்னஸ்' புத்தகத்தில்கூட சாதனையாக இடம்பெற அதற்குத் தகுதியுண்டு. அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் கடிதம் இருக்கின்றதே உண்மையில் தித்திப்பானதொன்று. அது சில வேளைகளில் இனிக்கும்; சில போது புளிக்கும்; சில போது கசக்கும்; சில போது இன்னுமெல்லாமோ செய்யும்.

எழுபத்தைந்து வயதில் சுஹைறப் ஹாஜியாருக்குக் காதலா...? யாரோடு...? அதுவும் கதீஜா ஹாஜீம்மாவுக்குத் தெரியாமலா...?

*அன்பும் பாசமும் நிறைந்த என்னைப் படைத்த அல்லாஹ்வுக்கு...!*
*அஸ்ஸலாமு அலைக்கும்...!*

ஓ...! அல்லாஹ்வுக்குத்தான் காதல் கடிதமோ...!

*உனது கிருபையினால் நான் இங்கு நலமாக இருக்கின்றேன். அனைவருக்கும் நலம் நாடுகின்ற நீ நலமாக இருக்கின்றாயா எனக் கேட்பதற்கு எனக்கெங்கே தகுதி...?*

*குழந்தையாக இருந்து, வாலிபனாக வளர்ந்து, முதியவன் என்கின்ற நிலைமைக்கு வந்து விட்டேன். இருபதைத் தாண்டி, ஐம்பதைத் தாண்டி, அருபதைத் தாண்டி எழுபதையும் தாண்டி வந்து விட்டேன். என்னைத் தீண்டும் மரணம் மட்டும் என்னை வந்தடையக் காணோம் இன்னும். காதலன் இன்பங்களை மட்டும் சுமந்தவனாக தன் காதலியை எதிர்பார்த்து காத்திருப்பது போல, மரணத்தினை நான் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதாக எண்ணி விடாதே என் இறைவா...! மாறாக அந்நொடியைப் பற்றிப் பயந்தவனாக, நினைத்தாலே கசப்புணர்வை அடைகின்ற நிலைமையிலேதான் நான் இருக்கின்றேன்.*

*என் இறைவனே...! என்னைப் படைத்தவனே...! எனக்கு நீண்ட ஆயுள் தந்து பெருமை சேர்த்தவனே...! எனது இறுதித் தருணத்தினை இலேசாக்கி வைப்பாயாக. 'ஸக்ராத்து நேரம்' பற்றிய அனுபவம் எனக்கில்லைதான். என்றாலும் அதன் கொடிய அனுபவத்தினை நிறையப் பார்த்திருக்கின்றேன். எனது நண்பர்கள் பட்ட துயரங்களைக் கண்களால் கண்டுள்ளேன். நபிகள் நாயகமவர்கள் சொன்ன வார்த்தைகளை 'ஹதீஸ்'களில் கேட்டுள்ளேன். எனது சீனி வியாதியைப் பரிசோதிக்கும் போது இரத்தம் குத்தியெடுக்கின்ற வலியைக்கூட தாங்க முடியாதவன் நான். அப்படியிருக்கும் போது பெரிய வேதனைகள் தந்து என்னை தாங்க முடியாதவனாய் மாற்றி விடாதே யா அல்லாஹ்...!*

*சிலருக்கு, கோதுமை மாவில் நீண்ட தலை முடியொன்றைச் செலுத்தி மெதுவாக இழுப்பது போன்ற வேதனையிருக்குமாம் அந்த மரண வேளையில். இன்னும் சிலருக்கோ, முற்கம்பிகளை வாயினுள் செலுத்தி, அவற்றினை குடல் வரைக்கும் செலுத்தி, மீண்டும் அதனை பலமாக இழுப்பது போன்ற கடுமையான வேதனை இருக்குமாம் என்று வயதில் மூத்தவர்கள் சொல்கின்றார்கள். யா அல்லாஹ், கோதுமைக்குள் மாட்டிக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொண்ட தலை முடியாக எனது உயிரைக் கைப்பற்றுவாயாக...! உனது வேதனையைக் கொஞ்சமேனும் எனதுடம்பு தாங்காது இறைவனே...!*

எவ்வளவுதான் நல்ல மனிதனாக இருந்தாலும், இறக்கும் போது அல்லாஹ்வின் திருப் பொருத்தம் இல்லாமலிருக்குமானால், அவன் நஷ்டத்தில் விழுந்து விட்டவன் என்பதனை அறியாத முஸ்லிம்கள் இருக்க முடியாது. அந்தப் பயமும் பயங்கரமும்தான் சுஹைப் ஹாஜியாரை வாட்டி வதைத்ததோ...!

*யா அல்லாஹ்...! நீ எனக்குச் செய்த அருட்கொடைகளை வேறு யாருக்குமே செய்திருக்க மாட்டாய் என்கின்ற அளவுக்கு எனக்கு செய்திருக்கின்றாய். அவற்றுக்கு எப்படி நன்றி செலுத்துவதென்று அறியாதவனாய் இருக்கின்றேன். நன்றிகள் போதியளவு செலுத்தவுமில்லை. 'மனிதன் நன்றியற்றவனாக இருக்கின்றான்' என நீ அல் குர்ஆனில் கூறிய கூற்று அவ்வளவுக்கு நிதர்சனமானது யா அல்லாஹ்...!*

*முஸ்லிமாக பிறக்க உன்னிடம் விண்ணப்பித்ததாக எனக்கு நினைவில்லை. நல்ல மனிதனாக என்னை அமைத்து வைக்கவும் உன்னிடம் விண்ணப்பம் இடவில்லை. ஆரோக்கிய வாழ்வையும் உன்னிடம் கேட்டுப் பெறவில்லை. சொகுசானதும் நிம்மதியுமான வாழ்க்கையையும் உன்னிடம் இறைஞ்சவில்லை. நீண்ட ஆயுளைப் பெற்று நிறைய விடயங்களை மரணத்துக்கு முன் கண்டு கொள்ளவும் உன்னிடம் கெஞ்சவில்லை. இவற்றோடு சேர்த்து இன்னும் பல மடங்கு விடயங்களை எனக்கு இவ்வுலகில் அமைத்துத் தந்ததற்கு உனக்கு நன்றி செலுத்தவில்லை என் இறைவனே...! முஸ்லிமல்லாதவனாக மட்டும் என்னை நீ மாற்றியிருந்தால் நரகத்தில் போய் பொசுங்கியிருப்பேனே யா அல்லாஹ்...! யாரெல்லாம் நன்றியுள்ள அடியானாக உன்னிடம் இருக்கின்றார்களோ, அவர்களோடு என்னையும் சேர்த்து விடு ரஹ்மானே...!*

'முஸ்லிமற்றவனாகப் பிறப்பது உன் தவறன்று; ஆனால் முஸ்லிமற்றவனாக மரணிப்பதுதான் உன் தவறு' என்கின்ற வியாக்கியாணம் உண்மைதான். முஸ்லிமாக மரணிப்பது எவ்வளவு பெருமைக்குரிய விடயம் ஒரு மனிதனுக்கு...! சுவர்க்கத்துக்கு சொந்தக்காரர்களல்லவா முஸ்லிம்கள்...! 'நீங்கள் முஸ்லிமல்லாதவர்களாக மட்டும் மரணித்து விட வேண்டாம்' என அல்லாஹ் அல்குர்ஆனில் வீணுக்கா குறிப்பிடுகின்றான்...?

*எனது கருணையாளனே...! இன்னும் எனக்கிருப்பது கொஞ்ச நாட்கள்தான். இரண்டு பேர் உலகத்துக்கு கொண்டு வருவார்களாம். நான்கு பேர் உலகத்திலிருந்து கொண்டு செல்வார்களாம். கொண்டு வந்தவர்கள் யாரென்று தெரியுமாம். கொண்டு செல்பவர்கள் யாரென்று தெரியாதாம். புதைகுழியென்னும் அந்த 'கப்ர்' வாழ்க்கை என்னை மிகவும் அச்சத்தில் ஆழ்த்துகின்றது யா அல்லாஹ்...! நான் உயிருக்குயிராய் நேசித்த அனைத்து மக்களும், அனைத்துப் பொருட்களும் என்னை விட்டுப் பிரிந்த*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிலையில் தனியாக, நபிகளாரின் சுன்னத்தான எனது தாடியுடனும் நற்கருமங்களுடனும் மட்டும் அந்தப் புதைகுழிக்குள் நான் புகுந்து விடுகின்ற தருணத்தைப் பயப்படுகின்றேன். கப்ர் வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் நிச்சயமாக வெற்றியாளர்கள் யா அல்லாஹ்...! அந்தக் கூட்டத்தில் என்னை நீ ஆக்கி வைப்பாயாக நாயனே...!*

*எனது தாயின் கருவறையில் இருட்டில் நானிருந்தேன். கப்ருக்குள்ளும் இருட்டில் நானிருக்கப் போகின்றேன். கருவறையின் இருட்டில் எவ்விதத் துன்பமும் நான் அனுபவிக்கவில்லை. என் தாயோடு கூத்தடித்து அவளை உதைத்து விளையாடி சந்தோஷமாக இருந்தேன். அதே போல எனது கப்ர் இருட்டையும் சந்தோஷகரமானதாக அமைத்து விடு யா அல்லாஹ்...! வலப்புற விலாவும் இடப்புற விலாவும் ஒன்றோடொன்று பிணைக்கப் பட்டு உடல் நெருக்கப் படுகின்ற வேதனையை எனக்குத் தந்து விடாதே யா அல்லாஹ்...! ஒரு நுழம்பு கடித்தாலும் வேதனையில் கத்தி விடக் கூடிய நான் உனது இறுக்கத்தைத் தாங்க முடியாது இறைவனே...! புதைகுழியில் நான் கிடத்தப்பட்டதும் புது மாப்பிள்ளை போன்று நிம்மதியாக உறங்கிவிட எனக்குத் துணை நிற்பாய் இறைவனே...!*

இலேசுப்பட்ட வாழ்வா கப்ருடைய வாழ்வு...? யாருக்கும் அதில் அனுபவமில்லாத காரணத்தினால் அலட்சியமாக இருக்கின்றோம். நபிகளாரது நெருங்கிய தோழர் ஒருவரையே கப்ர் நெருக்கும் போது நபிகளார் சொன்னார்களாம், 'கப்ர் நெருக்க முடியாத ஒரு மனிதர் இருக்குமானால் அவர் இந்த தோழராகத்தான் இருக்க முடியும்' என்று. அவரையே கப்ர் இறுக்கிக் கொண்டதென்றால் நாங்கள் எம்மாத்திரம்...?

கொலை செய்கின்றோம். கொள்ளையும் அடிக்கின்றோம். திருடுகின்றோம். பிறர் மனதைத் துன்புறுத்தவும் செய்கின்றோம். அயலவர்களை நோவினை செய்து காணி பூமிகளை அபகரிப்போர் எத்துனைப் பேர்...! நம்பிக்கைத் துரோகம் செய்வோர் நம்மில் எத்துனைப் பேர்...! அனாதைகளின் சொத்துக்களில் விளையாடுவோர் நம்மில் எத்துனைப் பேர்...! மாமியார் வேடங்களிலும், மாப்பிள்ளையின் சகோதரிகளின் வேடங்களிலும் வீடு புகுந்த மணப் பெண்களின் மனதைத் துன்புறுத்துவோர் நம்மில் எத்துனைப் பேர்...! கப்ருடைய எண்ணங்கள் இருந்தால் இப்படிச் செய்வார்களா இவர்கள்...? எப்படி அல்லாஹ்விடமிருந்து வந்தோமோ அப்படியே அவனிடம் செல்லக் கூடிய நமக்கு உலகில் எத்துனைத் துள்ளல்கள்...! ஆடாதடா ஆடாதடா மனிதா... நீ ஆட்டம் போட்டால் அடங்கிடுவாய் மனிதா...! உண்மைதானே...!

சுஹைப் ஹாஜியாரின் கடிதம் இன்னும் நீண்டது.

*யா அல்லாஹ்...! என்னால் இயன்றளவு உன்னை வணங்கி வழிபட்டேன். மனிதனென்கின்ற வகையில் பல விதமான தவறுகள் செய்தாலும், உன்னோடு இருக்கின்ற பிடிப்பினை இன்று வரையில் தளர விடவில்லை. நான் என்ன செய்தாலும் நீ என்னோடு இருக்கின்றாய் என்கின்ற எண்ணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்னுள் இருந்து கொண்டே இருக்கின்றது. பாவங்கள் புரிகின்ற போதும்கூட நீ பார்க்கின்றாய் என்கின்ற எண்ணங்கள் என்னில் இல்லாமலில்லை. ஆனாலும் பாவத்தைச் செய்து விடுவேன் யா அல்லாஹ்...! நீ மன்னிப்பாளன்...! தயாளன்...! என்னை நிச்சயமாக பொருந்திக் கொள்வாய்...! உண்மையைச் சொல்வதாக இருந்தால், நீ மன்னிப்பாய் என்கின்ற தைரியத்தில்தான் அப்பாவங்களைச் செய்தும் வந்தேன் எனது 'ரப்'பே...!*

*எனக்குத் தெரிந்த மட்டில், பதினைந்து வயது முதல் சிரத்தையெடுத்துத் தொழுகின்றேன். ஆனாலும் நிறைய ஸீபஹீத் தொழுகைகளை வீணடித்து விட்டிருக்கின்றேன். தொழுகைகளில் முக்கியமானது ஸீபஹீத் தொழுகைதான் என நான் அறியாமலில்லை. ஆனாலும் தெரிந்து தெரிந்து பல நாட்கள் நேரத்துக்குத் தொழுததில்லை. இவற்றையெல்லாம் ஒன்று விடாமல் கணக்காளன் போன்று கணக்கு வைத்திருப்பாய் இறைவனே...! இவற்றுக்கெல்லாம் கணக்குத் தீர்த்தால் நான் தாங்க மாட்டேன் ஒரு போதும் யா அல்லாஹ்...! கணக்குத் தீர்த்து விடாதே...! கருணை மட்டும் காட்டிவிடு...!*

*இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைக்கூட நான் தவறியதில்லை. பத்து வயதிலிருந்தே றமழான் மாதத்தினை அடைந்து நோன்புகளைப் பிடித்து வருகின்றேன். இருபது வயதிலிருந்தே சரியோ தவறோ ஸக்காத்துக் கொடுத்து வருகின்றேன். இரண்டு ஹஜ்ஜீக்கள் செய்தேன். பத்துப் பன்னிரெண்டு உம்ராக்கள் செய்தேன். இதுவெல்லாம் உனது கிருபையினால் எனக்கு என் வாழ்வில் கிடைத்த பொக்கிஷங்கள் யா அல்லாஹ்...! இவற்றையெல்லாம் பெயர் புகழுக்காகச் செய்யவில்லை. உனது திருப் பொருத்தத்தினை மட்டுமே மையமாக வைத்துச் செய்தவை. இவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு என்னை சிறு துளிகூட தண்டிக்காமல் சுவர்க்கத்துக்கு அனுப்பி வைப்பாயாக நாயனே...!*

அப்பப்பா...! அறுபது வருடத் தொழுகை... அறுபத்தைந்து வருட நோன்புகள்... குறைந்தது ஐம்பது வருட ஸக்காத்துக்கள்... இரண்டு ஹஜ்ஜீக்களாம்... குறைந்தது பத்து உம்ராக்களாம்... இதனை விட சுன்னத்தான கிரியைகளும் தான தர்மங்களும் இன்னும் வேறாக இருக்கும்... இதுவெல்லாம் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளாக இருந்தால் சுஹைறப் ஹாஜியாரைப் போன்ற அதிர்ஷ்டசாலி வேறு யார்தான் இருக்க முடியும்...! அல்லாஹ்விடத்தில் நன்மைக்குக் கூலி ஒன்றுக்குப் பத்து என்கின்ற கணக்கில் இவரது கிரியைகளை வைத்துப் பார்த்தால் மலக்குமார்கள் மட்டும்தான் அவரது கணக்காளனாக இருக்க முடியும். மனிதர்களாலும் ஜின்களாலும் எண்ணிவிட முடியாது போங்கோ...!

தப்லீக் ஜமாஅத்தினர் அடிக்கடி சொல்லக் கூடிய ஒரு விடயம்தான். 'ஒரு மனிதனைப் பார்த்தால் இன்னொரு மனிதனுக்கு கட்டாயம் பொறாமை ஊற்றெடுக்க வேண்டும். அந்த மனிதன் தனது வயதில் சிறியவனென்றால், 'ஐயோ எம்மை விட எவ்வளவு குறைவாக பாவங்கள் புரிந்திருப்பார்' என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ண வேண்டுமாம். எம்மை விட வயது கூடியவராக இருந்தால், 'ஐயோ எம்மை விட எவ்வளவு நன்மைகள் சேமித்து வைத்திருப்பார்' என பொறாமை கொள்ள வேண்டுமாம். உண்மையான சமாச்சாரம்தான். தப்லீக் ஜமாஅத்தினரது இப்பேர்ப்பட்ட கண்டு பிடிப்புக்கள் பாராட்டத்தக்கவை மட்டுமல்ல, சுஹைப் ஹாஜியாரின் வயதோடும் பொருந்துகின்ற ஒரு 'தியரி' என்றே கூறலாம்.

*முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஹதீஸ் எனக்கு அடிக்கடி ஞாபகத்தில் வரும் யா அல்லாஹ்...! மறுமையில் ஒரு மனிதன் மலையளவு நன்மைகள் சேர்த்து வருவானாம். சுவர்க்கத்துக்குச் செல்லக் கூடியவன்தான் என மக்கள் அவன் பற்றி நினைக்கும் போது, திடீரென நரகத்துக்குச் சென்று விடுவானாம். அதற்குக் காரணம் அவன் மக்களோடு நடந்து கொண்ட விதம்தானாம். அம்மனிதனால் பாதிக்கப் பட்டவர்கள் அல்லாஹ்விடம் புகார் அளிக்க, அவனது நன்மைகள் புகார் அளித்தவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து, அதுவும் போதாமல் போகும் பட்சத்தில் புகார் அளித்தவர்களது பாவங்கள் இவனது கணக்கில் வரவு வைக்கப் படுமாம். இப்பேர்ப்பட்ட மனிதனாவதை விட்டும் என்னைப் பாதுகாப்பாயாக என் இறைவனே...!*

*வயது தெரிந்த பருவத்திலிருந்து ஒரு புற்பூண்டுக்குக் கூட அநியாயம் நினைத்ததில்லை. தெரிந்து ஒருவர் மனதை நான் புண்படுத்தியதுமில்லை. ஆனாலும் தவறுதலாக பலரது மானங்களில் நான் விளையாடியிருக்கலாம். அதற்காக எனது கணக்கில் கை வைத்து விடாதே யா அல்லாஹ்...! நீ கொடுப்பதில் முன்னோடி. உனது அருட்கொடைகளை என்னால் பாதிக்கப்பட்டவர்கள் யாரேனும் இருந்தால், நான் பொறாமை கொள்ளும் அளவுக்காவது அவர்களுக்குப் பன்மடங்காக வழங்கி விடு. எனது கணக்கில் மட்டும் பாரத்தினை வைத்து விடாதே. நான் வங்குரோத்துக்காரன் ஆகி விடுவேன் நாயனே...!*

*யா அல்லாஹ்...! இன்று வரை எனது மனச்சாட்சி ஒருவரிடம் மட்டும் மன்னிப்புக் கேட்க வேண்டுமெனச் சொல்கின்றது. அந்த நபர் என்னால் பாதிப்புக்கு உண்டான ஒரு பெண். ஒளிவு மறைவுகள் அனைத்தையும் அறிகின்ற நீ, மனிதனது மனதுக்குள் இருப்பவைகளை அறிகின்ற நீ, நான் யாரைச் சொல்ல வருகின்றேன் என்பதை நன்கு அறிவாய். ஸாபிதாவைத்தான் சொல்கின்றேன். எனது மரணத்துக்கு முன்னால் அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள எனக்கு அவகாசமொன்றைத் தருவாயாக...! அல்லது அவளாகவே என்னை மன்னித்து விடுவதற்கு அவளுக்குத் திறந்த மனதினைக் கொடுப்பயாக...!*

சுஹைப் ஹாஜியார் ஸாபிதாவைக் காதலித்தவர். *'மோசமில்ல சுஹைப் ஹாஜி...'.* ஸாபிதாவும் சுஹைப் ஹாஜியாரைக் காதலித்தவள்தான். பல வருடங்கள் காதலித்தும் ஒன்று சேர முடியாமல் போன வரலாறுதான் அவர்களுக்கு இறுதியில் சொந்தமானது. இஸ்லாம் மார்க்கத்தில் மட்டும் இருவரும் இல்லாதிருந்தால் எப்போதோ இருவரும் தற்கொலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரக்தியில் ஒன்றாக செய்திருப்பார்கள். அவ்வளவுக்கு களை கட்டிய காதல்தான் அவர்களது காதல். சுஹைப் ஹாஜியாரின் தாய், ஸாபிதா வேண்டாமென அடம் பிடிக்க, எவ்வளவோ போராடிப் பார்த்தார் அவரும். குத்துச் சண்டை வீரர் முஹம்மது அலியுடன் வெல்வது அவ்வளவு சுலபமில்லையே. கடைசியில் சுஹைப் ஹாஜியார் எலியாகத் தோற்றுப் போனார். அல்லாஹ்வின் நியதிப்படி இறுதியில் கதீஜாவை அவர் மணக்க, ஸாபிதாவின் மானமோ ஊர் தெருவெங்கும் காற்றில் பறந்தது காற்றாடியாக. இந்த நடவடிக்கையினால் ஸாபிதாவுக்கு மாப்பிள்ளை தேடுவதுகூட சிரமமானது. ஸாபிதாவின் மானம் காற்றில் பறந்ததும், அவளது திருமணம் காலம் தள்ளி நடந்ததும் இன்று வரை சுஹைப் ஹாஜியாரின் உள்ளத்தை நொறுக்கிக் கொண்டுதான் இருந்தன. ஸாபிதா சுஹைப் ஹாஜியாரை மன்னித்து விட்டால், எவ்வளவு சந்தோஷப்படுவார் மறுமையில் அவர்...! வீடு தேடிச் சென்று ஸாபிதாவிடம் மன்னிப்புக் கேட்க அடிக்கடி அவரது இதயம் துடிக்கும்; ஒரு முறையேனும் அவளைத் தனியாக சந்திப்பதற்கு அல்லாஹ் சந்தர்ப்பத்தினை வழங்க மாட்டானா என்றும் அவருள்ளம் ஏங்கும். பல வருடங்களாக தருணம் காத்திருப்பவருக்கு இன்னும் தருணங்கள் வரவில்லை.

ஸாபிதாவின் வாழ்க்கைக் குறிப்பு சரியாக ஒரு சினிமாப் பாடல் வரிக்கு ஒத்திருந்தது. 'ஆணின் இனம் அது கிளை மாதிரி; பெண்ணின் இனம் அது வேர் மாதிரி; கிளை பேசினால் அது ஊர் கேட்குமே; வேர் பேசினால் அதை யார் கேட்பது...?' ஸாபிதாவும் திருமணத்தில் இணைந்து பல குழந்தைகளைப் பெற்று இப்போது சந்தோஷமாகத்தான் இருக்கின்றாள் என்பது சுஹைப் ஹாஜியாருக்கு ஒரு மன நிறைவுதான். அதனால்தான் இன்று வரைகூட அவளுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தித்தும் கொள்கின்றார்.

மக்கள் பலரும் இஸ்லாத்தின் அடிப்படைகளை மறந்து விட்டது துரதிர்ஷ்டவசம்தான். இபாதத்துக்கள் மட்டும் செய்து கொண்டால் அல்லாஹ்வை நெருங்கி சுவர்க்கத்துக்குச் சென்று விடலாம் என நினைக்கின்றனர். முடியாது... முடியவே முடியாது... அல்லாஹ்வின் படைப்புக்களுக்கு இழுக்கினைச் செய்து விட்டு, அவரவர்களிடம் யார் மன்னிப்புக் கேட்காமல் மரணிக்கின்றார்களோ அவர்கள் எவ்வளவுதான் அல்லாஹ்வுக்கு நற்காரியங்கள் புரிந்தாலும், அவர்களது இருப்பு நரகத்தில் நிச்சயிக்கப்படும். அல்லாஹ் நம்மனைவரையும் பாதுகாப்பானாக...!

***யா அல்லாஹ்...! என் வாழ் நாளில் அழகிய குழந்தைப் பாக்கியங்களை எனக்குத் தந்தாய். எல்லாப் பிள்ளைகளையும் எனது அறிவுரைகளைச் செவிசாய்க்கக் கூடியவர்களாகவும் ஆக்கி வைத்தாய். இன்று வரையில் அவர்கள் நல்லவர்களாகவே சமூகத்தில் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட எட்டுப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்குவதென்பதும் உன் புறத்தால் எனக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியம்தான்...!***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***இதுவெல்லாவற்றிற்கும் மேலாக கொடுத்தாயே ஒரு புதையல்...! அதுதான் என் வாழ்க்கைக்குக் கிடைத்த பெரிய அஸ்த்திவாரம். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரமென்பதை யார் அனுபவித்துச் சொன்னார்களோ தெரியவில்லை. ஆனால் நான் அனுபவித்துச் சொல்கின்றேன். மனையைக் காக்கும் மனைவியாக, துணைக்கு நிற்கும் துணைவியாக என்னோடு இருக்கின்றாள் அவள். நான் உன்னிடம் கேட்டுப் பெறாத விடயங்களில் எனது கதீஜாவும் ஒன்றுதான் யா அல்லாஹ்...! அவளுக்கும் நீ கிருபை செய்து விடுவாயாக...!***

***தாயின் பாதத்தில் ஆண்களுக்கு சுவர்க்கம் என்பது போல கணவனது திருப் பொருத்தத்தில் மனைவிக்கு சுவர்க்கம் என்பது இஸ்லாமியக் கோட்பாடு. எனது திருப் பொருத்தம் அவளுக்கு ஏற்கனவே உரித்தாகி விட்டது யா அல்லாஹ்...! அவளை சுவர்க்கத்துக்குத் தகுதியானவளாக எனது புறத்தால் எழுதித் தருகின்றேன்...!***

கதீஜா ஹாஜீம்மா சுஹைப் ஹாஜியாரின் வாழ்வில் முக்கிய பங்குதாரர் என்றே சொல்ல வேண்டும். திருமணம் முடித்தவர்கள் பலர், 'ஏன்டா இவளைக் கட்டி வாழ்வைத் தொலைத்தோம்..' என முகம் சுழிக்கின்ற வேளைகளில், சுஹைப் ஹாஜியாரோ கதீஜாவைக் கைப் பிடித்த நாள் முதல் இது வரைக்கும் சந்தோஷமாகவே இருக்கின்றார். 'உங்களது துணையிடத்தில் உங்களுக்கு மன நிம்மதியுண்டு' எனக் கூறுகின்ற அல்குர்ஆனின் கூற்று சுஹைப் ஹாஜியாரின் வாழ்வில் மெய்யானது. எல்லோரது வாழ்விலும் அது மெய்தான். ஆனாலும் மக்கள் புரியாதிருக்கின்றனர்.

ஸாபிதாவை மறந்து தாயின் வேண்டுகோளின் பேரில் கதீஜாவை சுஹைப் ஹாஜியார் மணம் முடித்தாலும், கொஞ்ச நாட்களிலேயே சுஹைப் ஹாஜியாரின் வீட்டுப் புறத்தால் கதீஜா பல துன்பங்களுக்கும் உட்பட்டாள். மகனைக் கைகளுக்குள் சூனியம் செய்து மடக்கிப் போட்டுக் கொண்டாள் என அவளோடு கோபம் சுஹைப் ஹாஜியாரின் தாய்க்கு. சகோதரனின் இணைப்பைத் துண்டித்து விட்டாள் என சுஹைப் ஹாஜியாரின் சகோதரிகளுக்குப் பொறாமையும் கோபமும். இந்திய நாடகங்களில் வரும் மாமியார் கொடுமைகள் போலில்லா விட்டாலும், ஒரு குறைந்த பட்ச மாமியார் வீட்டுக் கொடுமையாக இருந்தது. **ஒழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு சுமத்துவது ஏழு பெரும் பாவங்களில் ஒன்றாகுமென்பதனை மக்கள் ஏன் அறிவதில்லையோ...!** பெற்ற தாயாக இருந்தாலும் அல்லாஹ் கொடுக்க மாட்டான் 'டிஸ்கொவுன்ட்' இந்த விஷயத்தில் மட்டும்.

பெண்கள்தான் நரகத்தில் அதிகமதிகம் இருப்பதாக நபிகளார் அவரது விண்ணுலக யாத்திரையில் கண்டு கொண்டார்கள். அதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், இன்னொருவர் மீது வீணாக சுமத்துகின்ற பழிச் சொற்களும் அடங்கலாமல்லவா...! ஆயிரமாயிரம் 'தஹஜ்ஜத்து'க்கள் தொழுகின்ற பெண்களும், ஆயிரமாயிரம் நோன்புகள் நோற்கின்ற பெண்களும் நடத்தைகளை மாற்றிக் கொள்ளாத வரை நரகத்திலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பார்கள். நாளை மறுமையில் பெண்கள் தோற்பது அனேகமாக அவரவர்களது மருமகள்களிடமாகத்தான் இருக்குமோ...!
ஒப்பீட்டளவில் ஆண்களைவிட பெண்கள்தான் அதிகமதிகம் ஆன்மீகத்தில் சிறந்து விளங்குவர். அல்குர்ஆன் ஓதுவதில் பெண்கள்தான் மும்முரம். இரவு நேரத் தொழுகைகளில் அவர்கள்தான் முதலாமிடம். இறைவனை துதி பாடுவதிலும் அவர்களை வெல்ல ஆண்களால் அனேகமாக முடியாது. இப்படியாக எல்லா வணக்க வழிபாடுகளிலும் முதன்மைச் சித்தி பெற்று விட்டு, நரகத்தில் அதிகமாக இருப்பார்களானால், அதற்குக் காரணம் அவர்கள் மக்களோடு நடந்து கொண்ட விதங்களாகத்தானே இருக்க முடியும். பெண்களே மற்றவர்களது மானங்களோடு விளையாடுவதை விட்டு விடுங்கள் சுவர்க்கம் வேண்டுமானால்...!

***யா அல்லாஹ்...! எனது தாயையும் தந்தையையும் ஒரு போதும் நான் நோவினை செய்ததில்லை. என்னால் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு அவர்களுக்குப் பணிவிடைகள் செய்தேன். ஆனாலும், கதீஜாவை நான் திருமணம் முடித்ததன் பின்னால் எனது தாய்க்கு என்ன நடந்ததென்று என்னால் ஜீரணிக்க முடியவில்லை. எனது தாயின் அன்பு குறைந்து சென்றது. என்னைப் பார்த்துக் கொள்ள ஒருத்தி வந்து விட்டதால் அவளது அன்பை இடை நிறுத்திக் கொண்டாளா...? அல்லது அவளது அன்பு அவ்வளவுதானா...? அல்லது மற்றையவர்களது பேச்சினைக் கேட்டுக் கொண்டு நானே வேண்டாமெனச் சொல்லிக் கொண்டாளா...? நீதான் யாவற்றையும் அறிந்தவன். மரணம் கண்ட எனது தாய் தந்தையருக்கு நீ அருள் செய்து, அவர்களை நோவினை செய்யாத மகனாக என்னை ஏற்றுக் கொள் நாயனே...!***

***'ஓராணை விட பெண்ணும், ஒரு பெண்ணை விட மற்றொரு ஆணும் சிறந்ததில்லை. அல்லாஹ்வின் அச்சத்தில் மட்டுமே அவர்கள் இன்னொருவரை விட உயர்ந்தவர்கள்'*** என்பது மற்றொரு இஸ்லாமியக் கோட்பாடு. அந்த வகையில் தாயை விட தாரமும், தாரத்தினை விட தாயும் ஒரு நாளும் சிறந்தவர்களாக முடியாது. இவர்களை சிறந்தவர்களாக சித்தரிக்கும் காரணி அன்பு அச்சம் என்கின்ற விடயமாகத்தான் இருக்க முடியுமே தவிர வேறு இருக்க முடியாது. துன்பப்பட்டு பெற்றெடுத்து முப்பது வருடங்களாக வளர்த்தாலும் அதன் பின்னர் தாயிடம் அன்பு மங்குமானால்... முப்பது வயது முதற்கொண்டு தானிறக்கும் வரை அன்பினை மங்கச் செய்யாமல் எல்லாவற்றுக்கும் ஒரு தாயை விட துணை நிற்கும் தாரமானால்... யார்தான் சிறந்தவர்களாக இருக்க முடியும்...? பலருக்கும் தாய்தான் கடைசி வரை அன்பு காட்டினாலும், சுஹைப் ஹாஜியார் போன்ற சிலருக்கு கடைசி வரை அன்பு காட்டுவது தாரம்தான்.

'தாரத்தினை விட தாய்தான் சிறந்தவள்' என்பது எப்போதும் உண்மையாக இருக்கட்டும். 'சில தாரங்களும் தாய்களை விட சிறந்தவர்கள்' என்பதையும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யா அல்லாஹ்...! அன்று முதல் நான் உன்னிடம் கேட்டு வந்த துஆக்களில் 'எனது கையை கொடுக்கும் கையாக ஆக்கி வைத்து விடு மாற்றமாக பிறரிடம் எடுக்கும் கையாக மாற்றி விடாதே என்பதுவும் ஒன்று. அந்த வகையில் இது வரையில் நான் யாருக்கும் கடனில்லை. கடனாளியாக மரணிப்பது எப்பேர்ப்பட்ட கொடுமையான 'ஸ்டேடஸ்' என்பதை நான் அறிவேன். கடனாளியாக மரணித்த உயிர்த் தியாகியாக இருந்தாலும் சுவர்க்கம் செல்வதென்பது கடினமென்பதை உனது தூதர் போதனைகளில் இருந்தும் தெரிந்து வைத்திருக்கின்றேன். கடனாளியாக மரணிப்பதை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.*

*ஆனால் பலரும் எனக்குக் கடன் தர வேண்டியுள்ளனர். எனது மரணத்துக்கு முன்னால் அவர்கள் அவற்றினைத் திருப்பிச் செலுத்தி விடுவதற்கு அவர்களுக்கு அருள் புரிந்து விடுவாயாக. அப்படி அவர்களுக்குத் திருப்பிச் செலுத்த முடியாமல் போனால், எனது மரணத்தின் பின்னர் எனது குடும்பத்தினரிடமாவது அவற்றினைத் திருப்பிச் செலுத்த அவர்களுக்கு சக்தியைக் கொடுப்பாயாக. அப்படியும் அவர்களால் திருப்பிச் செலுத்த முடியாமல் போனால், மறுமையில் அவர்களை அதற்காகத் தண்டித்து விடாமல், அதற்குரிய பூரண நன்மைகளை எனக்குப் பல மடங்காகத் திருப்பித் தருவாயாக...!*

கடனென்பது வாழ்க்கையில் தவிர்க்க முடியாததொன்றுதான். ஆனாலும் உண்மைத் தேவைக்காக வாங்குபவர்களை விட ஆடம்பரத் தேவைகளுக்காக வாங்குபவர்கள்தான் உலகில் அதிகம். அது போக, சிலரோ திருப்பிச் செலுத்துகின்ற எண்ணங்களே இல்லாமல் கடன்கள் வாங்கி விடுகின்றனர். கடன்களை வாங்கி விட்டு, தவணையையும் குறிப்பிட்டு விட்டு, தவணை வந்தும் அது பற்றிப் பேசாதவர்களும் சமூகத்தில் நிறைந்து விட்டனர். கடன் எடுத்த இன்னும் சிலரோ கடன் கொடுத்தவர்களை மரியாதையாக நடாத்துவதும் இல்லை. இப்போதிருக்கின்ற புது 'ட்ரென்ட்' என்னவென்றால், கடன் கொடுத்தவன் கடன் எடுத்தவன் வருவதனைக் கண்டால் வெட்கப்படுவதும் ஓடி மறைந்து கொள்வதும்தான். 'நாய்கள் ஜாக்கிரதை...' என சில வீட்டு நுழைவாயில்களில் போட்டிருப்பார்கள். அதே போன்று நரக நுழைவாயிலிலும் 'கடன் எடுத்தோர் ஜாக்கிரதை...' என எழுதப்பட்டிருக்குமோ...!

நபிகளார் சொன்னார்கள்... யார் கடனாளிகளுக்கு தவணை முடிந்தும் சலுகைகள் வழங்கி வைக்கின்றார்களோ அல்லது அவற்றினைத் தள்ளுபடி செய்கின்றார்களோ அவர்களுக்கு அழகிய கூலி அல்லாஹ்விடம் இருக்கின்றது. அரசியல்வாதிகளை வரவேற்கும் போது, 'உங்களது வரவு நல்வரவாகட்டும்...' என்று நுழைவாயில்களில் எழுதி வைத்திருப்பார்களே... அதே போன்று கடனாளிகளை மரியாதை செய்தவர்களைப் பார்த்து, 'உங்களது வரவு நல்வரவாகட்டும்...' என்று சுவர்க்கத்து நுழைவாயிலில் எழுதி வைத்திருப்பார்களோ...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***யா அல்லாஹ்...! பெரும் பாவங்களை விட்டும் நான் உன்னிடத்தில் பாதுகாவல் தேடுகின்றேன். உனக்கு இணை கற்பித்தல், பெற்றோர்களை நோவினை செய்வது, வட்டிகளை உண்பது, சூனியம் செய்வது, விபச்சாரம் புரிவது போன்ற முக்கியமான பெரும் குற்றங்களிலிருந்தும் என்னைப் பாதுகாத்து விடு நாயனே...! குறிப்பாக, இஸ்லாத்தில் புதிதாக புகுத்தப்பட்ட சம்பிரதாயங்களிலிருந்து என்னைத் தூய்மைப் படுத்தி விடு. அறியாமல் இஸ்லாத்தில் இல்லாத நூதன விடயங்களில் கவனங்களைத் திருப்பி விட்டேன். எப்பொழுது அதுவெல்லாம் நரகத்துக்கு இட்டுச் செல்லுமென தெரிந்து விட்டதோ, அப்போதே உன்னிடம் மன்னிப்புக் கேட்டுத் தெளிந்து விட்டேன்...!***

சுஹைப் ஹாஜியார் மார்க்க அறிஞர்கள் சொல்கின்ற விடயங்களை கண் மூடித் தனமாய் பின்பற்றக் கூடிய ஒருவராகவே பல வருடங்கள் இருந்து வந்தார். அறிஞர்கள் சொல்வதெல்லாம் நபிகளார் காட்டித் தந்தவைகளா அல்லது அல்லாஹ் சொன்னவைகளா என்பதை உரசிப் பார்க்காதவர். அல்லாஹ்வின் புறத்தால் அருள் அவருக்குக் கிடைத்து விட, இந்திய தவ்ஹீத் ஜமாஅத்துடனான தொடர்பு கிட்டியது. அதன் மூலம் தூய இஸ்லாத்தினை அறிந்து கொண்டார். புத்தம் புதிய, நபிகளாரது வாழ்வில் என்றும் அனுமதிக்கப்படாத விடயங்களை விட்டும் அவர் பாதுகாப்புப் பெற்றார்.

அதே போன்று, சுஹைப் ஹாஜியார் ஒரு சிகரெட் பிரியராகவும் பல வருடங்கள் இருந்தார். 'புகைத்தல் தற்கொலைக்குச் சமமெ'ன கேள்விப்பட்ட நாள் முதல் அதனையும் தூக்கியெறிந்தார். ஏனெனில், தற்கொலை செய்பவர்களின் இருப்பிடம் நரகமென்பது அவருக்குத் தெரியும். 'அ' எழுத்து 'ஆ'வுக்குச் சமன்; 'ஆ' எழுத்து 'இ'க்குச் சமன்; ஆகவே 'அ'வும் 'இ'வும் சமன் என்கின்ற கணிதப் பாடத் தேற்றம் போலல்லவா புகைத்தலும், தற்கொலையும், நரகமும் இருக்கின்றன...!

சுஹைப் ஹாஜியார் வட்டிக்கு மிகவுமே பயந்தவர். பெண்கள் கரப்பான் பூச்சிக்கு நாகத்தினை விட எவ்வளவு பயமோ, அவ்வளவு பயம் சுஹைப் ஹாஜியார் வட்டிக்கு. அல்லாஹ், அல்குர்ஆனிலே, வட்டியோடு சம்பந்தப்பட்டவர்களைப் பற்றிக் கூறும் போது, அவர்கள் தன்னோடும் தன் நபியோடும் போர் புரிவதற்குச் சமமானவர்கள் என்று குறிப்பிடுகின்றான். அது மட்டுமல்லவே, அதனோடு சேர்த்து அவர்களது தங்குமிடம்கூட நிரந்தர நரகமென்றல்லவா கூறுகின்றான். அப்படியானால், எவ்வளவு பயப்பட வேண்டும் குட்டி போடும் வட்டிக்கு...!

முஸ்லிம்கள் வட்டி பற்றி மிகக் கவனமாய் இருக்க வேண்டிய காலப் பகுதியிது. முஸ்லிம்கள் வட்டியை ஹராமானதாகக் கருதுகின்றதை அறிந்து கொண்ட வட்டி ஜீவிகள் அவர்களை திசை திருப்ப புதிய புதிய வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி அல்லாஹ்வோடு போர் புரியச் செய்து நிரந்தர நரகம் செல்ல முஸ்லிம்களை மாற்றியமைக்கின்றனர். வட்டி என்று ஆரம்பத்தில் சொன்னவர்கள் இப்பொழுது இலாபம் என்கின்றனர். சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'போனஸ்' என்கின்றனர். இன்னும் சிலர் 'பென்ஷன்' என்கின்றனர். இன்னும் சிலரோ கட்டணம் என்கின்றனர். ஆங்கிலத்தில் 'ஒப்' என்கின்ற வார்த்தைக்கு அறுபதுக்கும் மேற்பட்ட அர்த்தங்கள் இருப்பது போல், வட்டிக்குள்ள கெட்ட நாமங்கள்தாம் அவை. போதாக் குறைக்கு இஸ்லாமிய வங்கியெனச் சொல்லி மற்ற வங்கிகளைவிடக் கூடுதலான கட்டணங்களை அறவிடுவோர் வேறு பக்கம். ***'அல்லாஹ்வோடு போர் புரிய முடியாது எம்மால். தோற்றுப் போய்விடுவோம் மக்களே...!'*** இதுதான் சுஹைப் ஹாஜியாரின் அடுத்த தலைமுறைக்கான அறிவுரை.

***'கெட்டதைப் பார்ப்பது கண் செய்யும் விபச்சாரம். கெட்டதைக் கேட்பது காது செய்யும் விபச்சாரம். கெட்டதின் பால் நெருங்குவது கால்களும் கைகளும் செய்யும் விபச்சாரம். கடைசியில் மர்ம உறுப்பு அவற்றையெல்லாம் உண்மைப் படுத்துகின்றது அல்லது பொய்ப் படுத்துகின்றது'. நபிகளாரால் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகள் என்னை ஆட்டம் கொள்ளச் செய்கின்றது யா அல்லாஹ்...! விபச்சாரத்துக்கு இப்படியெல்லாம் வரைவிலக்கணம் சொன்னால், விபச்சாரத்தினை நெருங்காதவர்கள் யாராக இருக்க முடியும்...! கெட்டவைகளை ஒவ்வொரு நாளும் பார்க்கின்றேன், கேட்கின்றேன், அதன்பால் நடக்கவும் செய்கின்றேன். இவற்றுக்கெல்லாம் என்னைத் தண்டித்து விடாதே நாயனே...!***

சுஹைப் ஹாஜியார் இவ்வரிகளை எழுதிக் கொண்டு அப்படியே அழுதார். அவரால் முடியவில்லை. இப்படியெல்லாம் முடிச்சுக்கள் போடும் போது எப்படித்தான் நல்லவர்களாக வாழ்ந்து மரணிக்க முடியும்...? கடந்த காலங்களில் காலங்கள் இருந்தன. விபச்சாரமென்பது என்னவென்று கூட மக்கள் அறியாதளவில் அக்காலங்கள் இருந்தன. ஆனால் இன்றைய காலங்கள் அப்படியா...? எல்லாமே மகாவெலி அணை திறக்கப்பட்டிருப்பது போன்று திறந்து விடப்பட்டிருக்கின்றன. கதவைத் தாழ்பாளிட்டு மூடி விட்டு, குழந்தையை வெளியே செல்லாதே என்றால் அது நியாயம். கதவைத் திறந்து விட்டு அப்படிச் சொன்னால் நியாயமா...? விபச்சாரத்துக்கான வாயில்கள் எல்லாமே திறக்கப்பட்டு விட்டன. கவனமாக இருப்பது முஸ்லிம்களுக்குக் கொஞ்சமல்ல நிறையவே சிரமம்தான். அதனை நினைத்துத்தான் சுஹைப் ஹாஜியார் அழுதார்.

'ஒரு காலம் வரும். அக்காலத்தில் ஈமானை சுமப்பது, உள்ளங்கையில் நெருப்பினை வைத்துக் கொண்டிருப்பதனை விடவும் சிரமமாகவிருக்கும்' என நபிகளார் சொன்ன காலம் இதுதானோ...!

***யா அல்லாஹ்...! என்னுடைய இள வயதில் பார்வையாலும் கேள்வியாலும் நிறையப் பாவங்கள் செய்திருக்கின்றேன். ஆனாலும் விபச்சாரத்தினை நெருங்க நீ என்னை அனுமதிக்கவில்லை. நான் விபச்சாரம் செய்யவில்லை என்பதனை விட, அதற்கு நீ எனக்கு சந்தர்ப்பத்தினை அமைத்துத் தரவில்லை என்பதுதான் உண்மை நாயனே...! அப்படியொரு சந்தர்ப்பம் கிட்டியிருந்தால் நிச்சயமாக நாசமடைந்து விட்டிருப்பேன்...!***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான். அனேகரும் விபச்சாரத்தினை விரும்புவதில்லைதான். சந்தர்ப்ப சூழ்நிலைகள்தான் பல மனிதர்களையும் விபச்சாரம் செய்யத் தூண்டி விடுகின்றது. இப்படிப்பட்ட சந்தர்ப்பமொன்று கிடைக்காமல் இருப்பதுவே அல்லாஹ் மனிதனுக்குச் செய்த பெரிய வெகுமதியல்லவோ...!

***யா அல்லாஹ்...! எனது சம்பாத்தியத்தினை ஹலாலானதாக ஆக்கி வைத்து விடு. இவ்வளவு காலமும் நான் சம்பாதித்த சொத்துக்களை ஹலாலானதாக ஆக்கி விடு. நான் அறிந்த விதத்தில் ஒரு போதும் ஹராமானதாக எனது பொருளாதாரத்தினை அமைத்துக் கொள்ளவில்லை நாயனே...! என்றாலும் நான் ஹலாலென நினைத்து விட்டது உன் பார்வையில் ஹராமானதாய் இருக்கலாம். அப்படியேதேனுமிருந்தால் என்னை மன்னித்து விடு இறைவா...! 'யார் அணுவளவு நன்மை செய்தாலும் அல்லது அணுவளவு தீமை செய்தாலும் மறுமையில் கண்டு கொள்வார்' என அழகிய மொழிநடையில் உன் அல்குர்ஆனில் குறிப்பிடுகின்றாய். அணுவளவேனும் ஹராத்தினைச் சுமந்து கொள்ள என்னால் முடியாது யா அல்லாஹ்...!***

***'இப்ப ஹலால் ஹராம் பாத்தால் வாழேலுமோ...?'*** இப்படித்தான் இன்றைய உலகம் சிந்திக்கின்றது. சிந்திக்கவும் வைக்கின்றது. யாரேனும் வீடு கட்டினால் தானும் அப்படிக் கட்ட வேண்டும்; யாரேனும் வாகனங்கள் வாங்கினால் தானும் அப்படி வாங்க வேண்டும்; யாரேனும் திருமணம் ஆடம்பரமாகச் செய்தால் தானும் அப்படி செய்ய வேண்டும்... இப்படியாக ஒவ்வொருவரும் நினைத்து நினத்து, எட்டாக் கனியை எட்ட நினைத்து அவர்களுக்குத் தெரியாமலேயே ஹராத்தில் சங்கமித்து விடுகின்றனர். போதுமென்ற மனதோடு இறைவனைச் சார்ந்திருப்பது மட்டும்தான் இவற்றுக்கு ஒரேயொரு தீர்வாக இருக்க முடியும். இதனைத்தான், 'செல்வந்தராக மாறுவதற்கு என்ன வழி...?' என நபிகளாரிடம் ஒரு தோழர் கேட்டதற்கு, 'போதுமென்கின்ற மனதினை வைத்துக் கொள்ளுங்கள்; பணக்காரராகி விடுவீர்கள்...' என்று சூசகமாகக் கூறிவிட்டார்கள்.

***யா அல்லாஹ்...! பெருமை என்கின்ற விடயத்திலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். அணுவளவு தற்பெருமை எவனிடம் உள்ளதோ அவன் சுவர்க்கம் நுழைய மாட்டானென்பது நபிகளாரின் பொன்மொழி. எனக்குப் புரியவில்லை எனது ரப்பே...! பெருமைக்கு அர்த்தம்கூடப் புரியாதவன் நான். அதே நேரம் கடுகளவு பெருமையற்றவர்கள் யார்தான் இவ்வுலகில் இருப்பார்கள். எனக்கும் பெருமை தானாக வருவதுண்டு. தான தர்மங்கள் கொடுக்கின்ற போது சிறிய பெருமை என்னையறியாமலேயே ஏற்படும். தொழும்போது கூட எழுபத்தைந்து வயது வந்த பிறகும் தொழுகின்றேனே எனப் பெருமை வரும். றமழான் மாதத்தில் பெரும்பாலான வயோதிகமடைந்தோர் நோன்பு நோற்காத போது நான் நோன்பு நோற்கின்ற விடயம் எனக்குப் பெருமை தரும். இப்படி வாழ்வின் ஒவ்வொரு தடவையும் எனக்குள் பெருமைகள் மற்றவர்களைப் போன்று ஊற்றெடுக்கும். ஆனாலும் இப்பெருமைகள் எனது மனதளவில் மட்டும்தான் இருக்கும் யா அல்லாஹ்...! இதுவெல்லாம்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பெருமையென்று நீ கருதி விட்டால் நான் சுவர்க்கம் செல்ல முடியாது நாயனே...! பெருமை உனக்கு மட்டும்தான் இறைவா...! அதில் நான் பங்கு கொள்ள வரவில்லை. ஆனாலும் இப்பேர்ப்பட்ட பெருமைகளை கண்டு கொள்ளாதே இறைவனே...!***

அல்லாஹ்வின் 'ஸிபத்'துக்களில் ஒன்றல்லவா இந்தப் பெருமை...! வேறு யாருக்கேனும் பங்கைக் கொடுத்து விடுவானா அதில்...? பெருமையில் கவனமாக இருப்பது எவ்வாறென்று யாருக்குமே தெரியாததுதான். பெருமையென்கின்ற கோட்பாடு மிகவுமே பயங்கரமான ஒன்றும்தான். சுஹைப் ஹாஜியாருக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே விடை தெரியாத புதிர்தான் இந்தப் பெருமைப் புதிர்.

நபிகளார் ஒரு முறை பெருமைக்கு, ***'இல்லாததை இருப்பதாகக் காட்டுவதுதான்'*** என விளக்கமளித்தார்கள். அது அப்படியாயின் சுஹைப் ஹாஜியாரது பெருமைகள் ஒருநாளும் அல்லாஹ்விடம் தண்டனைகள் பெற்றுத் தராது என்று நம்பலாம். அவர் இருப்பதைக்கூட இல்லாத மாதிரி காட்டிக் கொள்கின்ற ஒரு மனிதர் என்பதால், இல்லாததை இருப்பது போல் காட்டிக் கொள்வாரா, என்ன...?

சுஹைப் ஹாஜியார் அழகான உடைகள் உடுத்துவார். ஆனாலும் பிறர் ஆடைகளைக் கேவலமாகப் பேச மாட்டார். பசிக்கு நிறைய விதம் விதமாய் உண்பார். வீண் விரயம் செய்யாமலும், உணவுக்குக் கஷ்டப்படுபவர்களையும் நினைத்துக் கொள்வார். காரிலே பயணித்தாலும் அடக்கமாக நடந்து கொள்வார். செல்வந்தனாக இருந்தாலும் ஏழைகளோடு தோள் கொடுத்துப் பழகுவார். பிச்சைக்காரர்கள் வந்தாலும் தன்னோடு அமர்த்தி தேநீர் அருந்துவார். இப்படியெல்லாம் பெருமையற்றவராக இருக்கின்ற அவரை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக...! ஆமீன்.

***யா அல்லாஹ்...! அடுத்த மாதம் றமழான் வருகின்றது. அதனை அடைந்து கொள்ளும் பாக்கியத்தினை எனக்கு வழங்கி விடு. முற்று முழுதாக ஒவ்வொரு வருடமும் நோன்பினை எவ்விதச் சிக்கல்களுமின்றி நோற்பது போல இதனையும் இலகுவானதாக மாற்றி விடு எனக்கு. எல்லா நோன்புகளையும் நோற்று முடித்ததன் பின்னால் கூலி கொடுக்கக் கூடிய நன்நாளான பெருநாளன்று எனதுயிரைக் கைப்பற்றினால் நான் பாவங்கள் மன்னிக்கப்பட்டவனாக சந்தோஷமாக உன்னிடம் வந்து சேர்வேன்...!***

மனிதர்களில் அதிகமானோர் அட்டகாசங்கள் புரிவோராகத்தான் உலகில் இருக்கின்றார்கள். கால்நடைகளைக் கொல்லக் கூடாதென்கின்ற சில மதத்து மனிதர்கள், எண்ணிலடங்காத அப்பாவி மனிதர்களைக் கொலை செய்கின்றார்கள். அதனை பர்மா நாட்டு முஸ்லிம்களின் நிலைமைகளிலும், இலங்கையின் சில பகுதிகளிலும் கண்களால் பார்த்து அனுபவித்தோம். இன்னும் சிலர் மற்றவர்களின் சொத்துக்களைச் சூறையாடுவதற்கென்றே வாழ்கின்றார்கள். அவற்றினை ஈராக்கிலும், அப்கானிஸ்தானிலும் கண்டு கொண்டோம். புகலிடம் கொடுத்தவர்களது நிலங்களை அபகரித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தம்பட்டம் அடிக்கும் மனிதர்களையும் கண்டு விட்டோம். அதனை பலஸ்தீன் நாட்டுக்குள் ஊடுருவிய இஸ்ரவேலர்களிடம் கண்டோம். இவையெல்லாம் பெரியளவில் சர்வதேச அரங்குகளில் இடம்பெறுபவை. இதே போன்ற நிலைமைகள் தனி மனிதர்களிடமும் இல்லாமலில்லை. நூறு ரூபாய்க்காக ஒரு மனிதன் கொலை செய்யப்பட்டதை மறக்க முடியுமா மக்களே...?

சுஹைப் ஹாஜியாரின் கவலை ஒன்றுதான். அப்பாவி மக்கள் யாராக இருந்தாலும்... புத்தனாக இருக்கட்டும், கிறிஸ்தவனாக இருக்கட்டும், ஹிந்துவாக இருக்கட்டும், முஸ்லிமாக இருக்கட்டும் அல்லது ஏனைய மதத்தவனாக இருக்கட்டும். இவர்கள் எல்லோரும் அப்பாவி என்கின்ற காரணத்தினால் எவ்வித தண்டனைகளும் பெற்று விடாமல் சுவர்க்கத்துக்கு சுறுக்காய்ச் சென்றுவிட வேண்டுமென்பதுதான். மனித குலத்துக்கே அச்சுறுத்தல் தருகின்ற கலகக்கார மனிதர்களை அல்லாஹ் தண்டிப்பதில் அவருக்கு எவ்விதக் கவலையுமில்லை. அத்தோடு அவர்கள் கண்டிப்பாக தண்டனைக்குட்படுத்தப்பட்டே ஆக வேண்டுமெனவும் பிரார்த்தனை புரிந்தார்.

சுஹைப் ஹாஜியாரின் மடல் இறுதிக் கட்டத்தினை அடைந்தது.

***யா அல்லாஹ்...! கேட்பதற்கு நிறையவே இருந்தாலும் பலதும் மறக்கடிக்கப்பட்டு விடுகின்றன. கேட்கத் தெரியாதவனாக வேறு இருக்கின்றேன். எனது இறுதித் தருணத்தை சிறப்பாக்கி வைத்து விடு. எனது உயிர் கைப்பற்றப்படும் போது, நான் வுழூச் செய்தவனாக அல்லது நோன்பு நோற்றவனாக இருந்து விடுவதற்குக் கிருபை செய். உயிரைக் கைப்பற்ற வரும் வானவரோடு சேர்த்து ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் சேர்த்து அனுப்பி வைத்து விடு...!***

சுஹைப் ஹாஜியார் தேம்பித் தேம்பி அறையினைப் பூட்டிக் கொண்டு அழுதார். மறுமை வாழ்வை நினைக்கவே பயமாய் இருந்தது. அல்லாஹ்வின் அருளில்லையானால் தானும் சுவர்க்கம் சென்றுவிட முடியாதென்றார்களே நபிகளார், அந்த அருளைப் பெற்று விடாமல் போய் விடுவோமோ என்ற அச்சத்தால் அவரது கண்கள் சிவந்து விட்டன. அல்லாஹ்வின் அச்சத்தால் அழுத மனிதனுக்கு நிழலே இல்லாத அந்த 'மஹ்ஷர்' மைதானத்தில் அல்லாஹ் நிழல் கொடுப்பானாம். அந்தக் கூட்டத்தில் சுஹைப் ஹாஜியாரை அல்லாஹ் உள் வாங்குவானாக...!

***இப்படிக்கு,***
***மறுமையை முழுதாய் நம்பிய, கப்ர் வாழ்வுக்குப் பயந்த, உனது தண்டனைகளை நினைத்து அச்சம் கொண்ட உண்மையான அடியான்.***
***சுஹைப் நிஸாம்.***

சுவர்க்கத்தைப் பெற எல்லோருக்கும் ஆசைதான். ஆனால் அதனை அடைந்து கொள்ள நாம் செய்ய வேண்டியவைகளைச் செய்தோமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் இல்லையென்றுதான் பதிலொலிக்கும். நபிகளாரும் அவரது தோழர்களும் கொண்ட பொறுமையும், பேணுதலும் இன்றைய நம்மிடம் போதவில்லை என்பதனைவிட அறவேயில்லை எனலாம். அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக...!

கடந்த ஐந்து வருடங்களாக சுஹைப் ஹாஜியார் நல்ல விடயங்களை தன்னகத்தே கொண்டார். ஒவ்வொரு திங்கட்கிழமையும் வியாழக்கிழமையும் நபிகளாரின் சுன்னத்தான நோன்புகளை நோற்கலானார். வாரத்துக்கு குறைந்தது மூன்று நாட்கள் 'தஹஜ்ஜத்து' தொழுகையினை நிறைவேற்றலானார். வியாழக்கிழமை மஹ்ரிப் தொழுகை முடிவடைந்ததிலிருந்து இரவு ஒன்பது மணி வரை பள்ளிவாயலில் 'இஃதிகாப்' இருக்கலானார். அல்குர்ஆன் தமிழாக்கத்தினை அடிக்கடி வாசித்து தெளிவுரை பெறலானார். மறுமையைப் பயந்து விட்டார் அவர். கப்ரின் இருள் நிறைந்த சூழலைப் பயந்து விட்டார் அவர்.

ஒரு மனிதன் அல்லாஹ்வின் தண்டனைக்குப் பயந்த கதை சுஹைப் ஹாஜியாரின் சிந்தனையை அடிக்கடி கிள்ளிப் பார்க்கும். தான் மரணமடைந்தால் தன்னைப் புதைக்காமல், தன்னுடலைத் தீ வைத்து அழித்து விடுமாறு தன் மக்களுக்குக் கட்டளையிட்டானாம். அம்மக்களும் அம்மனிதன் இறந்ததன் பின்னால் அப்படியே செய்தார்களாம். அவனை சந்தித்த எல்லாம் அறிந்த அல்லாஹ் கேட்டானாம், எதற்காக அப்படி செய்யச் சொன்னாயென்று. அதற்கு அவன் சொன்னானாம். என் இறைவனே, உன் தண்டனையை நான் பயந்துதான் எனதுடம்பை அழித்து விடச் சொன்னேன் என்றானாம். அவன் அல்லாஹ்வின் மீது கொண்ட அந்த அச்சத்தால், எல்லாம் வல்ல அல்லாஹ் அவனை மன்னித்து சுவனம் புகச் சொன்னானாம்.

அல்லாஹ் கருணையாளன்...! அப்பாவிகளைத் தண்டிக்க மாட்டான்...! அவனது அன்பு மூலம் நம் அனைவரையும் சிறு துளி கூட தண்டனையில்லாமல் சுவர்க்கத்துக்கு அனுப்பி விடுவான் நிச்சயமாக...! இது தவ்பாச் செய்யும் நேரமிது...!

கடிதத்தை எழுதி முடித்த சுஹைப் ஹாஜியார், கண்களில் நீர் தேங்கியவராக அதனை வடிவாக மடித்தார். மடிக்கப்பட்ட மடலை காகித உறையொன்றினுள் வைத்தார். காகித உறையின் மேல் குறிப்பொன்றையும் எழுதி வைத்தார்.

***'கதீஜா... எனது உடலை அடக்கச் செல்லும் போது, கபன் துணிக்குள் இதனை வைத்து விடவும்...'***

**முடிந்தது**

****வாசிப்பிற்கு நன்றி...! இன்ஷா அல்லாஹ், மற்றோர் ஆக்கத்தில் சங்கமிப்போம்...!****

***இர்ஷாத் ஹஸன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்...!

நெஞ்சமுள்ளோர்...! என்கின்ற என் கணவனது சிறுகதைத் தொகுப்பு ஆறு தலைப்புக்களைக் கொண்ட மிக ரசனை வாய்ந்த கதைகள் என்றுதான் சொல்வேன்.

அவரது முன்னைய இரு நாவல்கள் போன்று சுவாரஷ்யமாக நகர்கின்ற கதைகள் உள்ளங்களை வருடுகின்ற ஆற்றல் மிக்கவை என்று சொன்னாலும் அதுவும் மிகையாகாது.

ஒவ்வொரு கதையையும் முடித்தவுடன் எனது கையில் கொண்டு வந்து தருவார். அன்றாடம் சமைப்பதனாலோ என்னவோ, உப்பிருக்கின்றதா புளியிருக்கின்றதா எனப் பார்க்கச் சொல்வார். உப்பும் புளியும் மட்டுமல்ல எல்லாமே இருக்கின்றது அதற்குள்ளே என்பேன்.

கதைகளின் சில வரிகள் சிரிக்க வைக்கும். சில வரிகள் சிந்திக்க வைக்கும். சில வரிகள் கவலை கொள்ளச் செய்யும். இன்னும் சில வரிகள் இன்பம் பொங்கச் செய்யும். பல வரிகளோ கண்ணீரைக் கண்களில் கக்கச் செய்யும். பல வரிகளில் என்னை அறியாமலேயே அழுதும் விட்டேன்.

என் கணவரது இம்முயற்சியை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக...! இம்முயற்சியை அல்லாஹ் வெற்றி பெறச் செய்வானாக...! இம்முயற்சியின் படிப்பினைகளை அவரோடு சேர்த்து நானும் மற்றவர்களும் உள்வாங்கிக் கொள்ள அல்லாஹ் துணை நிற்பானாக...!

அன்பு மனைவி
பாத்திமா ரிகாஸா ரிஸ்வி இர்ஷாத்

ISBN 978-955-7958-00-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org